வெளியீடு 7-3-2003 Issued 7-3-2003

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மே 9, 2002 - தொகுதி 29 - எண் 1

Thursday the 9th May, 2002 - Volume 29 - No. 1

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

303/2003

9-5-2002

# உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | vii-xi |
| Governor and Council of Ministers | xiii-xvi |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xvii-xx |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xxi-xxxi |
| *1. வினாக்கள்-விடைகள்—* | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-49 |
| *2. தகவல் கோரல்—* | |
| (அ) கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்திற்கு சத்ய சாய்பாபா நன்கொடை — தமிழகப் பங்குத் தொகையை ஈடு செய்தல் | 50 |
| (ஆ) பெண்ணாகரம் தொகுதி குடிநீர்க் குழாய் உடைபட்டு இரண்டு பெண்கள் இறந்ததாகக் கூறப்படுவது | 51 |
| (இ) பேரவை நிறைவேற்றிய தீர்மான நகலை எரித்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோருதல் | 51-52 |
| (ஈ) அறிமுகப்படுத்தும் சட்ட முன்வடிவுகளுக்கான நகலை உறுப்பினர்களுக்கு உரிய நேரத்தில் வழங்கக் கோரல் | 52-53 |

பக்கங்கள்

3. சிறப்புக் கவன ஈர்ப்பு—

வாணியம்பாடி காவல் நிலையத்தில் குறவர் இனப் பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதாகக் கூறப்படுதல் .. 53-63

திரு. இ. புகழேந்தி .. .. .. 53-55

திரு. சி. ஞானசேகரன் .. .. .. 55-56

திரு. ஜி.கே. மணி .. .. .. 56-58

செல்வி க. பாலபாரதி .. .. .. 59-60

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா .. 60-63

4. கவன ஈர்ப்பு—

(அ) பொள்ளாச்சி தொகுதி, பட்டுப்போகும் தென்னை மரங்களுக்கு பரம்பிக்குளம்-ஆழியாறு வாய்க்காலிலிருந்து தண்ணீர் விடக் கோருதல் .. 63-67

(ஆ) கோவில்பட்டி, இந்திரா நகர் பகுதியில் சில தீப்பெட்டித் தொழிற்சாலைகள் எரிந்து சேதம் .. 67-69

5. அறிக்கை அளித்தல்—

பொது நிறுவனங்கள் குழு .. .. .. 70

6. அரசினர் தீர்மானங்கள்—

(அ) மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு மற்றும் விதிகள் குழு — பதவிக் காலம் ஓராண்டு நீட்டிப்பு .. 70-71

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் .. 70

திரு. ஜே. ஹேமச்சந்திரன் .. 71





பக்கங்கள்

6. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) அவை உரிமைக் குழு, சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, நூலகக் குழு மற்றும் பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு பதவிக் காலம் ஓராண்டு நீட்டிப்பு— .. 71-73

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் .. 71-72

திரு. ஜி. பழனிசாமி .. .. 72-73

திரு. பி.எம். நரசிம்மன் .. .. 73

(இ) விதி 32-ஐத் தளர்த்துதல் .. 222

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் பற்றிய சட்டங்களுக்கான (திருத்தச்) சட்ட முன்வடிவு, 2002 .. 74

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை .. 74

திரு. ஜே. ஹேமச்சந்திரன் .. 74

திரு. ஜி. பழனிசாமி .. 74

(ஆ) அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 .. 75

*மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை .. 75

(இ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 .. 75-76

மாண்புமிகு திரு. சி. துரைராஜ் .. 76

(ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 .. 77

*மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி .. 77

(உ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி .. 78

பக்கங்கள்

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(ஊ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 — 79-80

*மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி — 79, 80

(எ) தமிழ்நாடு பன்முறைச் செயற்பாடுகள், காணொளி பதிவுப் பேழைக் கருவி, கம்பிவட தொலைக்காட்சி இணைப்பு ஆகியவற்றின் மூலம் தொலைக்காட்சித் திரையில் படக்காட்சிகள் காட்டுதல் (முறைப்படுத்தப்படுதல்) சட்டமுன்வடிவு, 2002 — 80-81

*மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன் — 80, 81

திரு. துரைமுருகன் — 80

திரு. ஜி.கே மணி — 80

(ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு, 2002 — 84

*மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 84

8. அறிவிப்புகள்—

(அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆஇ) — 76

(ஆ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆஇ) — 77

(இ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆஇ) — 79

(ஈ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1990-91, முன்மொழிதல் — 81


தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
225168
சென்னை-600 008
நூலகம்




பக்கங்கள்

8. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2002 (ஆஇ) — 84

(ஊ) அலுவல் வரிசையில் மாற்றம் — 221

9. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1990-91, வாக்கெடுப்பு— 82-83

10. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)—

தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2002 — 85-221

*மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 85,176-213, 214,218, 219-221

*திரு. பி.ஆர். சுந்தரம் — 85-94

திரு. துரைமுருகன் — 86,115-117, 118,119, 121-123, 124-128

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் — 94-114

திரு. ஜி.கே. மணி — 129-133, 135-143

திரு. போளூர் வரதன் — 144-153, 154

திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 155-164

திரு. ஜி. பழனிசாமி — 164-172

*திரு. ப. அரசன் — 172-176

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 223-226

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா :**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

**2. பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் :**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள்.

**3. நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :**

நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

**4. கல்வி அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

**5. சட்டத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் :**

சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்.

**6. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி :**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

**7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை :**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலன்.

**8. உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. துரைராஜ் :**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

**9. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. தனபால் :**

கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

**10. வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் :**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.



**11. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம் :**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

**12. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி :**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

**13. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி :**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

**14. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் :**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள்.

**15. மின் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் :**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

**16. தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி :**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள், மின்னணுவியல் மற்றும் வணிக வரிகள்.

17. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. மோகன் :**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

18. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன் :**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள், கதர்-கிராமத் தொழில் வாரியம்.

19. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் :**

வீட்டுவசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

20. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் :**

கால்நடை பராமரிப்பு.

21. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. சுதர்சனம் :**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.

22. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வ.து. நடராஜன் :**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.



23. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் :**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

24. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. க.க. பாலசுப்ரமணியன் :**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு.

25. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம் :**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

26. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் :**

மீன்வளம்.

27. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. மில்லர் :**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR—THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Selvi J Jayalalithaa:**

   Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare.

2. **Minister for Public Works and Prohibition and Excise** .. **The Hon. Thiru O. Panneerselvam:**

   Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of Corruption and Prisons.

3. **Minister for Finance and Information Technology** .. **The Hon. Thiru C. Ponnaiyan:**

   Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies and Information Technology.

4. **Minister for Education** .. **The Hon. Dr. M. Thambidurai:**

   Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees.

| | | |
|---|---|---|
| 5. | Minister for Law | .. **The Hon. Thiru D. Jayakumar:**<br>Law and Courts. |
| 6. | Minister for Hindu Religious and Charitable Endowments | .. **The Hon. Thiru P.C. Ramasamy:**<br>Hindu Religious and Charitable Endowments. |
| 7. | Minister for Health | .. **The Hon. Thiru S. Semmalai:**<br>Health, Medical Education and Family Welfare. |
| 8. | Minister for Local Administration | .. **The Hon. Thiru C. Durairaj:**<br>Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply. |
| 9. | Minister for Co-operation, Food and Civil Supplies and Consumer Protection | .. **The Hon. Thiru P. Dhanabal:**<br>Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics. |
| 10. | Minister for Revenue | .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**<br>Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodhan and Gramdhan and Passports. |
| 11. | Minister for Agriculture | .. **The Hon. Thiru R. Jeevanantham:**<br>Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development. |



| | | |
|---|---|---|
| 12. | Minister for Social Welfare | .. **The Hon. Tmt. B. Valarmathi:**<br>Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration. |
| 13. | Minister for Adi-Dravidar Welfare | .. **The Hon. Thiru S. Karuppasamy:**<br>Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen. |
| 14. | Minister for Transport | .. **The Hon. Thiru R. Viswanathan:**<br>Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports. |
| 15. | Minister for Electricity | .. **The Hon. Thiru Nainar Nagendran:**<br>Electricity, Non-Conventional Energy Development. |
| 16. | Minister for Industries and Commercial Taxes | .. **The Hon. Thiru Se. Ma. Velusamy:**<br>Industries, Iron and Steel Control, Mines and Minerals, Electronics and Commercial Taxes. |
| 17. | Minister for Forests and Environment | .. **The Hon. Thiru P. Mohan:**<br>Forests Environment and Pollution Control. |
| 18. | Minister for Rural Industries | .. **The Hon. Thiru R. Vilwanathan:**<br>Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board. |

| | | |
|---|---|---|
| 19. | Minister for Housing and Urban Development | .. **The Hon. Thiru M.C. Sampath:** Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A. |
| 20. | Minister for Animal Husbandry | .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Animal Husbandry. |
| 21. | Minister for Backward Classes | .. **The Hon. Thiru K. Sudarsanam:** Backward Classes, Most Backward Classes and De-notified Communities. |
| 22. | Minister for Labour | .. **The Hon. Thiru Va. Thu. Natarajan:** Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| 23. | Minister for Dairy Development | .. **The Hon. Thiru S. Ramachandran:** Milk and Dairy Development. |
| 24. | Minister for Information and Publicity | .. **The Hon. Thiru K.K. Balasubramanian:** Information and Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control. |
| 25. | Minister for Handlooms and Textiles | .. **The Hon. Thiru V. Somasundram:** Handlooms and Textiles. |
| 26. | Minister for Fisheries | .. **The Hon. Thiru M. Radhakrishnan:** Fisheries. |
| 27. | Minister for Tourism | .. **The Hon. Thiru A. Miller:** Tourism and Tourism Development Corporation. |



# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

**பேரவைத் தலைவர்**

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

**பேரவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

**மாற்றுத் தலைவர்கள்***

திரு. பி.ஆர். சுந்தரம்

திரு. அ. பாப்பா சுந்தரம்

திரு. ப. இராஜரெத்தினம்

திரு. எம்.ஏ. ஹக்கீம்

திரு. செ.கு. தமிழரசன்

திரு. லா. சந்தானம்

**முதன்மைச் செயலாளர்**

திரு. செ.சு. ஜானகிராமன்

**செயலாளர்**

திரு. வெ. இராசாராமன்

*12-3-2002 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | | |
|---|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல்., | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல்., | .. | இணைச் செயலாளர் |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ. (விடுப்பு) | .. | குழு அலுவலர் |
| திரு. தி. திருமாவளவன், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |



| | | |
|---|---|---|
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ.,பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. (விடுப்பு) | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | குழு அலுவலர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ.,பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ. பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |

| | | |
|---|---|---|
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ச. இரா. சுகுணா, பி.ஏ. (விடுப்பு) | .. | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சை. உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. த. ருத்ரமணி, எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி தா. இந்திரா பாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. | தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. | புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆகு.சீ. | .. | பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. | வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | .. | செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
28. இராமசாமி, திரு. பி.சி. .. மொடக்குறிச்சி
29. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
30. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
31. இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
32. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
33. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
34. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
35. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
36. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
37. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
38. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
39. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
40. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
41. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆ.வா.)
42. இன்பத் தமிழன், திரு. இரா.தா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்



43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
44. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
46. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
47. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
48. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
49. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
50. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
51. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செவ)
58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ .. குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
61. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
87. சம்பத், திரு. எழ்.சி. .. நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்



89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆவா.)
90. சாமி, திரு. ஆர். .. மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
103. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
104. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
105. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
106. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
107. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
108. சூரியகலா, திருமதி, சி.எம். .. குடியாத்தம்
109. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
110. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
111. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி

| | | |
|---|---|---|
| 112. செல்வராஜ், திரு. ஏ.கே. | .. | மேட்டுப்பாளையம் |
| 113. செல்வி முருகேசன், திருமதி | .. | காங்கேயம் |
| 114. சேகரன், திரு. கே.என். | .. | திருவெறும்பூர் |
| 115. சேகர்பாபு, திரு. பி.கே. | .. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 116. சோமசுந்தரம், திரு. வி. | .. | உத்திரமேரூர் |
| 117. ஞானசேகரன், திரு. சி. | .. | வேலூர் |
| 118. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. | .. | திருநாவலூர் |
| 119. தமிழரசன், திரு. செ.கு. | .. | நன்னிலம் (செ.வ.) |
| 120. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி | .. | மேல்மலையனூர் |
| 121. தம்பிதுரை, டாக்டர் மு. | .. | பர்கூர் |
| 122. தவமணி, திரு. க. | .. | திருவிடைமருதூர் |
| 123. தளவாய் சுந்தரம், திரு. ந. | .. | கன்னியாகுமரி |
| 124. தனபால், திரு. ப. | .. | சங்கரி (செ.வ.) |
| 125. தாமோதரன், திரு. எஸ். | .. | விருதுநகர் |
| 126. தாமோதரன், திரு. செ. | .. | கிணத்துக்கடவு |
| 127. தாமோதிரன், திரு. ப.வெ. | .. | பொங்கலூர் |
| 128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. | .. | பேராவூரணி |
| 129. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். | .. | காஞ்சிபுரம் |
| 130. திருமாவளவன், திரு. இரா. | .. | மங்களூர் (செ.வ.) |
| 131. துரைமுருகன், திரு. | .. | காட்பாடி |
| 132. துரைராஜ், திரு. சி. | .. | சேடப்பட்டி |
| 133. தென்னரசு, திரு. கே.எஸ். | .. | ஈரோடு |



| | | |
|---|---|---|
| 134. நடராஜன், திரு. அ. | .. | குத்தாலம் |
| 135. நடராஜன், திரு. எஸ். | .. | நாட்ராம்பள்ளி |
| 136. நடராஜன், திரு. பி.கே.டி. | .. | ஆத்தூர் |
| 137. நடராஜன், திரு. வது. | .. | இளையான்குடி |
| 138. நயினார் நாகேந்திரன், திரு. | .. | திருநெல்வேலி |
| 139. நரசிம்மன், திரு. பி.எம். | .. | பள்ளிப்பட்டு |
| 140. நளினி மனோகரன், திருமதி | .. | போளூர் |
| 141. நன்மாறன், திரு. என். | .. | மதுரை கிழக்கு |
| 142. நீலகண்டன், திரு. ப. | .. | ஆற்காடு |
| 143. நெப்போலியன், திரு. து. | .. | வில்லிவாக்கம் |
| 144. பச்சைமால், திரு. தா. | .. | குளச்சல் |
| 145. பதினெட்டாம்படியான், திரு. க. | .. | முதுகுளத்தூர் |
| 146. பரணிகுமார், திரு. பா. | .. | திருச்சிராப்பள்ளி-1 |
| 147. பரிதி இளம்வழுதி, திரு. | .. | எழும்பூர் (செ.வ.) |
| 148. பவானி கருணாகரன், திருமதி கே. | .. | அரக்கோணம் (செ.வ.) |
| 149. பழனிசாமி, திரு. கே.எஸ். | .. | பெருந்துறை |
| 150. பழனிசாமி, திரு. ஜி. | .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 151. பழனியப்பன், திரு. பெ. | .. | மொரப்பூர் |
| 152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. | .. | குறிஞ்சிப்பாடி |
| 153. பன்னீர்செல்வம், திரு. ஓ. | .. | பெரியகுளம் |
| 154. பாண்டுரங்கன், திரு. கே. | .. | அணைக்கட்டு |
| 155. பாப்பா சுந்தரம், திரு. அ. | .. | குளித்தலை |
| 156. பாரமலை, திரு. க. | .. | மானாமதுரை (செ.வ.) |

157. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி
158. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி
159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர்
160. பாலசுப்பிரமணியன், திரு. க.க. .. ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி. க. .. திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
167. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திக்குளம்
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்னம்பலம், திரு. ப. .. சமயநல்லூர் (செ.வ.)
170. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
171. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
172. மகாலிங்கம், திரு. எஸ். . அவினாசி (செ.வ.)
173. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
174. மகேஸ்வரி, திருமதி எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்



179. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
180. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி
181. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி
182. மில்லர், திரு. அ. .. கூடலூர்
183. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
184. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
185. முருகேசன், திரு. ஆ.கு. .. ஆத்தூர்
186. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
188. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
189. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
190. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
191. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப்பாளையம்
193. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
194. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
195. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
196. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி
197. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
198. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
199. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்
200. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்
201. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்

202. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்

203. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு

204. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. .. அரவக்குறிச்சி

205. வளர்மதி, திருமதி பா. .. ஆலந்தூர்

206. வளர்மதி ஜெபராஜ், திருமதி .. மதுரை மேற்கு

207. வள்ளல் பெருமான், டாக்டர் பி. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

208. வாசுதேவன், திரு. பெ. .. மதுராந்தகம்

209. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்

210. வில்வநாதன், திரு. இரா. .. சோளிங்கர்

211. விநாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. .. பூங்காநகர்

212. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. புதுக்கோட்டை

213. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி. ப. .. பனமரத்துப்பட்டி

214. வீரபாண்டியன், திரு. ஜெக. .. மயிலாடுதுறை

215. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி

216. வெங்கடாஜலம், திரு. செ. .. சேலம்-1

217. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்

218. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்

219. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு

220. வேல் முருகன், திரு. தி. .. பண்ருட்டி

221. வைதியலிங்கம், திரு. மீ. அ. .. தாம்பரம்

222. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு



223. ஜீவானந்தம், திரு. இரா. .. நாகப்பட்டினம்

224. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. .. ஆரணி

225. ஜெயக்குமார், திரு. கு. .. நாமக்கல் (செ.வ.)

226. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்

227. ஜெயராமன், திரு. வி. .. பொள்ளாச்சி

228. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி

229. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு

230. ஹக்கீம், திரு. எம்.ஏ. .. மதுரை மத்தி

231. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. திருவட்டாறு

232. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி .. (நியமனம்)

233. (வெற்றிடம்) .. சைதாப்பேட்டை

234. (வெற்றிடம்) .. வாணியம்பாடி

235. (வெற்றிடம்) .. அச்சரப்பாக்கம் (செ.வ.)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் .. தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 26, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2033**
**2002 மே 9, வியாழக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்*
*துன்பம் துடைத்தூன்றும் தூண்"*

தன்னலம் விரும்பாமல், தான் மேற்கொண்ட செயலை நிறைவேற்ற விரும்புகின்றவன் தன்னைச் சூழ்ந்துள்ள சுற்றத்தார், நண்பர்கள், நாட்டு மக்கள் ஆகிய அனைவரின் துன்பம் துடைத்து, அவர்களைத் தாங்குகின்ற தூணாவான்.

## 1. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 320, திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

**320—**

### ஏரிகளை ஆழப்படுத்துதல்

***1763—திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநாவலூர் தொகுதியிலுள்ள சிறுத்தனூர், சித்தேரி, கூகள்ளக்குறிச்சி பெரிய ஏரி, பேரங்கியூர் ஏரி, இளந்துறை ஏரி மற்றும் திருவெண்ணெய் நல்லூர் ஏரி ஆகியவற்றை ஆழப்படுத்தி மராமத்து வேலைகள் செய்திட அரசு ஆவன செய்யுமா?

[2002 மே 9

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நடப்பு நிதியாண்டில் திருநாவலூர் தொகுதியில் உள்ள சிறுத்தனூர், சித்தேரி, கூ.கள்ளக்குறிச்சி பெரிய ஏரி, பேரங்கியூர் ஏரி, இளந்துரை ஏரி மற்றும் திருவெண்ணெய்நல்லூர் ஏரி ஆகியவற்றை ஆழப்படுத்தி மராமத்து வேலைகள் செய்திடத் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருநாவலூர் தொகுதி முழுவதும் விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற ஏழ்மையான விவசாயக் குடும்பங்கள் அதிகம் வசிக்கின்ற பின்தங்கிய தொகுதியாகும். அந்த வகையில் நான் குறிப்பிடுகின்ற 400 ஏக்கர் ஆயக்கட்டு கொண்ட கூ.கள்ளக்குறிச்சி பெரிய ஏரி 100 ஏக்கர் மற்றும் 150 ஏக்கர்களைக் கொண்ட சிறுத்தனூர் மற்றும் மேட்டத்தூர் ஏரி, 150 ஏக்கர்களைக் கொண்ட, ஆயக்கட்டுதாரர்களைக் கொண்ட ஏரி, இளந்துரை ஏரி, 375 ஏக்கர் ஆயக்கட்டு கொண்ட பேரங்கியூர் ஏரி, 500 ஏக்கர் ஆயக்கட்டு கொண்ட திருவெண்ணெய்நல்லூர் ஏரி மற்றும் திருநாவலூர் தொகுதியிலே மிகவும் பெரிய ஏரியான பாதூர் ஏரி கிட்டத்தட்ட 750 ஏக்கர் கொண்ட ஆயக்கட்டுதாரர்களைக் கொண்ட பெரிய ஏரி, 350 ஏக்கர் கொண்ட மனக்குப்பம் ஏரி போன்ற ஏரிகள் கிட்டத்தட்ட 30 ஆண்டுகாலமாக தூர்வாராமல் அந்த ஏரிகள் எல்லாம் மிகவும் பழுதடைந்து சீரமைக்கப்படாத காரணத்தினால் வெள்ளைக் காட்டாமணக்குச் செடி மற்றும் மண் மேடிட்டு பல்வேறு பகுதிகளிலேயும் மிகவும் மோசமாக இருக்கிற காரணத்தால் ஏரி முழுவதுமாக மிகவும் மண்டிக் கிடக்கிறது. இதனால் நீர்ப்பிடிப்பு குறைந்துவிட்டது. விவசாயிகள் முப்போகமும் சாகுபடி செய்துவருகின்ற அந்த நிலை மாறி, இன்றைக்கு ஒரு போக சாகுபடி செய்வதற்கே விவசாயிகள் அல்லல்படுகின்றனர். இதிலுள்ள மதகுகள், கலுங்குகள் மிகவும் பழுதடைந்துள்ளன. மேற்குறிப்பிட்ட ஏரிப் பாசனத்தில் சிறு மற்றும் குறு விவசாயிகள் அதிகமாக ஆயக்கட்டுதாரர்களாக இருக்கிறார்கள். எனவே ஏழை எளிய விவசாயிகள் அந்தப் பகுதியிலே பயிரிடுகின்ற வண்ணமாக இருக்கிறார்கள். அந்த ஏழையெளிய விவசாயிகளின் நலனில் அக்கறைகொண்டு நீர்வள ஆதாரங்களைப் பாதுகாக்கும் கருணை உள்ளம் கொண்ட நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஏழை



2002 மே 9]

விவசாயிகளின் பல ஆண்டுகால கோரிக்கையான மேற்சொன்ன ஏரிகளைத் தூர்வாரியும் ஆழப்படுத்தியும் சீரமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநாவலூர் தொகுதியிலுள்ள சிறுத்தனூர், சித்தேரி, கூ.கள்ளக்குறிச்சி பெரிய ஏரி, பேரங்கியூர் ஏரி, இளந்துரை ஏரி மற்றும் திருவெண்ணெய்நல்லூர் ஏரி ஆகியவை மற்றும் அதன் வரத்து வாய்க்கால்கள் பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் உள்ளன. இதில் பேரங்கியூர் ஏரி வானம் பார்த்த ஒன்றாகும். ஆண்டுதோறும் வழங்கப்படும் நிதிநிலைக்கேற்ப அதிகம் தூர்ந்துள்ள ஏரிகளை முன்னுரிமை அடிப்படையில் தூர்வாரும் பணி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2002-2003-ல் மேற்படி ஏரிகளைத் தூர்வார உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 321, திரு. வி.ஆர். ராஜாங்கம், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

321—

## சாத்தியாறுக்கு தண்ணீர்

***6602—திரு. வி.ஆர். ராஜாங்கம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, பெரியாறு வாய்க்காலிலிருந்து இணை வாய்க்கால் மூலம் சாத்தியாறு அணைக்குத் தண்ணீர் கொண்டுவரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சாத்தியாறு அணைக்குத் தண்ணீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2002 மே 9

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தியாறு அணைக்கட்டு மிகவும் வறட்சிப் பகுதியான அலங்காநல்லூர், பாலமேடு போன்ற பகுதிகளில் அமைந்துள்ளது. இந்த அணைக்கட்டு பெருகுவதால் விவசாயத்திற்குத் தேவையான தண்ணீரும் அந்தப் பகுதியினுடைய கிணறுகளுக்குத் தண்ணீரும் கிடைக்கிறது. மேலும் பொதுமக்களுக்குக் குடிதண்ணீராகவும் அது பயன்படுகிறது. ஆகவே பெரியாறு மற்றும் வைகை அணையிலிருந்து மழைக்காலங்களில் உபரியாக வரும் தண்ணீரை சாத்தியாறு அணையில் தேக்கும் திட்டம் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசில் நடவடிக்கையில் உள்ளதா என்பதை அறிய விரும்புவதோடு, அந்தப் பகுதியில் இருக்கின்ற சாத்தியாறு அணை மிகவும் தூர் நிறைந்ததாய் இருக்கிறது. அந்த அணைக்கட்டில் பல்வேறு ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் அகற்றுவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியாறு பாசனக் கால்வாயின் நில அமைப்பைக் காட்டிலும் சாத்தியாறு அணையின் நில அமைப்பு மேடான பகுதியாகும். மேலும் பூர்வீகப் பெரியாறு பாசன நிலங்களுக்கு வழங்கப்படும் பாசன நீர் போதிய அளவு இல்லாத காரணங்களால் சில வருடங்களாகவே ஒவ்வொரு பருவகாலங்களிலும் முறை வைத்து பாசனத்திற்கு நீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே பெரியாறு வாய்க்காலிலிருந்து இணை வாய்க்கால் மூலம் சாத்தியாறு அணைக்குத் தண்ணீர் வழங்கும் திட்டத்தைப் பரிசீலிக்க இயலாத ஒரு சூழ்நிலை இருப்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றபடி சாத்தியாறு அணைப் பகுதியில் இருக்கிற ஆக்கிரமிப்புபற்றி இம்மான்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அவற்றை அகற்றுவதற்கு உண்டான சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 322, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.



2002 மே 9]

**322—**

## கலைக் கல்லூரி

***2667—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூரில் அரசு கலைக் கல்லூரி தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசின் தற்போதைய நிதிநிலைமையின் காரணமாக வருகிற கல்வியாண்டில் புதிய அரசு கலைக் கல்லூரிகள் தொடங்குவதில்லை என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. எனவே அரூரில் அரசு கலைக் கல்லூரி தொடங்க வாய்ப்பு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் என்பது தருமபுரி மாவட்டத்தில் அடங்கிய ஒரு தொகுதியாகும். அந்தத் தொகுதி முழுக்க நீண்ட நெடிய காலமாக வானம் பார்த்த பூமியாக இருக்கின்ற நிலையில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்கு எந்தவிதமான வேலையும் இல்லாமல் மிகவும் பெரிய அளவிலே கஷ்டப்படுகிறார்கள். விவசாயிகள் கூட மேட்டு நில விவசாயிகள்தான். அங்கு படிக்கின்ற மாணவ, மாணவிகள் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமானால் கிட்டத்தட்ட 50, 60 கிலோமீட்டர் தொலைவிலுள்ள சேலம் அல்லது தருமபுரி மற்றும் அதே அளவு தொலைவிலுள்ள கிருஷ்ணகிரி, அதே சமஅளவு தூரத்திலுள்ள திருவண்ணாமலை போன்ற பகுதிகளுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அங்கு எந்தவிதமான கல்வி வளர்ச்சிக்கான வாய்ப்புகள் இதுவரை எந்த அரசாலும்— இதற்கு முந்தைய அரசால்கூட செய்யப்படவில்லை. எனவே இந்த அரசு இந்த ஆண்டு இல்லையென்று சொன்னாலும், அடுத்த ஆண்டிலாவது அரூரிலே ஓர் அரசு கலைக் கல்லூரியைத் தொடங்குவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்வதோடு அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தை உருவாக்கித் தரமுடியுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2002 மே 9

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் பொருளாதாரத்தில் பின்தங்கிய ஒரு மாவட்டமாகும். அது உண்மைதான். அங்கிருக்கும் மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே நல்ல கல்வி நிலையை உருவாக்குவதற்கு அரசு பல்வேறு முனைப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தருமபுரி மாவட்டத்தில் நான்கு அரசு கலைக் கல்லூரிகள் செயல்படுகின்றன. தருமபுரி, கிருஷ்ணகிரியில் இருக்கின்றது. அதேபோல பர்கூரில்கூட ஒரு கல்லூரி இருக்கிறது. அந்தக் கல்லூரியானது அரூருக்கு அருகில் இருக்கிறது. கிருஷ்ணகிரிகூட பர்கூர் அருகிலுள்ள ஒரு பகுதிதான். பிறகு சேலத்திலேயிருந்தும் அந்த மாவட்டத்திற்கு மாணவர்கள் செல்வது உண்மைதான். அதோடு அரூரில் சுயநிதிக் கல்லூரி ஒன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது, பெண்களுக்காக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே இப்போது இருக்கும் பொருளாதார நிலையைக் கொண்டு இந்த ஆண்டு அங்கு ஆரம்பிப்பதற்கு எந்த வாய்ப்பும் கிடையாது. நமது அரசினுடைய நிதிநிலை முன்னேற்றமடைந்தால், நல்ல வாய்ப்பு ஏற்பட்டால் அதற்கு ஏற்றாற்போல் கோரிக்கையின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 323, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

323—

## பட்டயப் படிப்பு

***5465—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாமல்லபுரம், சிற்பக் கலைக் கல்லூரியில் பட்டயப் படிப்புகளை கல்லூரி நிருவாகம் அகற்றியது அரசின் கவனத்திற்குத் தெரியுமா?

(ஆ) மீண்டும் பட்டயப் படிப்பைக் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா?



2002 மே 9]

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். அரசாணை (நிலை) எண் 196, தமிழ் வளர்ச்சி—பண்பாட்டுத் துறை, நாள் 23-7-1997-ன்படி, பழைய பட்டயப் படிப்பு கைவிடப்பட்டு, புதிய நான்காண்டு பட்டப் படிப்பு தொடங்கப்பட்டுள்ளது.

(ஆ) தேவை எழவில்லை.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமல்லபுரத்தில் இருக்கின்ற சிற்பக் கலைக் கல்லூரியானது, பல்லவர் காலச் சிற்பக் கலைநகராக இருக்கிற மாமல்லபுரத்தில் அந்தச் சிற்பக் கலைகளை மேலும் ஊக்குவிக்கும் நோக்கத்திலே 1957-லே முதன் முதலாக Certificate Course-ஆக அது ஆரம்பிக்கப்பட்டது. பிறகு 1975-லே பட்டயப் படிப்பையும் அங்கே சிற்பக் கலைக் கல்லூரியிலே ஆரம்பித்திருக்கிறார்கள். அப்படி ஆரம்பித்த காரணத்தினால் அந்தப் பகுதியிலே இன்றைக்கு 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட சிற்பிகளுக்கு கற்சிற்பம், உலோகச் சிற்பம், மரச் சிற்பம், சுதைச் சிற்பம், Painting, கட்டடக் கலை என்று பல்வேறு கோணங்களிலே அங்கே கற்பிக்கப்பட்டு வந்தது. இப்போது அந்தப் பட்டயப் படிப்பு நிறுத்தப்பட்ட காரணத்தினாலே வெறுமனே Bachelor of Fine Arts and Bachelor of Architect மட்டும் அங்கே சொல்லித் தரப்படுகிறது. ஓராண்டுக்கு 30 பேர் மட்டுமே இப்போது அங்கே அந்தக் கல்வி நிலையத்திலே பயின்று வருகிறார்கள். ஏற்கெனவே பட்டயப் படிப்பிலே ஓராண்டுக்கு 35 பேர் மேற்சொன்ன அந்த ஆறு வகையான சிற்பங்கள் வடிப்பைச் செய்து கொண்டிருந்தார்கள். அதனாலே நமக்கு அந்தப் பகுதியிலே இருக்கின்ற எட்டாவதிலேயிருந்து வந்து படிக்கின்ற மாணவர்கள் 5 ஆண்டு படிப்பாக அங்கே படித்து, அதனாலே அதிக அளவிலே கற்சிற்பங்கள் இன்றைக்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தியாவிலேயே பல்வேறு மாநிலங்களுக்கு அங்கே படித்தவர்கள் இன்றைக்கு சிற்பங்களைச் செய்து அனுப்புகிறார்கள். அதுமட்டுமல்லாமல் கட்டடக் கலைக்கு...

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி கேளுங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** இது அவ்வளவு முக்கியத்துவமான கேள்வி, தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையெல்லாம் மானியக் கோரிக்கையில் பேச வேண்டியவை. நீங்கள் என்னவேண்டுமென்று கேள்வி கேளுங்கள். பட்டயப் படிப்பு கொண்டுவரப்படுமா என்று கேளுங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** இதிலே சுதை வேலையிலே ஈடுபட்டவர்கள் இன்றைக்கு வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று அவர்கள் பல்வேறு கோயில்களைக் கட்டுகிற வாய்ப்பு இருக்கிறது. இந்தியாவிலே பல்வேறு கோயில்களிலே சுதையால் கட்டுகிறார்கள். அதுபோல, உலோகச் சிற்பங்கள் எல்லாம் அழிந்து வருகின்றன. இந்தச் சிலை வடிப்பதெல்லாம் அழிந்து வருகிற காலக் கட்டத்திலே — இந்த பட்டயப் படிப்பிலே, அதாவது கலை ஆர்வம் அதிகமாக இருக்கின்றவர்களுக்கு படிப்பதற்குத் தோன்றாது. மேல்படிப்புக்குச் செல்லத் தோன்றாது. எனவே இந்தப் பட்டயப் படிப்பு படிப்பதன் வாயிலாகவே அந்தப் பகுதியிலே இருக்கிற ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு, அதிக அந்நியச் செலாவணி கிடைக்கிற வாய்ப்பு இருக்கிறது. எனவே மீண்டும் அந்தப் பட்டயப் படிப்பைக்கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நுண் கலைகளிலெல்லாம் கல்வி அறிவை அடிப்படையாகக் கொண்டு மட்டும் திறமை வளர்வதில்லை. சிலருக்கு இயற்கையாகவே திறமைகள் அமைந்திருக்கின்றன. அவற்றின் மூலமாக அவர்கள் சிறந்த சிற்பக் கலையைத் தருகின்ற வல்லுநர்களாக வருகின்றார்கள். இருப்பினும், ஒரு முறையான கல்வியை நாம் தரும்போது, ஒரு அடிப்படைக் கல்வியும் அதற்குத் தேவைப்படுகிறது. முன்பு சொன்னதுபோல 1957-லே ஆரம்பிக்கும்போது — Certificate Course — சான்றிதழ் பட்டப் படிப்பாகக் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு 1975 ஆம் ஆண்டு முதல் பட்டயப் படிப்பு வழங்கப்பட்டது. பிறகு 1980 ஆம் ஆண்டிலிருந்து 3 ஆண்டு பட்டப் படிப்பாக மாற்றப்பட்டது. இது B.Sc. என்ற ரீதியில் கொடுக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல இங்கே பயிற்சி பெற்றவர்கள் உலக அளவில் பல இடங்களுக்குச் சென்று தங்களுடைய திறமைகளைக் காண்பிப்பதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. அவ்வாறு இருக்கும்போது ஓர் அடிப்படையான கல்வியை நன்கு படித்திருந்தால் அவர்கள் திறமை வளர அத்தகைய ஒரு பயிற்சி தருவதன் மூலமாக, அவர்களுக்கு படிப்பைத் தருவதன் மூலமாக உலக அளவிலே அவர்கள் திறமையைக் காண்பிப்பதற்கு ஏதுவாக இருக்கிறது. ஆகவே அத்தகைய ஒரு பட்டப்





படிப்பு தருவதன் மூலமாக, பல்கலைக்கழகத்தின் மூலம் அளிக்கப்பட்ட பட்டப் படிப்பைத் தருவதன் மூலமாக அவர்களுக்கு ஒரு பெரிய மரியாதையும் கிடைக்கும். அந்த அடிப்படையைக்கொண்டுதான் மூன்று ஆண்டு பட்டப் படிப்பாகக் கொண்டுவரப்பட்டது.

அதற்குப் பிறகு All India Council for Technical Education என்று இருக்கிறது. இத்தகைய தொழில்நுட்ப கல்விகளையெல்லாம் தரும்போது அவர்கள் சில வரைமுறைகளை வகுக்கின்றார்கள். ஆகவே அகில இந்திய அளவில் இந்தக் கல்வி நிறுவனத்திற்கு ஒரு மதிப்பு தர வேண்டும், அதற்கு அந்தஸ்து தர வேண்டும் என்பதற்காக அதன் அடிப்படையில் நான்கு ஆண்டு பட்டப் படிப்பு கொண்டுவந்து இருக்கிறோம். ஆகவே நான்கு ஆண்டு பட்டப் படிப்பில் 40 மாணவர்களை ஆண்டு ஒன்றுக்கு சேர்ப்பதற்காக 2000-2001-ல் தொடங்கப்பட்டு அவ்வாறு செயல்பட்டு வருகிறது. ஆகவே பட்டயப் படிப்பைக் காட்டிலும் பட்டப் படிப்பு மாணவர்களுக்கு மிகவும் ஏதுவாக இருக்கும் என்ற கருத்தில்தான் அரசு செயல்படுத்தி வருகிறது. அப்படி பட்டயப் படிப்பும் தேவையென்றால் அரசு அந்தப் பகுதியினுடைய சூழ்நிலைக்கு ஏற்ப அந்த நிறுவனத்தினுடைய ஆசிரியர்களைக் கலந்தாலோசிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம்

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் இப்போது மீண்டும் அந்தப் பகுதியிலே பட்டயப் படிப்பு கொண்டுவருவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தும் என்று தெரிவித்ததற்கு நன்றியைக் கூறிக்கொண்டு, அந்தக் கல்லூரியிலே இருக்கின்ற Lecturer-கள் இன்றைக்கு அதிகமாக இருக்கிறார்கள். 35 பேர் Lecturer-களாக இருக்கிறார்கள். ஒரு முதல்வர் இருக்கிறார். அதேபோன்று ஏனைய பணியாளர்கள் 25 பேருக்கு மேல் இருக்கிறார்கள். நிருவாகச் செலவு கூடுதலாக ஆவதற்கு வாய்ப்பில்லை. எனவே மீண்டும் கொண்டுவருவதற்கான பணிகளைச் செய்வோம் என்று அறிவித்த நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 324, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

[2002 மே 9

.324—

## மகளிர் சட்டக் கல்லூரி

***20595—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மகளிர் சட்டக் கல்லூரி அமைப்பது குறித்து அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை

முற்பகல் 10-15

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, கோவை, திருச்சி, திருநெல்வேலி, மதுரை சட்டக் கல்லூரிகள், தற்போது மாணவ மாணவியர்கள் சட்டம் பயில அமைக்கப்பட்டிருக்கின்றன. மகளிர் அதிகமான அளவில் வழக்கறிஞர் தொழிலிலும் பொது வாழ்விலும் ஈடுபடுவதால், அதிகமான பெண்கள் சட்டம் படிக்க ஆவலாக உள்ளனர். வருங்காலங்களில் பெண்கள் அதிகமாக சட்டம் பயில்வதற்கு அவர்களுக்கு என்று ஒரு சட்டக் கல்லூரி இருந்தால், சட்டம் பயின்று வழக்கறிஞர்களாகப் பணியாற்ற ஏதுவாக இருக்குமென்பதால் மகளிர் நலனில் அக்கறைகொண்டு பாதுகாக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அரசு மகளிர் சட்டக் கல்லூரி அமைக்கும் இந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்யுமா? மேலும் தமிழ்நாட்டில் முதன்முதலாக மகளிர் காவல் நிலையங்கள், மகளிர் நீதிமன்றங்கள் மற்றும் College of Excellence என்ற சட்டக் கல்லூரி அமைக்க அனுமதியளித்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு, நீதிபதிகள் நியமிக்கும்போதுகூட 33 சதவிகிதம் மகளிருக்கு ஒதுக்கீடு செய்ய



2002 மே 9]

உத்தரவிட்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு, பெங்களூரில் Bishop Garden's Women's Christian College என்ற காலேஜுக்கு Bar Council of India மகளிர் சட்டக் கல்லூரிக்கு அனுமதி அளித்தது பற்றி Indian Express பத்திரிகையில் 3-4-2002 அன்று செய்தி வெளியிடப்பட்டுள்ளது. ஆகவே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு தமிழகத்தில் முதன் முதலாக மகளிர் நலன் காக்கும் வகையில் மகளிருக்காக தனியாக ஒரு சட்டக் கல்லூரி அமைத்து அதன் மூலம் கூடுதலாக வழக்கறிஞர்கள் வருவதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு புள்ளிவிவரத்தை நான் இங்கே சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். 2001-2002 ஆம் ஆண்டில் மொத்தம் நுழைவுத் தேர்விற்கு விண்ணப்பித்தவர்கள் 14,226 பேர். இதிலே நம்முடைய மாணவியர்கள் 1991 பேர் சட்டக் கல்வி பயில வேண்டுமென்று விண்ணப்பித்து இருக்கின்றார்கள். எனவே இதிலே சதவிகிதம் என்று பார்க்கின்றபொழுது ஏறக்குறைய 15 சதவிகிதம் வருகின்றது. இதேபோன்று தொழிற் கல்விக்கு Professional Course மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை, மருத்துவம் போன்ற தொழிற் படிப்புகளில் மகளிருக்கு என தனியாக அரசு கல்லூரி எதுவும் கிடையாது என்கின்ற நிலையில் மொத்தம் 1,43,168 பேர் விண்ணப்பித்த நிலையில் அவர்களில் 55,644 பேர் பெண்கள் ஆவார்கள். எனவே 38.87 சதவிகிதம் பெண்கள் விண்ணப்பித்து இருக்கின்ற சூழ்நிலையில் தொழிற் கல்வியிலே மகளிருக்கு என்று தனியாக கல்லூரி கிடையாது. அதிலும் 10-லிருந்து 15 சதவிகிதம் வரை வருகின்ற சூழ்நிலையிலே மகளிருக்கு என்று தனியாக சட்டக் கல்லூரி ஆரம்பிப்பது என்பதற்கு சாத்தியக்கூறு இல்லை.

"பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்"

கொண்ட நம்முடைய அன்னையின் ஆட்சியில் ஆண்களுக்கு நிகராக பெண்கள் எல்லா வகையிலும் சமமாகக் கருதப்படுகிற ஒரு நிலை இருக்கும்பொழுது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மகளிர் சட்டக் கல்லூரி கேட்பது நியாயமா என்று அவருக்கு நான் கேள்வியாகக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[2002 மே 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 325, திரு. எஸ்.எம். சீனிவேல், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**325—**

## தார்ச் சாலை

***3874—திரு. எஸ்.எம். சீனிவேல்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் முருகப்பெருமான் கோயிலில் பங்குனி மற்றும் தேர்த் திருவிழாவின்போது பக்தர்கள் மலையைச் சுற்றி பிரார்த்தனை செய்யும் தேவஸ்தான சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் அம்மலைச் சாலையை தார்ச் சாலையாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் சுவாமி உலா வரும் கிரி வீதி சுற்றிலும் தார்ச் சாலை அமைக்க மதிப்பீட்டின் விவரப்படி 3.25 கி.மீ. சுற்றுக்கு ஆறு பிரிவாக மதிப்பீடுகள் தயாரித்து அதற்கு மொத்தம் ரூ.49.70 இலட்சத்திற்கு 50 விழுக்காடு தொகை ரூ.24.85 இலட்சம் திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து திருப்பரங்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சி நிருவாகத்திற்கு வழங்க மேற்படி திருக்கோயில் உதவி ஆணையர்/செயல் அலுவலருக்கு ஆணையரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே தார்ச் சாலைப் பணி விரைந்து முடிக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனிமேலாவது அந்த திருப்பரங்குன்றம் கோயிலுக்கு தார்ச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



2002 மே 9]

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொகுதியினுடைய முன்னாள் சட்டமன்ற உறுப்பினராக நம்முடைய தலைவர் இருந்த காரணத்தினாலேதான் மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலின் சுவாமி உலா வரும் கிரி வீதியைச் சுற்றிலும் தார்ச் சாலை அமைப்பதற்கு 1994-ல் ரூ.2.75 லட்சம் செலவு என்றும், 8 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது அதற்கு ரூ.49.70 லட்சத்தில் அதனுடைய மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிறது. 1995-ல் மதிப்பீடு செய்யப்பட்ட பணிகள் வெறும் தார்ச் சாலையாகத் தான் அமைக்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் தற்போது 2001-ல் தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகள் தார்ச் சாலையுடன் சீல் கோட் வேலையும் சேர்த்து தயார் செய்யப்பட்டுள்ளது. 1995-ல் அமைக்கப்பட்ட தார்ச் சாலை சரியான வடிகால் மற்றும் R.C.C. கல்வெட்டு இல்லாமல் அமைந்ததால் அது சீக்கிரம் அரிப்பு ஏற்பட்டு உடைந்து போய்விட்டது. தற்போது 2001-ல் தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகள் நீண்டநாள் இருக்கக்கூடிய முறையில் வடிகால் மற்றும் R.C.C. கல்வெட்டுகளுடன் தயார் செய்யப்பட்டுள்ளது. 1995-ல் பயன்படுத்தப்பட்ட ஜல்லி மற்றும் தார்ப் பொருட்கள் 2001-லும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இப்பொருட்களின் விலை வருடத்திற்கு, உத்தேசமாக 15 விழுக்காடு அதிகமாகிக்கொண்டே போவதாலும், தற்போது மலையைச் சுற்றிலும் கிரிவலப் பாதையில் முழுமையாக தார்ச் சாலை அமைக்க 49.70 இலட்சம் ரூபாய் ஆகும்.

முற்பகல் 10-20

1994 ஆம் ஆண்டு தார்ச் சாலை மட்டும் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தற்போது கிரி வீதி அரிப்பு ஏற்பட்டு மிகவும் பள்ளமாக உள்ளதால், 3.25 கிலோமீட்டருக்கு, இரண்டு அடுக்கு மெட்டல் தளம் அமைத்து, தார்ச் சாலை அமைக்கவும், 295 மீட்டருக்கு வடிகால் அமைக்கவும், இரண்டு இடங்களில் சிறு பாலங்கள் அமைக்கவும் மதிப்பீடுகள் 49.70 இலட்சம் ரூபாய்க்குத் தயாரிக்கப்பட்டு, அதில் 50 விழுக்காடு தொகை, அதாவது 24.85 இலட்சம் ரூபாய் திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து, திருப்பரங்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சி நிருவாகத்திற்கு வழங்க, மேற்படி திருக்கோயிலின் உதவி ஆணையர்/செயல் அலுவலருக்கு ஆணையரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தார்ச் சாலை கூடிய

[2002 மே 9

விரைவில் முடிக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சருக்கு நன்றி கூறுகிறேன்.

வினா எண் 326, திரு. எஸ். தாமோதரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**326—**

**குடிநீர் வசதி**

***1488—திரு. எஸ். தாமோதரன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருதுநகர் தொகுதி, அல்லம்பட்டிக்கு உடனடியாகக் குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், அல்லம்பட்டி கிராமத்திற்கு தற்போது குடிநீர் முறையாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உடனடியாகக் குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்டிருக்கிறார். இந்த நிதியாண்டிற்குள் கூடுதலாகக் குடிநீர் வழங்குவதற்கு விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூரைக்குண்டு பஞ்சாயத்துக்குட்பட்ட அல்லம்பட்டியில் சுமார் 15 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள். இது விருதுநகர் நகராட்சியில் இல்லாதபோதிலும் அதையொட்டிய பகுதியாகும். இதற்கு இப்போது லாரிகள் மூலமாகவே தண்ணீர் சப்ளை செய்துகொண்டிருக்கிறார்கள். வாவாளியில் இருந்து ஒரு கிணறு மூலம் தண்ணீர் கொண்டுவரும் திட்டம் பாதியிலே நிற்கிறது. அந்தத் திட்டம் அமல்படுத்தப்படுமா என்று தெரியவில்லை. அல்லது தாதம்பட்டி கண்மாய் அருகிலே கிணறு வெட்டி அதன் மூலமாகவோ, சின்னவள்ளிக் குளத்திற்கு



2002 மே 9]

அருகில் கிணறு வெட்டி அதன் மூலமாகவோ அந்த மக்களுக்கு நல்ல குடிதண்ணீர் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியவள்ளிக்குளம் அருகில் புதிய திறந்தவெளிக் கிணறு அமைத்து குடிநீர் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 327, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**327—**

**குடிநீர் வசதி**

***5563—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், சஞ்சீவராயன் கோவில் புதுநகரில் கொத்தடிமையிலிருந்து மீட்கப்பட்டவர்கள் வாழும் பகுதியில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து குடிநீர் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்தக் குடியிருப்புப் பகுதி சுமார் 250 மக்கள்தொகை உள்ள பகுதி. இதற்கு குடிநீர் முறையாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும் குடிநீர் தேவை என்று அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்த ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலரால் மேலும் குடிநீர் வழங்குவதற்கு 4 கையிறைப்பான்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியத்திலுள்ள ஆதமங்கலம் என்ற

[2002 மே 9

கிராமத்தில் பல ஆண்டுகளாகக் கொத்தடிமையாக இருந்த சுமார் 60 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் சென்ற ஆட்சிக் காலத்தில் மீட்கப்பட்டு அவர்கள் சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எடமணல் ஊராட்சியில் உள்ள சஞ்சீவராயன்கோவில் புதுநகர் என்ற இடத்தில் குடியமர்த்தப்பட்டார்கள். பிறகு, அவர்கள் குடியிருந்து வரும் பகுதிகளுக்கு எந்த ஓர் அடிப்படை வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை. 'ஆயிரத்தில் ஒருவன்' என்ற திரைப்படத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் அடிமைகளுக்காகப் போராடி வெற்றி கண்டதைப் போல அவரது வழியில் ஆட்சி நடத்தி வருகின்ற அம்மா அவர்களின் அரசு, சீர்காழி தொகுதியில் கொத்தடிமைகள் குடியிருக்கும் பகுதிகளுக்கு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து, குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி, சமுதாயக் கூடம் மற்றும் சாலை வசதிகள் செய்து கொடுக்க முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின் பேரில் இந்தப் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 328, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**328—**

## பொருட்கள் வழங்குதல்

***6405—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு என்னென்ன பொருட்கள் வழங்கப்படுகின்றன?

(ஆ) வேறு பொருட்கள் வாங்கினால்தான் அரிசி வழங்கப்படும் என்ற நிபந்தனை ஏதேனும் உள்ளதா?



2002 மே 9]

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு இன்றியமையாப் பொருட்களான அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய், ஊட்டி தேயிலைத் தூள் மற்றும் அயோடின் கலந்த உப்பு ஆகிய பொருட்கள் வழங்கப்படுகின்றன. வேறு பொருட்கள் வாங்கினால்தான் அரிசி வழங்கப்படுமென்ற நிபந்தனை எதுவும் விதிக்கப்படவில்லை.

முற்பகல் 10-25

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படுகின்ற உணவுப் பொருட்களின் எடை மிகவும் குறைவாக இருக்கின்றது. மண்ணெண்ணெய் வாங்குகின்றபோது ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் 900, 950 மில்லிதான் இருக்கின்றது. எனவே அதைச் சரியாகக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதோடு, மண்ணெண்ணெய் வழங்குகின்ற நாட்களில் கடையைத் திறப்பதற்கு முன்னதாகவே அதிகாலை 6 மணிக்கே வயதான தாய்மார்கள் அந்த நியாயவிலைக் கடைகளின் முன்பு நிற்கின்றார்கள். இது பார்ப்பதற்கு பரிதாபமாக இருக்கின்றது. எனவே இந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்ணெண்ணெயைப் பொறுத்தவரையில் சரியான முறையிலே சரியான அளவிலே வழங்கப்பட வேண்டுமென்ற உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் சில இடங்களிலே இருக்கிற குறைபாடுகளை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினால் தக்க நடவடிக்கையின் மூலம் அதைச் சரி செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. இன்னும் மண்ணெண்ணெயைப் பொறுத்தவரையில் சரியான அளவிலே கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் மண்ணெண்ணெய் பங்க்குகளை எல்லாம் உருவாக்குகிற திட்டத்தை இந்த அரசு விரைந்து செயல்படுத்திக்கொண்டிருக்கிறது. மண்ணெண்ணெய் பங்கிலே வழங்குகிறபோது சரியான அளவிலே கொடுக்கலாம், வாங்குகிறவர்களும் அதைச் சரியான அளவிலே பார்த்து வாங்கிக்கொண்டு செல்வதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தாலே இந்த அரசு மண்ணெண்ணெய்

[2002 மே 9

பங்குகளை அதிகமாக உருவாக்கி பொதுமக்களுக்கு நிறைவான அளவிலே அதைக் கொடுப்பதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தற்போது நியாயவிலைக் கடைகளில் ஊட்டி டீ விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் பல்வேறு கடைகளிலே ஊட்டி டீ இல்லை என்று சொல்கிறார்கள். ஊட்டி டீ இல்லை என்று சொல்லாமல் கேட்கின்ற அளவுக்கு டீ வழங்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்ளே, ஊட்டி டீ-யைப் பொறுத்தவரையில் மாநிலத்தில் இருக்கிற அத்தனை நியாயவிலைக் கடைகளிலும் மாதத்திற்கு 300 டன் அளவுக்கு விற்கிற ஏற்பாட்டினை இந்த அரசு செய்துகொண்டிருக்கிறது. அவர்கள் கேட்கின்ற அளவிலே — இப்போது பொட்டலமாக 100 கிராம் அளவுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிற அந்த அளவை — denomination-ஐக் குறைத்து வழங்க வேண்டுமென்று பொதுமக்களிடத்திலே இருந்து வேண்டுகோள்கள் வந்துகொண்டிருக்கின்றன. அதை இந்த அரசு சிந்தித்துக்கொண்டிருக்கிறது. விரைவிலே அதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்ளே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரேசன் கடைகளில் அரிசியை வாங்கும்போது வேறு பொருட்களை எல்லாம் வாங்க வேண்டுமென்று எந்த அறிவுறுத்தலும் சொல்லப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால் எங்கள் பகுதியிலே ஒரு ரேசன் கடையிலே ஒரு மாதத்திற்கு அந்த விற்பனையாளர் ஊட்டி தேயிலையை சுமார் 22 கிலோ கட்டாயம் விற்க வேண்டும் என்ற உத்தரவும், அதைப்போல ஊட்டி தேயிலை 100 கிராம் 9 ரூபாயும், அயோடின் உப்பு கிலோ 2½ ரூபாயும், மைதா ஒரு கிலோ 13 ரூபாயும், ரவை ஒரு கிலோ 14 ரூபாயும், கோதுமை ஒரு கிலோ 8 ரூபாய் 85 பைசாவும் ஆக, இன்றைக்கு 50 ரூபாய்க்கு பொருட்கள் வாங்கினால்தான் அரிசி வழங்கப்படும் என்று சொல்லக்கூடிய காரணத்தால் ஏழை எளிய



2002 மே 9]

மக்கள் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அங்கே இருக்கின்ற விற்பனையாளர்கள், அதை விற்க வேண்டுமென்று target வைக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தால், இதை வாங்கினால்தான் அரிசி தருவோம் என்று சொல்வது, இன்றைக்கு ஏழை எளிய மக்களை பாதிக்கக்கூடியதாக இருக்கின்ற காரணத்தால் நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் பத்திரிகைகள் மூலமாக யாரும் இதைக் கட்டாயமாக வாங்க வேண்டிய அவசியம் இல்லை, தேவையானவர்களுக்கு அரிசி வழங்கப்படும் என்று சொல்ல முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலே 27,886 நியாயவிலைக் கடைகள் இருக்கின்றன. இவ்வளவு பெரிய அளவிலே, நியாயவிலைக் கடைகளை அரசாங்கமே நடத்துவது நம்முடைய தமிழ்நாட்டில் மட்டும்தான். ஆகவே அதிலே எங்காவது ஓர் இடத்திலே விற்பனையாளர்கள் ஏதாவது தவறு செய்தால் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறபோது, அதைக் கடுமையான நடவடிக்கையின் மூலம் சரி செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. மேலும், இந்த ரேசன் பொருட்கள் அல்லாத பொருட்களை வாங்கவேண்டும், பொதுமக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்கிற உணர்வினை இந்த அரசு எதனாலே கொண்டுவந்திருக்கிறது என்று சொன்னால் வெளிக் கடைகளைவிட கூட்டுறவுக் கடைகளிலே விலை குறைவாக இருப்பதனால் பொது மக்களுக்குப்போய்ச் சேரவேண்டும் என்பதற்காகத்தான் அந்தப் பொருட்கள் விற்கப்படுகின்றன. ஆகவே அந்தப் பொருட்களை வாங்கினால்தான்—இந்தப் பொருள்—அரிசி கொடுக்கப்படும் என்ற கட்டாயம் நிச்சயமாக இல்லை. அதை பத்திரிகை வாயிலாக அல்ல, இப்போது நான் சொல்கிற இந்தப் பதிலினையேகூட பத்திரிகைகள் முழுமையாக வெளியிடுகிறபோது அப்படிப்பட்ட தவறு செய்கிறவர்கள்மீது இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் விரும்புகிற மாதிரி மேலும் அறிக்கைகளின் மூலமாகவும், ஆணைகளின் மூலமாகவும் அந்த ஊழியர்களுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2002 மே 9

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய், தேயிலை, உப்பு போன்ற பொருட்கள் விற்கப்படுவதாகத் தெரிவித்தார்கள். நான் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்வதெல்லாம், இதற்காக நாம் அங்கே கொடுக்கின்ற கடை வாடகை மற்றும் சம்பளத்தை ஒப்பிடுகின்றபோது அந்தக் கடைகளில் ஏனைய மளிகைக் கடைகளில் வழங்கப்படுவதுபோல, எண்ணெய், பருப்பு, சோப்பு, சீப்பு, கண்ணாடி மற்றும் கைத்தறித் துணிகள் போன்ற அனைத்துப் பொருட்களையும் வியாபாரம் செய்கின்றபோது, அந்தத் துறை இன்னும் கூடுதல் இலாபம் பெறுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படும். எனவே எண்ணெய், பருப்பு, சோப்பு, சீப்பு, கண்ணாடி விற்பனை செய்வது போன்று கைத்தறித் துணி வகைகளை அவற்றின் மூலமாக விற்பனை செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பினை ஏற்றிருக்கிற தமிழகத்தினுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒவ்வொரு நியாயவிலைக் கடையிலேயும் ஒவ்வொரு சிறப்பங்காடி என்ற அந்த அங்காடியிலேயும் ஒரு மினி சூப்பர் மார்க்கெட் என்கிற அளவுக்கு பொருள்களை எல்லாம் வைத்து வெளி மார்க்கெட்டை விடக் குறைந்த விலையிலே மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த உத்தரவின் அடிப்படையிலேதான் இப்போது சில பொருட்கள் விற்பனைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அது மக்களிடத்திலே ஏற்படுத்துகிற வரவேற்பினையொட்டி இன்னும் அதை விரிவுபடுத்தி அதிகப்படியான பொருட்களை விற்கின்ற அந்த ஏற்பாட்டினை இந்தச் சிறப்பங்காடிகள் செய்யும். ஆகவே புரட்சித் தலைவி அவர்களுடைய சீரிய எண்ணமான இந்திய துணைக் கண்டத்திலேயே வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவிற்கு இந்த 27,886 நியாய விலைக் கடைகளையும் மினி சூப்பர் மார்க்கெட்டுகளாக மாற்றுகின்ற அந்தத் திட்டத்தினை விரைந்து இந்த அரசு, இந்தத் துறை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.



2002 மே 9]

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோக விற்பனை முறையில், குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படக்கூடிய மலிவு விலை அரிசி சம்பந்தமாக ஜூலை மாதம் முதல் நாம் கூப்பன்கள் கொடுக்க இருக்கிறோம். அதிலே, குடும்பத் தலைவர் Photo, யார் Photo இருக்கிறதோ அவர் மட்டும்தான் அந்தக் கூப்பனைக் கொண்டுபோனால் அரிசி வாங்க முடியும் என்று இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது. நடைமுறையில் குடும்பத் தலைவர் மட்டுமே போய் ரேஷன் கடைகளிலே நின்று இந்த அரிசியை வாங்குவது மிகப் பெரிய வேலையிழப்பை ஏற்படுத்துவதுடன், கூலித் தொழிலாளிகள், சாதாரண மக்கள் இதற்காக மிகவும் கஷ்டப்படுவார்கள். ஆகவே ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருக்கிற அந்தக் குடும்பத்திலே, யாராவது ஒருவர் photo-வை கூடுதலாகச் சேர்த்து, மனைவியாகவோ, மகளாகவோ, தாயாகவோ, யார் இருக்கிறார்களோ அவர்களின் ஒரு photo-வைக் கூடுதலாகச் சேர்த்து, குடும்பத்திலே உள்ள ஒருவர் போய் வாங்கினால் அரிசி வழங்கப்படும் என்ற உத்தரவாதத்தை அரசு வழங்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூப்பன் முறையே, diversion-ஐக் குறைப்பதற்காகவும் போலி அட்டைகளைக் குறைப்பதற்காகவும், ரேஷன் அரிசியைத் தவறான முறையிலே கொண்டுபோய் கள்ளச் சந்தையிலே விற்பதைத் தடுப்பதற்கும்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ரேஷன் அரிசி என்பது மானிய விலையிலே அரசாங்கம் கொடுக்கின்ற ஒரு சலுகை. அந்தச் சலுகையைப் பெறுகிறவர்கள், நியாயமாக அந்த அட்டைதாரர்கள் வந்து வாங்குவதுதான் முறையாக இருக்கும் என்கிற காரணத்தினாலே இந்த அரசு அதிலே உறுதியாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு குடும்ப அட்டைகளுக்கு வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு அரிசி வழங்குவதிலே ஒரு நெறிமுறையைக் கடைப்பிடித்துள்ளது. அந்த நெறிமுறைகளின்படி தமிழகத்திற்கு வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு எத்தனை மெட்ரிக் டன் அரிசியை மாதந்தோறும் வழங்குகிறார்கள்? அதே நேரத்தில், அண்டை மாநிலமான ஆந்திர மாநிலத்திற்கும் மற்றும் இந்தியாவில் உள்ள மற்ற உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கெல்லாம் கூடுதலாக அரிசி

[2002 மே 9

ஒதுக்கீடு செய்வதாகத் தகவல்கள் வந்திருக்கின்றன. அதே முறையில் தமிழகத்திற்கும், வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள் நல்ல முறையில் பயன்பெறுகின்ற வகையில் கூடுதலாக அரிசியைக் கேட்டுப்பெற இந்த அரசு முயற்சி எடுக்குமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ரேஷன் அரிசியைப் பொறுத்தவரை நம்முடைய மாநிலத்திலே வறுமைக்கோட்டிற்கு மேலே, வறுமைக்கோட்டிற்குக் கீழே என்கின்ற ஒரு நிலையே இல்லாமல், நம்மிடத்திலேயிருக்கிற 1 கோடியே 61 இலட்சம் கார்டுதாரர்களிலே, ஒரு கோடியே 36 இலட்சம் கார்டுதாரர்களுக்கு ரேஷன் அரிசியை ஒரே விலையான கிலோவுக்கு 3 ரூபாய் 50 காசுக்குக் கொடுக்கின்ற இந்தத் திட்டத்தை, இந்திய துணைக் கண்டத்திலேயே நாம்தான் சிறப்பாக நிறைவேற்றி, குறைந்த விலையிலே அரிசியைக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.

முற்பகல் 10-35

மத்திய அரசாங்கத்திலேயிருந்து கொடுக்கிற, Central pool-லிலே இருந்து கிடைக்கிற அரிசி 48 இலட்சம் கார்டுகளுக்கு, வறுமைக் கோட்டிற்குக் கீழே என்று அவர்கள் ஒரு புள்ளிவிவரத்தை எடுத்து, 48 இலட்சம் கார்டுகளுக்கு ஏறக்குறைய 95 இலட்சம் டன்னைத்தான் அவர்கள் அரிசியாகக் கொடுக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தினுடைய தேவை 1 கோடியே 36 இலட்சம் கார்டுதாரர்களுக்கு ஏறக்குறைய 2 இலட்சம் டன் அரிசி ஒரு மாதத்திற்குத் தேவைப்படுகிறது. நம்முடைய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக கொள்முதல் செய்து மக்களுக்கு குறைந்த விலையிலே ரூ.3.50 காசுக்குக் கொடுக்கப்படுகிறது. இந்த B.P.L. ரேட் என்பது மத்திய அரசாங்கத்திலே கொடுக்கிற அரசியினுடைய விலை 5 ரூபாய் 65 காசு, அதிலேயிருந்து மிகப் பெரிய மானியமாக ரூ.3.50 காசுக்கு 1 கோடியே 36 இலட்சம் கார்டுதாரர்களுக்கு இந்த அரசு அரிசி வழங்கிக்கொண்டிருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவிலே மாவேலி ஸ்டோர்ஸ் என்று பெரிய பெரிய நகரங்களில் வைத்து ஒரு சிறப்பு அங்காடியாகவே இந்த நியாய விலைக் கடைகளை



2002 மே 9]

நடத்துகிறார்கள். அதிலே எல்லா பொருட்களையும் அவர்கள் குறைந்த விலையிலே வெளி மார்க்கெட்டிலிருந்து வாங்கி மக்களுக்குக் குறைந்த விலையிலே கொடுக்கிறார்கள். அப்படி இந்த அரசு செய்ய முன்வருமா? மண்ணெண்ணெய் குறைவுக்கு அங்கே கேனைக் கொடுக்கிறார்கள். இங்கேகூட பொது விநியோக சீர்திருத்த கமிட்டியில் நாங்கள் சென்று பார்த்து, ஆலோசனையை அறிக்கையிலே அரசுக்குக் கொடுத்திருக்கிறோம். 3 லிட்டர், 5 லிட்டர் மண்ணெண்ணெய் கேன்கள் மூலமாக நீங்கள் மண்ணெண்ணெய் வழங்கினால் மண்ணெண்ணெய் அளவு குறைவைத் தடுக்க முடியும் என்று நாங்கள் ஏற்கெனவே குழுவிலே தெரிவித்திருக்கிறோம். அவற்றையெல்லாம் அமைச்சர் அவர்கள் செயல்படுத்த முன்வருவார்களா? Diversion-ஐக் குறைப்பதற்கு கூப்பன் முறையைக் கொண்டுவருகிறபோது கூட, அதாவது ஆந்திராவிலே 3 பேர் இருக்கிற குடும்பத்திற்கு ஒரு வகையான கூப்பன், 4 பேர் குடும்ப உறுப்பினர்கள் இருக்கக்கூடிய மக்களுக்கு ஒரு வகையான கூப்பன் என்று அவர்கள் கொடுத்து, diversion-ஐத் தடுக்கிறார்கள். ஏன் என்று சொன்னால், அந்தக் கூப்பனைக் கொடுக்கிறபோதுகூட சில நேரங்களிலே சரியான கணக்கு வைக்க வேண்டும் என்பதற்காக அந்தக் கூப்பனுக்குள்ளே குடும்ப உறுப்பினர் கணக்கு ஒன்றை வைத்திருக்கிறார்கள். ஆகவே இவற்றையெல்லாம் செம்மைப்படுத்தி அமைச்சர் அவர்கள் இந்தப் பொது விநியோக முறையைச் சீர்திருத்துவதற்கு முன்வருவாரா? ஏனென்றால் இன்றுகூட விழுப்புரத்திலே ஒரு கடையிலே 13 இலட்சம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன் எத்தனை கேள்வி? அவரை போட்டுக் கொல்லாதீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்ணெண்ணெயைப் பொறுத்தவரை நிச்சயமாக பாக்கெட்டுகளில் அடைத்துத் தருகிற வாய்ப்பு நம்முடைய மாநிலத்திலே மிக மிகக் குறைவு. ஏன் என்று சொன்னால், ஏற்கெனவே நான் விளக்கமாகச் சொன்னதுபோல 1,500 கோடி ரூபாய் உணவு மானியத்தை அரசாங்கம் மிகச் சிரமத்திற்கிடையே கொடுத்துக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற இந்தக் கோரிக்கையை, கேன்கள் மூலமாக மண்ணெண்ணெய் வழங்கப்படுகிற திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று சொன்னால், அதற்கொரு மானியம் மிகப் பெரிய அளவிலே உருவாகி, இந்த அரசாங்கத்திற்கு மிகப் பெரிய நெருக்கடியை உருவாக்கும். ஆகவேதான், மண்ணெண்ணெய் நியாயமாக மக்களுக்கு

[2002 மே 9

வழங்க வேண்டும் என்பதற்காகத்தான் மண்ணெண்ணெய் பங்க்குகளை அதிகப்படியாக உருவாக்கி சரியான அளவிலே, நியாயமான விலையிலே கொடுப்பதற்கு இந்த அரசு முயற்சி செய்துகொண்டிருக்கிறது. மற்ற மாநிலங்களிலே இல்லாத சிறப்பு அம்சமாக மாண்புமிகு உறுப்பினர்கள் பழனிசாமியும், ஞானசேகரனும் இந்தக் குழுவினுடைய அறிக்கையை புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே கொடுக்கிறபோது மிகப் பாராட்டிக் கொடுத்தார்கள். தமிழ்நாட்டிலேதான் சிறப்பாக இந்த ரேஷன் கடை நிருவாகம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது, இதே நிலை தொடர வேண்டும் என்று நீங்கள் எல்லாம் வற்புறுத்தியிருக்கிறீர்கள். ஆகவே உங்களுடைய வேண்டுகோளை இந்த அரசு நிச்சயமாக நிறைவேற்றி வைக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். ராஜம்மாள்.

**திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தூத்துக்குடி தொகுதியில்கூட ரேஷன் பொருட்கள் விநியோகத்தில் முறைகேடுகள் அதிகமாக நடக்கின்றன. அதிலும் மண்ணெண்ணெய் வாங்குவதற்கு பெண்கள் அலைய வேண்டிய நிலை இருக்கிறது. 51 வார்டுகளுக்கு 5 பங்க்குகள்தான் இருக்கின்றன. அதில் 11 வார்டுகளில் உள்ளவர்கள் ஓர் இடத்திற்குப் போய் வாங்கும் போது அவர்கள் தினமும் மண்ணெண்ணெய்க்காக போய் அலைய வேண்டியிருக்கிறது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கூட மண்ணெண்ணெய்க்காக இந்த எம்.எல்.ஏ. ஏன் இப்படி கடை கடையாகப் வந்து நிற்கிறார் என்று கேவலமாகப் பேசுகிறார். அந்த அளவிற்கு முறைகேடு நடக்கிறது. அவர்களைத் திருத்த முடியவில்லை. ஆகையால் பெண்கள் சுய உதவிக் குழுக்கள் மூலமாக அவர்களிடம் இந்தப் பொருட்கள் விநியோகத்தை அனுமதித்தால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். அவ்வாறு செயல்படுத்த முடியுமா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்ணெண்ணெய் விநியோகத்தைச் சீராக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த அரசு ஒரே நேரத்திலே மண்ணெண்ணெய் கொடுப்பதற்குப் பதிலாக கார்டுகளுடைய வரிசைப் பிரகாரம் 1 ஆம் நம்பர் கார்டிலிருந்து 100 ஆம் நம்பர் கார்டுக்கு இத்தனாம் தேதியும், 100-லிருந்து 150 வரை இந்தத் தேதியிலும் கொடுக்கலாம் என்கின்ற அளவிற்கு ரேஷன் கடைகளிலே போர்டு மூலமாக எந்தெந்த



2002 மே 9]

கார்டுகளுக்கு என்றைக்கு விநியோகிக்கப்படும் என்ற விவரத்தை எழுதி வைக்க வேண்டும். நீண்ட வரிசையில் நிற்பதைத் தடுப்பதற்காக அந்த முறை பயன்படும் என்கின்ற முறையிலே புதிய முறையை இந்த அரசு செயல்படுத்த இருக்கிறது. அந்த முறையைச் செயல்படுத்துவதற்குரிய உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அது நடைமுறைப்படுத்தப்படும்.

முற்பகல் 10-40

சுய நிதிக் குழுக்கள் நியாய விலைக் கடைகளை நாங்கள் நடத்துவதற்குத் தயாராக இருக்கிறோம், எங்களுக்குத் தர வேண்டுமென்று பெண்கள் விரும்பிக் கேட்டால் இந்த அரசு நிச்சயம் அதை பரிசீலித்து, தக்க உத்தரவுகளை வழங்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நியாய விலைக் கடைகளிலே மண்ணெண்ணெய், மற்ற பொருட்களை வழங்குவதிலே — திரும்பத் திரும்பச் சொல்கிறேன்—ஏதாவது தவறு நடக்கிறது என்றால், அதை இந்த அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், நிச்சயமாக இந்த அரசாங்கம் அதன்மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, அதைச் சரி செய்யும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறபோது, இந்த உணவு விநியோக முறையைப் பற்றி ஒரு குழு பரிசீலித்ததாகச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் பழனிசாமி, ஞானசேகரன், நன்மாறன் போன்றவர்களையெல்லாம் உறுப்பினர்களாகக் கொண்ட அந்தக் குழுவானது ஓர் அறிக்கையைக் கொடுத்திருக்கிறது. அதிலே அரசைப் பாராட்டியிருப்பதாகச் சொன்னார்கள். நாங்களும் வரவேற்கிறோம். அதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. மிக நம்பிக்கையோடு, இந்த உணவுப் பொருட்கள் விநியோகம் நடக்க வேண்டுமென்ற அந்த முறையிலேதான் பாராட்டி, அந்த அறிக்கையை அளித்திருக்கிறார்கள். அந்த அறிக்கையிலே உள்ள குறிப்புகளையெல்லாம் பரிசீலித்து அரசு நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை எடுக்குமா எனக் கேட்க விரும்புகிறேன்.

குடும்ப அட்டைதாரர்களின் பிரச்சினை இருக்கிறது. இப்போது கருணாகரன் அவர்கள் கேட்டார்கள். தயவுசெய்து திரும்பவும் அதை

விளக்கமாக ஆய்வு செய்து அதற்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்று நான் உங்களை மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். குடும்பத் தலைவருடைய புகைப்படம் ஒட்டியவர்கள் மட்டும்தான் வந்து வாங்க முடியும் என்று இருந்தால் நடைமுறையிலே கண்டிப்பாக சாத்தியம் இருக்காது. ஆகவே குடும்பத்திலே இருக்கிற மேலும் ஓர் உறுப்பினரின் புகைப்படத்தையும் அட்டையிலே ஒட்டி, இவர் இல்லையென்றால் அவர் வந்து வாங்கலாம் என்று இருந்தாலொழிய, இந்த உணவுப்பொருட்கள் விநியோக முறையிலே குளறுபடிகள்தான் இருக்கும். வாங்கிப் பயன்படுத்துகிற மக்களுக்கு மிகப் பெரிய பிரச்சினைகள் இருக்கும். ஆகவே இதைப்பற்றி அரசு மறுபடியும் சிந்தித்து அப்படிப்பட்ட ஒரு முறையைக் கொண்டுவருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த உணவு விநியோக முறைக்காக நியமிக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு கொடுத்திருக்கிற அறிக்கையில் உள்ள ஆலோசனைகள் எல்லாம் அரசாங்கத்தினுடைய தீவிர பரிசீலனையில் இருக்கின்றன. அவற்றையெல்லாம் எவ்வளவு தூரம் விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டுமோ, அவ்வளவு விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்த அரசு ஆர்வத்தோடு இருக்கிறது.

வர இருக்கிற ஜூன் 1 ஆம் தேதி முதல் கூப்பன்கள் வழங்கப்பட இருக்கின்றன. ஒரு மாத காலத்திற்கு சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் கூப்பன்கள் கொடுக்கப்பட்டு, அதற்குப் பின்னாலே ஜூலை 1 ஆம் தேதியிலிருந்து தமிழ்நாட்டிலே கூப்பன் முறை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட இருக்கிறது. அப்படிக் கொண்டு வருகிறபோது, நிச்சயமாக இந்த அரசாங்கம் உறுதியாக இருக்கிறது. இந்தக் கூப்பன் மூலமாக அரசாங்கம் மானிய விலையிலே உணவுப் பொருள்களைக் கொடுக்கிறது. மானிய விலையிலே அரசு கொடுக்கின்ற அந்த அரிசியை வாங்க வேண்டுமென்று நினைக்கிறவர்கள் நிச்சயமாக, அவர்களே வந்து வாங்குவதன் மூலமாகத்தான் இந்த diversion-ஐத் தடுக்க முடியும், கள்ளச் சந்தையிலே விற்பவர்களைத் தடுக்க முடியும் என்கின்ற காரணத்தினாலே இப்படிச் • செய்கிறோம். இன்னும் தலைவருடைய புகைப்படத்தோடு இரண்டாவது நபருடைய புகைப்படத்தையும் அந்த அட்டையிலே ஒட்ட வேண்டுமென்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள்





அந்த வேண்டுகோளை இப்போது நடைமுறைப்படுத்துவதிலே நிறையச் சிக்கல்கள் இருக்கின்றன. புதிய அட்டைகள் வழங்கும்போது, உறுப்பினர் சொன்ன ஆலோசனையை இந்த அரசு சிந்திக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைதாரர்களுக்கு தற்போது 20 கிலோ அரிசி வழங்கப்படுகிறது. சில கடைகளிலே 12 கிலோ பச்சரிசியும், 8 கிலோ புழுங்கல் அரிசியும் வாங்க வேண்டுமென்று ஊழியர்கள் கட்டாயப்படுத்துகிறார்கள். இதைத் தவிர்த்து, மக்கள் விரும்பிக் கேட்கின்ற அரிசியைப் பெற்றுச் செல்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் ;அவர்களே, இந்த அரசாங்கத்தின் கையிலே நிறைய அரிசி கையிருப்பு இருக்கிறது. ஆகவே மக்கள் விரும்பிக் கேட்கிற பச்சரிசியும், புழுங்கல் அரிசியும் கொடுப்பதற்கு இந்த அரசாங்கத்திற்கு எந்தவிதமான கஷ்டமும் இல்லை. ரேஷன் கடைகளுக்குத் தேவையான அளவுக்கு புழுங்கல் அரிசியும், பச்சரிசியும் அனுப்பப்படுகின்றன. 20 கிலோவை எப்படி அவர்கள் விருப்பப்படுகிறார்களோ, அப்படி அவர்கள் விருப்பப்படுகிற அளவிலே—புழுங்கல் அரிசி கேட்டால் புழுங்கல் அரிசியும், பச்சரிசி கேட்டால் பச்சரிசியும் கொடுக்க வேண்டுமென்று அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி யாராவது தவறான முறையிலே நிர்பந்தப்படுத்தினால், அதை மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தால், அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பையா பாண்டியன்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க ஆட்சிக் காலத்தில், நகராட்சிகளில் மண்ணெண்ணெய் வழங்குவதில், அந்தந்த நியாய விலைக் கடைகள் மூலம் இல்லாமல், மொத்தமாக ஓர் இடத்தில் வைத்து பொதுமக்களுக்கு மண்ணெண்ணெய் ஊற்றுவதில் சில முறைகேடுகள்

[2002 மே 9

நடந்துகொண்டிருந்தன. அவர்கள் வாங்குவதில் சிரமங்கள் உள்ளன. ஏழைப்பட்ட, வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள கூலி வேலை செய்பவர்கள் ஒரு நாள் முழுமையாக வரிசையில் நின்றாலும், சில நாட்களில் வாங்க முடியாத சூழ்நிலையும் ஏற்பட்டு விடுகிறது. ஆகவே அதை மாற்றி அந்தந்த நியாய விலைக் கடைகளில் மண்ணெண்ணெய் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய் வழங்குவதைப்பற்றி ஏற்கெனவே விவரமாகச் சொன்னேன். அந்தந்தக் கடைகளிலே, இன்னின்ன தேதிகளிலே, இந்தெந்த அட்டைகளுக்கு வழங்க வேண்டும் என்று, எழுதிவைக்கவேண்டுமென்றும், அந்தத் தேதிகளிலே அந்த அட்டைதாரர்கள் வந்து சுலபமாக பெற்றுக்கொண்டு போகலாம் என்ற விவரமும் அரசாணை மூலமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் செயல்படுத்துவதற்கு உறுதியான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 329, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**329—**

## மாவட்டத்துடன் இணைத்தல்

***19810—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், இளையரசனேந்தல் பிர்க்காவிலுள்ள 13 பஞ்சாயத்து கிராமங்களை தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டத்துடன் இணைக்கும் திட்டம் குறித்து அரசு ஆணை பிறப்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2002 மே 9]

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் அறிக்கை பெறப்பட்டதும் ஆய்வு செய்து இறுதி முடிவு எடுக்கப்படும்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வருவாய் வட்டத்திலுள்ள இளையரசனேந்தல் பிர்க்காவிலுள்ள 13 பஞ்சாயத்து கிராமங்களை, தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வருவாய் வட்டத்துடன் இணைப்பது சம்பந்தமாக, மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு, ஆய்வில் உள்ளது என்ற ஓர் அறிவிப்பை, அறிவித்ததற்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கோரிக்கையானது அப்பகுதி மக்களது நீண்டநாள் கோரிக்கையாகும். கடந்த 1991-1996 ஆம் ஆண்டு முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில் இருந்த காலத்திலே அந்தப் பகுதி மக்கள் மிகவும் ஆவலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைய தேதியிலே அறிவிப்பார்கள் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் முதலமைச்சர் பதவியை ஏற்ற பின்பு, ஆய்விலே உள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலமாக நான் அறிந்துகொண்டேன். இப்பணி ஆய்வு செய்யப்பட்டு எப்பொழுது முடிவு அறிவிக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டத்தினுடைய 13 கிராமங்களை தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டத்துடன் இணைப்பதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சியரிடமிருந்து இந்தக் கிராமங்களை இணைக்கலாம் என்ற ஓர் அறிக்கை வந்திருக்கிறது. மேலும் இந்த அறிக்கை மீது Principal Commissioner and Commissioner of Land Administration முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையருடைய பதிலைக் கேட்டு உடனடியாக அரசு இதற்கான தக்க நடவடிக்கை எடுக்கும்.

[2002 மே 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 330, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**330—**

## தொண்டு நிறுவனங்கள்

***13508—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாட்டு உதவிபெறும் சிறுபான்மை தொண்டு நிறுவனங்களின் செயல்பாடுகள் கண்காணிக்கப்படுகின்றனவா?

(ஆ) தவறு செய்த அமைப்புகள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வெளிநாட்டு உதவி பெறும் தொண்டு நிறுவனங்களின் செயல்பாடுகள் சமூக நலத் துறையின் மூலம் கண்காணிக்கப்படுவதில்லை. மாநில மற்றும் மத்திய அரசு மானிய உதவிபெறும் தொண்டு நிறுவனங்களின் செயல்பாடுகள் மட்டுமே சமூக நலத் துறையின் மூலம் கண்காணிக்கப்படுகின்றன.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் வெளிநாட்டு உதவிபெறும் தொண்டு நிறுவனங்களின் செயல்பாடுகள்பற்றி கண்காணிக்கப்படுவதில்லை என்று சொன்னார்கள். ஆனால் இன்றைய சூழ்நிலையிலே நம்முடைய தமிழகத்தில் இருக்கக்கூடிய பலபேர் தொண்டு நிறுவனங்களை சிறுபான்மையினர் என்ற பெயரிலேயும், பல்வேறு பெயர்களிலே பதிவு செய்துவிட்டு, வெளிநாடுகளிலேயிருந்து



2002 மே 9]

நிதி உதவி பெறுகிறார்கள். வெளிநாடுகளிலே தனக்கு வேண்டியவர்கள் யாராவது இருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்களிடத்திலே நிதி உதவி கூடுதலாகப் பெறுவது, அப்படிப் பெற்ற அந்த நிதியை முறையாகப் பயன்படுத்தாமல், என்ன நோக்கத்திற்காக அந்தத் தொண்டு நிறுவனம் நிறுவப்பட்டதோ, பதிவு செய்யப்பட்டதோ, அதற்கு முற்றிலும் மாறாக பல்வேறு கோணங்களிலே செலவிடுகிறார்கள். அப்படிச் செலவிட்டுவிட்டு, தணிக்கை என்ற பெயராலே தவறான கணக்கையும் காட்டி விடுகிறார்கள். வெளிநாடுகளிலேயிருந்து பெற்ற பணம் தமிழ்நாட்டிலே இருக்கிற பல்வேறு அமைப்புகளுக்குக் கொடுக்கப்படுகிறது. தீவிரவாத அமைப்புகளுக்கு, இன்னும் பல்வேறு வகையிலே சட்டம் ஒழுங்கைக் கெடுக்கக்கூடிய வகையிலே கிராமப்புறங்களிலே, நகர்ப்புறங்களிலே கற்பழிப்பு, கொள்ளை அல்லது பலாத்காரம், தீவிரவாதம் போன்ற செயல்பாடுகளிலே ஈடுபடக்கூடிய அந்த அமைப்புகளுக்கும் இந்தத் தொண்டு நிறுவனமானது நிதி உதவி செய்து கொண்டிருக்கிறது. ஆகவே ஒரு தொண்டு நிறுவனம் என்ற பெயராலே வெளிநாடுகளிலேயிருந்து நிதி உதவி பெற்று, இப்படி தமிழ்நாட்டிலே தீவிரவாதத்தை வளர்ப்பதற்கும், அதைப்போலவே சட்டம் ஒழுங்கைக் கெடுப்பதற்கும் பயன்படக்கூடிய அந்தத் தொண்டு நிறுவனங்களை அரசு கண்காணிக்க வேண்டுமா, வேண்டாமா? ஆகவே இப்படிப்பட்ட அந்தத் தொண்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டிலே எத்தனை இருக்கின்றன? சிறுபான்மையினர் என்ற பெயரிலே எத்தனை இருக்கின்றன, சிறுபான்மை அல்லாத பெயரிலே எத்தனை இருக்கின்றன? அவர்களின் செயல்பாடுகள் என்ன? அப்படி தவறுதலாகச் செயல்பட்ட அந்தத் தொண்டு நிறுவனங்கள் கண்டறியப்பட்டிருக்கின்றனவா? அப்படி கண்டறியப்பட்டவை யாவை? அவர்கள்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை முழுமையாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டு நிறுவனங்கள் அயல்நாட்டு நன்கொடை ஒழுங்குமுறைச் சட்டம், பதிவுகள் மற்றும் பதிவுகளைப் புதுப்பித்தல் என்பது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் இந்த உரிமம் வழங்குவதற்கு பரிந்துரை மட்டுமே செய்யப்படுகிறதே தவிர, உரிமம் வழங்கப்படுவதில்லை. சமூக நலத் துறை என்பது ஆதரவற்ற குழந்தைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், விதவைகள், இப்படிப்பட்ட சமுதாயத்திலே பின்தங்கியிருப்பவர்களைக் கவனிப்பதற்குரிய தொண்டு

நிறுவனங்கள், துறையின் மூலமாகக் கண்காணிக்கப்படுகின்ற தொண்டு நிறுவனங்கள். 181 தொண்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டிலே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள், ஏன் கண்காணிக்கப்படுவதில்லை என்பது குறித்து வினா எழுப்பியிருக்கிறார். அதற்கு, அயல்நாட்டு நிதியுதவி பெற, அயல்நாட்டு அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டத்தின்கீழ், மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து தடையின்மைச் சான்று பெற வேண்டுமென்று மத்திய அரசு சமீபத்திலே ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறது. அதன் அடிப்படையிலேதான், தடையின்மைச் சான்று அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. ஆனால் தடையின்மைச் சான்றுகூட, அயல்நாட்டிலே நிதி வாங்குபவர்கள் நேரடியாகப் போய் பெற்றுவிட முடியாது. அதற்கென்று சில விதிமுறைகள் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றன. மூன்று வருடங்களுக்கான கணக்குகளைச் சமர்ப்பிக்க வேண்டும். அவர்கள் மூன்று வருடங்களுக்கான ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். நன்கொடை ஒழுங்குமுறைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். அந்த நிறுவனங்களிலே குடும்பத்தார் இருக்கிறார்களா அல்லது சமூகத்திலே மிகவும் பின்தங்கியவர்களுக்காக சேவை மனப்பான்மையோடு இருக்கிறார்களா என்பதையும் கவனிக்க வேண்டும். இத்தனையும் செய்திருக்கிறார்களா என்று மாவட்ட ஆட்சித் தலைவரால் நியமிக்கப்படுகிற, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலேயே உதவி இயக்குநர் அந்தஸ்திலே இருப்பவர், அங்கே நேரடியாகச் சென்று, அந்தத் தொண்டு நிறுவனம் எப்படிச் செயல்படுகிறது என்பது குறித்து ஆய்வு நடத்தியதற்குப் பிறகு, மத்திய அரசாங்கத்திற்கு உள் விவகார அமைச்சகத்திற்குப் பரிந்துரை செய்து அனுப்புகிறார்கள். அங்கே அனுப்பியதற்குப் பிறகு, அங்கேயிருந்து ஒரு vigilance enquiry யாருக்கும் தெரியாமல், தமிழக அரசுக்கும் தெரியாமல், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் தெரியாமல், அவர்களே வந்து இங்கே அமலாக்கப் பிரிவின் சார்பிலே வந்து விசாரித்ததற்குப் பிறகு, மத்திய அரசாங்கம் நேரடியாகத் தங்களுடைய கண்காணிப்பிலேயே, இவர்கள் சரியாகச் செயல்படுகிறார்களா என்று தெரிந்ததற்குப் பிறகுதான், மத்திய அரசாங்கம் பரிந்துரை செய்கிறது. அதோடு மத்திய அரசாங்கத்தின் பணியும், மாநில அரசாங்கத்தின் பணியும் முடிந்து விடுகிறது.

அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் சொன்னதைப் போல, வெளிநாட்டிலே இருப்பவர்களோடு தொடர்பு கொண்டு, நிதியை ரிசர்வ் பாங்க் மூலமாக நேரடியாகத் தொண்டு நிறுவனத்திற்கே அனுப்பி வைத்துவிடுகிறார்கள். ஆக, எவ்வளவு பணம் தருகிறார்கள் என்பது குறித்த தகவல், மத்திய சர்க்காருக்கும் வருவதில்லை, மாநில சர்க்காருக்கும் வருவதில்லை. ஆக, இதைப்போன்ற தொடர்பு இருக்கின்ற காரணத்தால், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், டெல்லி செல்கிறபோதெல்லாம், அந்த உள் விவகாரத் துறை அமைச்சகத்திற்குப் போய், யார், யாருக்கு எவ்வளவு எவ்வளவு பணம் வெளிநாட்டிலேயிருந்து வருகிறது என்பது குறித்து எங்களுக்குத் தகவல் வர வேண்டுமென்று, அங்கே ஒரு கருத்தைத் தெரிவித்துவிட்டு வந்திருக்கிறார்கள். கடிதம்கூட அனுப்பியிருக்கிறார்கள். அது வந்ததற்குப் பிறகுதான், அயல்நாட்டிலேயிருந்து நிதி வாங்கக்கூடிய தொண்டு நிறுவனங்களை அரசே கண்காணிப்பதற்கு உரிய உரிமை நமக்குக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்தை அளித்தார்கள். விளக்கம் நீண்டதாக இருந்தாலும்கூட, அங்கே வெளிநாடுகளிலேயிருந்து வரக்கூடிய நிதியுதவி, ரிசர்வ் வங்கியின் மூலமாக வருகிறது. எவ்வளவு வருகிறது, எப்படிப் பயன்படுத்தப்படுகிறது என்ற முறையெல்லாம், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், நம்முடைய மாநில அரசாங்கத்திற்கும் தெரியாமலேயே, மத்திய அரசாங்கத்தினுடைய உள் துறை கண்காணிப்பதாகச் சொன்னார்கள். இப்படி உள் துறை கண்காணிப்பது சரியாக இல்லை என்று சொன்னாலும்கூட, தமிழ்நாட்டிலே எவ்வளவு சட்டம்—ஒழுங்குப் பிரச்சினை, தீவிரவாதம் உருவாகுதல் போன்ற பல்வேறு அசம்பாவிதங்களும், தமிழகத்தினுடைய நலனுக்கு கெடுதல் விளைவிக்க இருக்கின்ற காரணத்தாலே, இதிலே மாநில அரசு கட்டாயம் தலையிட வேண்டும். தலையிட்டு இப்படிப்பட்ட தொண்டு நிறுவனங்களைக் கண்காணித்து, மத்திய அரசினுடைய உள் துறை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்று சொன்னாலும்கூட, மத்திய அரசுக்கு மாநில அரசு எடுத்துச் சொல்லி, இந்தெந்த அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள், இந்தெந்த தீய செயல்களிலே தீவிரவாதத்திற்கு உறுதுணையாக இருக்கினறன, அவர்களுக்கு நிதியுதவி செய்யக்கூடிய அமைப்பு; ஆகவே இவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும், இந்தத் தொண்டு நிறுவனத்தை இரத்து செய்ய வேண்டுமென்ற நடவடிக்கையை எடுப்பதற்கு மாநில அரசு விரைந்து செயல்பட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2002 மே 9

முற்பகல் 10-55

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நீண்ட கேள்வி கேட்டதால் நீண்ட விளக்கம் தரவேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் டெல்லி சென்றபோது எடுத்துச் சொல்லிவிட்டு வந்திருக்கிறார்கள். சமீபத்திலேகூட மகாபலிபுரத்திலே இதுபோன்று வெளிநாட்டிலேயிருந்து நிதியுதவியைப் பெற்றிருக்கிற ஒருவர், ஏதோ பாலியல் தவறு செய்திருப்பதாக காவல் துறையின் கவனத்திற்கு வந்து, இப்போது முழுவதுமாக நம்முடைய நேரடிப் பொறுப்பிலே தமிழகத்தினுடைய காவல் துறை அதிகாரிகளால் அந்த இல்லம் சீல் வைக்கப்பட்டு; அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்பது பத்திரிகைகளிலே வந்த செய்தி, சமூக நலத் துறையும் இதைத் தனிப்பட்ட முறையிலே, ஆதரவற்ற பிள்ளைகளை வைத்து நடத்துகிற காரணத்தால், இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதற்குப் பிறகு, சம்பவ இடத்திற்குச் சென்று பார்த்துவிட்டு, விசாரித்துவிட்டு வந்து, அங்கேயிருந்த குழந்தைகளில் பாதிப் பேரை பெற்றோர்களிடத்திலே ஒப்படைத்துவிட்டு, பாதிப் பேரை அரசு நடத்தக்கூடிய இல்லங்களிலே சேர்த்திருக்கிறார்கள். ஆகவே நடவடிக்கையை தமிழகத்தினுடைய காவல் துறை மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் சபைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டு நிறுவனங்கள் தொடங்குவதற்கான அடிப்படைத் தகுதிகள் என்ன? தொண்டு நிறுவனங்கள் மூலம் உடல் ஊனமுற்ற சின்னஞ்சிறார்களுக்கான கல்விச் சாலைகள் அமைக்கின்றபோது, அரசு இலவசமாக இட உதவிகள் செய்து, அதற்கு நிதியுதவி செய்ய முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மானியக் கோரிக்கையின்மீது, பதிலளித்த போது ஆதரவற்ற முதியோர் இல்லங்களை நடத்துவதற்கு எங்கெங்கே தேவையற்ற நிலங்கள் இருக்கின்றன என்று அவர்கள் குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், அந்த இடத்தினை அவர்களுக்குத் தருவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதை ஏற்கெனவே அறிவித்திருக்கிறோம். தொண்டு நிறுவனங்களை நாம் ஏற்றுக்கொள்வதற்கு, சில விதிமுறைகளை



2002 மே 9]

அரசு நிர்ணயம் செய்திருக்கிறது. தொண்டு நிறுவனத்தைப் பொறுத்தவரை Societies Registration Act-ல் பதிவு செய்து, குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் முடிவுற்ற பின்னர்தான் அரசினுடைய மானியம் பெறுவதற்கே, அந்தத் தொண்டு நிறுவனம் தகுதி பெற்ற தொண்டு நிறுவனமாக அறிவிக்கப்படுகிறது. இரண்டு வருடங்கள், சமூகப் பணிகளிலே அவர்கள் செயலாற்றி இருக்க வேண்டும். அந்தப் பகுதியிலே ஏழைகளுக்காக, அல்லது ஆதரவற்றவர்களுக்காக, முதியோர்களுக்காக, உடல் ஊனமுற்றவர்களுக்காக, ஏதாவது இரண்டு ஆண்டுகாலம் அவர்கள் பணி செய்திருக்க வேண்டும். மானிய உதவி கேட்கிறபோது, அதிலே அவர்கள் அந்த ஆதாரங்களை, செயல்படுத்தி இருக்கின்ற ஆதாரங்களை அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். தொண்டு நிறுவனம் என்பது ஒரு சிலருடைய சுய இலாபத்திற்காக இயங்கக்கூடிய தொண்டு நிறுவனமாக இருக்கக்கூடாது. அது பொது நோக்கத்திற்காகத்தான் இருக்கவேண்டும். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் குறிப்பிடுகிறபோது இங்கே சொன்னார்கள்; அங்கேயிருந்து வரக்கூடிய பணங்களெல்லாம் வேறு விதத்திற்குப் பயன்படுகிறதா, இல்லையா என்பதைத் தெளிவாக ஆராய்ந்ததற்குப் பிறகுதான் தமிழக அரசாங்கத்தின் சார்பிலே நாம் அங்கீகாரம் தருகிறோம்.

அதுமட்டுமல்ல. தொண்டு நிறுவனத்தினுடைய நிதிநிலை என்பது, அவர்கள் 50 சதவிகிதமாவது தங்களுடைய சொந்தப் பொறுப்பிலே, உறுப்பினர்களாலே மக்களுக்குப் பணியாற்றக்கூடிய ஒரு சூழ்நிலையிலே அந்தத் தொண்டு நிறுவனம் இருக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. ஒரு மாவட்ட அளவிலே தொண்டு நிறுவனங்களைத் தேர்வு செய்வதற்கு, சமூகநலத் துறையின் சார்பிலே, மாவட்ட சமூகநல அலுவலர்கள் பரிந்துரை செய்து தருகிறபோதுதான் அந்தத் தொண்டு நிறுவனத்தை பதிவு செய்ய முடியும் என்கிற சில கோரிக்கைகளை, சில விதிமுறைகளை நாம் விதித்து, அதற்குப் பிறகுதான் ஏற்றுக்கொள்கிறோம் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 331, திரு. கே.கே. சிவசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

[2002 மே 9

**331—**

## குடியிருப்பு வசதி

***23384—திரு. கே.கே. சிவசாமி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், பூமாலைப்பட்டி ஊராட்சி, முத்துராமலிங்கபுரம் ஆதிதிராவிடர் குடியிருப்பிற்கு திருமண மண்டபமும், தொகுப்பு வீடுகளும் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், பூமாலைப்பட்டி ஊராட்சி, முத்துராமலிங்கபுரம் ஆதிதிராவிடர் குடியிருப்பிற்கு சமுதாயக்கூடம் கட்டும் செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை. தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி வட்டம், நரிக்குடி ஒன்றியம், பூமாலைப்பட்டி ஊராட்சி, முத்துராமலிங்கபுரம் கிராமத்தில் 200-க்கும் மேற்பட்ட ஆதிதிராவிடர் குடும்பங்கள் உள்ளன. இவர்கள் மிகவும் ஏழ்மை நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இந்தக் கிராம மக்கள் பயன்பெறும் வகையிலே திருமண மண்டபமும், தொகுப்பு வீடும் கட்டித் தருவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு வரும் நிதியாண்டிலாவது ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. கே.கே. சிவசாமி அவர்கள் முத்துராமலிங்கபுரம் ஆதிதிராவிடர்



2002 மே 9]

குடியிருப்புப் பகுதியில் வாழ்ந்து வருகின்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்காக சில நற்காரியங்களை நடத்துவதற்கு இடமில்லாமல் மிகவும் சிரமப்படுவதாக தெரிவித்திருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்குப் பாதுகாப்பாக இருந்து வருகிற நம்முடைய அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை கனிவோடு கவனத்தில் எடுத்துக்கொள்ளும். தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற காரியங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து பணம் வழங்க இயலாத காரணத்தால் இதனைப் பரிசீலனை செய்து அந்தப் பகுதி ஆதிதிராவிட மக்கள் கஷ்டப்படுகின்ற சூழ்நிலையில் இருக்கின்றார்கள் என்பதால், அரசு முழுமையாக நிதியை ஒதுக்காவிட்டாலும், ஒரு பெரும்பகுதி நிதியினை ஒதுக்கி, வருகின்ற ஆண்டு இதுபோன்ற வேலைகளை எடுத்துச் செய்ய முன்வருமா என்று தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களினுடைய அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை கனிவோடு கவனத்தில் எடுத்துக்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தாட்கோ மூலமாக சமுதாயக்கூடம், திருமண மண்டபம் எத்தனை இடங்களிலே அமைக்கப்படவிருக்கின்றது? ஒரு திருமண மண்டபம் எவ்வளவு ரூபாயில் கட்டப்படவிருக்கிறது? அப்படிக் கட்டுகின்ற நேரத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் என்னுடைய வரகூர் தொகுதியில், ஆலத்தூர் ஒன்றியத்திற்கும் ஒன்று கட்டிக் கொடுக்கப்படுமா என்பதை உங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

[2002 மே 9

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டு வரை, இதுவரையில் சமுதாயக் கூடங்கள் 210 கட்டித் தரப்பட்டுள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கடந்த ஆண்டு 5 சமுதாயக் கூடங்கள் கட்ட ஆணையிட்டுள்ளது. நடப்பாண்டிற்கு ரூ.8.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, குறிப்பாக ஆதிதிராவிடர், பழங்குடியினர் பள்ளி மாணவர்களுடைய கல்வித் தரம் உயர வேண்டுமென்கின்ற நல்ல எண்ணத்தில் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக ஆதிதிராவிட மாணவியர்களுக்கு உயர் பட்டப்படிப்பு வரை படிப்பதற்கு இலவசமாகவும், மாணவிகளுக்கு, 3 ஆம் வகுப்பிலிருந்து 5 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவிகளுக்கு மாதம் 50 ரூபாய் வீதம் 10 மாதத்திற்கு 500 ரூபாய், 6 ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவிகளுக்கு மாதம் 100 ரூபாய் வீதம் 10 மாதத்திற்கு ஆயிரம் ரூபாய் என்று இப்படி கல்வித் தரத்திற்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்து கல்வித் தரத்தை உயர்த்த வேண்டுமென்கிற அளவில் அம்மா அவர்களுடைய அரசு சீரிய திட்டத்தோடு செயலாற்றி வருகிறது. அதேபோல தாழ்த்தப்பட்டவர்கள் குடியிருந்து வருகின்ற பகுதிகளில் சில திருமண நிகழ்ச்சிகள், காரியங்கள் செய்வதற்கு இடம் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கின்ற அதே வேளையில், அந்தப் பிரச்சினைகளையும் தீர்க்கின்ற வகையில் வருகின்ற ஆண்டுகளில் அதை எடுத்துச் செய்வதற்கு அம்மா அவர்களுடைய அரசு கவனத்தோடு பார்த்துக்கொண்டிருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டப் பேரவைத் துணைத் தலைவர், வரகூர் தொகுதிக்கும் கேட்டார். எங்களுடைய ஆளையும் கொஞ்சம் கவனியுங்கள்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய கோரிக்கையும் கவனத்தில் கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.கே. செல்வராஜ்.

**திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, நம்முடைய புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு இந்த ஆண்டு புதியதாக சமுதாயக் கூடங்கள் கட்டித் தருவதாக இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே



2002 மே 9]

கட்டப்பட்டிருக்கிற அந்தச் சமுதாயக் கூடங்கள் பல்வேறு இடங்களில் மிகவும் பழுதடைந்த நிலையிலே இருக்கின்றன. அவற்றைப் பழுதுபார்ப்பதற்காக இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டு இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன். என்னுடைய மேட்டுப்பாளையம் தொகுதியிலே திம்மம்பாளையம் என்ற ஊரிலே கட்டப்பட்டு இருக்கிற சமுதாயக் கூடம் மிகவும் பழுதடைந்த நிலையிலே இருக்கிறது. அதையும் இவ்வாண்டு நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சரிசெய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பகுதியில் குடியிருந்து வருகின்ற மக்களுக்காக திருமண நிகழ்ச்சி, பல்வேறு நற்காரியங்கள் செய்வதற்காக அந்தப் பகுதியில் இடம் இல்லாத காரணத்தால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு குறிப்பாக இதுபோன்ற காரியங்களைச் செய்து கொடுக்க வேண்டுமென்கின்ற ஆவலில் இருந்துகொண்டிருக்கின்ற வேளையில், நிதிநெருக்கடியின் காரணமாகத்தான் கல்வித் தரத்திற்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கு முன்னால் கட்டப்பட்ட திருமண மண்டபம், சில சமுதாயக் கூடங்கள் எல்லாம் பழுதடைந்திருக்கின்றன என்று சொல்லியிருக்கின்றார்கள். ஏற்கெனவே இது நற்காரியங்களுக்குப் பயன்படுகின்ற நிகழ்ச்சி வைக்கின்ற இடமாக இருந்துவருகின்றது. அதன்மூலமாக அந்தப் பகுதியினுடைய சமுதாயத் தலைவர்கள், நாட்டாமை, அப்படியில்லையென்றால் ஊராட்சி மன்றத் தலைவர் மூலமாக பராமரிக்கப்பட்டு, வருமானத்திற்காக ஒரு நிகழ்ச்சி நடத்தினால் இவ்வளவு பணம் வரவு வைக்க வேண்டுமென்கின்ற அடிப்படையில் அது கொடுக்கப்பட்டு வருகிறது. நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. அதன்மூலமாக கிடைக்கக்கூடிய வருமானத்தின் மூலம் இதுபோன்ற பராமரிப்புச் செலவுகளை மேற்கொள்ளலாம் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு அளிக்கப்படுகின்ற இந்தத் தொகுப்பு வீடுகள் போதுமான அளவிற்கு இல்லாமல் இருக்கின்றன. அதுவும் மாவட்ட

[2002 மே 9

ரீதியாகப் பார்க்கின்றபோது ஒரு சில மாவட்டங்களுக்கு இந்த ஒதுக்கீடு அதிகமாகவும், ஒரு சில மாவட்டங்களுக்கு இந்த ஒதுக்கீடு மிகக் குறைவாகவும் இருக்கிறது. குறிப்பாக நாமக்கல் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் கடந்த ஆண்டு 40 வீடுகள்தான் கிடைத்தன என்றும், மற்ற மாவட்டங்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கின்றபோது அது குறைவாக இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. இந்த நேரத்தில் மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்வது, எந்த அடிப்படையில் இந்தத் தொகுப்பு வீடுகள் மாவட்டங்களுக்கு ஒதுக்கிக்கொடுக்கப்படுகின்றன என்பது.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுப்பது அந்தந்தப் பகுதிகளிலே வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் குறிப்பாக, ஆதிதிராவிடர், பழங்குடியின மக்கள் எந்த அளவிற்கு, மக்கள் தொகை அடிப்படையில், எவ்வளவு மக்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்பது கணக்கீடு செய்யப்பட்டுதான், இலவசமாகக் கட்டிக் கொடுக்கப்படுகிற தொகுப்பு வீடுகளும் சரி, இலவசமாகக் கொடுக்கப்படுகிற மானியங்களும் சரி, பல்வேறு நிதிகளும் அந்த மக்களுடைய ஜனத்தொகை அடிப்படையில்தான் வழங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொகுப்பு வீடுகள் குறைவாகக் கொடுக்கப்படுவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அது கடந்த ஆட்சியில் என்று நினைக்கின்றேன். இருந்தாலும் ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக வழங்கப்படுகிற இலவச வீட்டுமனைப் பட்டாக்களைப் பெற்றுக்கொண்டு ஊராட்சி ஒன்றியங்களில் பதிவு செய்து, பதிவு மூப்பு அடிப்படையில்தான் உரிய பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, அந்தப் பயனாளிகளுக்கு இலவசமாகத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறைவாகக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது என்று குறைபட்டுக் கொண்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அதிகமான அளவிற்கு வீட்டுமனைப் பட்டாக்களைப் பெறுவதற்கு முயற்சி எடுத்து, நிலம் கையகம் செய்யப்படுவதற்கு, அதற்கான நில உரிமையாளர்களைக் கண்டறிந்து, அதையெல்லாம் பெற்று அதிகமான முறையில் வீட்டுமனைப் பட்டாக்கள் பெறுவார்களேயானால், கண்டிப்பாக அப்படிப்பட்டவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து இலவசமாகத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



2002 மே 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொகுப்பு வீடு என்பது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பங்கீடு செய்வதில் பெரும்பாடாக இருக்கிறது. அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல நம்முடைய ஆட்சி பொறுப்பேற்ற பிறகு கடந்த வருடம் என்னுடைய தொகுதிக்கு 100 வீடுகள் வழங்கப்பட்டன. ஆனால் இந்த வருடம் 60 வழங்கப்படுகிறது. இந்த எண்ணிக்கை மாற்றம் எப்படி கொண்டு வரப்பட்டது? அதே நேரத்தில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் அதிகமாக உள்ளவர்கள் என்று அமைச்சர் குறிப்பிடுகிறார். என்னுடைய தொகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆகையால் தொகுப்பு வீடுகளுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்தித் தருவதற்கான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று உங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத் துறையின் மூலமாக இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு, அவை முறையாக ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகப் பதிவு செய்யப்பட்டு இருக்க வேண்டும். அப்படிப் பதிவு செய்யப்பட்டுள்ள அந்த வீட்டு மனை பட்டாதாரர்களில் வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ளவர்களுக்குத்தான் முன்னுரிமை கொடுத்து, இலவசமாகத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல் இருந்தால் வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் குறைவாக இருப்பதன் காரணமாகத்தான் குறைத்துக் கொடுக்கப்பட்டிருக்கும். பல தொகுதிகளில், பல சட்டமன்ற உறுப்பினர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அதிகமாக தொகுப்பு வீடுகள் கேட்டு, அப்படிப்பட்ட கோரிக்கை மனுக்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இப்படி வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ளவர்களில் பதிவு செய்யப்பட்ட வீட்டுமனைப் பட்டாதாரர்களுக்கு முன்னுரிமை கொடுத்து இலவசமாகத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 332, திரு. து. நெப்போலியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

[2002 மே 9

332—

## நகரப் பேருந்து

***8730—திரு. து. நெப்போலியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம் பேருந்து நிலையத்திலிருந்து தாம்பரத்திற்கு நேரடியாகச் செல்ல நகரப் பேருந்து வசதி செய்துதர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வில்லிவாக்கம் பேருந்து நிலையத்திலிருந்து தாம்பரத்திற்கு நேரடியாகச் செல்ல நகரப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லிவாக்கத்திலிருந்து நேரடியாக தாம்பரத்திற்கு பேருந்து இல்லாததால் அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் ரொம்ப சிரமப்படுகிறார்கள். வில்லிவாக்கம் பகுதியிலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கிண்டி, பல்லாவரம், தாம்பரம் போன்ற இடங்களில் இருக்கிற தொழிற்சாலைகளுக்கு வேலைக்குப் போகிறார்கள். அவர்கள் அப்படிப் போகவேண்டுமானால், திருமங்கலத்தில் இருக்கிற பஸ் டெப்போவுக்கு வந்துதான் பஸ் பிடித்துப் போக வேண்டியிருக்கிறது. பைக்கிலேயோ, ஸ்கூட்டரிலேயோ, சைக்கிளிலேயோ வந்து அங்கே வண்டியை நிறுத்திவிட்டு அங்கேயிருந்து பஸ் பிடித்துப்போக வேண்டியிருக்கிறது. இல்லையென்றால் நிறைய பேர் ஒரு கிலோ மீட்டர் தூரம் நடந்தே வந்து திருமங்கலம் பஸ் டெப்போவிலிருந்து பஸ் பிடித்துப் போகிறார்கள். அதேமாதிரி சிலபேர் அந்தப் பக்கம் உள்ள பாடிக்கு ஒரு கிலோ மீட்டர் நடந்து சென்று பாடியில் இருக்கிற பஸ் ஸ்டேண்டுக்கு வந்து, ஆவடி, அம்பத்தூரிலிருந்து வருகிற பஸ்களைப் பிடித்துப் போகிறார்கள். ஆவடி, அம்பத்தூரிலிருந்து வருகிற பஸ்களில் ஏற்கெனவே கூட்டம் நிரம்பி வருவதால் ஏறுவதற்கு ரொம்ப சிரமப்படுகிறார்கள். திருமங்கலம் டெப்போவுக்குப் போனாலும் ஏற்கெனவே அண்ணா நகர் பகுதியில்



இருக்கிற மக்கள் ஏறி உட்கார்ந்திருப்பதால் அங்கேயும் ரொம்ப சிரமப்படுகிறார்கள். அதனால் வில்லிவாக்கம் பேருந்து நிலையத்திலிருந்து நேரடியாக தாம்பரத்திற்கு பஸ் விட்டால் ரொம்ப நல்லாயிருக்கும். அந்தப் பகுதி மக்கள் சிரமத்தைப் போக்குகின்ற வகையிலே இந்த அரசு உடனடியாக இரண்டு பேருந்துகளை வில்லிவாக்கத்திலிருந்து நேரடியாக தாம்பரத்திற்கு இயக்குவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவடி மற்றும் செங்குன்றத்திலிருந்து வீல்ஸ் இந்தியா சந்திப்பு மற்றும் 100 அடி சாலை வழியாக தாம்பரம் நகருக்கு ஏறத்தாழ 44 நகரப் பேருந்து நடைகள் இயக்கப்படுகின்றன. இந்த 44 நடைகளையும் வில்லிவாக்கம் பகுதி மக்கள் தாம்பரத்திற்குச் செல்வதற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். மேலும் வில்லிவாக்கத்திலிருந்தும், வில்லிவாக்கம் வழியாகவும் நகரின் பல்வேறு பகுதிகளுக்கு ஏறத்தாழ 145 வழித்தடங்களில் நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. பகுதி பகுதியாக இயக்கப்படுகிற இந்த 145 வழித்தடங்களில் ஓடுகின்ற பேருந்துகளையும் வில்லிவாக்கம் பகுதி மக்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். இருந்தபோதிலும், வில்லிவாக்கம் நகரப்பேருந்து நிலையத்திலிருந்து மெயின் ரோடுக்கு 200 மீட்டர் தூரம்தான் இருக்கிறது. அந்த 200 மீட்டர் தூரத்திலிருந்து 44 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஆகவே வில்லிவாக்கம் பகுதி மக்கள் 200 மீட்டர் தூரத்திலிருந்து வருகிற பேருந்து வசதிகளையும் பயன்படுத்திக்கொள்ளலாம். இவ்வளவு வசதிகள் இருந்தபோதிலும் மேலும் கூடுதலாகவும் நேரடியாகவும் வில்லிவாக்கத்திலிருந்து தாம்பரத்திற்கு பேருந்து வசதி வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். இருந்தாலும் கூடுதல் வசதியாக மக்களுடைய நலன் கருதி அதைப்பற்றியும் இந்த அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 333, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

[2002 மே 9

333—

## புலிகள் எண்ணிக்கை

***8402—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டு காடுகளில் எத்தனை புலிகள் உள்ளன?

(ஆ) அவற்றை அதிகரிக்க அரசிடம் சிறப்புத் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள காடுகளில் சமீப காலங்களில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி, முதுமலை வன உயிரின சரணாலயத்தில் 21 புலிகளும், இந்திராகாந்தி வன உயிரின சரணாலயத்தில் 14 புலிகளும், களக்காடு முண்டந்துறை புலிகள் சரணாலயத்தில் 20 புலிகளும், மதுரை மண்டல வனப் பகுதிகளில் 5 புலிகளும், ஆக மொத்தம் தற்போது 60 புலிகள் இருக்கின்றன என கணக்கெடுக்கப்பட்டுள்ளது..

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டுக் காடுகளில் 60 புலிகள் இருப்பதாக சமீப காலத்தில் கணக்கெடுக்கப்பட்டிருப்பதாகப் பதிலுரையில் கூறியிருக்கிறார்கள். சமீப காலம் என்றால், எப்போது கணக்கெடுக்கப்பட்டது என்பதோடு, அந்தப் புலிகளை அதிகரிக்க அரசிடம் திட்டம் உள்ளதா என்கிற வினாவுக்கு பதிலைச் சொல்லி இருக்கிறார்கள். அந்தத் திட்டம் என்ன என்பதைப்பற்றி அறிவதோடு, தமிழ்நாட்டில் இருக்கின்ற சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காக, வெள்ளைப்புலி மற்றும் வரிப் புலிகள், சிறுத்தைப் புலிகள், கரும்புலிகள் ஆகியவற்றை தமிழ்நாட்டிலுள்ள மிருகக் காட்சி சாலைக்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா? அதோடு மட்டுமல்லாமல், கல்கத்தா மிருகக்



2002 மே 9]

காட்சிசாலையில் சிங்கம் மற்றும் புலி, கலப்பின முறையிலே, அபூர்வமான விலங்காக, சிங்கப் புலியை உருவாக்கி, அங்கு சுற்றுலாப் பயணிகளைக் கவருகிற விதத்திலே செய்துள்ளதால் சுற்றுலாப் பயணிகள் கண்டு களிக்கிறார்கள். அதேபோன்று அபூர்வப் புலியை, சிங்கப் புலியை தமிழ்நாட்டு மிருகக் காட்சிசாலைக்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன புதுமையான கலப்புத் திருமணம் மாதிரி இருக்கிறதே, சிங்கம்-புலி? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மனிதர்களுக்குத்தான் கலப்புத் திருமணங்களை எல்லாம் நடத்தி வைப்பது வழக்கம். ஆனால் அங்கே வன விலங்குகளுக்குக்கூடச் செய்திட வேண்டுமா என்று கேட்கிறார்கள். முதுமலை வன உயிரின உயிரூட்டம்—மேற்காண் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு, நிதி ஒதுக்கீடு செய்த பிறகு, புலிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக, புலிகளினுடைய ஆயுட்காலம் எந்த அளவுக்கு அதிகரிக்கப்படும் என்றெல்லாம் சொன்னார்கள். அவற்றையெல்லாம் அதிகரிக்கின்ற வாய்ப்புகள் இல்லை என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.ஏ. ஹக்கீம்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டிலே இருக்கின்ற புலிகள் எத்தனை? நாட்டிலே இருக்கின்ற புலிகள் எத்தனை? சமீபத்திலே ஒரு புலி ஓடிப்போய் விட்டதாக பத்திரிகையிலே படித்துக்கொண்டிருந்தோம். அது பழையபடி வந்துவிட்டதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மறுபடியும் பத்திரிகையைப் படிக்கவில்லையா? (சிரிப்பு)

[2002 மே 9

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** அது ஆண் புலியா, பெண் புலியா என்பதைப் பற்றிய விவரங்கள் தெரியவில்லை. இந்தப் புலிகள் பெருக்கத்தைப் பற்றிச் சொல்கிறபோது, இதற்கான சிறப்புத் திட்டங்கள் ஏதாவது இருக்கின்றனவா என்பதை நான் அமைச்சரிடம் பேரவைத் தலைவர் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புவதோடு, சமீபத்திலேதான் ஒரு பெரிய புலிக்கூட்டத்தைத் தடை செய்து, மகத்தான பெருமையை புரட்சித் தலைவி அவர்கள் பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், வாழ்த்து அனுப்புகிறபோதுகூட, தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், ஒரு நல்ல சிங்கத்தைப் போட்டுத்தான் எங்களுக்கெல்லாம் வாழ்த்தை அனுப்பி—அந்த சிங்கத்தின் அருகிலே உட்கார்ந்து இருக்கிறமாதிரி—இருந்த காரணத்தினாலே, அந்தச் சிங்கத்தின் தலைமையிலே இருக்கின்ற இந்த நாட்டில், எல்லாப் புலிகளும் அடக்கப்பட்டிருக்கக்கூடிய இந்தகால கட்டத்திலே, ஓடிப்போன புலியும் பிடிபட்டிருக்கிற நேரத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், இந்தப் பெருக்கத்திற்கு உண்டான சிறப்புத் திட்டங்கள் என்ன என்பதை நாங்கள் அறிந்துகொள்ள விரும்புகிறோம்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினர் அவர்கள், சில காலங்களுக்கு முன்னால், புலி ஒன்று காணாமல் போனது என்றும், அது எப்போது கிடைத்தது என்றும் கேட்டார்கள். அது எந்தவகையான புலி என்றும் கேட்டார்கள். அது சிறுத்தை வகையைச் சார்ந்த புலி; ஆண் வர்க்கத்தைச் சார்ந்த புலி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, அது காணாமல் போகவில்லை; வெளியிலே இருந்திட்ட காடுகளிலேயிருந்து வந்தது அந்த சிறுத்தைப்புலி என்பதும். அந்தப் புலியும் மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்ற தினத்திலே பிடிக்கப்பட்டது என்பதையும் இந்த நேரத்திலே



2002 மே 9]

தெரிவித்துக்கொள்கிறேன். புலிகளுக்கு மாத்திரம்—விடுதலைப் புலிகளுக்கு மாத்திரம் — அம்மா அவர்கள் சவாலாக இல்லை; அந்த மிருகங்களையும் அடக்குகிற தன்மையைப் படைத்திட்டவர் அம்மா அவர்கள் என்பதையும் இந்த நேரத்திலே சொல்லி, வன விலங்குகளை அதிகரிக்க என்ன முயற்சி என்று கேட்டார்கள்; அதற்கு முயற்சி எடுக்கப்பட வேண்டியது இல்லை; சில சிறப்புத் திட்டங்கள் அதற்காகச் செய்யப்பட்டிருக்கின்றன. நிதி நெருக்கடி இருக்கின்ற காரணத்தினால், அதைச் செய்ய இயலாத நிலையிலே இருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

முற்பகல் 11-20

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடுகளிலே இருக்கின்ற புலிகளை அதிகரிக்க அரசு முயற்சி எடுக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆண் புலிகள் எவ்வளவு, பெண் புலிகள் எவ்வளவு என்று கணக்கு இருந்தால்தான் அதிகரிப்பது பற்றிய நிலையை அரசே செயல்படுத்த முடியும். எனவே, உங்கள் கணக்கெடுப்பில் ஆண் புலிகள் எத்தனை, பெண் புலிகள் எத்தனை என்ற கணக்கு இருக்கிறதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ. ஏழுமலை.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 60 புலிகள் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே சொல்லி இருக்கின்றார். ஆனால், முதுமலை போன்ற பகுதிகளுக்கு சுற்றுலாப் பயணிகளும், இந்த மாமன்றத்திலே

[2002 மே 9

இருக்கின்ற மூத்த உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்கள் குழுவைச் சார்ந்தவர்களும் அந்தப் பகுதிக்குச் சென்று பார்த்தபோது, யாரும் புலியைப் பார்த்ததாகச் சொல்லவில்லை. எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 60 புலிகளில் ஒரு புலியையாவது பார்க்கின்ற ஒரு நல்ல வாய்ப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்க முயற்சி எடுப்பாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் வந்து அதைப் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 334, திரு. ஜெ. குரு என்கிற குருநாதன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**334—**

## கால்நடை மருத்துவமனை

***10433—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன் :**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், முல்லையூர் கிராமத்திற்குக் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.



2002 மே 9]

**திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியத்தில் உள்ள முல்லையூர் கிராமத்தைச் சுற்றி 15 கிராமங்கள் இருக்கின்றன. அங்கு இருக்கின்ற கால்நடைகளான கறவை பசு மாடுகள், உழவு மாடுகள், கோழிகள் போன்றவற்றுக்கெல்லாம் உடல்நிலை சரியில்லை என்றால், அவற்றை அழைத்துச் செல்ல வேண்டுமென்றால், 15 கிலோ மீட்டர் தாண்டிச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அதனால் அந்தப் பகுதியில் ஒரு பகுதி நேர கால்நடை மருத்துவமனையாவது அமைக்க இந்த அரசு முன்வருமா? இந்த ஆண்டில் இல்லை என்றாலும், வருகின்ற ஆண்டிலாவது அரசு செய்யுமா என்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிமடம் தொகுதி, முல்லையூர் கிராமம், செந்துறை ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் வருகின்றது. முல்லையூர் கிராமத்திலிருந்து 7 கிலோமீட்டர் தூரத்தில் ஆர். எஸ். மாத்தூரில் ஒரு கால்நடை மருந்தகமும், 8 கிலோமீட்டர் தூரத்தில் குமுனூர் என்ற இடத்தில் ஒரு கால்நடைக் கிளை நிலையமும் உள்ளன. முல்லையூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் சுமார் 8,972 கால்நடைகள் உள்ளன. தற்போது இத்துறையில் மறு சீரமைப்புப் பணி நடைபெற்று வருகிறது. ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிந்துவரும் கால்நடை மருத்துவர்களைத் துறைக்கு திரும்ப எடுக்கும்போது, மேற்படி முல்லையூர் கிராமத்தில் புதிதாக கால்நடை மருந்தகம் திறக்க அரசின் நிதிநிலைக்கு உட்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முடிவு எடுக்கும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[2002 மே 9

## 2. தகவல் கோரல்

### (அ) கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்திற்கு சத்ய சாய்பாபா நன்கொடை—தமிழகப் பங்குத்தொகையை ஈடு செய்தல்

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி சொல்லுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி காவல் நிலையத்தில் பெண்கள்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். வருகிறது, வருகிறது. (குறுக்கீடு) அது இன்றைக்கு எடுக்கப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்திற்கு பகவான் சத்ய சாய்பாபா அவர்கள் 200 கோடி ரூபாய் சென்னை குடிநீர்த் திட்டத்திற்குக் கொடுத்து இருப்பதாக ஆந்திர தகவல் துறை அமைச்சர் திரு. செண்பகம் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால், நாம் ரூ.120 கோடி, நம்முடைய பங்களிப்பாகத் தர வேண்டும் என்றும் அங்கு இருக்கக்கூடிய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அந்த 200 கோடி ரூபாயில் நம்முடைய பங்கான 120 கோடி ரூபாயை adjust செய்துகொள்வதற்கு நாம் சத்ய சாய்பாபாவைக் கேட்டு, அந்தப் பணத்தை adjust செய்வதற்கும், அது உண்மைதானா என்று அறிவதற்கும் தங்கள் வாயிலாக அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

(பதில் அளிக்கப்பெறவில்லை)



2002 மே 9]

### (ஆ) பென்னாகரம் தொகுதி குடிநீர்க் குழாய் உடைபட்டு இரண்டு பெண்கள் இறந்ததாகக் கூறப்படுவது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 நாட்களுக்கு முன்பு என்னுடைய தொகுதியிலே குடிநீர்க் குழாய் உடைபட்டு, 2 பெண்கள் இறந்து இருக்கிறார்கள்; 16 பெண்கள் உட்பட...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஆய்வில் இருக்கிறது. நாளை எடுக்கமுடியுமா என்று பார்க்கிறேன். நாளைதான் இறுதிநாள். எடுக்க முடியாவிட்டால் துறையிலிருந்து ஏதாவது பதில் வந்தால் உங்களுக்குச் சொல்கிறேன்.

முற்பகல் 11-25

### (இ) பேரவை நிறைவேற்றிய தீர்மான நகலை எரித்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நாம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறோம். அந்தத் தீர்மானத்தினுடைய நகலை நேற்றையதினம் ஒரு கட்சிக்குச் சொந்தக்காரர் என்று சொல்லிக்கொள்கிறவர் அங்கே கொளுத்தியிருக்கிறார். காலையிலே கைது செய்து மாலையிலேயே அவரை விடுவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே இதுபோல அரசியல் சட்டத்தினுடைய நகலை எரித்த காரணத்தால் பல சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய பதவியையே இழந்திருப்பது, இந்த சட்டமன்றத்தினுடைய வரலாறு. 10 சட்டமன்ற உறுப்பினர்கள், அதுபோல இருக்கிறபோது இந்த மன்றத்திலேயே நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தினுடைய நகலைக் கொளுத்தியவர்கள்மீது நம்முடைய சட்டமன்றம் மிகக் கடுமையான நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும், எடுக்குமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. நெடுமாறன் அவர்களும் அவருடைய நண்பர்கள் சிலரும் நேற்று ஒரு போராட்டம் நடத்துவதாக அறிவித்திருந்தார்கள். இதற்கு காவல் துறை உரிய முன்னெச்சரிக்கை

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 மே 9

நடவடிக்கை எடுத்திருக்கிறது. திரு. நெடுமாறன் அவர்களும் இன்னும் சிலரும் போராட்டம் நடத்துவதற்காகக் கூடியபோது, அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் தீர்மானத்தின் நகலை எரிக்கவில்லை. ஆகவே, அவர்கள் மாலையில் விடுதலை செய்யப்பட்டார்கள். ஆனால், இன்னும் சிலர் தீர்மானத்தின் நகலை எரித்திருக்கிறார்கள். அவர்கள்மீது Unlawful Activities Prevention Act பிரிவு 10-ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்கள் கைது செய்யப்பட்டு, ரிமாண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, தீர்மானத்தின் நகலை எரித்தவர்கள் விடுதலை செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (ஈ) அறிமுகப்படுத்தும் சட்டமுன்வடிவுகளுக்கான நகலை உறுப்பினர்களுக்கு உரிய நேரத்தில் வழங்கக் கோரல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏராளமான சட்டமுன்வடிவுகள் இன்றைக்கு இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப் படிப்பதற்குக்கூட நேரம் கிடைப்பதில்லை. நேற்றைக்கு இரவு 12 மணிக்குப் பிறகு ரூம்களின் நடையிலே போட்டுவிட்டுப் போய் இருக்கிறார்கள். காலையிலே 7 மணிக்குத்தான் அவற்றைப் பார்க்க முடிகிறது. இதெல்லாம் இன்றைக்கே அறிமுக நிலையிலேயே ஏற்றுக்கொள்ளக்கூடிய சட்டங்கள்கூட....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஏற்கெனவே இவையெல்லாம் அனுப்பப்பட்டிருக்கின்றன. அஜெண்டா-தான் இப்போது அனுப்பியிருக்கிறோம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இன்றைக்கு University Bill ஒன்று தாக்கல் செய்யப்படவிருக்கிறது. இப்போது இங்கே டேபிளில்தான் வைக்கப்பட்டிருக்கிறது. அதுவொரு முக்கியமான சட்டம். இதெல்லாம் போதுமான அளவு........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிமுகம்தான். ஹேமச்சந்திரன், அது அறிமுகம்தான். ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுவது நாளைக்குத்தான்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை, இல்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலேயே ஏற்கெனவே பேசப்பட்டது. தேர்தல் முடிந்ததற்குப் பிறகு சில



2002 மே 9] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

விஷயங்களை வைத்துக்கொள்ளலாம் என்பதாகும். அவசர அவசரமாக இப்படிப்பட்ட சட்டங்களை — இன்றைக்கு — 7½ மணி வரை சபை நடக்கிறது. அதற்குப் பிறகு இதைப் — படித்து அடுத்த நாள் விவாதிப்பது ரொம்ப சிரமமான விஷயமாக இருக்கிறது. இந்தமாதிரியான சட்டங்களை ஆய்வு செய்வது என்பதை சௌகரியமாக பின்னாலே வைத்துக்கொள்ள வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) University Bill எல்லாம் இந்த நாட்டிலே இருக்கிற மாணவர்களுடைய எதிர்காலத்தைக் கடுமையாகப் பாதிக்கக்கூடிய சட்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இன்றைக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது. அதுபற்றிய விவரங்கள் உங்களுக்கு வரும். படித்துவிட்டுச் சொல்லுங்கள்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### வாணியம்பாடி காவல் நிலையத்தில் குறவர் இனப் பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதாகக் கூறப்படுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாணியம்பாடி காவல் நிலையத்தில் காவல் துறையினர், குறவர் இனப் பெண்களை பாலியல் பலாத்காரம் செய்துள்ளது குறித்து திரு. சி. ஞானசேகரன், திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. டி. மணி, திரு. இ. புகழேந்தி, திரு. எ.வ. வேலு ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானமாக அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். செல்வி க. பாலபாரதி, திரு. ஐ. கணேசன் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பிற்கு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். திரு. ஜி.கே. மணி, திரு. ப. ரங்கநாதன், திரு. இரா. திருமாவளவன், திரு. தி. வேல்முருகன் ஆகியோர் கவன ஈர்ப்புக்கு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்வதற்கு அனுமதி அளிக்கிறேன். தீர்மானத்தை மட்டும் சுருக்கமாகப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். முதலில் திரு. இ. புகழேந்தி.

முற்பகல் 11-30

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், கருமாந்தப்பட்டி பஞ்சாயத்தில் உள்ள இளச்சூர் கிராமத்தைச் சேர்ந்த ஆனந்தன் என்பவரை, ஒரு வழக்கிற்காக விசாரணைக்கு அழைத்துச்சென்று அவரைப் பார்ப்பதற்காக, பிறகு

சென்ற அவருடைய தந்தையார் கோவிந்தசாமி, அதேபோல ஆனந்தனுடைய மனைவி சத்யா, அவர்களை காவல் நிலையத்திலே விசாரணை என்று சொல்லி, சத்யா அவர்கள் கடுமையாக பாதிக்கப்படக்கூடிய அளவுக்கு, ஒரு முறைகேடான விசாரணை நடத்தி, பிறகு அவர்கள் சிறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அந்த சத்யாவைப் பார்ப்பதற்காகச் சென்ற அதே கிராமத்தைச் சேர்ந்த சிவகாமி, லட்சுமி, ருக்மணி ஆகியோரை சிறைவாசலிலேயே கைது செய்து வாணியம்பாடி போலீஸார் மீண்டும் காவல் நிலையத்திற்குக் கொண்டு வந்து விசாரணை என்ற பெயரிலே முறைகேடாக விசாரணைகளைச் செய்து, அவர்களையும் சிறைக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

இதில் கோவிந்தசாமியின் மகன் பிரகாஷ், அவருடைய மனைவி மணிமேகலை, மணிமேகலையின் வயது 14 தான், அவரை காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்துச் சென்று, பிரகாஷை விசாரித்துவிட்டு, மணிமேகலையைத் தனியாக அழைத்துச் சென்று கற்பழித்து உள்ளதாக, காவலர்களே கற்பழித்துள்ளதாக ஒரு புகார். அதுபோல, தொடர்ந்து அவரைப் பார்க்கச் சென்ற பெண்களான விஜயா என்கிற பெண்ணையும், கண்ணம்மா, செல்வி ஆகியோரையும் விபச்சார வழக்கிலே குற்றஞ்சாட்டி, போலீசாரே நீதிமன்றத்திற்கும் அழைத்துச் சென்று இருக்கின்றனர். தொடர்ந்து இந்த நிகழ்ச்சியில் போலீசாரால், இப்படிப்பட்ட முறைகேடாக கற்பழிக்கப்பட்ட சம்பவமும், பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்ட நிலையும் அந்தக் காவல் நிலையத்தில் ஒரு வழக்கின் பொருட்டு தொடர் நிகழ்ச்சிகளாக நடந்து இருக்கின்றன. நடைமுறையிலே இல்லாத அளவுக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி, குறவர் சமூகத்தைச் சேர்ந்த மக்களை பொய் வழக்கிலே சிக்கவைத்து, அவர்களுடைய சொத்துக்களைச் சூறையாடியதுடன், அந்தச் சமுதாயப் பெண்களை அச்சுறுத்துகின்ற அளவுக்கு, பெண்களைப் பலாத்காரம், பாலியல் பலாத்காரம் செய்திருக்கின்ற அந்தநிலை, சட்ட விரோதமாக சிறைச்சாலையிலே அடைத்து இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் உண்மைகளைக் கொண்டு வருவதற்கு, அங்கே பாதிக்கப்பட்ட அந்தப் பெண்களின் நிலையை இந்த அரசு உணர்கிறதா? அவர்களுக்கான சட்ட நிலையில் எந்தவிதமான முடிவினை அரசு எடுத்து இருக்கிறது? தவறு செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்போகிறதா அல்லது நிவாரணம் என்கிற பெயரிலே அவர்களுக்கு தொகைகளைக் கொடுத்துவிட்டு இந்த நிலையை இத்தோடு நிறுத்திக் கொள்ளப்போகிறதா என்பதெல்லாம் கேள்விகளாக இன்றைக்கு இருந்து



கொண்டு இருக்கின்றன. ஆகவே, இந்த அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புவது, இப்படிப்பட்ட செயல்கள் தொடர்ந்து நடைபெறுகின்ற சூழலைத் தடுக்க இப்போது நடவடிக்கை எடுக்காவிடில் இது வாய்ப்பாக அமைந்துவிடும் என்பதை அரசாங்கத்தினுடைய நிலைக்கும், சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டிய, சமூக சூழ்நிலைகளைப் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பிலே இருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதிலே எந்தவிதமான நிலைப்பாட்டினை எடுக்கிறார் என்பதையும் இந்த அரசு மக்களுக்குத் தெரிவிக்கின்றவிதமாக இப்போது அறிவிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட அந்தச் சமுதாயத்திற்கு சரியான நிலைமைகளை, அச்சமில்லாத ஒரு பாதுகாப்போடு வாழ்கின்ற சூழ்நிலையை அவர்கள் உணருகின்ற அளவிற்கு உருவாக்கித் தந்து அவர்களுக்குத் தக்க அளவிலே சலுகைகளையும், உதவிகளையும் செய்ய வேண்டும் என்பதை என்னுடைய கருத்தாக இந்த சிறப்புக் கவன ஈர்ப்பில் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி காவல் நிலையத்தில், தருமபுரி மாவட்டம், இளச்சூர் கிராமத்தைச் சேர்ந்த சில பெண்களை, அவர்களுடைய கணவன்மார்கள் திருட்டு வழக்கிலே ஈடுபட்டதாகச் சொல்லி, காவல் நிலையத்திற்குக் கொண்டுவந்து சித்திரவதை செய்து, அடித்து, துன்புறுத்தி பிறகு பாலியல் பலாத்காரம் செய்து கற்பழிக்கப்பட்டதாக செய்திகள் வந்துகொண்டே இருக்கின்றன. இதிலே மணிமேகலை என்கிற ஒரு பெண், விஜயா என்கிற ஒரு பெண், சுப்பிரமணி என்கிற காவலரால் கற்பழிக்கப்பட்டதாக, அவர்கள் இன்று புகார் செய்திருக்கிறார்கள். அதேபோல, அவர்கள்மீது பிக்பாக்கெட் கேஸைப் போட்டு, அவர்களையும் ரிமாண்ட் செய்திருக்கிறார்கள். முதலிலே வாணியம்பாடி காவல் நிலையத்திற்குக் கொண்டுபோனவர்கள், அங்கே விசாரித்துவிட்டு, பிறகு அவர்களை ஆம்பூர் காவல் நிலையத்திற்குக் கொண்டுபோய், ஆம்பூர் காவல் நிலையத்திலே சில நாட்கள் வைத்திருந்து, விசாரித்து, துன்புறுத்தியதாகவும் இப்போது சொல்லப்படுகிறது. வாச்சாத்தி நிகழ்ச்சி, மீண்டும் திரும்புகிறதோ என்கிற அளவுக்கு இன்று அச்சம் இருக்கிறது. பெண்களுடைய உரிமைக்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் எத்தனையோ முயற்சிகளை எடுத்து, இன்று பெண்களுக்கு என்று ஒரு தனி காவல் நிலையம், பெண்களுக்கு நீதிமன்றம் என்றெல்லாம்

பலவற்றைக் கொண்டு வந்துகொண்டிருக்கிற இந்தக் காலகட்டத்தில், பெண்கள் இந்த அளவிற்கு காவல் துறையினரால் சீரழிக்கப்படுவது என்பது, வன்மையாகக் கண்டிக்கத்தக்க ஒன்று. இப்போது, இப்படிப்பட்ட புகார் வந்த காரணத்தினாலே வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், PSO - Police Standing Order-படி ஒரு விசாரணைக்கு உத்தரவிட்டு, திருப்பத்தூர் R.D.O.-வை விசாரிக்கச் சொல்லி இப்போது விசாரணை நடந்துகொண்டு இருக்கிறது. ஆனால், இப்படிப்பட்ட மிகக் கொடூரமான நிகழ்வுக்கு Police Standing Order-படி ஒரு R.D.O. enquiry என்பது நிச்சயமாகப் போதாது. Sitting High Court Judge யாரையாவது ஒருவரை வைத்து உடனடியாக இதிலே இருக்கக்கூடிய அத்தனை புகார்களைப் பற்றியும் இந்த அரசு தீர விசாரித்து அதற்கான Findings -ஐப் பெற்று, கொடூரத்தை இழைத்திருக்கக்கூடிய சம்பந்தப்பட்ட காவல் துறையினர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ் மாநிலக் காங்கிரஸ் இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-35

பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நிவாரணத் தொகையை அரசு வழங்க வேண்டும். ஏனென்று சொன்னால், இந்தக் குறவர் இனப் பெண்கள் பெரிய பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிற காரணத்தினாலே — என்னதான் நாம் பணத்தைக் கொடுத்தாலும்கூட, இழந்துவிட்ட மானத்திற்கு அது நிச்சயமாக ஈடு செய்ய முடியாத ஒன்று. இருந்தாலும் — மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்களுக்கு நிவாரணத் தொகையை வழங்க வேண்டுமென்று வலியுறுத்தி, இனி வரக்கூடிய காலங்களில் காவல் துறையினர் இப்படி அத்துமீறி நடந்து கொள்ளாமல் இருப்பதற்கும், இப்படிப்பட்ட பாலியல் பலாத்காரமோ, மற்றவையோ, புகார்கூட வரக்கூடாத அளவுக்கு காவல் துறை செம்மையாக நடந்துகொள்வதற்கு தகுந்த அறிவுரைகளையும், உத்தரவுகளையும் காவல் துறை அலுவலர்களுக்கு அரசு வழங்குமா என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், வாணியம்பாடி காவல் நிலையத்தில் பெண்கள் கற்பழிக்கப்பட்ட, பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் எங்களுடைய தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ஊத்தங்கரை அருகிலே இருக்கக்கூடிய இளச்சூர் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். அங்கே குறைந்த எண்ணிக்கையிலே ஒருசில குடும்பங்களே





இருக்கின்றன. சாதாரண ஏழை எளிய மக்கள், கூலித் தொழில் செய்து வாழக்கூடிய குடும்பங்கள்தான் இருக்கின்றன. ஆக, இப்படி அந்த ஏழை எளிய மக்கள், சாதாரண கூலித் தொழில் செய்து வாழக்கூடியவர்கள், எவ்வளவு பெரிய குற்றங்களைச் செய்திருந்தாலும்கூட, அந்தக் குற்றங்களை விசாரிப்பதற்கு, தண்டிப்பதற்குச் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமே தவிர, அதை விடுத்து, விசாரணை என்ற பெயராலே அழைத்துச் சென்று — கோவிந்தசாமி என்ற பெரியவர் — கோவிந்தசாமி என்பவருடைய மகன் ஆனந்தன் தவறு செய்தாரென்ற காரணத்திற்காக ஆனந்தனைக் கொடுமைப்படுத்தியதோடு மாத்திரமல்லாமல், அவருடைய தந்தையார் கோவிந்தசாமி, வயதான பெரியவரை, கையை, காலைக் கட்டி, தலைகீழாகத் தொங்கவிட்டு அடித்திருக்கிறார்கள். இது ஒரு நாளல்ல, இரண்டு நாட்களல்ல. இரண்டு, மூன்று நாட்கள் அங்கே தங்க வைத்து கொடுமை செய்திருக்கிறார்கள். ஆனந்தன்மீது வழக்கு, கோவிந்தசாமிமீது வழக்கு. இப்படி கொடுமைப்படுத்தப்படுகிறார்களே என்ற செய்தி கேட்டு அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள், அவர்களைப் பார்ப்பதற்காகச் சென்றிருக்கிறார்கள். அப்படிப் பார்க்கச் சென்ற அந்தப் பெண்களை அவர்கள் அடித்து, துன்புறுத்தியதோடு மாத்திரமல்லாமல், பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார்கள் என்ற நிகழ்ச்சிகளை எல்லாம் இங்கே எனக்கு முன்னால் பேசியவர்கள் சொன்னார்கள்.

அந்த வகையிலே, அப்படி பாலியல் பலாத்காரம் செய்தது மாத்திரமல்லாமல், அங்கே கற்பழிக்கப்பட்டதாகச் சொல்வது மணிமேகலை என்ற பெண்ணை. அவருக்கு வயது 14 என்று சொல்லப்படுகிறது. ஒரு 14 வயதுப் பெண்ணை காவல் துறையைச் சார்ந்தவர்களே கற்பழிக்கிறார்கள் என்று சொன்னால், இதைவிடக் கொடூரமான செய்தி நாட்டிலே எங்கே இருக்கமுடியும்? அப்படி மற்ற பெண்கள், விஜயா கற்பழிக்கப்பட்டிருக்கிறார். கண்ணம்மா, சத்யா, லட்சுமி, ருக்மணி, போன்றவர்கள் எல்லாம் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, சிலர்மீது விபச்சார வழக்கு; சிலர்மீது திருட்டு வழக்கு போடப்பட்டிருக்கிறது. ஆகவே அழைத்துவரப்பட்டு, இப்படி கொடுமைப்படுத்தி, பிறகு அவதூறான, உண்மைக்குப் புறம்பான வழக்குகள் எல்லாம் இவர்கள்மீது திணிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்த மாதிரி காவல் துறையினர் செய்தது வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழ்நாட்டு காவல் துறைக்கே களங்கம் விளைவிக்கக்கூடிய ஓர் அம்சமாக அமைந்திருக்கிறது. இப்படிப்பட்ட களங்கம் விளைவித்த

[திரு. ஜி.கே. மணி] [2002 மே 9

காவல் துறை அதிகாரிகள் கண்டிப்பாக, கடுமையாக தண்டிக்கப்படவேண்டும். அப்படி கடுமையாகத் தண்டிக்கப்பட்டால்தான் காவல் துறையினுடைய புனிதத் தன்மை காக்கப்படும். மற்றவர்கள் எல்லாம் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்யாமல் இருப்பதற்கும், இது முன்னுதாரணமாக இருக்கும் என்ற காரணத்தாலே, இதிலே காவல் துறையில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கக்கூடியவர்கள் இந்த ஏழை எளிய மக்களுக்குப் பாதுகாப்பாக இருக்கக்கூடியவர்கள், இவர்களே பயிரை மேயக்கூடிய வேலியாக அமைந்துவிடக்கூடாது. வேலியே பயிரை மேய்கிறது என்று சொல்வார்களே, அப்படி இவர்களே பயிரை மேயக்கூடாது.

அந்த வகையிலே, இந்தக் காவல் துறை அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற அந்தக் கோரிக்கையை வைத்து, இவற்றையெல்லாம் விசாரிப்பதற்கு இப்போது விசாரணைக் கமிஷன் வேண்டுமென்று சொல்கிறோம். இப்படி பல்வேறு பாலியல் பலாத்காரம், பல்வேறு சம்பவங்கள் நடக்கின்ற நேரத்திலே தனி விசாரணைக் கமிஷன் என்று போட்டு இப்படியெல்லாம் செய்வதால் — இதற்கு செலவும் கூடுதல் ஆகிறது. மாவட்டத்திற்கு ஒன்று அங்கே மனித உரிமையியல் நீதிமன்றம் இருக்கும் என்று சொன்னால் — அந்த மனித உரிமையியல் நீதிமன்றத்திலே அப்படிப்பட்ட வழக்குகளெல்லாம் தேங்கி நிற்காமல் — இதுகூட நீதிமன்றத்தில் வேறு விசாரணை கமிஷனுக்குப் போனால் காலதாமதம் ஆகும். இருந்தாலும்கூட அந்த மனித உரிமையியல் நீதிமன்றம், மாவட்டத்திலே ஒன்று அமைக்கப்படும் என்று சொன்னால் — இப்படிப்பட்ட குற்ற நிகழ்வுகள் உடனுக்குடன் அங்கே விசாரிக்கப்பட்டு நீதி வழங்கப்படும். அடிக்கடி நீதி வழங்கப்படுகிற காரணத்தால், குற்றங்களும் குறையும். ஆகவே இவற்றையெல்லாம் முன்னாலே வைத்து மனித உரிமையியல் நீதிமன்றம் மாவட்டத்திற்கு ஒன்று அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, அந்தப் பெண்களைக் கற்பழித்துப் பாலியல் பலாத்காரம் செய்த காவல் துறையினர்மீது கடுமையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். போடப்பட்ட அவதூறான வழக்குகளை, உண்மைக்கு மாறான வழக்குகளைத் திரும்பப் பெறவேண்டும். பாதிக்கப்பட்ட பெண்களுக்கும், அந்தக் குடும்பத்திற்கும் நிவாரணம் வழங்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கருத்துகளைச் சொல்லி அமர்கிறேன்.



)02 மே 9]

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** செல்வி பாலபாரதி பேசுவார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சம்பவத்தைப் பற்றி விளக்கியிருக்கிறார்கள். இதில் நான் தெரிவிப்பது என்னவென்றால், பாதிக்கப்பட்ட பெண்கள் பழங்குடி இனத்தைச் சார்ந்த பெண்கள். அவர்களுக்கென்று ஒரு தனிக் கலாச்சார நடைமுறை என்பது இருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில் கணவன் செய்த தவறு, அவர் தவறு செய்தாரா, இல்லையா என்பது விசாரணைக்குரியது. கணவன் செய்த தவறுக்காக இந்த நூற்றாண்டிலேகூட மனைவியை இழுத்துச் செல்வது, விசாரணை செய்வது, அந்த விசாரணையில் பெண் என்ற காரணத்தால் சேலையை அவிழ்த்து, அந்தப் பெண்களுடைய இரண்டு கைகளையும் பின்புறம் கட்டி, சத்யா என்ற பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்து இருக்கிறார்கள். இவர்களுக்கு என்ன நேர்ந்தது என்று . பார்க்கச் சென்ற அந்தப் பெண்ணினுடைய உறவுப் பெண்களையும் இதேபோன்று பாலியல் பலாத்காரம் செய்திருக்கிறார்கள். ஆகவே ஓர் ஆண் அல்லது யாரோ ஒருவர் செய்யக்கூடிய தவறுக்கு குடும்பத்திலே இருக்கிற இதர பெண்கள் என்ன செய்வார்கள்? மகாபாரத காலத்திலேயிருந்து, தருமர் தவறு செய்ததற்கு திரௌபதியைக் கொண்டுபோய் சபையிலே வைத்து அன்று மானபங்கப்படுத்திய அந்தச் செயலைப் போன்று, தொடர்ந்து காவல் துறை பெண்களை இழுத்துக் கொண்டுபோய் இந்த மாதிரி சித்ரவதை செய்வதை அரசு அனுமதிக்கக்கூடாது. இதில் சம்பந்தப்பட்ட அந்தக் காவல் நிலையத்தில் இருந்த அதிகாரிகள்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மாலை 5-00 மணிக்கு மேல் பெண்களை அழைத்துச் செல்லக்கூடாது என்று கடந்த காலத்திலே அரசு கூறி இருக்கிறது; நீதிமன்றமும் கூறி இருக்கிறது. ஆனால் அழைத்துச் சென்றது ஜனவரி மாதம் 3 ஆம் தேதி நள்ளிரவு 1-00 மணிக்கு, நள்ளிரவு 1-00 மணிக்கு அந்தப் பெண்களை அழைத்துச் செல்வது, எந்தவிதத்தில் சரியாக இருக்கும்? இதுபோன்று சட்டத்தை மீறிய செயல்களை காவல் துறை தொடர்ந்து கையாள்வது அரசாங்கத்திற்கு மக்கள் மத்தியிலே ஒரு கெட்ட பெயரை ஏற்படுத்தும். ஆகவே, இந்தப் பிரச்சினையில்

பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய அந்தப் பழங்குடியினப் பெண்களுக்கு நியாயம் கிடைப்பதற்கு, சம்பந்தப்பட்ட காவல் துறையில் இருக்கக்கூடியவர்கள் யார் இந்தக் குற்றத்தில் ஈடுபட்டார்கள் என்பதைக் கண்டறிவதற்கு சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடுவது மிகச் சரியாக இருக்கும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நிவாரணம் அளிப்பதோடு அந்தப் பெண்களுக்கு இதுபோன்று குற்றங்கள் எதிர்காலங்களில் நடைபெறாது என்ற நம்பிக்கையை ஊட்டக்கூடிய விதத்திலே அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2-3-2002 அன்று வேலூர் நகரில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றில், தமிழ்நாடு பழங்குடியினர் கூட்டமைப்பு என்ற சங்கத்தின் மாநிலச் செயலாளர் திரு. எல். சிவலிங்கம் என்பவரும், அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் திரு. பி. சண்முகம் என்பவரும், வாணியம்பாடி காவல் நிலையத்தில் 8-1-2002 அன்று, மணிமேகலை என்ற பெண்மணி, தலைமைக் காவலர் ஒருவரால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார் என்றும், விஜயா என்ற பெண்மணி சித்ரவதை செய்யப்பட்டார் என்றும் தெரிவித்துள்ளனர். மேலும், மணிமேகலை என்ற பெண்மணியின் கணவர் பிரகாஷ் என்பவரும், அவருடைய மாமனார் கோவிந்தசாமி என்பவரும் வாணியம்பாடி காவல் நிலையத்தில் சித்ரவதை செய்யப்பட்டனர் என்றும், அவர்கள்மீது பொய் வழக்குகள் போடப்பட்டன என்றும் அவர் அந்தச் செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறார். மேலும், இது சம்பந்தமாக மத்திய புலனாய்வுத் துறையினுடைய Central Bureau of Investigation-னின் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் கோரியிருந்தார்.

இந்தச் சம்பவம்பற்றி அரசுக்கு வந்துள்ள சில தகவல்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

முற்பகல் 11-45

மணிமேகலை என்ற பெண்மணி, தருமபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரை வட்டம், இளச்சூர் என்னும் கிராமத்தில் வசிக்கும் பிரகாஷ் என்பவரின் மனைவி ஆவார். பிரகாஷ் என்பவர் திருட்டுக்





குற்றங்களில் தொடர்பு உள்ளவர் என்பது காவல் துறைப் பதிவேடுகளில் இருந்து தெரிய வருகிறது. மேலும், பிரகாஷின் சகோதரர் குற ஆனந்தன் என்பவரும் திருட்டுக் குற்றங்களில் ஈடுபட்டு வருபவர் என்ற விவரமும், சத்யா என்ற மனைவியைத் தவிர, அவருக்கும் விஜயா என்ற பெண்ணுக்கும் கள்ளத் தொடர்பு இருந்ததாகவும் காவல் துறை மூலம் அறியப்படுகிறது. குற்றம் நடந்த இடங்களில் கிடைக்கும் விரல் ரேகைப் பதிவுகளில் இருந்து, குற ஆனந்தன் என்பவர், வேலூர் மாவட்டத்தில் ஏற்கெனவே 8 திருட்டுச் சம்பவங்களில் தொடர்புடையவர் என்பதையும், குற ஆனந்தன் தலைமறைவாக உள்ளார் என்பதையும் அறிந்த வேலூர் மாவட்டக் காவல் துறையினர், அவரைக் கைது செய்ய முயற்சிகள் செய்து வந்தனர்.

இதற்கிடையில், குற்றவாளி குற ஆனந்தனின் மனைவி சத்யா என்பவர் கடந்த 4-1-2002 அன்று, இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 379-ன்கீழ், வாணியம்பாடி நகர காவல் நிலையக் குற்ற எண் 4/2002-ல் ஒரு ஜேப்படிக் குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அதேபோல 13-1-2002 அன்று இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 399-ன்கீழ் வாணியம்பாடி நகர காவல் நிலையக் குற்ற எண் 20/2002-ல் கூட்டுக் கொள்ளை ஒன்றை நடத்த முயற்சி செய்ததற்காக பிரகாஷும் அவருடைய கூட்டாளி சதாசிவம் என்பவரும் கைது செய்யப்பட்டனர். மேலும், பிரகாஷின் உறவினர் நாச்சிமுத்து என்பவரின் மனைவி மங்கை என்ற பெண்மணி, 28-1-2002 அன்று இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 379-ன்கீழ் வாணியம்பாடி நகரக் காவல் நிலையக் குற்ற எண் 66/2002-ல் ஜேப்படிக் குற்றத்திற்காக கைது செய்யப்பட்டார். இந்த மூன்று வழக்குகளும் நீதிமன்ற விசாரணையில் இருந்து வருகின்றன.

13-1-2002 அன்று பிரகாஷ் கைது செய்யப்பட்டு, வாணியம்பாடி காவல் நிலையத்தில் வைக்கப்பட்டு இருந்தபோது, குற்றவாளி பிரகாஷின் மனைவி மணிமேகலை காவல் நிலையத்திற்கு வந்து போனார் என்று சொல்லப்படுகிறது.

மேலும், குற ஆனந்தனோடு கள்ளத் தொடர்பு கொண்டுள்ள விஜயா என்ற பெண்மணியும் மற்ற இருவரும் 4-3-2002 அன்று வாணியம்பாடி நகரில், பொது அமைதிக்குக் குந்தகம் விளைவித்தார்கள் என்ற குற்றத்திற்காக, Vaniyambadi Judicial Magistrate - வாணியம்பாடி குற்றவியல் நடுவரால் 100 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டனர் என்ற தகவல் கிடைத்துள்ளது.

ஆனால், 8-1-2002 அன்று மணிமேகலை மற்றும் விஜயா ஆகிய இருவரும் வாணியம்பாடி காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக ஒருபோதும் அழைத்து வரப்படவில்லை என்று தெரிய வருகிறது.

இதற்கும் மேலாக, மணிமேகலை என்ற அந்தப் பெண்மணி, இது நாள்வரை, அதாவது இந்த விஷயம்பற்றி பத்திரிகைகளில் செய்தி வரும்வரை, தான் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதாக எந்த ஒரு காவல் துறை உயர் அதிகாரிக்கோ அல்லது வருவாய்த் துறை அதிகாரிக்கோ அல்லது நீதித் துறை நடுவருக்கோ Judicial Magistrate இடமோ புகார் செய்ததாகத் தகவல் இல்லை. அதேபோல், 4-3-2002 அன்று வாணியம்பாடி நீதித் துறை நடுவர் முன்பு விஜயா என்ற பெண்மணி கைது செய்யப்பட்டு ஆஜர்படுத்தப்பட்டபோது அந்தப் பெண்மணியும் தான் துன்புறுத்தப்பட்டதாக எவ்விதக் குற்றச்சாட்டையும் கூறவில்லை.

பிரகாஷ், குற ஆனந்தன் மற்றும் அவரது சில உறவினர்கள் பொதுவாக திருட்டுக் குற்றங்களில் சம்பந்தப்பட்டவர்கள் என்பது தெரிய வருகிறது. ஆனால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முயற்சிகள் மேற்கொண்ட வாணியம்பாடி காவல் நிலைய காவல் துறையினர்மீது களங்கத்தை உண்டாக்குவதற்காக இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்களைக் கூறி இருப்பார்களோ என்று ஐயம் எழுகிறது. இருப்பினும், வாணியம்பாடி காவல் நிலையத்தினர்மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகள்மீது Police Standing Order 145 — காவல் நிலை ஆணை எண் 145-ன்கீழ், விசாரணை நடத்த வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர்,. திருப்பத்தூர் வருவாய்க் .கோட்ட அலுவலரைப் பணித்துள்ளார்.

இருப்பினும், வாணியம்பாடி காவல் நிலையத்தினரால் பல பெண்கள் சித்ரவதை செய்யப்பட்டனர்; பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்டனர் என்ற செய்தியைப் பல செய்தித்தாள்கள் மற்றும் வாரப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன. எனவே, இந்தச் சம்பவங்களின் கோர்வையில் நடந்தது என்ன என்பதை அறிய இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. ஆகவே, கடந்த ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் முடிய நிகழ்ந்த பிரகாஷ் மற்றும் குற ஆனந்தன் சம்பந்தப்பட்ட திருட்டுக் குற்றங்கள், அவற்றோடு தொடர்புடைய நிகழ்வுகள், அதில் சம்பந்தப்பட்டவர்கள் சித்ரவதை செய்யப்பட்டது அல்லது பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டது போன்ற குற்றச்சாட்டுக்கள் குறித்து ஒரு





விரிவான விசாரணையை நடத்த, State Crime Branch-C.I.D. மாநிலக் குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு உத்தரவிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு வாரத்தில் மாநிலக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணையை முடித்து அறிக்கை சமர்ப்பிப்பார்கள். அந்த அறிக்கையின்படி சம்பந்தப்பட்ட காவல் துறையினர் குற்றவாளிகள் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் துறையின் அத்துமீறிய நடவடிக்கைகள் நிரூபிக்கப்பட்டு, அதனால் பழங்குடியின மக்கள் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்குத் தக்க உதவிகளைச் செய்திட இந்த அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

முற்பகல் 11-50

## 4. கவன ஈர்ப்பு

### (அ) பொள்ளாச்சி தொகுதி, பட்டுப்போகும் தென்னை மரங்களுக்கு பரம்பிக்குளம் — ஆழியாறு வாய்க்காலிலிருந்து தண்ணீர் விடக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. வி. ஜெயராமன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். திரு. வி. ஜெயராமன்.

***திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி தொகுதியில் உள்ள தென்னை மரங்கள் நீரின்றி பட்டுப்போவதால் பரம்பிக்குளம்-ஆழியாறு வாய்க்காலிலிருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொருள் குறித்த விவர அறிக்கை ஒன்று அவைமுன்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2002 மே 9

வைக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையில் ஒரு சிறிய திருத்தம். இரண்டாவது பாராவில் கடைசி வரியில் இப்பகுதி நிலங்களுக்கும் தண்ணீர் கடந்த 19-4-2002 வரை வழங்கி தற்போது நிறுத்தப்பட்டுள்ளது என்று முடிக்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து 29-4-2002-லிருந்து மீண்டும் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது என்று திருத்தி வாசிக்கவும்.

**அறிக்கை**

அரசு ஆணை எண் 34, பொதுப் பணித் துறை நாள் 31-1-2002-ன் படி பரம்பிக்குளம் பிரதான கால்வாயில் பாலாறு பாசனப் பகுதி இரண்டாம் மண்டல பாசன நிலங்களுக்கு 1-2-2002 முதல் 15-6-2002 வரை மொத்தம் 135 நாட்களுக்கு தண்ணீர் வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், எதிர்பார்த்த அளவு மழை இல்லாததால் பல்வேறு நீர்நிலைகளிலும் நீர் இருப்பு மிகவும் குறைந்து, மேலும் தொடர்ந்து நீர் வழங்க இயலாத நிலை ஏற்பட்டு கடந்த 22-4-2002 வரை நீர் வழங்கி தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

மேலும் அரசாணை எண் 688, பொதுப் பணித் துறை நாள் 28-12-2001-ன்படி, பொள்ளாச்சி தாலுக்காவில் உள்ள ஆழியாறு பாசனப்படுகையில் உள்ள பொள்ளாச்சி, வேட்டைக்காரன் புதூர், சேத்துமடை ஆழியாறு ஊட்டுக்கால்வாய் மூலம் "ஆ" மண்டலத்தில் பாசனம் பெறும் நிலங்களுக்கு 3-1-2002 முதல் 17-5-2002 வரை மொத்தம் 135 நாட்களுக்கு தண்ணீர் வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டது. ஏற்கெனவே தெரிவித்த காரணங்களின் அடிப்படையில் இப்பகுதி நிலங்களுக்கும் தண்ணீர் கடந்த 19-4-2002 வரை வழங்கி தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

அணைகளில் போதிய நீர் இருப்பு இல்லாத காரணத்தால் மேற்கண்ட இரு பாசன படுகைகளிலும் உள்ள பாசன நிலங்களுக்கு முழுமையாக தண்ணீர் வழங்க முடியாத நிலையில் தற்போதைய பாசனத்திற்கு கட்டுப்படாத இதர மண்டலங்களில் உள்ள தென்னை மரங்களுக்கு உயிர்த் தண்ணீர் வழங்க இயலாத நிலை உள்ளது. மேலும் அணைகளில் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து விட்டதால் மின் உற்பத்தியும் நிறுத்தப்பட்டுள்ளது. எனவே, தற்சமயம் உள்ள மிகவும் குறைந்த நீர் இருப்பைக் கொண்டு தென்னை மரங்களுக்கு உயிர்த் தண்ணீர் வழங்க இயலாது.

மழை பெய்து நீர் நிலைகளில் நீர் இருப்பு உயரும்பட்சத்தில் மேற்கண்ட இரு பாசனப் படுகைகளில் உள்ள பாசன நிலங்களுக்கு



2002 மே 9] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

முழுமையாக தண்ணீர் வழங்கி முடித்த பின்னர் உள்ள நீர் இருப்பை கணக்கிடச் செய்து, சட்டமன்ற உறுப்பினர் திரு. வி. ஜெயராமன் அவர்கள் கோரியுள்ளபடி பொள்ளாச்சி தொகுதியில் உள்ள தென்னை மரங்களுக்கு உயிர்த் தண்ணீர் விட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டு வழியாக தேரிலே சென்றுகொண்டிருந்த பாரி மன்னன் முல்லைக் கொடி ஒன்று பற்றிப் படருவதற்கு ஒரு கோலின்றித் தவித்ததைப் பார்த்து, தான் பயணம் செய்த தேரையே ஈன்ற அந்தப் பாரி மன்னன் வழி வந்த வள்ளல் பரங்கிமலை மன்னன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசியல் வாரிசாம், இல்லை என்ற வார்த்தைக்கு அகராதியில் இடம் இல்லை என்று சொல்கிற 21 ஆம் நூற்றாண்டிலே தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக ஆக்கியே காட்டுவேன் என்று சொல்லி வீரசபதம் ஏற்று இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிற வீரமங்கை வேலுநாச்சியாராக இந்த அவையிலே அமர்ந்திருக்கிற நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி, கோவை மாவட்டத்திலே இருக்கின்ற, குறிப்பாக பொள்ளாச்சி வட்டத்திலே இருக்கின்ற தென்னை விவசாயிகளுடைய இன்றைய நிலை கடந்த 3 ஆண்டுகளாக மழை இல்லாமல் போய், மழை தொடர்ந்து பொய்த்துக்கொண்டே வந்து இந்த ஆண்டு மழையே இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு தென்னை மரங்கள் எல்லாம் காய்ந்து வாடிக்கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலையிலே, சென்ற ஆண்டு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் ஆழியாறு அணையிலிருந்து உயிர்த் தண்ணீரை தென்னை மரங்களுக்குத் திறந்துவிட்டதைப் போல், இந்த ஆண்டும் இப்போது இருக்கின்ற சூழ்நிலையிலே உயிரோடு காயந்துகொண்டிருக்கின்ற தென்னை மரங்களைக் காப்பதற்கு, ஆழியாறு, அணையிலே இப்போது நீர்மட்டம் 73 அடி இருப்பதாகத் தெரிய வருகிறது. வருகிற 17 ஆம் தேதியோடு ஆழியாறு அணையிலே இப்போது பாய்ந்து கொண்டிருக்கிற பாசனமானது முடியவிருக்கிற சூழ்நிலையிலே ஆழியாறு அணையிலிருந்து தண்ணீரைத் தென்னை மரங்களுக்குத் திறந்துவிட வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்து, அதேபோல திருமூர்த்தி அணையிலேயும் தண்ணீர் மட்டம் குறைவாக இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். திருமூர்த்தி அணைக்கு மேலே இருக்கிற மேல் அணைகளிலே கொஞ்சம் கொஞ்சமாக இருக்கின்ற தண்ணீரை திருமூர்த்தி அணைக்குக் கொண்டுவந்து

திருமூர்த்தி அணையின் மூலமாகவும் பொள்ளாச்சி, கிணத்துக்கடவு பகுதியிலே இருக்கிற காய்ந்துகொண்டிருக்கிற தென்னை மரங்களைக் காப்பதற்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பொள்ளாச்சி வட்டத்தினுடைய விவசாயிகளைக் காப்பதற்கு உயிர்த் தண்ணீர் விடுவதற்கான ஏற்பாட்டைச் செய்வார்களா? அதேபோன்று பொள்ளாச்சி வட்டத்திலே இருக்கிற குளம், குட்டைகளிலே தண்ணீர் விட்டு குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற ஆழியாறுப் பாசனப் பகுதி இரண்டு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்தப் பகுதிக்குச் சென்ற வருடம் நீர் தரப்பட்டிருக்கிறது. இந்த வருடம் இரண்டாம் மண்டலத்திற்கு நீர் வழங்கப்பட்டிருக்கிறது. 17-5-2002 வரை அந்தப் பாசனப் பகுதிகளுக்கு நீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற பகுதிக்கு நீர் வழங்கப்படுவது குறித்து, அந்தப் பாசனப் பரப்பிலே இருக்கின்ற கண்காணிப்புப் பொறியாளரை நேரடியாகச் சென்று ஆய்வு செய்து அறிக்கை தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மற்றபடி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்ற ஆண்டு அந்த நீர் கொடுத்ததாக இங்கு சொன்னார்கள். அப்போது நம்முடைய நீர் நிலைகளில் அதிகப்படியான தண்ணீர், போதுமான தண்ணீர் இருந்தது. தற்போது வெகுவாகக் குறைந்து, அதாவது சென்ற வருடம் சோலையாறு, பரம்பிக்குளம், ஆழியாறு, திருமூர்த்தி ஆகிய அணைகளின் நீர் மட்டம் 2028 மில்லியன் கன அடியாக மொத்த நீர் இருந்தது. இந்த ஆண்டு தற்போதைய, இன்றைய நிலவரப்படி 1588 மில்லியன் கன அடி நீர்தான் என்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த உயிர்த் தண்ணீர் கேட்கின்ற அந்தப் பகுதிக்கு நீர் விட முடியுமா என்பதனை அறிக்கை பெற்றவுடன் அரசு பரிவுடன் ஆய்வு செய்யும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயராமன்.



**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னை மரம் என்பது திடீரென்று ஒரு நாளில் உற்பத்தி செய்யக்கூடிய பயிரல்ல. பல்லாண்டு காலமாக பாடுபட்டுத்தான் விவசாயி அந்த தென்னை மரங்களை உருவாக்குகிறான். ஆகவே, எப்பாடுபட்டாகிலும்-சென்ற ஆண்டு இருந்த அதே நீர்மட்டம், அதே அளவு நீர்மட்டம் இப்போதும் ஆழியாறு அணையிலே இருக்கின்றது. ஆகவே, ஆழியாறு அணையைப் பொறுத்தவரையிலே 17 ஆம் தேதியோடு நீர்ப்பாசனம் முடிவதாலே அந்தப் படுகையைச் சேர்ந்த விவசாயிகளுக்கு, ஆழியாறு படுகையைச் சேர்ந்த விவசாயிகளுக்கு உயிர்த் தண்ணீர் விட வேண்டுமென்று கேட்டு, கடந்த நான்கு நாட்களாக மலையிலே நீர்ப்பிடிப்புப் பகுதியிலே catchment area-விலே ஓரளவுக்கு மழை பெய்திருப்பதாகத் தெரிய வருகிறது. ஆகவே, திருமூர்த்தி அணையிலும் நீர்மட்டத்தைப் படிப்படியாக உயர்த்தி அந்த வழியாகவும் விவசாயிகளுடைய தென்னை மரங்களைக் காப்பதற்கான முயற்சிகளில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆசியோடு ஈடுபட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து அமர்கின்றேன்.

## (ஆ) கோவில்பட்டி, இந்திரா நகர் பகுதியில் சில தீப்பெட்டித் தொழிற்சாலைகள் எரிந்து சேதம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. டி. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோரில் ஒருவர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி, இந்திரா நகர் பகுதியில் தீ விபத்து ஏற்பட்டு ஐந்து தீப்பெட்டித் தொழிற்சாலைகள் எரிந்து நாசமாகியுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

[2002 மே 9

## அறிக்கை

கோவில்பட்டி, இந்திரா நகர் பகுதியில் அமைந்துள்ள லட்சுமி மேட்ச் ஒர்க்ஸ் என்ற தொழிற்சாலையில் 22-04-2002 அன்று அதிகாலை 3-00 மணியளவில் தீப்பற்றிக் கொண்டுள்ளது. அச்சமயம் அங்கு தீப்பெட்டி பண்டல்களும், குச்சி மூட்டைகளும் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததாகவும், இதனால் அருகில் உள்ள இதர மூன்று சிறு தொழிற்சாலைகளுக்கும் தீ பரவி அங்கிருந்த தீப்பெட்டி மற்றும் குச்சி மூட்டைகளும் சேர்ந்து எரிந்து மேற்கண்ட சிறு தொழிற்சாலைகள் யாவும் சாம்பலாயின எனத் தெரிய வருகிறது. அருகிலுள்ள மற்றுமொரு தொழிற்சாலையில் சேதம் ஏதும் ஏற்படாமல் புகை மட்டும் பரவியுள்ளது. இத் தீவிபத்திற்கான முக்கிய காரணம் மின்சார கசிவுதான் எனத் தெரியவருகிறது. இந்தத் தீ விபத்து நடப்பதற்கு முன்பாக ஒரு வாரத்தில் இத்தொழிற்சாலைகளில் வேலை ஏதும் நடைபெறவில்லை. தொழிலாளர்கள் எவரும் காயமடையவில்லை. உயிரிழப்பும் ஏதுமில்லை. சுமார் 5 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் சேதமடைந்துள்ளன. இதற்கு இத்தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள்மீது காரணம் காட்டும் அறிக்கை வழங்கப்படவுள்ளது.

மேற்படி தீ விபத்தினால் அந்த வட்டார பொதுமக்கள் மத்தியிலும், தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மத்தியிலும் எந்தவிதமான பதட்டமோ, கவலையோ ஏதும் இல்லை. தற்போது இப்பகுதியில் அமைதி நிலவுகிறது.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி தொழிற்சாலையிலே ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக — ஏற்கெனவே கடந்த மாதம் 22 ஆம் தேதி இந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. அதற்குப் பின்னால், அந்தத் தொழிற்சாலையிலே வேலை செய்துவந்த தொழிலாளர்கள் வேலைக்குப் போகவில்லை. வேலையில்லாத ஒரு சூழ்நிலை அங்கே உருவாக்கப்பட்டிருக்கின்றது. காரணம், அந்தத் தொழிற்சாலை பூராவும், முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளதால் இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உருவாகி, அந்தத் தொழிற்சாலையைக் கட்டுவதற்கும், மீண்டும் வேலையை ஆரம்பிப்பதற்குமான சூழ்நிலை இல்லாமல் அந்த நிர்வாகத்தை நடத்தி வந்த, தொழிற்சாலையை நடத்தி வந்த அந்த நிர்வாகி இல்லாத ஒரு காரணத்தால் இப்படி ஒரு நிலை நீடிக்கின்றது எனத் தோன்றுகிறது. எனவே இந்தத் தொழிற்சாலையில் மீண்டும் வேலை ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அதை மீண்டும் கட்டுவதற்கு



2002 மே 9] [திரு. டி. மணி]

குறைந்தபட்சம் 5 இலட்சம் ரூபாயாவது கொடுத்து உதவினால்தான் அந்தத் தொழிலாளர்களை நாம் பாதுகாக்க முடியும். அந்த வகையிலே அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு வ.து. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி, இந்திரா நகர் பகுதிகளில் அமைந்துள்ள Lakshmi Match Works என்ற தொழிற்சாலையில் 22-4-2002 அன்று காலை 3 மணியளவில் தீப்பற்றிக் கொண்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அமைச்சர் அவர்களே, திரு. மணி, மறுபடியும் அந்தத் தொழிற்சாலை இயங்க வேண்டுமென்று சொன்னால், நீங்கள் அரசாங்கத்திலிருந்து பணம் கொடுப்பீர்களா என்று கேட்கிறார்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** யோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையிலே சட்டப்படி பாதுகாக்கப்பட வேண்டிய safety measures கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றதா? அவை சரியான முறையிலே வைக்கப்பட்டிருந்ததா? Factory Inspector இதை காலாகாலத்திலே inspect பண்ணியிருக்கிறாரா? அவர் கடைசியாக inspect பண்ணி என்ன அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டியிலுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலை பற்றி, கோவில்பட்டியில் 808 தீப்பெட்டி தொழிற்சாலைகளும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அமைச்சர் அவர்களே, அதாவது பாதுகாப்பு ஏற்பாடுகள் அங்கே செய்யப்பட்டிருந்ததா, அந்த Factorty Inspector போய் அதைப் பார்த்தாரா என்று கேட்கிறார் ஹேமச்சந்திரன். அதுபற்றி ஏதாவது தகவல் இருந்தால் சொல்லுங்கள். இல்லையென்றால் தகவல் கேட்டு சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** உடனடியாக எங்களுடைய அதிகாரிகள் அந்த இடத்திற்குச் சென்று மேல் நடவடிக்கை எடுத்துக்கொண்டுள்ளார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[2002 மே 9

## 5. அறிக்கை அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 51 முதல் 57 வரையிலான 7 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. அரசினர் தீர்மானங்கள்

### (அ) மதிப்பீட்டுக்குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு மற்றும் விதிகள் குழு—பதவிக் காலம் ஓராண்டு நீட்டிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானங்கள். மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு மற்றும் விதிகள் குழு ஆகிய குழுக்களை மேலும் ஓராண்டு நீட்டிப்பது குறித்த அரசினர் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு மற்றும் விதிகள் குழு ஆகிய குழுக்கள் எடுத்துக்கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப் பெறவில்லை. ஆதலால், ஒவ்வொரு நடப்பு ஆண்டின் இறுதியில் மேற்படி குழுக்களின் பதவிக் காலம் முடிவடைய வரையறுக்கும் பேரவை விதிகள் முறையே 195-ன்கீழ் 2, 203-ன்கீழ் 3, 211-ன்கீழ் 3 மற்றும் 256-ன்கீழ் 2 ஆகியவற்றைத் தளர்த்தி, அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே தொடர்ந்து 2003 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை பணியாற்ற வேண்டும் என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.



2002 மே 9]

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானங்களை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். எல்லா உறுப்பினர்களும் இந்த மாதிரி குழுக்களில் எல்லாம் கலந்துகொண்டு அனுபவங்கள் பெறுவதற்காகத்தான் இப்படிப்பட்ட குழுக்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இதை இப்படி one year-ஆக automatic extension கொடுப்பது என்பது ஓர் ஆரோக்கியமான process அல்ல. ஜனநாயகபூர்வமான......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. 2, 3 மாதங்கள்தான் ஆகின்றன. அதனால்தான்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு மற்றும் விதிகள் குழு ஆகிய 4 குழுக்களின் பதவிக் காலம் மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கப்படுகின்றன.

### (ஆ) அவை உரிமைக் குழு, சட்டவிதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதி மொழிக்குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, நூலகக் குழு மற்றும் பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு—பதவிக் காலம் ஓராண்டு நீட்டிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை உரிமைக் குழு, சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, நூலகக் குழு மற்றும் பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு ஆகிய குழுக்களை மேலும் ஓராண்டிற்கு நீட்டிப்பது குறித்த அரசினர் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற அவை உரிமைக் குழு, சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு,

[திரு. சி. பொன்னையன்] [2002 மே 9

அவைக் குழு, மனுக்கள் குழு, நூலகக் குழு மற்றும் பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு ஆகிய குழுக்கள் எடுத்துக் கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப் பெறவில்லை. ஆதலால், ஒவ்வொரு நடப்பு ஆண்டின் இறுதியில் மேற்படி குழுக்களின் பதவிக் காலம் முடிவடைய வரையறுக்கும் பேரவை விதிகள் முறையே 227(2), 239(2), 248(2), 253(2), 261(3), 264(2) மற்றும் 268(4) ஆகியவற்றைத் தளர்த்தி, அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே தொடர்ந்து மேலும் ஒரு நிதி ஆண்டு காலத்திற்கு, அதாவது 2003 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை அக்குழுக்களில் பணியாற்ற வேண்டும் என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அவை உரிமைக் குழு, சட்ட விதிகள் ஆய்வுக் குழு.......

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் என்ன என்று கேட்டீர்கள் என்றால்.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. முடித்து விடுகிறேன். அரையும், குறையுமாக நிற்கிறது. அவை உரிமைக் குழு, சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, நூலகக் குழு, பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு ஆகிய 7 குழுக்களுக்கு - அலுவல் ஆய்வுக் குழுவின் பதவிக் காலமும் மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்கப்படுகின்றன. என்ன பழனிசாமி சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அசெம்பிளியில் அமைக்கப்பட்டு இருக்கிற பல்வேறு குழுக்கள் முக்கியத்துவம் வாய்ந்த குழுக்கள். ஆனால் நியமிக்கப்பட்டிருக்கிற உறுப்பினர்கள் அந்தக் குழுக்களுக்கு முறையாக வருவதில்லை. இதை



2002 மே 9] [திரு. ஜி. பழனிசாமி]

நீங்கள் வலியுறுத்த வேண்டும். அதைப்போன்று பல உறுப்பினர்கள் அமைச்சர்களாக இருக்கிறார்கள். அந்த இடங்களும் நிரப்பப்பட வேண்டும். அதற்கான பட்டியலையும் நீங்கள் அறிவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் கேட்கிறேன். முதலிலே, இந்தக் குழுக்களுக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் கண்டிப்பாக கலந்துகொள்ள வேண்டும். இதிலே பெரும்பகுதி ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள், முற்றிலும் இந்தக் குழுக்களிலே கலந்துகொள்வது இல்லை என்கிற ஒரு குறைபாடு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அமைச்சர்களாக ஆனவர்களுக்குப் பதிலாக யாரை நியமிப்பது என்பது பின்னர் அறிவிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர்கள் - குழுவில் இடம் பெற்றிருக்கிற உறுப்பினர்கள் நிச்சயமாக குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கூட இரண்டு குழுக்களுடைய தலைவராக இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது ஆளும் கட்சி தரப்பிலே இருக்கிற உறுப்பினர்கள் பெரும்பாலோர் கலந்துகொள்வது இல்லை என்கிற குறைபாட்டினைச் சொன்னார்கள். ஆனால் என்னுடைய அனுபவத்திலே.......

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. எல்லாக் கட்சிகளிலேயிருந்தும்தான் சரியாக வரமாட்டேன் என்கிறார்கள்.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேரவை விதிகள் குழுவிலே உறுப்பினராக இருக்கிறேன். இதுவரையில் ஒருநாள்கூட அந்தக் கூட்டம் கூட்டப்படவில்லை. எங்களை அழைக்கவில்லை.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அது பற்றி தனியாகப் பேசுவோம்.

[2002 மே 9

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் பற்றிய சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் பற்றிய சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் பற்றிய சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடுகள்)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் எதிர்க்கிறோம்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே இந்தச் சட்டமுன்வடிவை நாங்கள் எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



2002 மே 9]

### (ஆ) அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (இ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 8. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.





## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 8. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (உ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.





## 8. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஊ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(எ) தமிழ்நாடு பன்முறைச் செயற்பாடுகள், காணொலி பதிவுப் பேழைக் கருவி, கம்பிவட தொலைக்காட்சி இணைப்பு ஆகியவற்றின் மூலம் தொலைக்காட்சித் திரையில் படக்காட்சிகள் காட்டுதல் (முறைப்படுத்தப்படுதல்) சட்டமுன்வடிவு, 2002**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பன்முறைச் செயற்பாடுகள், காணொலி பதிவுப்பேழைக் கருவி, கம்பிவட தொலைக்காட்சி இணைப்பு ஆகியவற்றின் மூலம் தொலைக்காட்சித் திரையில் படக்காட்சிகள் காட்டுதல் (முறைப்படுத்தப்படுதல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

பிற்பகல் 12-10

***மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பன்முறைச் செயற்பாடுகள், காணொலி பதிவுப்பேழைக் கருவி, கம்பிவட தொலைக்காட்சி இணைப்பு ஆகியவற்றின் மூலம் தொலைக்காட்சித் திரையில் படக்காட்சிகள் காட்டுதல் (முறைப்படுத்தப்படுதல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**திரு. துரைமுருகன்:** இந்த மசோதாவை எங்கள் கட்சியின் சார்பில் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறோம்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்த இந்தச் சட்டமுன்வடிவை பாட்டாளி மக்கள் கட்சி அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 8. அறிவிப்புகள்—தொடர்ச்சி

**(ஈ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1990-91 முன்மொழிதல் (ஆ.செ.)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1990-91 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

Message

"In pursuance of Clause (2) of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, P.S. Ramamohan Rao, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly to make grants for the demands in respect of amount spent on certain services and purposes during the financial year 1990-91 in excess of the amount authorised or granted for those services and purposes and for that year."

[2002 மே 9

## 9. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1990-91, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1990-91 ஆம் ஆண்டுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1990-91 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 28-3-2002 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1990-91 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

### நிறைவேற்றப்பெற்ற 1990-91 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை | (ரூபாய்) |
|---|---|
| அ. வருவாய்க் கணக்கில் செலவு: | |
| 2 - மாநில ஆயத் தீர்வைத் துறை | 16,15,323 |
| 3 - மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் | 4,47,508 |



| கோரிக்கை | (ரூபாய்) |
|---|---|
| 5 - முத்திரைத் தாள்கள்—நிருவாகம் | 27,70,330 |
| 7 - மாநிலச் சட்டமன்றம் | 8,28,899 |
| 14 - சிறைச்சாலைகள் | 20,93,286 |
| 17 - கல்வி | 1,26,15,38,219 |
| 23 - கூட்டுறவு | 26,86,61,159 |
| 29 - தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் | 38,89,714 |
| 30 - சமூக நலன் | 7,25,41,583 |
| 31 - பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் | 1,25,66,380 |
| 37 - பொதுப் பணிகள்—கட்டடங்கள் | 4,81,80,238 |
| 38 - பொதுப் பணிகள்-பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடங்களும் | 1,09,17,242 |
| 41 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 1,31,21,178 |
| 42 - ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 26,05,72,463 |
| 45 - காட்டுவளத் துறை | 1,36,92,960 |
| 47 - செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் | 14,02,398 |
| மொத்தம் அ. வருவாய்க் கணக்கில் செலவு .. | **1,97,48,38,880** |
| ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு: | |
| 50 - வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 8,36,580 |
| 53 - பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு | 19,54,942 |
| 54 - சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 2,42,24,989 |
| 55 - சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 15,50,801 |
| மொத்தம்-ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு | **2,85,67,312** |
| இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்: | |
| 59 - மாநில அரசு வழங்கும் கடன்களும்—முன்பணங்களும் | 68,95,43,025 |
| பெருமொத்தம் .. | **2,69,29,49,217** |

## 8. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2002 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.





## 10. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2002), மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2002) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. துரைமுருகன், இறுதியில் பேசுகிறீர்களா? திரு. பி.ஆர். சுந்தரம்.

***திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேச வாய்ப்பளித்த தமிழகத்தில் வாழ்கின்ற 6 கோடி தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாய், சிங்க நிகர் தலைவியாய், மக்கள் போற்றும் மகராசியாய், நெருப்பாற்றில் நீந்தி வந்து நீதி காத்த முதல்வராய் விளங்கிக்கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் பணிவான நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் தி.மு.க. தலைவர் 5 ஆண்டுகாலம் ஆண்டு, ** கஜானாவை காலி செய்து, கடும் நிதி நெருக்கடி என்ற முள் பாதையைத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் முன் வைத்தார்கள். ஆனால் அதை மலர்ப் பாதையாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாற்றி, ஏழை எளியமக்கள் (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். கடைசி நாள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2002 மே 9

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எங்களைக் குறை சொல்லிப் பேசுவதிலேகூட எனக்கு ஆத்திரம் இல்லை. ஆனால், கொஞ்சம்கூட ஆதாரம் இல்லாமல், ** ஆக்கினார் என்று சொல்வது எந்த வகையிலே ஏற்றுக்கொள்வது? இதே முறையில்தான் பேசுவது என்று ஒரு முடிவு எடுத்துக்கொண்டு பேச ஆரம்பித்தால், இருக்கின்ற இரண்டு நாட்களுக்குள் நாங்களும் அப்படிப் பேச முடியும். குறைகள் சொல்லக்கூடாது என்று நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்பதைத் தவிர்க்க வேண்டுகிறேன். நிதித் துறையே பாழ்படுத்தப்பட்டிருக்கிறது என்கிற கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** அதைவிட வார்த்தை அதிகமாகப் பேசத் தெரியும்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதித் துறை இங்கே பாழடைந்துபோய் இருக்கிறது என்கிற அந்தக் கருத்தைச் சொல்லலாம். ** என்று சொல்வது தனிப்பட்ட முறையிலே குற்றம் சாட்டுவதைப்போல் இருக்கிறது. எனவே, அந்த வார்த்தை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** கடும் நிதி நெருக்கடி என்ற முள் பாதையைத்தான் மாண்புமிகு அம்மா அவர்களின் முன் வைத்தார்கள். ஆனால், அதை மலர்ப் பாதையாக டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாற்றி, ஏழை எளிய மக்கள் பாதிக்காத வகையில் கடந்த ஓராண்டு காலமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் சாதனைகள் ஏராளம் ஏராளம் புரிந்துள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராவதைத் தடுப்பதற்காக, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆண்டிப்பட்டி தேர்தலில் வெற்றி பெறக்கூடாது என்பதற்காக பல வதந்திகள் பரப்பப்பட்டன. இலவச மின்சாரத்தை இரத்து செய்யப் போகிறார்கள்; ரேஷன் அரிசி விலையை உயர்த்தப் போகிறார்கள் என்றெல்லாம் தி.மு.க. தலைவர் திட்டமிட்டுப் பொய் பிரச்சாரம் செய்தார்கள். இப்படியெல்லாம் நடந்தால் மக்களைத் தூண்டிவிட்டு

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2002 மே 9] [திரு. பி.ஆர். சுந்தரம்]

இழந்த செல்வாக்கைத் திரும்பப் பெறலாம் என்று மனப்பால் குடித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய கனவுக் கோட்டை தலைந்தது. பேராசையில் இடி விழுந்தது. மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடனேயே முதல் அறிவிப்பாக விவசாயிகளினுடைய துயரைத் துடைக்கும் வகையிலே 311 கோடி ரூபாயை வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்தார்கள். இந்த மாமன்றத்திலே நாங்கள் அன்றைக்குக் கேட்டோம். ஆனால், அன்றைய முதல்வரோ தேவையில்லாத காரணங்களையெல்லாம் அன்றைக்குக் கூறினார்கள். கடனையோ, வட்டியையோ தள்ளுபடி செய்யமாட்டோம் என்று நபார்டு வங்கியிடம் மாண்புமிகு அம்மா அவர்கள் எழுதிக் கொடுத்துவிட்டதாக தவறான தகவலைத் திட்டமிட்டுப் பரப்பி வந்தார்கள். அதை ஆணித்தரமாக அம்மா அவர்கள் மறுத்து, விவசாயிகளுடைய பிரச்சினையைத் தீர்க்க வட்டியைத் தள்ளுபடி செய்திருக்கின்றார்கள்.

அதேபோல ஆதிதிராவிட மாணவியர்களுக்கு சைக்கிள் வழங்கும் திட்டத்தை எப்படிச் செயல்படுத்தலாம் என்று இன்றைக்கு பிற மாநிலங்கள் எல்லாம் அம்மா அவர்களிடம் ஆலோசனை கேட்டுக்கொண்டிருக்கின்றன.

ஆசிரியர் பணி மாற்றம், ஆசிரியர்கள் பணி நியமனம், டாக்டர்கள் நியமனம் இவற்றிலெல்லாம் கவுன்சிலிங் முறையை ஏற்படுத்தி புதிய சாதனையை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு சாதித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

அதேபோல இன்று ஊட்டி தேயிலைக்கு அதிகப்படியான விலை, டி.கே.எம். 9 ரக நெல்லை வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு அனுமதி போன்ற அற்புதமான திட்டங்களையெல்லாம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள்.

அடுத்தபடியாக டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் அறிவிக்கப்பட்ட அன்னதானத் திட்டத்தைப் பொறுத்தவரையில், 'வயிற்றுக்குச் சோறிட வேண்டும், இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்' என்ற புரட்சிக் கவிஞன் பாரதியாரின் கனவு நனவாக, இதய தெய்வம்

[திரு. பி.ஆர். சுந்தரம்] [2002 மே 9

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருக்கோயில்களிலே வருகை தந்துகொண்டிருக்கின்ற பக்தர்களுக்கு அன்னதானத் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கின்றார்கள். அம்மா அவர்களுடைய சிந்தனையில் உதித்த இந்தத் திட்டத்தை சமயச் சான்றோர்களும், ஆன்றோர்களும், இலட்சக்கணக்கான பக்தர்களும் இன்று உளமாரப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். பாரதிய ஜனதாக் கட்சியினுடைய தலைவர்கள் அன்னதானத் திட்டத்தை அற்புதமான திட்டம் என்று பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தால் ஒரு கூட்டணியே இன்று கலகலத்து ஆடிப் போய் இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் பல இலட்சம் ரூபாய் இன்றைக்கு நன்கொடையாக டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் நாமக்கல் மாவட்டத்தில் 2 திருக்கோயில்களுக்கு ஒரு வருட காலத்திற்குப் பொருளுதவி செய்யப்பட்டு இந்தத் திட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து சிமென்ட்டைப் பொறுத்தவரையில் முந்தைய தி.மு.க. ஆட்சியின்போது சிமென்ட் விற்பனையில் மாபெரும் கொள்ளை நடைபெற்றது. யார் யாருக்கோ அதிலே பங்கு போனது. சிண்டிகேட் அமைத்து பலபேர் கொள்ளையடித்துக்கொண்டிருந்த கொள்ளைக்கு அம்மா அவர்கள் இன்றைக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கின்றார்கள். இரும்புக் கரம் கொண்டு அவற்றை ஒடுக்கும் வகையிலே ஒரு மூட்டை சிமென்டினுடைய விலை ரூபாய் 135, 145 என்பதற்கு மேல் விற்றால், அவற்றுக்கு 24 சதவீதம் வரி விதிக்கப்படும் என்ற அறிவிப்பை இன்று டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். இப்படி அதிரடி நடவடிக்கை எடுத்து, சிமென்ட் விலையைக் குறைக்க திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே கேட்க விரும்புகிறேன். வெளி மாநில கம்பெனிகள் குறைந்த விலைக்கு இங்கே சிமென்ட் விற்பதற்கு அனுமதி கொடுக்காதது ஏன்? பினாமிகள் ஊழல் என்று எங்கள் இதய தெய்வம் சொன்னால் ஆத்திரம் வருகிறது. ஏன்? நீங்கள் கொள்ளையடிக்கவில்லை என்றால் அதிக விலைக்கு விற்ற சிமென்ட் அதிபர்கள்மீது ஏன் நீங்கள்



2002 மே 9] [திரு. பி.ஆர். சுந்தரம்]

உங்களுடைய ஆட்சிக் காலத்திலே நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக கடும் நிதி நெருக்கடியிலிருந்து மாநிலங்கள் மீளுகின்ற வகையில் ஒரு கட்ட உதவித் திட்டத்தை, அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய அரசு அளிக்க வேண்டுமென்றும், அந்த வகையில் தமிழகத்திற்கு 3,000 கோடி ரூபாய் சிறப்பு நிதி தேவை என்றும் மாண்புமிகு அம்மா அவர்கள் மத்திய அரசுடன் வாதாடியிருக்கின்றார்கள். தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இந்தக் கோரிக்கை மிகச் சரியான நேரத்தில் வைக்கப்பட்ட நியாயமான கோரிக்கை என்று கர்நாடக முதல்வர், கேரள முதல்வர், ஆந்திர முதல்வர், பாண்டிச்சேரி முதல்வர், ஓரிசா முதல்வர், பீகார் மாநில முதல்வர், அஸ்ஸாம் மாநில முதல்வர் என பல்வேறு மாநில முதல்வர்கள் எல்லாம் இந்தத் திட்டத்தைப் பாராட்டிக்கொண்டிருக்கின்றார்கள். இதன் மூலமாக இந்தியாவிலுள்ள அனைத்து முதல்வர்களுக்கெல்லாம் முன்னோடி முதல்வராக டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்று திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-20

அதேபோல கடந்த தி.மு.க. ஆட்சியில் 1997 ஏப்ரலிலே தென் மாவட்டங்களில் மிகப் பெரிய சாதிக் கலவரங்கள் ஏற்பட்டன. சட்டம்—ஒழுங்கு சீர்குலைந்து போனது. 4 மாவட்டங்கள் அரசினுடைய நிர்வாகப் பிடியிலே இல்லை. 6 மாத காலமாக அரசு பஸ்கள் பல ஊர்களுக்குப் போக முடியாத சூழ்நிலை இருந்தது. பெரிய உயிர்ச் சேதம், பொருட் சேதம் ஏற்பட்டது. மக்களைச் சந்திப்பதற்குக்கூட அன்றைய ஆட்சியாளர்களுக்குத் தெம்பு இல்லை, திராணி இல்லை. அன்றைக்கு அவர்கள் ஊட்டியிலே தங்கி ஓய்வு எடுத்தார்கள். ஆனால் ஆற்றல்மிக்க எங்கள் தலைவி சங்கரலிங்கபுரத்தில் ஒரு துயரமான சம்பவம் ஏற்பட்டது என்றவுடன் ஓடோடிச் சென்று உதவிக்கரம் நீட்டியவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். அம்மா அவர்கள் சங்கரலிங்கபுரத்திற்குச் சென்று வந்த பிறகு அங்கு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று பல நடுநிலையாளர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். பத்திரிகைகள் இன்று பாராட்டிக்கொண்டிருக்கின்றன.

இன்றைக்கு மட்டுமல்ல, அன்றைக்கும் போடியில் சாதிக் கலவரம் ஏற்பட்டபோது நேரடியாக மக்களைச் சென்று சந்தித்தவர் டாக்டர்

[திரு. பி.ஆர். சுந்தரம்] [2002 மே 9

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியாவில் பல அரசியல் தலைவர்கள் இருக்கலாம். பல முதல்வர்கள் இருக்கலாம். ஆனால் மக்களை ஈர்க்கின்ற காந்த சக்தியோடு நேசிக்கின்ற தலைவர்கள் வரிசையிலே Popular தலைவர், Popular முதல்வர் யாரென்றால் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்று பல்வேறு பத்திரிகைகள் கணிப்புகளாக வெளியிட்டிருக்கின்றன. இதய தெய்வம் அம்மா அவர்கள்மீது மக்கள் எந்த அளவிற்கு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதற்கு அடையாளம்தான் நாள்தோறும் கொளுத்துகின்ற வெய்யிலையும் பொருட்படுத்தாமல் தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளிலிருந்து எல்லாம் ஏராளமான தாய்மார்கள், முதியோர்கள் கோட்டைக்கு வந்து அம்மா அவர்களிடம் மனு கொடுக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றதிலிருந்து அதாவது 14-5-2001-லிருந்து 30-4-2002 வரை பொதுமக்களிடமிருந்து வாங்கப்பட்ட மனுக்களுடைய எண்ணிக்கை மட்டும் 5 இலட்சத்து 42 ஆயிரத்து 660. (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றிலே தீர்வு காணப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 4 இலட்சத்து 88 ஆயிரத்து 921. கிட்டத்தட்ட 90 சதவிகித மனுக்களுக்கு பதில்கள் அனுப்பப்பட்டுவிட்டன. பொதுமக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதிலே இந்தியாவிலேயே எந்த மாநில முதல்வரும் சாதிக்காத சாதனையை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு சாதித்துக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் சென்ற தி.மு.க. ஆட்சியில் நீங்கள் பார்த்திருப்பீர்கள். திண்டுக்கல்லிலே பயணியர் விடுதியிலே ஓர் அமைச்சரால் மனுக்கள் எல்லாம் பெறப்பட்டு, கழிவு அறையிலே பல காலமாக அவை குப்பைக் கூடையிலே வீசி எறியப்பட்ட செய்திகளை எல்லாம் நாங்கள் அன்றைக்குப் பார்த்திருக்கின்றோம். அதுதான் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கும் உங்களுடைய அரசுக்கும் இருந்த வேறுபாடு என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருசில வரிச் சலுகைகளை இங்கு குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நான் சென்ற தி.மு.க. ஆட்சியிலே இந்த மாமன்றத்திலே பேசியிருக்கிறேன். சேலத்திலே இயங்கி வருகின்ற சேகோ சர்வ் என்ற கூட்டுறவு ஸ்தாபனத்திற்கு விதிக்கப்பட்டு இருக்கின்ற கூடுதல் விற்பனை வரியை ரத்து செய்ய வேண்டுமென்று பலமுறை இந்த மாமன்றத்திலே



2002 மே 9] [திரு. பி.ஆர். சுந்தரம்]

பேசியிருக்கிறேன். ஆனால் அன்றைய ஆட்சியாளர்களுடைய செவியிலே அது ஏறவில்லை. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நாங்கள் கோரிக்கை வைத்ததற்குப் பிறகு சேகோ சர்வ் என்ற கூட்டுறவு ஸ்தாபனத்திற்கு விதிக்கப்பட்டிருக்கிற 2½ சதவிகித கூடுதல் விற்பனை வரியைத் தள்ளுபடி செய்து இருக்கிறார்கள். அதற்காக விவசாயப் பெருமக்கள், ஜவ்வரிசி ஆலை அதிபர்கள் எல்லாம் இன்றைக்கு அம்மா அவர்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல சில நாட்களுக்கு முன்பு அம்மா அவர்கள் ரூபாய் 3,000-த்திற்கு மேற்பட்ட பட்டுச் சேலைகள்மீது விதிக்கப்பட்டுள்ள ஒரு சதவிகித வரியை ரத்து செய்தும் தமிழக விசைத்தறியாளர்களுக்கு விதிக்கப்பட்ட கூடுதல் மின்சாரக் கட்டணத்தை ரத்து செய்தும் இருப்பதை இன்றைக்கு பல்லாயிரக்கணக்கான தாய்மார்களும் விசைத்தறி உரிமையாளர்களும் அம்மா அவர்களுடைய அரசை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள், வரவேற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதேபோல நேற்று பிளாஸ்டிக் பொருட்களை தடை செய்யும் மசோதாவிலே கலந்துகொண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் பேசிய பேச்சைப் பார்த்து எதிர்க்கட்சிகளும் அம்மா அவர்களுடைய செயலைப் பார்த்து இன்றைக்கு அவர்களைப் பாராட்டிக்கொண்டிருக்கின்றன.

பிற்பகல் 12-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியில் மேம்பாலம் கட்டியதில் பல கோடி ரூபாய் ஊழல் நடைபெற்ற சம்பவத்தில் முன்னாள் முதல்வர் மீதும், அவர் மகன் மு.க. ஸ்டாலின் மீதும் வழக்கு தொடரப்பட்டுள்ளது. சென்ற தி.மு.க. ஆட்சியில் தூத்துக்குடியிலிருந்து பெங்களூருக்கு இரயிலில் பல கோடி ரூபாய் மதிப்புள்ள ரேஷன் அரிசி கடத்தப்பட்டது. சென்ற தி.மு.க. ஆட்சியில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்ததில் பல கோடி ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டது. அதேபோல கால்நடைகளுக்கு மருந்து வாங்கியதில் 8½ கோடி ரூபாய் கொள்ளையடிக்கப்பெற்றது. இது விஷயமாக முன்னாள் தி.மு.க. அமைச்சர்மீது நான்கூட ஒரு வழக்கு தொடர்ந்திருக்கின்றேன். ஆகவே இவற்றையெல்லாம் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கண்டுபிடித்து அவர்களுக்கெல்லாம் தண்டனை வாங்கித் தர வேண்டுமென்று இந்த அரசை, மாண்புமிகு அம்மா அவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. பி.ஆர். சுந்தரம்] [2002 மே 9

நான் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் இந்த அவையிலே பேசியுள்ளேன். மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தின் முதல்வராக மீண்டும் வருவார்கள். மீண்டும் வந்ததற்குப் பிறகு தவறு செய்தவர்களைக் கண்டுபிடித்து, மத்திய சிறைச்சாலைக்கு அனுப்புவார்கள், இது நடப்பது உறுதி என்று நான் அன்றைக்குக் கூறினேன். அதுபோல தவறு செய்தவர்கள் எல்லாம் இன்றைக்கு மத்திய சிறைச்சாலையின் கதவுகள் திறந்து, அங்கே அனுப்பப்பட்டிருக்கின்றார்கள். மேலும் சிலர் அனுப்பப்பட வேண்டும். தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், மத்திய சிறைச்சாலையின் கதவுகள் அவர்களுக்குத் திறந்திருக்கின்றன என்பதைக் கூறிக்கொண்டு என்னுடைய அவா ஒன்றையும் நான் சொன்னேன். மத்திய சிறைச்சாலையில், உங்களுடைய நீண்ட நாளையக் கனவு, தொல்காப்பியத்திற்கு உரை எழுதுவதற்கு நேரம் வந்துவிட்டது, அங்கே நீங்கள் சென்று உரை எழுத வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) கூறினேன். கூடிய விரைவிலே அந்த வாய்ப்பு, தவறு செய்த உங்களுக்குக் கிடைக்கும் என்பதைக் கூறிக்கொண்டு, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இறுதியாக இந்த மாமன்றத்திலே நடக்கின்ற நிகழ்வுகளில் ஒருசிலவற்றை மட்டும் கூற விரும்புகிறேன்.

கடந்த 10 நாட்களாக சில விசித்திரமான காட்சிகளை இந்தச் சட்டமன்றத்திலே நாம் பார்க்கின்றோம். முன்னாள் முதலமைச்சர் இந்த மாமன்றத்திற்கு வர துணிவின்றி வெளியே உட்கார்ந்துகொண்டு, இந்த அரசை விமர்சனம் செய்துகொண்டிருக்கின்றார். தி.மு.க. தலைவரைப் பற்றியோ அவர்கள் செய்திருக்கின்ற தவறுகளை, முறைகேடுகளைப் பற்றியோ ஆதாரத்தோடு நம்முடைய முதல்வர் அவர்களோ, அமைச்சர்களோ எடுத்துச்சொன்னால், தரையிலே தூக்கிப்போட்ட மீன்கள் போலத் துள்ளுகிறார்கள், துடிக்கிறார்கள், ஆத்திரப்படுகிறார்கள். நான் இந்த நேரத்திலே கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே நடந்ததைச் சொல்லியே ஆக வேண்டும். 5 ஆண்டுகளுக்கு முன்பு அவர்களுடைய ஆட்சியிலே, நடந்த தவறுகளைப் பற்றியெல்லாம் பேசுவதற்கு, எங்களைப் பேச விட்டார்களா? பேச எழுந்தாலே எங்களை உட்காருங்கள், உட்காருங்கள் என்று அவர்கள் தூக்கிப் போடவில்லையா? ஒரு முக்கியமான நிகழ்ச்சி. முன்னாள் பாரதப் பிரதமர் திரு. இராஜீவ் அவர்கள் கொலையிலே சம்பந்தப்பட்ட சிவராசன், தாணு அவர்களோடு மாண்புமிகு அம்மா அவர்கள் புகைப்படத்தில் இருக்கிறார்கள் என்று ஒரு போலியான புகைப்படத்தினை சட்டமன்றத்திலே வெளியிட்டீர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள்மீது தேசத் துரோக வழக்கு போடப்பட



2002 மே 9] [திரு. பி.ஆர். சுந்தரம்]

வேண்டுமென்றெல்லாம், மோசமான வார்த்தைகளால், விமர்சித்தீர்கள். சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள், அது போலியான புகைப்படம், அந்தப் புகைப்படத்திலே இருப்பவர்கள் சிவராசன், தாணு அல்ல என்று நாங்கள் எவ்வளவோ போராட முனைந்தும் எங்களைப் பேச விடாமல் அவையை விட்டு வெளியே தூக்கி எறிந்தீர்கள். ஆள் இல்லாத மைதானத்தில் கோல் போடுவது போல, எங்களை வெளியேற்றிவிட்டு, புரட்சித் தலைவி அவர்களை வாய்க்கு வந்தபடி, நீங்கள் வசைபாடவில்லையா? மாண்புமிகு அம்மா அவர்கள்மீது பொய் வழக்கு போட்டு, நீதிமன்றத்திலே வழக்கு விசாரணையில் இருக்கும்போதே, சட்ட அமைச்சரும், பிற அமைச்சர்களும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இத்தனை ஆண்டுக் காலம் சிறைத் தண்டனை கிடைக்கும் என்று பேசினார்கள். அமைச்சர்கள் எல்லாம் நீதிபதிகளாக மாறி, தீர்ப்புரைத்து கொக்கரித்தார்கள். நாங்கள் பேச எழுந்தால் அனுமதியே கொடுக்காமல், எங்களை அவையை விட்டே வெளியேற்றினார்கள். ஆனால் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்களாக இருந்தாலும் சரி, மாண்புமிகு பேரவைத் தலைவராக இருந்தாலும் சரி, இப்போது எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்திருக்கின்ற திரு. துரைமுருகன், பொன்முடி, பரிதி, இவர்களையெல்லாம்............ (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன், உறுப்பினர் பேசி முடிக்கட்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இவர்களையெல்லாம் பேச அனுமதிக்கிறீர்கள். உட்கார்ந்த இடத்திலேயே உங்களை எல்லாம் விமர்சனம் செய்கிறார்கள். அவற்றையெல்லாம் நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாற்றுத் தலைவர், நீங்களும் பேச அனுமதிக்கிறீர்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அவர்களையெல்லாம் நீண்ட நேரம் பேச அனுமதிக்கிறீர்கள். இந்த நேரத்திலே ஆளுங்கட்சியினருக்கு பேசுவதற்கு வாய்ப்பே கொடுக்கப்படுவதில்லை. ஆளுங்கட்சியைச் சேர்ந்த பல சட்டமன்ற உறுப்பினர்கள் இன்னும் கன்னிப் பேச்சே பேச முடியாத சூழ்நிலையில்தான் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். ஆகவே இவற்றையெல்லாம் கொஞ்சம் மனதிலே கொண்டு, வருங்காலத்தில் ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு மானியக் கோரிக்கையிலும், குறைந்தது 2 பேர்களாவது பேசுவதற்கு நீங்கள்

வாய்ப்பளித்து, ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் நிறைய பேர் விவாதத்திலே கலந்துகொள்வதற்கு ஆவன செய்ய (மேசையைத் தட்டும் ஒலி) வேண்டுமென்று உங்களை நான் சிரம் தாழ்த்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இறுதியாக ஒன்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தை இந்தியாவிலே முதன்மை மாநிலமாக ஆக்குவேன் என்ற சபதம் செய்திருக்கிறார்கள். அந்தச் சபதத்தை வெற்றிகரமாக நிறைவேற்றும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. நீங்கள் எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் வெற்றி காணாமல் ஓய்ந்ததில்லை. எதிரிகள் தந்த சோதனைகளையெல்லாம் தூள் தூளாக்கிய உங்கள் அரசியல் வாழ்க்கையே அதற்கு உதாரணம். இப்பொழுது மாண்புமிகு அம்மா அவர்களே, நீங்கள் எடுத்துக்கொண்டிருக்கிற இலட்சியத்திலே வெல்வீர்கள். அந்த இலட்சியப் பயணத்தில் அதற்கு அச்சாரமாக வருகின்ற இடைத்தேர்தலில் சைதாப்பேட்டை, வாணியம்பாடி, அச்சரப்பாக்கம் ஆகிய தொகுதிகளில் மாண்புமிகு அம்மா அவர்கள் வெற்றிவாகை சூடுவீர்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதிரிகளை புறமுதுகிட்டு ஓடச்செய்வீர்கள். இது உறுதி, உறுதி என்று கூறி வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

பிற்பகல் 12-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏராளமான மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. மத்தியில் நிதியமைச்சர் திரு. யஷ்வந்த் சின்ஹா அவர்கள் நிதிலை அறிக்கையைத் தாக்கல் செய்ததைத் தொடர்ந்துதான் இங்கே நம்முடைய நிதியமைச்சரும் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்திருக்கிறார். பெரும்பாலும் மத்தியில் என்ன கொள்கைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றனவோ, அவற்றைப் பின்பற்றியே மாநிலங்களின் அறிவிப்புகளும் அமைகின்றன. நிதிக் குழுவாக இருந்தாலும், திட்டக் குழுவாக இருந்தாலும் மத்திய அரசிடம் உள்ள அந்த இரு அமைப்புகளும்தான் மாநில அரசினுடைய தலைவிதியை நிர்ணயிக்கின்றன. மத்திய அரசிடமிருந்து நமக்கு வழங்கப்படும் வரிப் பங்கீடும், மானியங்களும், நிதி உதவிகளுமே நமது





நிதி வருவாயில் ஒரு குறிப்பிடத்தக்க அளவிற்கு அமைகின்றன. திட்டக் குழு நிர்ணயிக்கும் குறியீடுகளை எட்டிவிட்டாலோ, நிதிக் குழு அறிவிக்கும் சிக்கன நடவடிக்கைகளை செயல்படுத்திவிட்டாலோ அவ்வாறு சிறப்பாகச் செயல்படும் மாநில அரசுகளை மத்திய அரசு ஊக்குவிக்கும் என்பதுதான் எல்லோருடைய எதிர்பார்ப்பாக இருக்கும். ஆனால் பல்வேறு சூழ்நிலைகளில் ஏற்படும் அரசியல் தட்பவெப்ப நிலைகளுக்கேற்ப நிலைமைகளில் மாறுதல்கள் ஏற்படுகின்றன. அதனால்தான் மாறுபட்ட அளவுகோல்களைக் கொண்டு, நல்ல செயல்திறம் படைத்த மாநில அரசுகளுக்குக்கூட நிதி உதவி வழங்குவதில் வெட்டு விழுந்துவிடுகிறது. நம் நாட்டுக்கே ஒரு பெரிய சவாலாக அமைந்துள்ள, பெருகிவரும் மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தும் பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. நாம் என்னதான் திட்டமிட்டாலும், வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டாலும், மக்கள்தொகையை ஒரு கட்டுக்குள் வைக்காவிட்டால், எல்லாமே பயனற்றுப் போய்விடும்.

நாடு விடுதலைபெற்ற வேளையில் 30 கோடியாக இருந்த நம்முடைய மக்கள்தொகை இன்று 100 கோடியைத் தாண்டிவிட்டது. நம் நாட்டுக்கே சவாலாக இருந்துவரும் பாகிஸ்தான் நாட்டின் வாக்காளர் எண்ணிக்கை 6 கோடிதான் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டில் மக்கள்தொகை மட்டும் 6 கோடியே 25 இலட்சத்தை எட்டிவிட்டது. இந்த நிலை தொடர்ந்தால் நம்முடைய திட்டமிட்ட பொருளாதாரம் எட்ட வேண்டிய குறிக்கோளை எட்டாமலே நின்றுவிடும். இதை நன்கு உணர்ந்த காரணத்தினால்தான் மக்கள்தொகை பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் தமிழகம் முனைப்புடன் செயல்பட்டிருக்கிறது. அதன் விளைவாக 2 மக்களவைத் தொகுதிகளைக்கூட நாம் இழந்து இருக்கிறோம். அதேநேரத்தில் ஆந்திரா, கர்நாடகா, கேரளா, மகாராஷ்டிரா, மேற்கு வங்கம் போன்ற மாநிலங்கள் மக்கள்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தத் தவறியதற்குப் பரிசாக பல கூடுதல் இடங்களை மக்களவைக்குப் பெற்றிருக்கின்றன. இந்நிலையிலேதான் குதிரை நம்மை கீழே தள்ளியதோடு மட்டும் நிற்காமல், குழியையும் பறித்த கதையைப் போல ஏற்கெனவே இருந்த மக்களவை இடங்களைப் பறிகொடுத்த தமிழகத்திற்கு மத்திய அரசு நிதி உதவி வழங்குவதில் வெட்டு விழுந்திருக்கிறது. இதனால் வரும் 5 ஆண்டுகளில் 3000 கோடியைப் பறிகொடுக்கும் பரிதாப நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மட்டும் 512 கோடி ரூபாயை இழக்க

இருக்கிறோம். அதுதவிர பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கும், இலவச மின்சாரத்திற்கும் மற்ற மாநிலங்களைவிட சமூக நீதியின் அடிப்படையில் நாம் கூடுதலாக மானியங்களைக் கொடுத்து வருவதால், நமது நிதிச் சுமை மேலும் அதிகரித்து வருகிறது. இதனை மத்திய அரசுக்கு எடுத்துக்கூறி மாநிலங்களுக்கு நியாயம் வழங்குவதில் ஒரு பொதுக் கருத்தை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்தில் மற்ற மாநிலங்களின் முதல்வர்களுக்கும் நமது முதல்வர் கடிதங்கள் எழுதியிருக்கிறார் என்றும், அதற்கு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெரும்பாலான முதல்வர்களும் மற்றவர்களும் ஆதரவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்றும் பத்திரிகைச் செய்தியிலே பார்த்தேன். அந்த முயற்சி வெற்றிபெற வேண்டும் என்று நானும் விரும்புகிறேன்.

பாராளுமன்றத்திலே பட்ஜெட் விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய, நிதியமைச்சர் திரு. யஷ்வந்த் சின்ஹா ஒன்றை வலியுறுத்தியிருக்கிறார். நாட்டின் நிதி நிலைமை மிக மோசமான நிலையில் இருப்பதைச் சுட்டிக்காட்டிய அவர் அதேபோன்று மாநிலங்களின் நிதி நிலைமை மிக மோசமாக இருப்பதையும், அவற்றைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்காவிட்டால், அழிவு நிச்சயம் என்பதையும் எடுத்துரைத்து எச்சரிக்கை விடுத்து இருக்கிறார். இந்த நிலையைச் சமாளிக்க வழிவகை காணும் பொருட்டு, மாநில நிதியமைச்சர்கள் பங்கேற்கும் கூட்டம் ஒன்று இம்மாத இறுதியில் ஏற்பாடு செய்யப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார். அதைத் தொடர்ந்து, மாநில முதலமைச்சர்கள் கூட்டத்திற்கு பிரதமர் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நமது முதலமைச்சர் மீண்டும் வற்புறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பீகார், உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்கள் கூடுதலான நிதி உதவிகளை மத்திய அரசிடம் கோரி பெற்றுவிடுகின்றன. ஆனால் நமது மாநிலத்தைப் பொறுத்தவரை அத்தகைய முயற்சிகளில் வெற்றி கிட்டியதாகத் தெரியவில்லை. மத்திய அரசு நிதி உதவி அளிக்கும்போது, அவர்கள் வகுக்கும் விதிமுறைகளின்படி நடந்துகொள்ள முடியாது என்று கூறிவிடுவதால், பலவேளைகளில் அந்த நிதி உதவி நின்று விடுகிறது. பாசன மேம்பாட்டிற்காக மத்திய அரசால் வழங்கப்பட்ட நிதியுதவிகளைப் பெறுவதில், அவர்கள் வகுத்த விதிமுறையின்படி திட்டத்தைச் செயல்படுத்த மறுத்துவிட்டதால், கடந்த ஆட்சிக் காலத்தில் அந்த





நிதியைப் பயன்படுத்த முடியாமலேயே போய்விட்டது என்று கூறுகிறார்கள்.

பிற்பகல் 12-35

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோன்று மத்தியில் அமைச்சராக திரு. சி. சுப்பிரமணியம் இருந்தபோது, மத்திய நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட வறட்சி நிவாரண நடவடிக்கைகளில், பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதில் கேள்வி கேட்கப்பட்டு இருந்தன. இதனை ஏற்றுக்கொள்ள மறுத்த அன்றைய முதலமைச்சர் மத்திய அரசுடன் கோபித்துக்கொண்டு, நிதியுதவியே தேவையில்லை என்று கூறி திருப்பியனுப்பி விட்டார்கள். அதேநேரத்திலே, பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த இந்தர் குமார் குஜ்ரால் பிரதமராக இருந்தபோது, அவர்களிடத்திலே அந்தச் சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி, பஞ்சாப் மாநிலத்தினுடைய நிதி நெருக்கடியைக் காட்டி, 1000 கோடி ரூபாய்க்கு மேல் ஒரே தவணையில் அவர்கள் கேட்டார்கள். அதை குஜ்ரால் அவர்களும் கொடுத்து உதவினார்கள். அதனால், அவர் மீண்டும் மக்களவைக்கு அங்கிருந்து போட்டியிட்டபோது, அகாலி தளம் (பாதல் பிரிவு) கட்சி, அவரை எதிர்த்து ஆளை நிறுத்தாமல் வெற்றி பெறுவதற்கு வழிவிட்டது. ஆந்திர மாநிலத்தில்கூட, பி.வி. நரசிம்மராவ் அவர்கள் நந்தியால் மக்களவைத் தொகுதியில் போட்டியிட்டபோது, அங்கேயிருந்த தெலுங்கு தேசக் கட்சித் தலைவர், அவரை எதிர்த்து ஆளை நிறுத்தாமலேயே, அவரே பிரதமராக நீடிக்க வேண்டுமென்று பெருந்தன்மையோடு வழிவிட்டு வரலாறு படைத்தார். அதனுடைய விளைவாக ஆந்திராவில் அவருடைய கட்சி இப்போது ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்து, மத்திய அரசிடம் வந்து பல சிறப்புச் சலுகைகளை மாநில அரசுக்குப் பெற்றுத் தரும் வாய்ப்பு பெருகியிருக்கிறது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரை, அரசு முன்வைக்கும் 3000 கோடி ரூபாய் நிதியுதவி கோரிக்கைக்கு மற்ற மாநிலங்களின் முதல்வர்கள்தான் நேசக்கரம் நீட்டும் நிலை உருவாகியிருக்கிறது. பாராளுமன்றத்திலே உள்ள நம்முடைய உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுபட்டு நின்று உரிமைக்குரல் எழுப்பும் நிலை இன்னும் உருவாகவில்லை. எனவே, தமிழக மக்களின் நலன் கருதியும், மாநிலத்தின் உரிமையை நிலைநாட்டவும், அரசியல் கசப்புணர்வுகளையும், காழ்ப்புணர்ச்சிகளையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு ஒற்றுமையுடன் செயல்படுவதற்கு அனைவரும் முன்வர வேண்டுமென்று அன்புடன் வேண்டுகிறேன்.

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 மே 9

உலகத் தொழிலாளர்கள் எல்லாம் ஒன்றுபடுமாறு அறைகூவல் விடுத்து, மே தின விழாவை இப்போதுதான் நாம் சிறப்பாகக் கொண்டாடியிருக்கிறோம். அதில் ஆளுங்கட்சியும், எதிர்க் கட்சியும் முன்னணிப்பாத்திரம் வகித்திருக்கின்றன. எனவே, உழைக்கும் மக்களுக்கு வேண்டுகோள் விடுவதோடு நின்றுவிடாமல், நாமும் நமது ஒற்றுமையை பேணும் வகையில் ஒன்றுபட்டு பணியாற்றுவோம் என்று மே தின சபதமாக ஏற்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அரசின் தொழிலாளர் கொள்கை குறித்து கொள்கைக் குறிப்பிலே விவரிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி 'தொழில் வளர்ச்சியும், அந்த வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் தொழிலாளியின் வளர்ச்சியும்' என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. நல்ல தொழில் உறவு வளர்வதற்கு ஏற்ற சூழ்நிலைகளை உருவாக்குவது, மாநிலத்தின் தொழில் அமைதியை நிலைநாட்டுவது, தொழிலாளர் நலச் சட்டங்களைச் சீரிய முறையில் அமல்படுத்துவது, எல்லாத் தொழிலாளர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு அளிப்பது, இதுவே இந்த அரசின் கொள்கை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தொழிலாளர்களே மாநிலத்தின் முக்கியமான மற்றும் வலியமையான சக்தி என்பதை இந்த அரசு உணர்ந்திருப்பதால் தொழிலாளர்களின் திறமையை வீணாக்காது என்றும், எந்த வகையிலும் அவ்வாறு வீணாக்கப்படுவதை அனுமதிக்காது என்றும் அழுத்தந்திருத்தமாகக் கூறியிருக்கிறது.

மேலும் தொழிலாளி வர்க்கத்தின் அமைப்பு சாராத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிக அளவில் இருப்பதால், அவர்களுடைய நலனுக்கும் சமூகப் பாதுகாப்புக்கும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் தொழில் தகராறு காரணமாக மட்டும், மூடப்பட்டோ, நீண்ட காலமாக இயங்காமலோ இருக்கும் நிறுவனம் எதுவும் இல்லை என்று கூறப்பட்டுள்ளது. பெரும்பாலான ஆலைகள் நிதி நெருக்கடியாலும், தொழிலில் ஏற்பட்டுள்ள மந்த நிலையினாலும், தொழில் போட்டியினாலும், பங்குதாரர்களிடையே ஏற்பட்ட உட்பூசல் காரணமாகவும் இயங்காமல் இருப்பதால், தொழிலாளர் துறை இதுகுறித்து எவ்வித நடவடிக்கையும் எடுப்பதற்கு இயலாது என்று கூறப்பட்டுள்ளது. ஆலை இயங்குகிற வரையில்தான் தொழிலாளர் துறைக்குப் பொறுப்பு இருக்கிறது. அதுவும் அங்கே எழக்கூடிய தொழிலாளர் தொடர்பான பிரச்சினைகள் குறித்து, பேச்சுவார்த்தை



2002 மே 9] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

நடத்தி, சமரச முயற்சிகளை மேற்கொள்ளும் வகையில் தலையிடலாம். அதற்கு மேல் அந்தத் துறைக்குப் பொறுப்பு இல்லை. மூடப்பட்டுள்ள தொழிற்சாலையைத் திறப்பதற்கு என்ன நடவடிக்கை என்பது எங்குமே கூறப்படவில்லை. பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு முழுமையான நிவாரணமும் இல்லை. எல்லாத் தொழிற்சாலைகளும் அதில் சேர்க்கப்படவும் இல்லை.

அதேபோன்று தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்துவதற்கென்றே இந்தத் துறையில் ஏராளமான அதிகாரிகள் இருக்கிறார்கள். இருந்தும் பல சட்டங்கள் அமலாக்கப்படுவதில்லை. பல பெரிய தொழிற்சாலைகள்கூட, தொழிலாளர்களை தற்காலிக அடிப்படையிலே, ஒப்பந்த அடிப்படையிலே தேவைக்கேற்ப அமர்த்திக் கொள்வதும் பிறகு நீக்கி விடுவதும் என்ற கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றன. Hire and fire. Casual தொழிலாளர்களாக தற்காலிகமாக வேலைக்கு அமர்த்தப்படுபவர்கள், பல ஆண்டுகளாகியும் நிரந்தரமாக்கப்படுவதில்லை. எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது கொண்டு வந்த Conferment of Permanent Status Act- எல்லா இடங்களிலும் அமலுக்கு வரவில்லை. எல்லா வகையான தொழிலாளர்களுக்கும் போனஸ் வழங்கப்படவேண்டுமென்று சட்டத்தில் கூறப்பட்டிருந்தாலும், சென்னைப் பகுதிகளில் உள்ள பல பெரிய தொழிற்சாலைகளில்கூட அவ்வாறு வழங்கப்படுவதில்லை. தொழிற்சாலை ஆய்வாளர்களும் தங்களது கடமைகளைச் செய்வதில்லை. தொழிற் சங்கங்களும் செயலற்றுக் கிடக்கின்றன. தொழிற் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவதற்குக்கூட இங்கு சட்டமில்லை. இருக்கின்ற சட்டங்களுக்கும் பற்கள் இல்லை. பற்களைப் பெற்றுள்ள சட்டங்களைப் பயன்படுத்துவதில்லை. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். மற்ற மாநிலங்களில் இருப்பதைப்போல, மேற்கு வங்கம், குஜராத் மகாராஷ்டிரா, கேரளா, மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் உள்ள சட்டங்களை இங்கே கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

வேலைவாய்ப்புகளைப் பொறுத்தவரையில், என்றும் இல்லாத ஒரு புதிய நிலை தோன்றியிருக்கிறது. ஆண்டிற்கு 2 சதவிகிதம் என்ற அடிப்படையில், ஐந்தாண்டுகளில் 10 சதவிகித அரசுப் பணியாளர்களை வீட்டிற்கு அனுப்புவது என்று மத்திய அரசு முடிவு செய்தது. அவ்வாறு 42 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் விடுவிக்கப்படுவார்கள்

என்று அறிவித்தது. மாநிலத்தைப் பொறுத்தவரையில், 30 சதவிகிதம் பேர் குறைக்கப்படுவார்கள் என்று கூறப்பட்டது. ஏற்கெனவே தற்காலிகப் பணியாளர்களாக வைக்கப்பட்டுள்ள அரசுப் பணியாளர்களே நிரந்தரம் செய்யப்படாத நிலையில், எல்லாத் துறைகளிலும் இருந்து வருகிறார்கள். இந்நிலையில் 2001ஆம் ஆண்டில் மட்டும் 5 இலட்சத்து, 59 ஆயிரத்து, 589 பேர் வேலைவாய்ப்பிற்காக பதிவு செய்திருக்கிறார்கள். அதற்கு முன்னர் பதிவு செய்து, வேலையை எதிர்பார்த்து காத்து இருப்பவர்களின் எண்ணிக்கை 49.23 இலட்சம் என்றும், பெண்கள் மட்டும் இதில் 17.7 இலட்சம் என்றும் கூறப்பட்டுள்ளது. அரசுப் பணிகளில் சேர்வதற்கு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாகத்தான் வரவேண்டுமென்று கட்டாயம் இல்லை என்று உச்ச நீதிமன்றமே கூறிவிட்டது. எனவே, வேலைவாய்ப்புகளை அதிகமாக உருவாக்கி அனைவருக்கும் வேலை கொடுக்க வழி காண வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் முதல் குற்றவாளியாக இருக்கும் பிரபாகரனைக் கைது செய்து இந்தியாவிற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அவையில் நாம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோம். இன்றையதினம் பத்திரிகையிலேகூட செய்தி வந்திருக்கிறது; நல்ல செய்தியாக வந்திருக்கிறது. பிரபாகரனை இந்தியாவிற்கு அனுப்புவதற்கு இலங்கை பரிசீலனை செய்கிறது என்று வெளியுறவுத் துறை இணை அமைச்சர் உமர் அப்துல்லா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் நாம் நிறைவேற்றியிருக்கின்ற தீர்மானத்திற்குப் போட்டியாக இலங்கையிலுள்ள வவுனியாவில் எல்.டி.டி.ஈ.-யின் ஆதரவாளர்கள் மே தினக் கூட்டம் நடத்தியிருக்கிறார்கள். அந்த மே தினக் கூட்டத்திலே இந்தத் தீர்மானத்திற்குப் போட்டியாகவும், நியாயத்திற்கு விரோதமாகவும், ஆணவத்துடனும், வவுனியா மே தினக் கூட்டத்திலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தச் செய்தி 'இந்து' பத்திரிகையிலே வெளியாகியிருக்கிறது. இலங்கைக்கு இராஜீவ் காந்தி அவர்களால் அனுப்பிவைக்கப்பட்ட இந்திய அமைதி காக்கும் படைமீது பல புகார்களைக் கூறி, அதற்காக தமிழகத்தின் முதலமைச்சரை இலங்கைக்குக் கொண்டுவந்து, யுத்தக் குற்றவாளியாக விசாரிக்க வேண்டுமென்று பேசியிருக்கிறார்கள். அதை அந்தக் கூட்டத்திலிருந்தவர்கள் ஆரவாரத்துடன் வரவேற்றிருக்கிறார்கள். இந்தச் செயல் அநாகரிகமானது; அக்கிரமமானது; எல்லை மீறியது என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இருக்க முடியாது.





இந்திய மண்ணில் பல படுகொலைகளை நிகழ்த்திவிட்டு, பாகிஸ்தானில் புகுந்துள்ள பல பயங்கரவாதிகளுக்கு அங்குள்ள சர்வாதிகார அரசு அடைக்கலம் கொடுக்கிறது. அந்தக் குற்றவாளிகளை நம்மிடம் ஒப்படைக்க வேண்டுமென்று நாம் கூறினால் — நம்முடைய உள் துறை அமைச்சர் லால் கிருஷ்ண அத்வானி கூறியதற்கு — இதேபோல, பல குற்றங்களை பாகிஸ்தானிலே செய்துவிட்டு, இந்தியாவிற்கு ஓடிவந்துவிட்டால், பயங்கரவாதி அவர்கள், எனவே அவர்களை எங்களிடத்திலே ஒப்படைக்க வேண்டுமென்று பாகிஸ்தான் நம்மிடத்திலே கேட்கிறது. இப்படிப்பட்ட ஏட்டிக்குப் போட்டியான நிலையைத்தான் இலங்கையில் உள்ள வவுனியா நியாயவாதிகளும் மேற்கொண்டு இருக்கிறார்கள். மக்களை மதிப்பதிலும், ஜனநாயகத்தைப் போற்றுவதிலும் மாற்றுக் கருத்து கொண்டவர்களை பெருந்தன்மையாக அணுகுவதிலும் பிரபாகரனும், பர்வேஷ் முஷாரஃப்பும் ஒரே நிலையில்தான் இருக்கிறார்கள். ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கும் வகையில் பாகிஸ்தான் அண்மையில் நடத்திய கருத்து வாக்கெடுப்பு நாடகத்தின் மூலம் ஒரு நகைப்பிற்குரிய கதாபாத்திரமாகவும் அவர் உருவெடுத்து இருக்கிறார். அந்தக் கருத்துக் கணிப்பு நாடகத்தை அமெரிக்க நாட்டின் முன்னணிப் பத்திரிகைகள்கூட ஏற்றுக்கொள்ளவில்லை. பாகிஸ்தான் ஏற்கெனவே, காமென் வெல்த் போன்ற அமைப்புகளிலிருந்து நீக்கி வைக்கப்பட்டிருக்கிறது. எல்.டி.டி.ஈ.-க்கு எதிராக உலகத்தின் பல நாடுகளிலும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இலங்கையில் தடையை நீக்கினாலும், நாங்கள் நீக்க மாட்டோம் என்று அமெரிக்கா திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறது.

இந்த அவையைப் பொறுத்தவரையிலே, இந்த அவையிலே நாம் நிறைவேற்றியிருக்கின்ற தீர்மானத்தைக் குறை கூறுவதற்கோ, இந்தத் தீர்மானத்திற்கு எதிராக, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற காரணமாக இருந்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறுவதற்கோ அல்லது இந்தத் தீர்மானத்தை முன்னாலே நின்று நிறைவேற்றியவர் முதலமைச்சர்; எனவே அவரை யுத்தக் குற்றவாளியாக இலங்கைக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்கோ யாருக்கும் எந்தவிதமான அதிகாரமும் கிடையாது. நம்முடைய நாட்டில், உள்நாட்டு விவகாரத்தில் அங்கே இருக்கின்றவர்கள் தலையிடுவதற்கு இலங்கை

225168.
சென்னை-600 008

அரசு எப்படி அனுமதிக்கிறது என்பதை நிச்சயமாக நம்முடைய வெளியுறவுத் துறையின் மூலமாக நாம் கேட்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் முதலமைச்சருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்று தீர்மானங்கள் நிறைவேற்றுவதை எந்தக் காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அதேபோல சட்டத்தின் நகல் எரிப்பு, அது ஒரு நாடகம். காலையிலே சகோதரி யசோதாகூட அந்தப் பிரச்சினையை இங்கே எழுப்பினார்கள். இந்த நாடகம், நாம் சட்டத்தை நிறைவேற்றிய மறுதினம், சட்டத்தை நிறைவேற்றிய நாளோ அல்லது மறுநாளோ, இப்படி ஓர் அறிவிப்பு வெளியிட்டிருந்தால் அது உடனடியாக, spontaneous action என்று எடுத்துக்கொள்ளலாம். அது ஓர் அனிச்சைச் செயல், உடனடியாக அவருக்கு வந்திருக்கிறது; எனவே எரிக்கிறார் என்று எடுத்துக்கொள்ளலாம். 15, 20 நாட்கள் கழித்து, தீர்மானம் நிறைவேற்றி 20 நாட்கள் கழித்து, நிதானமாக இந்த அறிவிப்பு வருகிறது. எனவே எங்கேயிருந்தாவது உத்தரவு வந்ததா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன். எங்கேயாவது இருந்து வந்த உத்தரவை அவர் நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக இதைச் செய்கிறாரா என்பது நமக்குத் தெரிய வேண்டும். அதுமட்டுமல்ல. அவரைப்பற்றி பல செய்திகள் இன்றையதினம் நாட்டிலே வந்துகொண்டிருக்கின்றன. பத்திரிகைகளிலே கூட வந்திருக்கிறது. 108 நாட்கள் நாடகம் ஒன்று நடந்தது. ஆடி அமாவாசை அன்று அரங்கேறிய அந்த ராஜ்குமார் நாடகத்தில் — 108 நாள் அந்த நாடகம் நடந்தது. அந்த நாடகத்திலே — பல கோடி ரூபாய் கை மாறியதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அப்படி வந்த பல கோடி ரூபாய்களிலே சில கோடி ரூபாய்களை எல்.டி.டி.ஈ.-க்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று அன்றையதினம் வீரப்பனோடு இருந்த தீவிரவாதிகள் சொன்னதாகவும், அதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. இந்தச் செய்திகள் எந்த அளவிற்கு உண்மை என்பதை முதலமைச்சரவர்கள் அவைக்குத் தெரிவிக்க வேண்டும். அதுமட்டுமல்ல. இந்தச் செய்திகளினாலே கைது செய்யப்படுவோம் என்று அஞ்சி, அதற்காகத்தான் இந்தச் சட்டமன்றத் தீர்மான எரிப்பு நாடகம் ஆடப்படுகிறதா என்பதையும் முதலமைச்சர் அவர்கள் விசாரித்து தெளிவுபடுத்திட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.





பிற்பகல் 12-45

எம்.ஜி.ஆர்.-ஐப் பொறுத்தவரையில் சட்டங்களை அமல்படுத்துவதிலே மிகக் கண்டிப்பாக இருந்திருக்கிறார். அதனால்தான் திருமதி யசோதா அவர்கள் சொன்னதைப்போல, இங்கே சில முன்னாள் எம்.எல்.ஏ.-க்கள் அரசியல் சட்டத்தை எரித்தபோது, அவர்களுடைய எம்.எல்.ஏ. பதவியைப் பறித்தார்கள். அதேபோல கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழுக்காக வாழ்கிறோம் என்று கூறிக்கொள்பவர்கள் எல்லாம், தங்களுக்காக வாழ்வதைத்தான் கண்கூடாகக் காண்கிறோம். தமிழினத் தலைவராக தங்களைக் காட்டிக் கொள்வதில் பலரிடையே போட்டி முளைத்திருக்கிறது. அதன் விளைவாக இந்தப் போராட்டம் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவிக்க தயக்கம் காட்டியவர்கள் அதன் நகலுக்கு தீயிட்டுக் கொளுத்தும் தேச விரோதச் செயலைக் கண்டிப்பதிலாவது வெளிப்படையாக இருக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் ஜீவாதாரமான தொழிலாக விவசாயம்தான் இருந்துவருகிறது. 75 சதவிகிதத்திற்கு மேலானவர்கள் விவசாயத்திலேதான் ஈடுபட்டிருக்கிறார்கள். விவசாயத்தை நம்பித்தான் இருக்கிறார்கள். எனவேதான், விவசாயத்திற்கு முக்கியத்துவம் தருவோம் என்று நம்முடைய தமிழக அரசும் அறிவித்திருக்கிறது. ஆனால், விவசாயிகள் மத்தியிலே இன்றையதினம் மகிழ்ச்சி இருக்கிறதா என்று கேட்டால் நிச்சயமாக மகிழ்ச்சி இல்லை. மகிழ்ச்சி இல்லை என்பது மட்டுமல்ல அதிருப்தியோடு இருக்கிறார்கள். காவிரி-டெல்டா பகுதியிலுள்ள விவசாயிகளுடைய நெல் முழுவதுமாகக் கொள்முதல் செய்யப்படவில்லை என்று அதிருப்தியாக இருக்கிறார்கள். அதிலே கடைமடைப் பகுதிக்கு கடைசியாக தண்ணீர் போன காரணத்தினாலே அறுவடை ஆரம்பிக்கின்ற நேரத்திலே கொள்முதலை நிறுத்திவிட்டார்கள் என்று இன்னும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இன்று காலையிலேகூட கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மாதம் ஒன்றிற்கு நமக்கு டெல்லி ஒரு இலட்சம் டன் அரிசி கொடுக்கிறது. அந்த அரிசியிலே கொஞ்சம் குறைத்துக் கொண்டு, அதற்குக் கொடுக்கிற மானியத் தொகையை நமக்கு கொடுக்கச் சொல்லிக் கேட்டு வாங்கிக்கொண்டு, அந்த மானியத் தொகையைப் பயன்படுத்தி நெல்லை கொள்முதல் செய்யலாம். அது சாத்தியம் என்பதுதான் என்னுடைய

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 மே 9

கருத்து. நிச்சயமாகப் பரிசீலித்துப் பாருங்கள். ஓரளவிற்கு இன்னும் கொஞ்சம் அதிகமாக கொள்முதல் செய்ய முடியும். நம்முடைய விவசாயிகள் நெல்லை எல்லாம் நாமே கொள்முதல் செய்கிறோம் என்ற நிலை ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல கரும்பு விவசாயிகள் ஆயிரம் ரூபாய் ஒரு டன்னுக்கு வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். கடந்த கால ஆட்சி ஆயிரம் ரூபாய் கொடுக்கவில்லை. இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு ஆயிரம் ரூபாய் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள். இன்னமும் அந்தக் கோரிக்கையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. கடந்தகால ஆட்சியின்போது இருந்த பாக்கித்தொகை இன்று வரை அவர்களுக்கு வரவில்லை. அந்தப் பணம் நிலுவையிலே இருக்கிறது. எனவே, அதைப் பட்டுவாடா செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அந்தப் பணம் முழுவதையும் பட்டுவாடா செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல..

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விவசாயிகளுக்கு பணம் கொடுக்கவில்லையென்று மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர், மாநிலத்திலே இருக்கின்ற தேசிய கூட்டுறவு இணை வாரியத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டு, கடனாகப் பெற்று, அந்தக் கடந்தகால ஆட்சியினுடைய கரும்பு விவசாயிகளுக்கும் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** கூட்டுறவு ஆலைகளில் கொடுக்கவில்லையெனறு நான் சொல்லவில்லை. பொதுவாக தனியார் ஆலைகள் நிறைய இருக்கின்றன. தனியார் ஆலைகளிலேதான் நிறைய பேருக்கு.....

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் ஆலைகளுக்கும் கொடுப்பதற்காக நேரடியாக நாங்கள், அரசு, சர்க்கரைத் துறையினுடைய ஆணையர் அலுவலகத்தில் கூட்டத்தைக் கூட்டி அவர்களுக்கு இந்த மாத இறுதிக்குள் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறோம் என்பதை அன்போடு



2002 மே 9] [திரு. செ.ம. வேலுசாமி]

தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்களுக்கு, தனியார் ஆலையைப் பொறுத்தவரையில், அவர்கள் ஸ்டே வாங்கி இருப்பது உங்களுக்கே தெரியும் என்று நினைக்கின்றேன். ஆயிரம் ரூபாயைப் பொறுத்தவரையில் அவர்கள் வாங்கி இருக்கிறார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அந்தத் தடையாணையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தடையாணை நீக்கப்பட்ட நிலையில் அனைவருக்கும் பணம் பட்டுவாடா செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தேங்காய். தேங்காய் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்தது. பிறகு மீண்டும் மீண்டும் மத்திய அரசிடத்திலே பேசியதற்குப் பிறகு, குறிப்பாக தலைவர் மூப்பனார் அவர்கள் ஜனாதிபதியை சந்திப்பதற்காக வந்தார்கள். என்னோடு வந்தார்கள். கே.ஆர். நாராயணனை முதலில் பார்த்தோம். பிறகு அன்றையதினம் வேளாண் துறை அமைச்சரைப் பார்த்தோம். அதனுடைய விளைவாக ரூபாய் 32.50 என்று முதலிலே சொன்னார்கள். பிறகு 33 ரூபாய்க்கு கொள்முதல் செய்வதாக அறிவித்தார்கள். கொள்முதலும் ஓரளவிற்கு நடந்தது. ஆனால் இந்த ஆண்டு நடைபெற்ற கொள்முதல் நிச்சயமாக திருப்திகரமாகச் செய்யப்படவில்லை என்றுதான் நான் கருதுகின்றேன். ஏனென்றால் எனக்கு வந்திருக்கின்ற கணக்கின்படியே பார்த்தால்கூட, இந்த ஆண்டு மொத்தமாகச் செய்யப்பட்ட கொள்முதல் என்பது 2360 டன்தான் இதனுடைய மதிப்பு 8 கோடி ரூபாய். இதிலே, ஏற்கெனவே ரூ.6.60 கோடி பணம் பட்டுவாடா செய்தாகிவிட்டது. மீதி ரூ.1.40 கோடி இதுவரைக்கும் வரவில்லை. ஆனால் இப்பொழுது பணம் வந்துவிட்டதாக அறிகிறேன். இதற்கான காசோலையும் வந்துவிட்டது என்று சொல்கிறார்கள். அந்தப் பணத்தை உடனடியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதோடு — இப்பொழுது கொள்முதல் முழுவதுமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. — நிறுத்தப்பட்ட கொள்முதலை மீண்டும் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்றால், இது சீசன். ஏப்ரல், மே, ஜூன், இந்த மாதங்களிலே ஏராளமாக காய் வருகின்ற நேரம். விவசாயிகள் தலையிலேயடித்து வியாபாரிகள் கொள்முதல் செய்துவிடுவார்கள். எனவே அதற்கு இடம் கொடுக்காமல் நீங்கள் மீண்டும் மத்திய அரசிடத்திலே வலியுறுத்தி கொள்முதல் செய்வதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 மே 9

பிற்பகல் 12-50

அதேபோல பனை. பல பகுதிகளிலே பனை மரங்கள் ஏராளமாக இருக்கின்றன. பனை ஏறும் தொழிலாளர்கள் பிரச்சினையெல்லாம் இருக்கிறது. அதேபோல இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி தொகுதி முழுவதும் பனை மரங்கள் அதிகமாக உள்ளன. பனை மரத்திலேயிருந்து நுங்கு பதப்படுத்தும் தொழிற்சாலை, பதநீரிலேயிருந்து பலவகையான தின்பண்டங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முயற்சிக்க வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்.

தேயிலையைப் பொறுத்தவரையில், இந்த அவையிலே பலமுறை பேசியிருக்கிறோம். நானும் பலமுறை பேசியிருக்கிறேன். நான் சென்ற ஆண்டு இந்த அவையிலே, அரசே கொள்முதல் செய்ய வேண்டுமென்ற கோரிக்கை வைத்து, அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு கொள்முதல் செய்ததற்கு மிக்க மகிழ்ச்சி. ஆனால் நான் நிதிநிலை அறிக்கையிலே பொது விவாதத்தின்போது குறிப்பிட்டது, அரசு கொள்முதல் செய்வதற்கு கொடுக்கின்ற தொகை நிச்சயம் போதாது. மிகக் குறைந்த விலைக்கு, மற்ற வியாபாரிகள் வாங்குகின்ற விலைக்கு வாங்குகிறார்கள். 27 ரூபாயிலேயிருந்து, 39 ரூபாய்க்குள் வாங்குகிறார்கள். 27 ரூபாய், 39 ரூபாய்க்கு வாங்கினால், அதிக பட்சமாக விவசாயிகளுக்கு 6½ ரூபாய் கொடுக்கலாம். அதுவே கஷ்டம். 39 ரூபாய்க்கு அவ்வளவுதான் கொடுக்க முடியும். ஏனென்றால், ஃபேக்டரியிலே 12 ரூபாய் எடுத்துக் கொள்வார்கள். 6½ ரூபாய்தான் கொடுக்க முடியும். அதேபோல 60 ரூபாய்க்கு நீங்கள் வாங்குவீர்களேயானால், ஓரளவிற்கு நல்ல விலை கிடைக்கும். 60 ரூபாய்க்காவது நீங்கள் வாங்க வேண்டும். வாங்குவதோடு இல்லாமல் அவர்களுடைய துயரைத் துடைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். குறிப்பாக, பாதுகாப்புத் துறை அதை வாங்குவதற்கு மத்திய சர்க்காரிடத்திலே வலியுறுத்த வேண்டும். முன்பு பிரணாப் முகர்ஜி, வர்த்தகத் துறை அமைச்சராக இருந்தபோது, அவர் அதற்கு ஏற்பாடு செய்தார். அதுமட்டுமல்லாமல், அன்றையதினம் அவர் தேயிலை வியாபாரிகளைக் கூப்பிட்டு கொஞ்சம் கண்டிப்பு காட்டியதினால் விலை ஏறியது. அதேபோல இப்பொழுது மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு மாநில அரசு முன்நின்று, அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக விவசாயத்தினுடைய முக்கிய உப தொழிலாக கருதப்படுவது கோழி வளர்ப்பு. இன்று கோழி வளர்ப்பிலே பல



2002 மே 9] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

கஷ்டங்கள். பத்திரிகைகளிலே சிலர் தெரியாமல் எதையோ எழுதிவிடுகிறார்கள். புலாலே சாப்பிடக்கூடாது என்பது ஒன்று. புலால் சாப்பிடக்கூடாது, மாமிசம் உண்ணக்கூடாது என்று தாராளமாக பிரச்சாரம் செய்வதை யாரும் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் கோழி சாப்பிட்டால் ஏதோ வியாதிகள் வந்துவிடும் என்று பத்திரிகையிலே எழுதியிருக்கின்ற காரணத்தினாலே, திடீர் என்று கோழி விலை வீழ்ச்சி அடைந்தது. இப்பொழுது அந்த நிலை மாறி, கோழி ஓரளவிற்கு விற்றுக்கொண்டிருக்கிறது.

முட்டை விலையில் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. 10 நாட்களில் 3 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று அவர்கள் கணக்கு சொல்கிறார்கள். எனவே இது ஓர் உப தொழில். விவசாயிகளுக்குத் தண்ணீர் இல்லாத தோட்டங்களில், தண்ணீர் இல்லாத காடுகளில், தண்ணீர் இல்லாத பகுதிகளில் இந்தக் கோழி வளர்ப்பு என்பது மிக முக்கியமான தொழிலாக இருக்கின்றது. எனவே, சத்துணவுத் திட்டத்திலே நிறுத்தி வைத்து இருக்கின்ற இந்த முட்டையை மீண்டும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளினுடைய நலனையும் கருத்திலே கொண்டு, குழந்தைகளுடைய நலனையும் கருத்திலே கொண்டு, இந்த முட்டையை மீண்டும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கைத்தறி நெசவாளர்கள் பிரச்சினையைப் பொறுத்தவரைக்கும், சிட்டா நூலைப்பற்றி ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் நேற்று குறிப்பிட்டார்கள். சிட்டா நூலுக்கு 8% கலால் வரி போட்டிருக்கிறார்கள். உபரி வரியாக 1.2% மொத்தம் 9.2% இந்த சிட்டா நூலுக்கு வருகிறது. இங்கே மாநில அரசு 2% வரி போட்டிருக்கிறது. மொத்தம் 11.2% வரி விதிக்கப்பட்டிருக்கிறது. விசைத்தறியாளர்கள் சார்பிலே கோரிக்கை வைத்த உடனே, நான் பேசிய உடனேயே, மறுநாளே முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள். மின் கட்டணத்தை உடனே குறைத்தார்கள். அதற்காக மீண்டும் அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். விசைத்தறியாளர்கள் விஷயத்திலே நீங்கள் காட்டிய அதே பரிவை, இந்த விஷயத்திலேயும் காட்ட வேண்டும். அந்த 2% வரியைத் திரும்பப் பெற்றுக்கொள்வதோடு, மத்திய சர்க்காரிடத்திலே வலியுறுத்திப் பேசி, இந்த நூல் கைத்தறிக்குச் செல்லுகிறது, கைத்தறி நெசவாளர்கள் வாழ வேண்டுமென்று சொன்னால், அந்த நூல் குறைந்த விலைக்குக் கிடைக்க வேண்டும்.

எனவே அந்த 9.2% வரியை நீக்குவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 6 உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** முடித்துவிடுகிறேன். முடித்துவிடுகிறேன். வேகமாக முடித்துவிடுகிறேன். இன்னும் 7, 8 நிமிடங்களிலே முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) நான் ஒன்றும் வீணாகப் பேசவில்லை. நான் பொதுவான பிரச்சினையைத்தான் பேசிக்கொண்டு இருக்கிறேன். அதேபோல பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராட்ட அறிவிப்பு கொடுத்து இருக்கிறார்கள். 3 இலட்சம் தொழிலாளர்கள் இருப்பதாக அவர்கள் சொல்லுகிறார்கள். இந்த 3 இலட்சம் தொழிலாளர்களுக்கு சம்பள நிர்ணயம் செய்வது உட்பட பல்வேறு கோரிக்கைகள் வைத்து இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களை அழைத்துப்பேசி, பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

பீடித் தொழிலைப் பொறுத்தவரையில், பிரச்சினை இருக்கிறது. பொது இடங்களில் புகை பிடிக்கக்கூடாது என்று தடை இருக்கின்ற காரணத்தால், பீடித் தொழில் மிகவும் நசிந்து வருகிறது என்று சொல்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் உடனடியாக விளக்கம் கொடுத்தாலும்கூட, பீடி விற்பனை குறைந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். இதற்கு உடனடியாக ஏதாவது நிவாரணம் கொடுக்க வேண்டும். சீனாவில் இதேமாதிரி புகையிலைக்கு ஒரு பிரச்சினை வந்தது. சீனாவிலே ஏராளமான புகையிலை விளைந்துகொண்டிருந்தது, இன்று அந்த மார்க்கெட் திறந்துவிடப்பட்டதற்குப் பின்னாலே வெளிநாடுகளிலிருந்து புகையிலை வந்ததற்குப் பின்னால், சீனாவில் உள்ளூர் புகையிலைக்கு மார்க்கெட் இல்லாமல் போய்விட்டது. யாரும் சீனா புகையிலையை வாங்குவதே இல்லை. அந்த நிலை வந்துவிட்டது. அதனால் அந்தப் பகுதிகளில் எல்லாம் மாற்று ஏற்பாட்டை இன்றையதினம் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு சீனாவில் ஏராளமாக மலர்கள் விளைவிக்கிறார்கள். அதேபோல பீடித் தொழிலுக்கு மாற்றுத் தொழில் இங்கே வருகின்றவரை, பீடித் தொழிலைப் பாதுகாத்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.





அதையடுத்து இன்றைக்குப் பேசப்படுவது உப்பு. தந்திக்கு மேல் தந்தி எனக்கு வந்துகொண்டிருக்கிறது. உப்பின் விலை வீழ்ச்சியடைந்து இருக்கிறது. உப்பளங்களில் உற்பத்தியாகும் உப்பு அப்படியே இருக்கிறது. இதற்குப் பல காரணங்கள். அதில் ஒன்று, இரயில் சரக்குக் கட்டணம் 130 சதவீதம் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அது மத்திய சர்க்கார் செய்ய வேண்டிய வேலை. நம்முடைய வேலை இல்லை. என்றாலும்கூட, மத்திய சர்க்காரிடத்திலே இதைச் சொல்ல வேண்டும். வேதாரண்யத்தில் கிடைக்கிற உப்பு, தமிழ்நாட்டில் தூத்துக்குடியில் உற்பத்தியாகின்ற உப்பு வடநாட்டுக்குப் போக வேண்டும். அப்போதுதான் நமக்கு மார்க்கெட் கிடைக்கும். இல்லாவிட்டால் நமக்கு மார்க்கெட் கிடையாது. அதற்கு 130 சதவீதம் அதிகமான சரக்குக் கட்டணம் என்று சொன்னால், நிச்சயமாக அது கட்டுப்படியாகாது. எனவே உப்புக்குப் போடப்பட்டுள்ள சரக்குக் கட்டணம் குறைக்கப்பட வேண்டும். அதுவும் அத்தியாவசியப் பண்டம் என்ற முறையில் அது குறைக்கப்பட வேண்டும். இல்லையென்றால், இன்னொரு உப்பு சத்தியாகிரகம்தான் வரும் போல் இருக்கிறது. அதிலே பார்த்தால் ஒரு பக்கத்திலே தினசரி 'தாண்டி உப்பு சாப்பிடுங்கள், தாண்டி உப்பு சாப்பிடுங்கள்' என்று டி.வி.யில் விளம்பரம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த நிலைக்கு ஒரு மார்க்கெட் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீப்பெட்டித் தொழில் இன்றையதினம் நெருக்கடியில் இருக்கிறது. அதற்குக் காரணம் அதற்கான பொட்டாசியம் குளோரைடு என்ற மூலப்பொருள் கிடைப்பதில் சிரமம் இருக்கிறது. தேவையான மூலப்பொருள் கிடைப்பதில்லை. ஆகவே அதிகப்படியான விலை கொடுத்து அவர்கள் வாங்க வேண்டியிருக்கிறது. அதில் இறக்குமதிக்கும் வரி போடுகிறார்கள் என்று அவர்கள் இன்றையதினம் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். மத்தியில் இருக்கிற நம்முடைய நிதியமைச்சர் யஷ்வந்த் சின்ஹா அவர்களைச் சந்தித்துவிட்டு வந்திருக்கிறார்கள். கையினால் செய்யப்பட்ட தீப்பெட்டிக்கு பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மத்திய அரசுக்கு நாமும் அதை வலியுறுத்திச் சொல்ல வேண்டும். இத்தொழில் பெரிய தொழிலாக, தமிழ்நாட்டில் சில பகுதிகளில், சிவகாசி போன்ற மற்ற பகுதிகளில் இருக்கிறது. எனவே அதற்கு ஒரு பரிகாரம் காண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 மே 9

மத்திய அரசைப் பொறுத்தவரையில் மத்திய அரசு ஊழியர்களுடைய ஓய்வு வயது வரம்பை 58-லிருந்து 60 ஆக உயர்த்தி இருக்கிறார்கள். இங்கே அரசு ஊழியர்களுடைய வயதைக் குறைக்கப்போகிறார்கள் என்ற பேச்சு அடிபடுகிறது. விருப்ப ஓய்வு என்ற பெயரால் கட்டாய ஓய்வுக்கு திட்டமிடப்படுகிறது என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே தலைமைச் செயலகத்திலேயும், மற்ற துறைத் தலைமை அலுவலகங்களிலேயும், ஊழியர்கள் எண்ணிக்கையில் பாதி பேர் தற்காலிக ஊழியர்களாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில், இருக்கின்ற ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பும் திட்டத்தைக் கைவிட வேண்டும். அரசு ஊழியர்கள் மொத்தம் 12,61,006 பேர் இருக்கிறார்கள் என்றால், அதில் நிரந்தரப் பணியாளர்கள் 6,65,596 பேர்தான். மீதி தற்காலிகமாக இருக்கும் ஊழியர்கள், அரசு அலுவலர்கள் எண்ணிக்கை 5,95,410. இந்தத் தற்காலிகப் பணியாளர்களை நிரந்தரமாக்குவதற்கு என்ன வழி என்று பார்க்க வேண்டிய நேரத்தில், இருப்பவர்களை வீட்டுக்கு அனுப்ப முயற்சிப்பது எப்படிச் சரியாக இருக்க முடியும்? மத்திய அரசிடமிருந்து நிதியைக் கோரிப் பெற்றாவது இவர்களை வேலையில் நீட்டிக்கச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பீகார் அரசு இந்த ஆண்டு சிறப்பு நிதியாக 800 கோடி ரூபாய் பெற்றிருக்கிறது. நாமும் இதுபோல நிதி பெற முயற்சி செய்ய வேண்டும். அதுமட்டுமல்ல. மத்திய அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில், மத்திய அரசு ஜனவரி முதல் 4 சதவீதம் பஞ்சப்படியாகக் கொடுத்திருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் அது இன்றுவரை கொடுக்கப்படவில்லை என்று நினைக்கிறேன். எனவே அந்த 4 சதவீத பஞ்சப்படியைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

நமது அரசு ஊழியர்கள் 72,000 பேரை வீட்டுக்கு அனுப்ப பட்டியல் தயாரிக்கப்பட்டு இருப்பதாகப் பரவலாகப் பேசப்படுகிறது. அவர்களின் ஓய்வு காலப் பணித் தொகைகள் முழுவதும் வழங்காமல் பாதி வழங்கி, மறுபாதியை 5 ஆண்டு காலப் பத்திரமாக வழங்க முடிவு செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அது வெறும் வதந்தியாகவே இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். கடன் தொல்லை, பிள்ளைகள் படிப்பு, பிள்ளைகள் திருமணம், ஆசைப்படும் பொருட்களை வாங்குதல் போன்றவற்றுக்கே முதல் கட்டமாக அவர்கள் வாங்கும் பணம் செலவாகிவிடும். அதற்குப் பிறகு என்ன நடக்கும் என்ற நிச்சயமற்ற நிலைமையை ஏற்படுத்தக்கூடாது கண்ணைக்



2002 மே 9] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

கொடுத்தவனே பறித்துக் கொண்டாண்டி என்ற சோக கீதம் பாடும் நிலைக்கு அவர்களைத் தள்ளிவிட வேண்டாம். இருப்பவர்களை எல்லாம் விருப்பத்திற்கு விரோதமாக வீட்டிற்கு அனுப்பிவிட்டு நாம் மட்டும் இங்கே இருப்பதால் என்ன இலாபம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

அதைப்போல அரசுக் கல்லூரிகளே வேண்டாம் என்று அரசே ஒரு முடிவிற்கு .வருகிறது. அரசுப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு நிறுவனங்கள் என்று இப்படி அனைத்தையுமே கைவிட்டுவிட்டு, அரசு ஒரு துறையை மட்டும் வைத்திருந்தால் அதற்கும் பெருமை இருக்குமா என்று எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன். கல்லூரிகளைப் பல்கலைக் கழகங்களின் அங்கமாக இணைப்பதை கல்லூரி ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆசிரியர்களும் மாணவர்களும் பாதிப்புக்குள்ளாவார்கள் என்று அஞ்சுகிறார்கள். அச்சம் தவிர் என்று சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்களையே அச்சத்தில் ஆழ்த்துவதில் என்ன இலாபம்? ....(குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசும்போது அரசானது, கல்லூரிகளைப் பல்கலைக்கழகத்தில் சேர்ப்பதன் மூலமாக, ஆசிரியர்களும் மாணவர்களும் அச்சத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இதில் அச்சப்படுவதற்கு ஒன்றும் கிடையாது. ஏனென்றால், கல்லூரிகளை பல்கலைக்கழகத்தில் சேர்க்கும்போது, அவர்களுக்கு அதிகமான சலுகைகள் வர வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் அரசுக் கல்லூரியில் இருந்தால், இப்போது உள்ளபடி 58 வயதில் ஓய்வு பெற வேண்டும் என்று இருந்தால், பல்கலைக்கழகத்திற்குப் போனால் அவர்கள் 60 வயது வரை செயல்படலாம். பிறகு அவர்களுக்கு என்னென்ன சலுகைகள் தரப்பட்டிருக்கின்றனவோ அனைத்தையும் பல்கலைக்கழகம் மூலமாக அரசு தரவேண்டி இருக்கிறது. பிறகு, மாணவர்களுக்குக்கூட, அந்தக் கல்லூரிக் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்றாலும்கூட, அங்கே சிண்டிகேட், செனட் இருக்கிறது. தன்னிச்சையாக யாரும் செய்துவிட முடியாது. ஆகவே, பல்கலைக்கழகம் செயல்படும்போது, கல்வியாளர்களுக்கு அதிக மரியாதை கிடைக்கிறது. அதோடு அவர்கள் independent—ஆக, யாருக்கும் கட்டுப்படாமல், சுயேச்சையாகச் செயல்படுவதற்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. ஆகவே இதிலே, அரசு அரசாங்கம் எந்தவிதமான தலையீடும் செய்வதில்லை.

தலையிடாமல் இருப்பதுதான், கல்வியாளர்களால் மிக வரவேற்கத்தக்க ஒன்றாகும். அதைத்தான் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் செய்து தர இருக்கிறார்களேயொழிய, ஏதோ ஆசிரியர்களுக்குத் தொல்லை தரவேண்டும் என்பதோ, மாணவர்களுக்குக் கட்டணம் உயர்த்த வேண்டும் என்றோ எண்ணம் கிடையாது என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

பிற்பகல் 1-00

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவர்கள் போராட்ட அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களிடத்திலே நிச்சயமாக அச்சம் இருக்கிறது. என்னைச் சந்தித்துப் பேசினார்கள். நான் இப்போது வேறொன்றும் சொல்லவில்லை. அவர்களை அழைத்துப் பேசி, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல எம்.எல்.ஏ-க்களுக்கெல்லாம் சேர்த்து ஒரு கோரிக்கை. பெரும்பாலான எம்.எல்.ஏ.-க்கள் என்னிடத்திலே சொன்ன கோரிக்கையை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கம்ப்யூட்டர் வேண்டுமென்று சென்ற ஆண்டிலேயிருந்து கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கம்ப்யூட்டர் வாங்குவதற்கு இதுவரைக்கும் எந்த வழிவகையும் செய்யப்படவில்லை. அரசு வாங்கித்தர இயலாவிட்டால், எம்.எல்.ஏ-க்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கம்ப்யூட்டர் வாங்குவதற்கு நீங்கள் வழிசெய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும் பிரிண்டரோடு—வெறும் கம்ப்யூட்டர் கொடுத்தால் பிரயோசனம் இல்லை; பிரிண்டரோடு—கொடுப்பீர்களேயானால், அவர்கள் தொகுதி விஷயத்திலே, மற்றவர்களுக்கு அனுப்புவதற்கு, படிப்பதற்கு, மற்ற விஷயங்கள் எல்லாம் அதிலே சேர்த்து வைப்பதற்கு பயனுள்ளதாக இருக்கும். ஆகவே, எம்.எல்.ஏ.-க்கள் அனைவருக்கும் கம்ப்யூட்டர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அரசு கொடுக்க இயலாவிட்டால், எம்.எல்.ஏ.-க்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அதைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

கடுமையான நிதி நெருக்கடி இருந்தாலும், பல்வேறு வரி விதிப்பு நடவடிக்கைகளை, மத்திய அமைச்சர் திரு. யஷ்வந்த் சின்ஹா அவர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டிருக்கிறார். ஏராளமான வரிச் சலுகைகளை அறிவித்திருக்கிறார். ஒன்றரை இலட்சத்திலிருந்து 5 இலட்சம் ரூபாய்





வரை வருமானம் உள்ளவர்கள் செலுத்துகின்ற வரி விதிப்பில் 20 சதவிகிதம் வரை காட்டப்பட்டு வந்த சலுகை அகற்றப்பட்டது. எனினும், கடுமையான எதிர்ப்புக்குப் பிறகு, 15 சதவிகிதம் வரை சலுகை அளிக்கப்படும் என்று இப்போது அறிவித்திருக்கிறார். நடுத்தர மக்களைப் பாதிக்கும் வகையில் அறிவித்துள்ள சமையல் எரிவாயு விலை உயர்வை ஏற்கெனவே விலக்கிக் கொண்டிருக்கிறார். காப்பீட்டுக் கழகங்களில் போடப்படும் சேமிப்புத் தொகைக்கு வழங்கப்படும் வட்டியின் விகிதத்தைக் குறைத்திருந்தார். இப்போது அதனையும் திரும்பப் பெற்றுக்கொண்டிருக்கிறார். ஏராளமான....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் எவ்வளவு நேரம்?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இன்னும் 3 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். ஒரு நிமிடம்தான் அதிகம் கேட்கிறேன். ஏறக்குறைய 3 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வரிச் சலுகை அறிவித்திருக்கிறார்கள். இருப்பினும், மத்திய கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் திரிணாமுல் காங்கிரஸ், சிவசேனா போன்ற பல கட்சிகளைச் சேர்ந்தவர்களும், மத்திய பட்ஜெட்டை ஒரு மக்கள் விரோத பட்ஜெட் என்றுதான் சாடி இருக்கிறார்கள். ஏழை மக்கள் பயன்படுத்தும் கெரசின் விலையைக் குறைக்க நடவடிக்கை ஏதும் இல்லாதது குறித்து ஆத்திரம் அடைந்திருக்கிறார்கள்.

1993 இல் 20 சதவிகிதமாக மட்டுமே இருந்த நேர்முக வரி விதிப்பு Direct tax இப்போது 43 சதவிகிதமாக உயர்ந்திருப்பதை நிதியமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். வருமான வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை, ஒன்றே கால் கோடியிலிருந்து இப்போது இரண்டரை கோடிக்கும் மேலாக உயர்ந்துவிட்டது என்று ஒப்புக்கொண்டிருக்கும் நிதியமைச்சர், அதனை 5 கோடியாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாக அறிவித்திருக்கிறார். ஆனால் அவர் அறிவித்திருக்கும் சலுகைகளோ, வரிக் குறைப்போ யாருக்கும் மகிழ்ச்சி அளிக்கவில்லை. அதனுடைய பிரதிபலிப்பு, நடந்துமுடிந்த பல தேர்தல்களிலும் காணப்பட்டது. கூட்டணி அரசில் அங்கம் வகிப்பவர்களே அதை ஏற்க முடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்நிலையில், நம்முடைய நிதியமைச்சர் மட்டும், 'முன்வைத்த காலை பின்வைப்பதில்லை' என்று சொல்வது சரியான செயலாக இருக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நீண்ட நேரம் பதிலளித்த

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 மே 9

நிதியமைச்சர், கடைசியில், கொடுப்பதற்குத் தன்னிடம் எதுவும் இல்லை என்று கையை விரிப்பது என்பது, ஏற்கக்கூடியதாக இல்லை. நீண்ட நேரம் இந்த அவையில், விவாதங்களுக்குப் பதிலளித்துப் பேசிய அண்ணா அவர்களோ, நாவலர் அவர்களோ, ஏன், எம்.ஜி.ஆர். அவர்களோ, தன்னிடம் எதுவுமே இல்லை என்று கையைத் திறந்து காட்டி, ஒன்றுமே இல்லை என்று உறுதியச் செய்ததில்லை. அவ்வாறு ஒன்றும் இல்லை என்று சொல்வதற்கு, கையில் ஒரு பையை வைத்துக் கொண்டு காட்சியளிக்க வேண்டிய அவசியமும் இல்லை. அந்தப் பைக்குப் பெயர்தான் 'பட்ஜெட்' என்று சொல்ல வேண்டிய தேவையும் இல்லை. அந்த அடிப்படையில், அரிசிக்கும், கோதுமைக்கும், பருப்புக்கும் வரி விதித்து, வெறுப்புக்கு ஆளாவதை விட்டொழிக்க வேண்டும். கண்டபடி நுழைவு வரிகளை விதித்து, ஊர்களுக்குள் நுழைய முடியாத ஒரு நிலை, இடைத் தேர்தலின்போது ஏற்படுத்துவதை சட்டென விட்டொழிக்க வேண்டும். எல்லாவற்றையும் ஈடுகட்டும் வகையில், மத்திய அரசிடம் நிதியுதவியை வற்புறுத்திப் பெறுவதில், இந்த அரசுக்கு தோள் கொடுப்போம்; துணை நிற்போம். மத்திய அரசு கூறுகிற காரணங்களையே கூறி, பொதுத் துறையில் அரசின் பங்குகளை விலக்கிக் கொள்வதையும், நடுத்தர வர்க்கத்தினரைப் பாதிக்கும் வகையில், பல வரிகளை விதித்து இருப்பதையும், அரசு ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதையும், அவர்களுக்கு வழங்கிவந்த சலுகைகளை மறுப்பதையும் கைவிட்டுவிட வேண்டும்.

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தைத் தனியாருக்கு ஒப்படைக்கக்கூடாது என்ற நிர்பந்தத்திற்குப் பணிந்து, மத்திய அரசு தனது முடிவை நிறுத்தி வைத்திருப்பது போன்று, மாநில அரசும், பொதுத் துறை நிறுவனங்களைத் தனியாரிடம் ஒப்படைக்கும் முயற்சியைக் கைவிட்டுவிட வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர். துணைத் தலைவர், உங்களுக்கு எவ்வளவு நேரம் வேண்டும்? (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களைத் தனியாக அழைக்கிறேன்.



2002 மே 9]

**திரு. துரைமுருகன்:** எனக்கு எவ்வளவு நேரம் வேண்டுமென்று கேட்கிறார் பாருங்கள். நீங்கள் எனக்கு எவ்வளவு நேரம் கொடுக்கிறீர்களோ, அதற்கு ஒரு நிமிடத்திற்கு முன்னாலேயே முடித்துக்கொள்கிறேன். எனக்கு எவ்வளவு நேரம் என்பது இருக்கட்டும். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு எவ்வளவு நேரம் என்று கேளுங்கள். (சிரிப்பு) நான் ஒரே ஒரு வரியில் கூட சொல்லி முடித்துவிடுவேன். எனக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை.

பிற்பகல் 1-05

பேரவைத் தலைவர் அவர்களே, நிதியொதுக்க மசோதாவின்மீது இங்கே பல மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துகளைச் சொல்லி இருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையின் மீதும், அதைத் தொடர்ந்து வந்த மானியக் கோரிக்கைகள் மீதும் பலர் பலவிதமான கருத்துகளை எடுத்துச் சொல்லி இந்த மாமன்றத்திலே தங்கள் கருத்துகளை பதிய வைத்திருக்கிறார்கள். அதிலே கூறப்படாத ஒன்றை அல்லது மறந்து விட்ட ஒன்றை நான் சொல்லப் போகிறேன்; புதிய கருத்து என்பது அல்ல; ஆனால் அவர்கள் சொன்ன கருத்தை மீண்டும் வலியுறுத்துவதன் மூலம் அந்தக் கருத்துக்கு மேலும் வலுவூட்டும் வகையில்தான் இருக்கும். பொதுவாக இந்த நிதி ஒதுக்க மசோதாவின் மீது பேசுகிறபோது, பல பிரச்சினைகள்—இதற்கு உட்பட்டு வராததையும், இந்த மன்றத்திற்கு சம்பந்தமானதையும், அல்லது தொகுதிக்கு சம்பந்தமானதையும்தான் அதிகமாகப் பேசுவார்கள். இங்கே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இந்த நிதி ஒதுக்கலிலே எந்தெந்த இனங்களுக்கு எந்தெந்த இலாகாக்களுக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்ற புள்ளி விவரத்தைக் கொடுத்து 37 ஆயிரத்து 609 கோடியே 60 இலட்சத்து 88 ஆயிரத்துக்கான இந்தப் பணத்தை ஒட்டுமொத்தமாக இந்த அவையினுடைய ஒப்புதலுக்கு வைத்து இருக்கிறார்கள்.

இந்த இலாகாக்களுக்கு ஒதுக்கப்பட்டதில் முன்பைவிட குறைவாக ஒதுக்கி இருக்கிறார்கள் என்பதை இந்த அவையிலே பேசிய எங்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர், மேயர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசுகிறபோது ஒவ்வொரு துறையையும் எடுத்துக்காட்டி பதிய வைத்து இருக்கிறார்கள். எந்தெந்த இலாகாவுக்கு எவ்வளவு குறைக்கப்பட்டு இருக்கிறது என்ற விவரத்தை மட்டும்தான் அன்றைக்கு அவர் அதிகமாகப் பேசினார். ஆனால் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் நீண்ட பதிலுரையில் அவற்றுக்கு எல்லாம் விளக்கத்தை அளித்தாரா

என்றால், இல்லை என்ற பதிலைத் தவிர வேறு இல்லை. காரணம், அவர் மட்டுமல்ல, பொதுவாகவே நான் இந்த அவையிலே உட்கார்ந்து பார்க்கிறேன்; 1971-லிருந்து நீங்களும் நானும் இந்த அவையில் இருந்தாலும், நான் பச்சையப்பன் கல்லூரியிலே படிக்கிற அந்தக் காலம் தொட்டே—கல்லூரியிலே உட்கார்ந்து இருந்ததைவிட இந்த மாடத்தில்தான் அதிகம் உட்கார்ந்து இருந்து பார்த்து இருக்கிறேன். பொதுவாக உறுப்பினர்கள் பேசுகிறபோது, அமைச்சர்கள் குறிப்பு எடுத்துக்கொண்டு இருப்பார்கள். அந்தக் குறிப்பிலே சந்தேகம் இருந்தால் உடனடியாக லாபிக்குப் போய் அங்கு இருக்கிற அதிகாரிகளோடு கலந்து பேசுவார்கள். பிறகு பதில் அளிக்கிறபோது இன்னின்ன உறுப்பினர் இப்படிச் சொன்னார் என்று கூறி, அவர்களுக்கு திருப்பி பதில் சொல்லுவார்கள். ஆனால் நான் இந்த அவையிலே இன்றைக்குப் பார்க்கிறேன். அப்படி எந்த அமைச்சரும் உறுப்பினர்கள் சொன்னதைக் குறிப்பிட்டு, குறிப்பிட்டு அவர்களுக்குப் பதில் அளிக்கவில்லை. அதற்கு என்ன காரணம் என்றால், அவர்கள் ஏற்கெனவே எழுதி தயாரித்து வந்த ஓர் அறிக்கையை இங்கே பதில் என்ற பெயராலே படிக்கிறார்கள். எனவே படிப்பதிலேதான் அவர்கள் அதிக ஆர்வம் காட்டுகிறார்களே தவிர, உறுப்பினர்கள் சொன்னதை வாங்கிக்கொண்டு உடனுக்குடன் பதில் அளிப்பதில் ஒருசில அமைச்சர்கள்தான் அப்படிச் செய்கிறார்கள்; நேற்றைக்குக்கூட முதலமைச்சர் அவர்கள் அப்படிச் செய்தார்கள்; அதுபோன்று இன்னும் சீனியர் மினிஸ்டர்கள் ஓரிருவர் இருக்கிறார்கள்; கல்வி அமைச்சர் அவர்கள் அப்படிச் செய்கிறார்கள். ஆனால் பெரும்பான்மையான அமைச்சர்கள் எழுதி வந்ததைப் படிப்பதிலேயே இருக்கிறார்கள். அமைச்சர்களை மட்டும் சொல்லவில்லை. பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தினுடைய விதியிலேயே படிக்கக் கூடாது என்று இருக்கிறது. ஆனால் எல்லா, பெரும்பகுதியானவர்கள்—ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்று நான் பிரித்துப் பேசவில்லை; படிப்பதையே பேச்சு என்று சொல்கிறார்கள் என்றால் அதை எது என்று சொல்வது?

இந்த அவையிலே ஜோதி வெங்கடாசலம் அவர்கள் எதிர்க் கட்சியில் இருந்த போது, Panel of Chairmen-ல் வந்து, இங்கே உட்கார்ந்து இருந்தார்கள். இ.கே. துரைசாமி, குடியாத்தம் — உங்களுக்குத் தெரியும். அவர் சட்டப் பேரவையில் ஓர் அற்புதமான பேச்சாளர்; மணிக்கணக்கிலே பேசக்கூடியவர்; அந்தக் கோடியிலே இருந்து இப்படி குறிப்பை வைத்துக் கொண்டு பேசினார். ஜோதி வெங்கடாசலம் அவர்கள், பெல் அடித்துவிட்டுச் சொன்னார்கள். இ.கே. துரைசாமி





பேசிய பேச்சு அவைக் குறிப்பிலே ஏறாது; காரணம் அவர் பேசவில்லை; படித்தார் என்று சொன்னார். அரண்டு போன இ.கே. துரைசாமி ஓடி வந்து கையில் ஒரு குறிப்பைக் காட்டிய பிறகுதான் பேசியதை அவைக் குறிப்பிலே ஏற்றினார்கள். அந்த மரபு கொஞ்சம் கொஞ்சமாக இந்த அவையில் மாண்டுபோய் வருகிறதே என்பதுதான் எனக்கு இருக்கிற கவலை. எனவே தங்கள் காலத்திலே அந்த மரபு அடிபட்டு போய்விட்டது என்ற அவப் பெயருக்கு பேரவைத் தலைவர் ஆளாகக் கூடாதே என்ற காரணத்தால்தான் சொல்கிறேன். தயவுசெய்து என்ன சொல்கிறார் என்று குறித்துச் சொல்லட்டும்; அதனால் ஓரிருவர் (குறுக்கீடு)...எல்லோரும் தாய் வயிற்றிலிருந்து கற்றுக்கொண்டு வரவில்லை. அந்தப் பொறுப்பு இருந்தால்தான்—நாம் கற்றுக்கொள்ள வேண்டும்; என்னென்ன கேள்வி கேட்பார்களோ என்ற எண்ணம் இருக்கும். ஆகையினாலே அமைச்சர்கள், உறுப்பினர்கள் இந்த அவையில் படிப்பதை தாங்கள் தடை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற விதி அதைத்தான் சொல்கிறது. இரண்டாவது, அப்படித்தான் புள்ளி விவரங்களை வாங்கி வருகிறார்களே, அதிலாவது புள்ளிவிவரங்களை சரியாக அதிகாரிகள் எழுதிக் கொடுக்கிறார்களா என்றால், இல்லை. சில நேரங்களில் அமைச்சர்களுக்கு....

பிற்பகல் 1-10

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே உறுப்பினர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று பாடம் சொல்லித் தரக்கூடிய தகுதி இந்த அவையிலே உங்கள் ஒருவருக்கு மட்டும்தான் உண்டு. அதற்குப் பிறகு அந்தக் கட்சியினுடைய சார்பிலே வெற்றிபெற்று வந்திருக்கிற எங்களுடைய தலைமைக்குத்தான் உண்டே தவிர, இந்தச் சபையிலே உட்கார்ந்து தத்துவம் பேசுவது என்று சொன்னால், எல்லோராலும் இது முடியும். இதேமாதிரி, முன்மாதிரி அந்தப் பக்கத்திலேயும் இருக்கிறது. ஆகவே எந்த மானியக் கோரிக்கையின்மீது பேசுகிறாரோ, எந்த நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவின்மீது பேசுகிறாரோ அதுசம்பந்தமாகத்தான் பேச வேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஆளும் கட்சியை மட்டும் சொல்லவில்லை. அவர் பொதுவாக ஒரு கருத்தைச் சொல்கிறார்.

[2002 மே 9

**திரு. துரைமுருகன்:** நான் பேசுகிறபோதே சொன்னேன், ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்ற வித்தியாசம் இல்லை என்று சொன்னேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகிறபோது, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் எழுப்புகின்ற கேள்விகளுக்கு, இங்கே அமைச்சர்கள் பதில் சொல்வதே இல்லை. அவர்கள் தயாரித்துக்கொண்டு வந்த அறிக்கைகளை மட்டுமே வாசிக்கிறார்கள் என்று சொன்னார். இது உண்மை அல்ல. நானே இங்கே அமர்ந்து கவனித்துக்கொண்டுதான் இருக்கிறேன். ஒரு மானியக் கோரிக்கையின்மீது விவாதம் நடைபெறுகின்றபோதே எதிர்க் கட்சி உறுப்பினர்கள் எழுப்புகிற பிரச்சினைகளுக்கு, எழுப்புகின்ற கேள்விகளுக்கு அவ்வப்போது அமைச்சர்கள் எழுந்து விளக்கங்கள் தந்துகொண்டுதான் இருக்கிறார்கள்; பதில்கள் தந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அதன் பின்னர் சில விவரங்களைப் பதிய வைக்க வேண்டுமென்பதற்காக அவர்கள் தயாரித்துக் கொண்டுவந்த அறிக்கையிலிருந்து வாசிக்கிறார்கள். ஏராளமான புள்ளிவிவரங்கள் அளிக்கப்படும்போது அவற்றை வாசிக்காமல் எல்லாவற்றையும் மனப்பாடம் செய்யவா முடியும்? அதுமட்டுமல்லாமல், பொறுப்புள்ள ஆளும் கட்சியில் உள்ள அமைச்சர்களாக இருப்பவர்கள் அர்த்தமுள்ள பேச்சுக்களைப் பேசவேண்டும் என்பதற்காக தயாரித்துக்கொண்டு வருகிறார்கள். எதிர்க் கட்சியிலே உள்ளவர்களைப்போல, மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களைப்போல், ஏதோ மேடையிலே சொற்பொழிவு ஆற்றுவதைப்போல, தோன்றுவதையெல்லாம் பேசுவதானால் எல்லோராலும் அந்த மாதிரி இங்கே பேச முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் பெரும்பாலும் என்ன பேசுகிறார்கள்? மேடைகளிலே அரசியல் பேசுவதுபோல, ஆளும் கட்சி என்ன செய்தாலும் தப்பு, அமைச்சர்களுக்கு எதுவும் தெரியாது, ஆளுங்கட்சியில் நடப்பதெல்லாம் தவறு, அரசாங்கம் சரியாக நடைபெறவில்லை, எதுவுமே நடைபெறவில்லை என்றெல்லாம் பொத்தாம் பொதுவாக அவர்கள் குற்றம் சுமத்தி, பழி சுமத்திப் பேசுகிறார்கள். அப்படி எல்லோராலும் பேசமுடியும். ஆகவே தேவைப்படுகிறபோது அமைச்சர்கள் விளக்கங்களைத் தந்து கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,



2002 மே 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சி துணைத் தலைவர், துறைவாரியான புள்ளிவிவரங்களை எல்லாம் கொடுக்கிறபோது, புதிய அறிவிப்புகளைக் கொடுக்கிறபோது, அவற்றையெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிற அந்த அறிக்கையிலிருந்து வாசித்துத்தான் தீர வேண்டும்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே அறிவுரை சொல்கிற தகுதி தங்களுக்கு உண்டு என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் தங்களுக்கு நான் விண்ணப்பிப்பதற்கு எனக்கு உரிமை உண்டு என்பதை நீங்கள் மறுக்கமாட்டீர்கள் என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். புள்ளிவிவரங்களைத் தருவதிலே, அதையும் மனப்பாடம் செய்ய முடியாது. அதைச் சொல்லித்தான் தீரவேண்டும் என்று. ஆனால் சில நேரங்களில் புள்ளிவிவரங்கள்கூட, அப்படிக்கொண்டுவருகிற புள்ளிவிவரங்களைத் தவறாக எழுதிக் கொடுத்து விடுகிறார்கள் அதிகாரிகள். அதனாலே சில நேரங்களில் அமைச்சருக்கு இக்கட்டான நிலை உருவாகி விடுகிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எதிர்க் கட்சிகள் குறை சொல்கிறார்கள் என்று சொன்னார்...

பிற்பகல் 1-15

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் 1991 முதல் 1996 வரை முதலமைச்சராக இருந்திருக்கிறேன். அப்போதும் ஆண்டுதோறும் இதுபோன்ற சட்டமன்றக் கூட்டத் தொடர்கள் நடந்திருக்கின்றன. அப்போதெல்லாம் இருந்த அதிகாரிகளுக்கு ஒரு motivation இருந்தது. ஒரு பணி ஆர்வம் இருந்தது. அப்போதெல்லாம் இத்தகைய தவறுகள் நிகழ்ந்ததே இல்லை. 1991 முதல் 1996 வரை இந்த அவையில் ஏராளமான கொள்கை விளக்கக் குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன. அப்போதெல்லாம் அத்தகைய தவறுகள் அவற்றில் இருந்ததாக யாரும் சுட்டிக்காட்ட வேண்டிய ஒரு சந்தர்ப்பமே எழவில்லை. ஆனால் அதன்பிறகு என்ன நடந்தது? 1996 முதல் 2001 வரை இருந்த தி.மு.க. ஆட்சி, அதிகாரிகளை பழிவாங்கி, அவர்களை அவமானப்படுத்தி, அவர்களைத் துன்புறுத்தி, அவர்கள்மீது இல்லாத பொல்லாத பழிகளை எல்லாம் சுமத்தி (மேசையைத் தட்டும் ஒலி) சின்னச் சின்ன விஷயங்களையெல்லாம் பெரிதாக்கி, அவர்கள்மீது கிரிமினல் வழக்குகளைப் போட்டு, அவர்களை சிறையிலே தள்ளி, அவர்களை சித்ரவதை செய்ததன் விளைவாக, அவர்களுக்கு ஒரு

மனச் சோர்வு ஏற்பட்டுவிட்டது சோர்ந்து போய் விட்டார்கள் பணி ஆர்வம் செத்துப் போய்விட்டது.

அந்த 5 ஆண்டு காலமும் அரசு அதிகாரிகள் எத்தகைய மன நிலையோடு இருந்தார்கள்? ஆட்சியாளர்கள் கவனத்திற்கே நாம் வராமல் எங்கேயாவது ஒதுங்கி இருந்தால் போதும், எப்படியாவது இந்த 5 ஆண்டு காலத்தை இப்படியே ஓட்டிவிட்டால் போதும் என்ற நிலையில்தான் இருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே வேலை செய்கின்ற, பணி செய்கின்ற அந்தப் பழக்கமே அவர்களுக்கு அற்றுப்போய்விட்டது. Motivation-ம் செத்துப்போய்விட்டது. 1991 முதல் 1996 வரை அரசு அதிகாரிகள் எப்படி இருந்தார்கள் என்பது எனக்குத் தெரியும். அப்போது அவர்களோடு பணியாற்றியவள் நான். கடந்த ஆண்டு 2001-ல் நான் பதவி ஏற்றபோது, அதிகாரிகளினுடைய மன நிலையை நான் பார்க்கின்றபோது அதிர்ச்சி அடைந்தேன். அவர்களிடம் வேலையே வாங்க முடியவில்லை. மீண்டும் அவர்களை motivate செய்ய முடியவில்லை. மிகவும் கஷ்டப்பட்டு அவர்களுடைய மன நிலையை ஓரளவுக்கு சரி செய்து, மீண்டும் அவர்களுக்கு அந்தப் பணி ஆர்வம் ஏற்படுத்தி, அதில் ஓரளவு நான் வெற்றி காண ஆரம்பித்த நேரத்தில், சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வந்து நானே பதவியை விட்டு இறங்க வேண்டியதாயிற்று. மீண்டும் எல்லாம் அப்படியே திரும்ப சரிந்துபோய் விட்டது. Snake and Ladder Game மாதிரி everything went back to square one. அந்த 5 மாத காலம் நான் இல்லாதபோது அதிகாரிகள் அதை ஒரு extended holiday போல் பாவித்தார்கள். 11-00 மணிக்கு, 11-30 மணிக்கு அலுவலகத்திற்கு வரவேண்டியது, யாரும் வேலை செய்யவே இல்லை. அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டது. ஏனென்றால் கடந்த 5 ஆண்டு காலமாகவே வேலை செய்யாமலேயே அவர்கள் பழக்கப்பட்டுவிட்டார்கள். அதன் பிறகு மீண்டும் நான் மார்ச் மாதத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். அதன் பிறகு, சர்க்கஸிலே இருக்கின்ற ரிங் மாஸ்டரைப் போல சாட்டையை அடித்து, அடித்து அடித்துதான் நான் வேலையை வாங்கிக்கொண்டு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எளிதில் வேலை வாங்க முடியவில்லை. ஆகவே 5 ஆண்டு காலம் வேலை செய்யாமலேயே பழக்கப்பட்டுவிட்டதால், அதிகாரிகளுக்கு, வேலையில் அந்த அளவுக்கு சிரத்தை இப்போது இல்லாததால், அதை நானே ஒப்புக்கொள்கிறேன். கொள்கை விளக்கக் குறிப்புகளில் தவறுகள் இருந்து இருக்கின்றன. பட்ஜெட் குறிப்புகளிலேயே, பட்ஜெட் பேப்பர்களிலேயே தவறுகள் இருந்து இருக்கின்றன. இங்கே இருக்கின்ற மாண்புமிகு எதிர்க் கட்சி



உறுப்பினர்கள் எல்லாம் சுட்டிக்காட்டினார்கள். இதற்கெல்லாம் யார் பொறுப்பு? அதிகாரிகள்தான் பொறுப்பு. முதலமைச்சருக்கோ, அமைச்சர்களுக்கோ, புள்ளிவிவரங்கள் எல்லாம் தெரிந்திருக்க நியாயம் இல்லை. நீங்கள் அமைச்சராக இருந்தபோது உங்களுக்கும் தெரிந்திருக்க நியாயம் இல்லை. நீங்கள் எல்லாம் அமைச்சர்களாக இருந்தபோது உங்களுக்கும், அதிகாரிகள்தான் புள்ளிவிவரங்கள் தந்தார்கள். அதே அதிகாரிகள்தான் இப்போதும் ஆட்சியில் உள்ளவர்களுக்கு புள்ளிவிவரங்களைத் தந்துகொண்டு இருக்கிறார்கள். ஆகவே நான் இப்போது அந்தப் பணி ஆர்வத்தை மீண்டும் அவர்கள் உள்ளங்களில் ஏற்படுத்துவதற்கு, அவர்கள் சிரத்தையாக கடமை ஆற்ற வேண்டும் என்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொண்டு, நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு எல்லா அதிகாரிகளுக்கும் all Secretaries and Heads of Departments திரும்பத் திரும்ப கடிதங்களை அனுப்பிக்கொண்டு இருக்கிறேன்; அறிவுரைகளை வழங்கிக்கொண்டு இருக்கிறேன்; தாக்கீதுகளை அனுப்பிக்கொண்டு இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேலையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெரிதாகக் குறைத்துவிட்டார்கள். ஆகவே, ஏற்கெனவே அவர்கள் சாட்டையை வைத்து அடித்துக் கொண்டு இருக்கிறார்கள். மேலும் நான் அடிக்க விரும்பவில்லை. அந்தப் பிரச்சினையை நான் விட்டுவிடுகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுகாலமாக இவர்கள் கொடுத்த சாட்டை அடிகளுக்கு நான்தான் இப்போது மருந்து பூசிக்கொண்டு இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து இந்த இலவச சேலை, வேட்டி. சென்ற முறை நீங்கள் அதற்காக ஒதுக்கிய தொகை பேராசிரியர் அவர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள். Account ஆகி இருக்கிறது. அதற்காக சேலை, வேட்டிகள் கூட வாங்கிவிட்டீர்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். அது இலவச சேலை, வேட்டி என்று கூட முத்திரை குத்திவிட்டதாகக் கருதுகிறேன். நான் தங்களிடத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இந்த அவையில் பலர் பேசினார்கள். அந்த இலவச சேலை, வேட்டி தரப் போகிறீர்களா? இல்லையா? அதைக் கொடுக்கிற திட்டம் உண்டா, இல்லையா

என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்கள் பதிலுரையிலே தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து திருமணங்கள். ஏழைகளின் திருமணத்திற்காக 10,000 ரூபாய் நிதி உதவி வழங்கி இருந்தோம். அது உண்டா, இல்லையா, என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிள்ளைகளுக்கு பஸ் பாஸ். நாளைக்கு privatisation ஆகிவிட்டால் தனியார் தடங்கள் ஓட ஆரம்பித்தால் அந்த தனியார் வழித் தடங்களிலே போகிற பிள்ளைகளுக்கு அந்த பஸ்ஸில் இலவச பாஸ் உண்டு என்று அரசாங்கம் உத்தரவாதம் அளிக்குமா என்பதையும் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மூன்றாவதாக ஒரு பெரிய பிரச்சினை. பெரிய பிரச்சினை அல்ல, சிறிய பிரச்சினைதான். காரணம் இப்போது மக்கள் பத்திரிகை படிப்பதைவிட நாடாளுமன்றத்தின் செய்திகளை டி.வி-யிலே பார்க்க ஆரம்பித்து விட்டார்கள்.

பிற்பகல் 1-20

அதேபோன்று நம்முடைய சட்டமன்றச் செய்திகளையும் டி.வி.-யிலேதான் இப்போது அதிகமாகப் பார்க்கிறார்கள், பேசியதைப் படிப்பதைவிட. ஆனால் ஏற்கெனவே 2,3 தரம் இந்த அவையிலே நான் சொல்லி சொல்லிப் பார்த்தேன். அதற்கு நீங்கள் சொன்னீர்கள், நான் ஓர் அதிகாரியைப் போட்டிருக்கிறேன் என்று. Films Division எடுத்து, அவர்களே edit பண்ணுகிறார்கள். ஆனால், Editing-ல் கூட நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். ஆளுங்கட்சிக்கு முழுக்க முழுக்க இந்த டி.வி. ஒரு சாதனமாகவே பயன்படுகிறது. காரணம், உண்மைக்கு மாறானதைச் சேர்க்கிறார்கள். ஓர் உதாரணத்தைச் சொல்கிறேன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பதிலளித்து அன்றைக்கு உரையாற்றுகிறபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் இங்கே பேசினார்கள். ஆனால் அன்றைக்கு நான் டி.வி. பார்த்தேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உட்கார்ந்துகொண்டு அவர் பேசுவதைப்போல ஒரு editing-ஐப் பண்ணிவிட்டார்கள். உட்கார்ந்திருப்பதிலே ஒன்றும் இல்லை. இன்னும் சொல்லப்போனால், முதலமைச்சர் முகத்தைக் காட்டுகிறபோதெல்லாம் தவறாமல் மாண்புமிகு விசுவநாதனுடைய முகம்தான் இருக்கிறது. அதற்காக நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் எங்களைக்





காட்டினால் என்ன? (குறுக்கீடு) (சிரிப்பு) இல்லையே! இன்னும் சொல்லப்போனால், எங்களுக்குக் கொடுக்கிறார்கள் பாருங்கள், மற்ற டி.வி.-களுக்கு அதற்கு cut பண்ணிவிட்டு, இவ்வளவுதான் கொடுக்கிறார்கள். ஆனால் ஜெயா டி.வி.-யில்தான் ரொம்ப நேரம் போடுகிறார்கள். இதற்காக 11 மணிக்கு நான் பார்த்தேன் அதை. சரி அதிலாவது வருகிறதா என்று. அதுவும் இல்லை. சரி, என்ன இப்போ? இதோ இருக்கிறார் நம் லட்சுமணன். பழைய சம்பங்கி நடிகர் மாதிரிதான் இருக்கிறார். ஏன், கொஞ்ச நேரம் அவர் முகத்தைக் காட்டினால்தான் என்ன ஆகிவிடப் போகிறது? (சிரிப்பு) அதோ, மணி. ஏ.வி. சுப்பையா மாதிரிதான் இருக்கிறார். கொஞ்சம் நேரம் மேக்கப் போட்டால் வரும். (குறுக்கீடு) யசோதா, யசோதா மாதிரிதான் இருக்கிறீர்கள். ஆகையினாலே உங்களை நான் என்ன கேட்டுக்கொள்கிறேன் என்றால்—எதிர்க்கட்சிகளை முழுக்க இருட்டடிப்பு பண்ணுகிறீர்கள். இல்லை என்று நீங்கள் சொல்வீர்கள். இருட்டடிப்பு பண்ணுகிறீர்கள் என்று நாங்கள் சொல்வோம். இது எங்கேயோ, எப்படியோ விவாதம் போகும். ஆகையினால் இந்த அவையில் நான் கேட்டுக்கொள்வதெல்லாம்—நீங்கள் live பண்ணுகிற மாதிரி, எல்லா டி.வி.-க்களுக்கும் ஒரு வாய்ப்பு கொடுங்கள். Parliament-ல் எல்லோருக்கும் சம வாய்ப்பு கொடுக்கிற மாதிரி இருக்க வேண்டும். எனவே, முழுக்க Live கொடுக்கும்போது Films Division-க்கு கொடுத்தீர்கள் என்றால் இதே மாதிரிதான் இருக்கும். அடுத்த கூட்டத் தொடரிலாவது இதை மாற்றியமைக்க வேண்டும். எல்லா டி.வி.-க்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான், எல்லோரும், அவரவர்கள் இஷ்டத்திற்குக் காட்டுவார்கள். இது இரண்டாவது.

மூன்றாவதாக, Election. கடந்த இடைத் தேர்தலில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போட்டியிட்ட ஆண்டிப்பட்டி தொகுதியில் ஒரு விசித்திரத்தை நான் பார்த்தேன். என்னைப் பொறுத்தவரையில் கல்லூரியில் படிக்கின்ற காலத்தில் கந்தப்பன் அவர்கள் திருச்செங்கோட்டில் நின்றதிலிருந்து தொடர்ந்து இடைத் தேர்தலிலே நான் பணியாற்றி இருக்கிறேன். பிறகு சுப்பிரமணிய கவுண்டர் தருமபுரியில் நின்றார். பிறகு கதிரவன், இப்படியெல்லாம் வந்திருக்கிறது. ஆனால் எந்த இடைத் தேர்தலிலும், ஒரு கட்சிக்காக வேலை செய்யப் போகிறவர்களை Police விரட்டு, விரட்டு என்று விரட்டியதே கிடையாது. (கூச்சல்) எந்தத் தேர்தலிலும் இப்படிச் செய்ய மாட்டார்கள். ஆனால் இந்தத் தேர்தலில்...

[2002 மே 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், என்ன சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது என்னவெல்லாமோ பேசி வந்திருக்கிறார். நானும் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தேன். நீங்கள் ஐந்தாண்டு காலம் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது உங்களுடைய Proceedings-ஐ எல்லாம் படித்துப் பார்த்தேன். எந்தச் சட்டமன்ற உறுப்பினருக்கும் நீங்கள் பதில் சொன்னதாக நான் பார்க்கவில்லை. நான் படித்துப் பார்த்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அது இருக்கட்டும். உங்கள்மீது த.மா.கா.வைச் சேர்ந்தவர்கள் ஒரு குற்றச்சாட்டைக் கொண்டுவந்து, நீங்கள் தேம்பித் தேம்பி அழக்கூடிய நிலைமை இந்த அவையிலே நடந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அமைச்சரவையில் இருந்து கொண்டு நீங்கள் உங்களுடைய பதிலைச் சொல்லவில்லை. (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். நான் பேசி முடித்த பிறகு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) என்னைப் பேசவிடுங்கள்.

அதுமட்டுமல்லாமல், திருச்சியிலும், புதுக்கோட்டையிலும் இடைத் தேர்தல் நடந்தது. அப்போது அந்த இடைத் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஆளுங்கட்சியாக இருந்தார்கள். நாங்கள் அப்போது அங்கே சென்று, D.I.G., S.P. இவர்களிடம் முறையிட்டோம். எந்தச் சட்டத்தில், எந்த அடிப்படையிலே எங்களை வெளியிலே போகச் சொல்கிறீர்கள் என்று கேட்டோம். சட்டம் எது என்று அவர்களுக்குத் தெரியவே செய்யாது. ஏனென்றால், அவர்கள் செய்வது பூராவுமே முதலமைச்சர், அங்கே இருக்கக்கூடிய அமைச்சர்களுடைய ஆணைப்படிதான் செய்தார்கள். நெல்லிக்குப்பத்திலே பார்த்தோம். நெல்லிக்குப்பத்திலே நீங்கள் in-charge ஆக இருந்தீர்கள். என் கண் முன்னாலே, என்னுடைய கண் முன்னாலே பஸ்களில் ஆட்களைக் கொண்டுவந்து இறக்கி, கள்ள ஓட்டுப் போட்டார்கள். அதற்கு அமைச்சரே துணையாக இருந்தார்கள். ஆகவே உங்களுடைய தேர்தல் எப்படி நடந்தது என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும்.

பிற்பகல் 1-25

**திரு. துரைமுருகன்:** எப்படியோ இப்பொழுது நடத்தி விட்டோம் என்று ஒப்புக்கொண்டார்கள். இரண்டாவதாக, மாண்புமிகு



2002 மே 9] [திரு. துரைமுருகன்]

அமைச்சரவர்கள் சொன்னார்கள், நான் உறுப்பினர்களுக்குப் பதில் சொன்னேனா, இல்லையா என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறிவார்கள். அடுத்து, நான் அழுதேன் என்று சொன்னார்கள். என்மீது போட்ட குற்றச்சாட்டை—நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் அப்போது எதிர்க்கட்சித் தலைவர்—அதையே, அவர்கள் தேவையில்லை என்று விட்டுவிட்டார்கள். வற்புறுத்தவில்லையென்று சொன்னார்கள். வாபஸ் பெற்றுவிட்டார்கள். அது வேறு விஷயம். ஆனால் தேர்தலிலே ஒரு ஜனநாயக நாட்டில்—நாங்களே அப்படிப் பண்ணியிருந்தோம் என்று சொல்லியிருந்தீர்கள்—எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, அந்தத் தேர்தலிலே போய் அவர்கள் வேலை செய்வதற்கு வாயப்புகள் இருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) மூன்றாவதாக, இன்னொன்று, மாண்புமிகு அமைச்சரவர்கள்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் நடைபெற்ற ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தெரிவிப்பதைப் போல எந்தவிதமான சட்ட மீறலும், அராஜகமும் நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முழுக்க முழுக்க ஜனநாயக நெறிமுறைகள்படிதான் அந்தத் தேர்தல் மிகவும் நியாயமாக நடைபெற்றது. அதனால்தான் நான் 43 ஆயிரத்து சொச்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க் கட்சித் துணைத் தலைவர் சொல்வதைப் போல, அராஜகம் செய்திருந்தால், சட்டவிதி மீறல்கள் செய்திருந்தால், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் எனக்கு வெற்றி கிடைத்திருக்கும், தி.மு.க. candidate-க்கு deposit போயிருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அராஜகம். அராஜகம் இல்லையென்று தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு நீங்கள் இப்போது சொல்கிறீர்கள். அதுபற்றிய பிரச்சினைக்கு நான் வரவில்லை. ஆனால் ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். ஜனநாயக நாட்டில் தி.மு.க., அ.இ.அ.தி.மு.க., கம்யூனிஸ்ட் என்று அல்ல. எந்த கட்சியாக இருந்தாலும் அந்தக் கட்சிக்காரர்கள் போய் பணியாற்றுவதற்கு உரிமையுண்டு. அதை அரசு தடுக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். மூன்றாவதாக, (குறுக்கீடு) இல்லையென்றால் இல்லை. பிறகு என்ன செய்வது? அதை நான் கேட்டுக்கொள்கிறேன்.

[2002 மே 9

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பொத்தாம் பொதுவாகச் சொல்லக் கூடாது. ஏதாவது ஒரு சம்பவத்தை, உண்மை நிலையைக் கூற வேண்டும். நான் அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலிலே அங்கு தேர்தல் பணிக்காகச் சென்றபோது அங்கே போய் இறங்கியவுடன், அந்தப் பகுதியில் இருக்கிற காவல் துறை' அதிகாரிகள் என்னை மிரட்டி அன்றைய இரவே அறந்தாங்கியின் எல்லையில் கொண்டுவந்து விட்டுவிட்டுச் சென்றார்கள் என்பதனை நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பன்னீர்செல்வம், உங்கள் துணைத் தலைவர் பேசுகிறார், உட்காருங்கள்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** என்னை arrest பண்ணினார்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே மாதிரி திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வத்தை கைது செய்தார்கள் என்று நான் சொல்லலாம். அதைச் சொல்லலாம் என்றால், நீண்டுகொண்டே போகும். நேரம் இல்லாத காரணத்தால் சொல்லவில்லை. அடுத்த முக்கியமான விஷயம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே பட்ஜெட் தொடர்க் கூட்டத்திலே ஒரு சர்ச்சை எழுந்தபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள் பேசுகிறபோது குறுக்கிட்டுச் சொன்னார்கள். கண்ணகி சிலையைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறபோது அந்தச் சிலை அரசு அருங்காட்சியகத்தில்தான் உள்ளது. அந்தச் சிலையைப் பார்ப்பதற்கு கல்வியமைச்சர் டாக்டர் • தம்பிதுரை அவர்கள் ஏற்பாடு செய்வார்கள் என்று அவர்கள் அன்றைக்குத் தெரிவித்தார்கள். ஆனால் குமுதம் ரிப்போர்ட்டர் என்ற பத்திரிகையில் ஒரு செய்தி எழுதியிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் இரத்தினச் சுருக்கமாக அன்றைக்கு அந்தக் கருத்தைச் சொன்னார்கள். ஆனால் பட்ஜெட் தொடர்க் கூட்டம் முடிந்ததற்குப் பிறகு அந்தச் சிலையைப் பார்க்கலாம் என்ற உணர்வோடு அன்றைக்கு அந்தப் பத்திரிகை தொடர்பு கொண்டபோது பட்ஜெட் தொடர்க் கூட்ட வேலை அதிகம் உள்ளது, இரண்டு நாள் ஆகட்டும், பொறுத்திருங்கள், பிறகு ஏற்பாடு செய்கிறேன் என்று மீண்டும் மாண்புமிகு கல்வி அமைச்சர் தெரிவித்திருக்கிறார்கள். பிறகு மீண்டும் தொடர்பு கொண்டார்களாம்.





மீண்டும் 9 ஆம் தேதி, இரண்டு நாள் போகட்டும் என்றார்களாம். மீண்டும் 9 ஆம் தேதி பேசியிருக்கிறார்கள். கல்வி சம்பந்தமான மானியக் கோரிக்கை என்று இப்படியே மறுத்து மறுத்து அங்கே கடைசியில் என்ன சொன்னார்களாம் என்றால், 12 ஆம் தேதி தொடர்பு கொண்டபோது சிலையை உடனே காண்பிக்க முடியாது. இப்போது பொதுப் பணித் துறையிடம்தான் சிலை இருக்கிறது. நாங்கள் பொதுப் பணித் துறைக்கு முறைப்படி கடிதம் கொடுக்க வேண்டும். அவர்கள் அனுமதி கொடுக்க வேண்டும். இதற்கான File move ஆக வேண்டும், காத்திருங்கள் என்று சொன்னார்களாம். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்....

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** திரு. துரைமுருகன், கொஞ்சம் இருங்கள். ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணகி சிலையைக் காண்பிப்பதற்கு புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள்; சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இது ஏதோ மறைத்து வைக்கக்கூடிய பொருள் கிடையாது. இப்போதும் யார் வேண்டுமானாலும் வந்து பார்க்கலாம். நான் அப்பொழுது சொன்னது, குமுதம் ரிப்போர்ட்டர் தொடர்பு கொண்டது உண்மைதான். அப்போது பட்ஜெட் கூட்டம் நடந்துகொண்டிருந்ததால் இரண்டு, மூன்று நாட்கள் பொறுங்கள், பிறகு நீங்கள் வந்தால் நான் காண்பிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். பிறகு தொடர்பு கொண்டார். தொடர்பு கொண்ட பிறகு, நான் அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறேன். அவர்கள் ஏற்பாடு செய்வார்கள் என்று சொன்னேன். அவர்களும் செய்வதாகச் சொன்னார்கள். ஆனால் அதற்குப் பிறகு தொடர்பு கொள்ளவில்லை. ஆகவே காண்பிக்க முடியாது என்று மறைக்க எந்த முயற்சியும் ஏற்படவில்லை. எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் பார்க்கலாம். நாளைக்கு நான் அழைத்துச் செல்கிறேன். நாளைக்கு வரட்டும், நான் காண்பிக்கிறேன். அம்மா அவர்கள் உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஆகவே இதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே எதையும் மறைக்கும் கருத்து இந்த அரசிடம் கிடையாது. வெளிப்படையாக அனைவருக்கும் தெரியும் வகையிலேதான் இத்துறையே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு துரைமுருகன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[2002 மே 9

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, இப்பொழுது ஒரு சின்ன பிரச்சினை இதிலே. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

பிற்பகல் 1-30

**திரு. துரைமுருகன்:** இப்போது என்ன செய்யலாம் என்றால், மாண்புமிகு முதலமைச்சர்கூட கொண்டுபோய்க் காட்டுங்கள் என்று சொல்கிறார்கள். பிரச்சினை எதற்கு? இருக்கிற சிலையைக் கொண்டுவந்து இருந்த இடத்திலேயே வைத்துவிட்டோம் என்றால், எல்லாப் பிரச்சினையும் முடிந்துபோயிற்று. கோர்ட் ஆர்டர் எல்லாம்... (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினை நீதின்றத்தில் உள்ளது. நீதிமன்ற ஆணை பெறாமல் எப்படி நாங்களாக அந்தச் சிலையைக் கொண்டுபோய் வைக்க முடியும்?

**திரு. துரைமுருகன்:** நாம் சிலையை வைத்துவிட்டால் அவர்கள் கேசை வாபஸ் வாங்கிக்கொள்கிறார்கள். இதுதான் பிரச்சினை. எனவே அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டு உரையை நிறைவுசெய்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்திலே வழக்கு இருக்கும்போது நாம் தன்னிச்சையாக எந்த இடத்திலும் சிலையை வைக்கமுடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்படி நீதிமன்றத்திலிருந்து எந்தப் பகுதியில் வைக்க வேண்டுமென்று கருத்து கேட்கப்பட்டிருக்கிறது. அதே மெரினா கடற்கரைப் பகுதியில் மூன்று இடங்களை அரசு குறித்து நீதிமன்றத்திற்குத் தகவல் சொல்லியிருக்கிறது. நீதிமன்றம் எந்த இடத்தில் வைக்க வேண்டுமென்று தீர்ப்பு வழங்குகிறதோ, அந்த இடத்தில் உறுதியாக கண்ணகி சிலை வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையில் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



2002 மே 9]

பிற்பகல் 4-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 10. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்). 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவின்மீது பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் இங்கே கூறிக்கொள்ள விழைகிறேன். நடப்பு ஆண்டிற்கு நிதி ஒதுக்கம் என்பது, பல்வேறு துறைகளுக்கு, பெரும்பாலான துறைகளுக்கு கடந்த ஆண்டைவிட குறைவாகவே இருக்கிறது. அதிலும் இந்த நிதி ஒதுக்கத்திலே—இந்த நாட்டிலே வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழக்கூடியவர்கள் எண்ணிக்கை கூடுதலாக இருக்கிறது; ஆகவே வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழக்கூடியவர்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக, இன்னும் தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய முன்னேற்றத்திற்காக சமூக நீதியோடு கூடிய பொருளாதார முன்னேற்றத்திற்கான வகையிலே திட்டங்களை ஒதுக்கவில்லை என்பதை நான் இங்கே வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே நிதி ஒதுக்கம் என்பது சமூக நீதியோடு கூடிய பொருளாதார திட்டமாக இருக்க வேண்டும் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேநேரத்திலே கடந்த ஆண்டைக் காட்டிலும் பெரும்பாலான துறைகளுக்கு குறைவாக நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. கடந்த ஆண்டு பல்வேறு துறைகளைப் பொறுத்தவரையில் நாம் மிகப் பெரிய வளர்ச்சியைப் பெற்று இருக்கிறோமா என்றால், இல்லை. அப்படி கடந்த ஆண்டே முடியாத நேரத்தில், குறைவான நிதி ஒதுக்கி இருக்கிற இந்த நேரத்திலே, இந்த ஆண்டிலே, எந்த அளவிற்கு நாம் வளர்ச்சியை எட்ட முடியும்? எப்படி தமிழ்நாடு இந்தியாவிலே முதல் மாநிலமாக வர முடியும் என்பதை நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஜி.கே. மணி] [2002 மே 9

அதைப்போலவே நாம் நிதி நெருக்கடி என்று சொல்கிறோம். நிதி நெருக்கடி என்று சொல்லி இன்னும் வசூல் செய்யாமல் இருக்கக்கூடிய வரி பாக்கியை வசூல் செய்வதற்கும், வரி விதிக்காமல் மற்ற வகையிலே நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கான வழிவகைகளை நாம் மேற்கொண்டிருந்தால், அது இன்னும் பொருத்தமாக இருக்கும். ஆகவே அதிலே அதிக கவனம் செலுத்தாமல் எல்லா வகையிலேயும் இந்த ஆண்டு நாம் கூடுதலான வரியை விதித்து இருக்கிறோம். அதிலும் குறிப்பாக எனக்கு முன்னாலே பேசியவர்கள், தொடர்ந்து பேசியவர்கள் எல்லாம்கூட சொன்னார்கள். அரிசிக்கு வரி, கோதுமைக்கு வரி, பருப்பு, எண்ணெய், அலுமினிய பாத்திரங்கள், வெல்லம்—இப்படி பல்வேறு வகையிலே, விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய உரம், பூச்சிமருந்து, விதைகள் இவற்றுக்கு பலமுனை வரி — இப்படி பல்வேறு வகையிலே—இந்த ஆண்டு வரிச் சுமை அதிகமாக இருக்கிறது என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்ல. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இன்னும் அரசுப் பணியாளர்கள் போக்குவரத்துத் தொழிலாளர்கள், பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள்—இவர்களுக்கு எல்லாம் சலுகைகள் கடுமையாகக் குறைக்கப்பட்டு இருக்கின்றன. விவசாயிகளுக்கு நாம் கூடுதலான சலுகைத் திட்டங்களை அறிவிக்கவில்லை. தமிழ்நாட்டில் விவசாயத்திற்கு அடுத்த தொழில் நெசவுத் தொழில்; அந்த நெசவாளர்கள் பல்வேறு வகையிலே பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்; இந்த மாமன்றத்திலே நாம் நிறைய பேசி இருக்கின்றோம். துணிகள் எல்லாம் தேங்கிக் கிடக்கின்றன. இலவச வேட்டி, சேலை வழங்குவது நிறுத்தப்பட்டு இருக்கிறது. ஆகவே, விற்பனைக்குண்டான முயற்சியை நாம் மேற்கொண்டு இருக்கக்கூடிய அதே நேரத்திலே, பல்வேறு நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூடப்பட்டு, அதில் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்து இன்று அவர்களுடைய வாழ்க்கை கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை நிலவிக்கொண்டிருக்கிறது.

அடுத்து மீனவர்கள். இப்படி நெசவாளர்கள், விவசாயிகள், மீனவர்கள் என்று இவர்களுக்குப் பாதிப்பான திட்டத்தை இந்த நிதிநிலையில் நாம் சமர்ப்பித்து இருக்கிறோம் என்பதை நான் சுட்டிக்காட்டி, அதே நேரத்திலே, வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கான திட்டங்கள் இங்கு அதிகம் சொல்லப்படவில்லை. மூடிய ஆலைகள் திறக்கப்படவில்லை. இன்று காலையிலே பேசியவர்கள்கூட சொன்னார்கள். பெண்கள் 17 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் படித்து, வேலை இல்லாமல் பதிவு



2002 மே 9] [திரு. ஜி.கே. மணி]

செய்து இருக்கிறார்கள். ஆண்கள், பெண்கள் உட்பட மொத்தம் 50 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் படித்து வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவுசெய்து, வேலை இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். தனியார் தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன; திறக்கப்படவில்லை. அரசு அலுவலகங்களிலும் பணி இல்லை. ஆகவே வேலைவாய்ப்பினை உருவாக்கித் தருவதற்கு, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு இந்த அரசு அதிக கவனம் செலுத்தவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எந்த வகையிலே என்று சொன்னால் ஆண்டுதோறும் Tamil Nadu Public Service Commission-லே அரசுப் பணியாளர்கள் தேர்வு ஆணையத்திலே குறைந்தது 12,000-க்கும் மேல் தேர்வு செய்யப்படுவார்கள். ஆனால் தமிழக அரசு இப்போது அரசுப் பணியாளர்கள் தேர்வாணையத்திலே நியமனங்கள் இல்லை என்ற ஓர் அறிவிப்பினை வெளியிட்டிருக்கிற காரணத்தினாலே படித்தவர்கள் எல்லாம் நாம் எப்படி வேலைக்குச் செல்வது என்று அவர்கள் எல்லாம் இன்றைக்கு திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். படிக்க வைத்த குழந்தைகளின் பெற்றோர்கள் நாம் இலட்சக்கணக்கில் கடன் வாங்கி செலவழித்து குழந்தைகளைப் படிக்க வைத்திருக்கிறோம், இவர்களின் வாழ்க்கை என்ன ஆகப் போகிறது என்று சொல்லி அவர்களெல்லாம் இன்று பெரும் அதிர்ச்சியிலே மூழ்கிக்கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 4-35

பல்வேறு நிலைகளிலே வேலைவாய்ப்பு இல்லாத சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கக்கூடிய இந்த காலகட்டத்தில் அரசுப் பணிகள் இல்லையென்று சொன்னாலும், தனியார் நிறுவனங்கள் இருக்கின்றன. தனியார் நிறுவனங்களில், தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட குழந்தைகள் எல்லாம் வேலைக்கு செல்லலாம் என்று சொன்னாலும் அதுவும் இன்று குதிரைக் கொம்பாக இருக்கிறது. ஆகவேதான் நாங்கள் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே பலமுறை இந்த மாமன்றத்திலே வலியுறுத்தி இருக்கிறோம். தனியார் நிறுவனங்களிலே இட ஒதுக்கீடு வேண்டும். இப்போது இந்த மாமன்றத்திலே கம்யூனிஸ்ட் போன்ற கட்சிகள் எல்லாம்கூட இதற்கு ஆதரவு தெரிவித்திருக்கின்றன. கர்நாடக சட்டமன்றத்திலே ஒரு கமிட்டி போட்டு தனியார் நிறுவனங்களிலே இட ஒதுக்கீட்டு முறையை அமலாக்கக்கூடிய நிலைமை கர்நாடக அரசிலே உருவாகியிருக்கிறது. இந்த ஆண்டு குடியரசுத் தலைவர் அவர்கள்கூட குடியரசு தின விழா உரையிலே தனியார் துறையிலே இட ஒதுக்கீடு வேண்டுமென்று

வலியுறுத்தி இருக்கிறார்கள். நம்முடைய மரியாதைக்குரிய வெங்கடாசலம் ஐயா கமிஷன் — சட்டத் திருத்தத்திற்காக மறு ஆய்வுக் கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கமிஷன்கூட தனியார் துறையிலே இட ஒதுக்கீடு வேண்டுமென்று வலியுறுத்தி இருக்கிறது. இப்படி இந்தியா முழுவதும் தனியார் நிறுவனங்களிலே இட ஒதுக்கீட்டு முறையை அமலாக்க வேண்டுமென்ற நிலை உருவாகிக் கொண்டிருக்கிற காரணத்தினாலேதான் அரசுப் பணிகளிலே நியமனம் இல்லாத இந்த நேரத்திலே தனியார் துறையிலே நம்முடைய அரசு நிச்சயமாக இடஒதுக்கீட்டை உருவாக்கியாக வேண்டும் என்பதை இங்கே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தது மிக முக்கியமான பிரச்சினை தமிழ். இன்று தமிழ் மொழிக்கு நிகரான தொன்மைவாய்ந்த மொழி உலகத்திலே எங்கும் இல்லையென்று சொல்கிறோம். பாரதியார்கூட "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்" என்றார் பாரதியார் நிறைய மொழிகளிலே புலமை பெற்றவர். அவர் சொல்கிறார். ஆகவே இந்த வகையிலே மிகத் தொன்மைவாய்ந்த மொழி. உலகத்திலே 3,000 மொழிகள் இருப்பதாகத் சொல்லப்படுகிறது. அந்த 3,000-த்திலே தமிழ், இலத்தீன், கிரேக்கம், பாரசீகம், சமஸ்கிருதம். இந்த 5 மொழிகள் தான் தொன்மைவாய்ந்த மொழிகள். ஆக, இப்படி உலக அளவிலே தொன்மைவாய்ந்த மொழி என்று சொல்லக்கூடிய தமிழ் மொழியை செவ்வியல் மொழியாக்க வேண்டுமென்று சொல்லி தமிழ்நாட்டிலே தமிழ் அறிஞர்கள் முதலாக பல்வேறு தரப்பிலே கோரிக்கை விடுத்து வந்திருக்கிறார்கள். ஆகவே அது இன்னும் கேள்விக் குறியாக நிலுவையில் இருந்துகொண்டிருக்கக் கூடிய பிரச்சினை என்பதனாலே நம்முடைய தமிழக அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த மன்றத்திலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, மத்திய அரசை வலியுறுத்த வேண்டும். அதை எப்பாடுபட்டாவது...

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழுக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு முறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். செம்மொழி ஆக்க வேண்டுமென்பதற்காக, அந்த status-ஐப் பெறுவதற்காக பாரதப் பிரதமர் அவர்களுக்கு புரட்சித் தலைவி அவர்கள் அறிவுறுத்தலின் பேரில் கடிதம் எழுதியிருக்கிறோம். அதுவுமில்லாமல் அவர் நேரடியாகவே நாங்கள் மத்தியில் கூட்டணி ஆட்சியில் 1998-ல் இருந்தபோது ஆட்சி





மொழியாக்க வேண்டுமென்ற கருத்தையும் வலியுறுத்தினார்கள். அதற்கு முன் சமஸ்கிருதத்திற்கு முக்கியத்துவம் தரப்பட்டது. அடுத்து உடனேயே நமது தமிழுக்கு அத்தகைய சிறப்பு நிலை தர வேண்டுமென்று புரட்சித் தலைவி அப்பொழுதே கடிதம் எழுதியிருக்கின்றார்கள். ஆகவே தமிழுக்கு மற்றவர்களைக் காட்டிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், புரட்சித் தலைவி அவர்கள் சிறந்த முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இப்போது பாட்டாளி மக்கள் கட்சி மத்தியிலே உறவுடன்தான் இருக்கின்றீர்கள். கடிதம் எழுதப்பட்டு இருக்கிறது. அந்த கடிதத்தின் பேரில் பாரதப் பிரதமர் அவர்களுடன் நீங்களும் பேசி முயற்சி செய்வீர்கள் என்றால் அதில் உடனடியாக பலன் கிடைக்குமென்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-லே தேசிய ஜனநாயகக் கூட்டணி இருந்த நேரத்திலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் ஐயா அவர்களும் சேர்ந்து முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே இந்த தேசிய செயல் திட்டம் என்று சொல்கிறார்களே, அதையெல்லாம் (குறுக்கீடு) தெரியும். இருந்தாலும் கூட நிலுவையில் இருக்கிறது. ஆகவேதான் நம்முடைய மாமன்றத்திலே ஒரு தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையை இந்த நேரத்திலே வைக்கிறேன். அதேநேரத்திலே தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும். இன்றைக்குகூட நாங்கள் ஏதோ எங்கள் இயக்கத்தைப் பற்றிச் சொல்வதற்காக தவறாக நினைத்துக்கொள்ளக் கூடாது. தமிழ் உட்பட இந்தியாவிலே இருக்கக்கூடிய 18 மொழிகளும் ஆட்சி மொழியாக்கப்பட வேண்டுமென்று சொல்லி, டெல்லியிலே ஒரு மாநாடு நடத்தினோம். அந்த மாநாட்டிலே அகில இந்தியத் தலைவர்கள், காங்கிரஸ் கட்சி, பாரதிய ஜனதா கட்சி, மற்றுமுள்ள எதிர்க்கட்சிகள் இன்னும் மாநிலக் கட்சிகள், இந்திய அளவிலே இருக்கக்கூடிய கட்சித் தலைவர்களை எல்லாம், மத்திய அமைச்சர்களையும் அழைத்து அந்த மாநாட்டை நடத்தினோம். மரியாதைக்குரிய அமரர் பாலயோகி அவர்கள் அந்த மாநாட்டைத் துவக்கி வைத்தார்கள். பிரதமர் அவர்களும் கலந்துகொள்வதாக இருந்தது. ஆனால் உடல்நலக் குறைவின் காரணமாக.....

பிற்பகல் 4-40

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்மிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களுடைய

கட்சி டெல்லியிலே இந்த மாநாட்டை நடத்துவதற்கு முன்பாகவே, 1998 ஆம் ஆண்டு மத்தியிலே பி.ஜே.பி. தலைமையிலான கூட்டணியாட்சி அமைக்கப்பட்டபோது, அவர்கள் தேசிய நிர்வாகச் செயல் திட்டம்—National Agenda for Governance—வகுத்தபோது அந்தக் கூட்டத்தில் நான் பங்கேற்று அந்த National Agenda for Governance என்ற அந்த Document-ல் ஒரு முக்கியமான அம்சமாக, இந்திய அரசியல் சாசனத்தின் 8-வது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 18 தேசிய மொழிகளையும் மத்திய அரசின் ஆட்சி மொழிகளாக ஆக்க வேண்டுமென்பதனைச் சேர்க்க வைத்தேன் என்பதனை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக மத்திய அரசு ஒரு குழு அமைக்கும் என்றும் அந்த National Agenda for Governance-ல் குறிப்பிடப்பட்டது. ஆனால் அந்தக் குழு அமைக்கப்படவேயில்லை. இன்றுவரை மத்திய அரசுக்கு ஆதரவு தெரிவித்துக்கொண்டிருக்கும் திரு. ஜி.கே. மணி அவர்களின் கட்சி அதையாவது வலியுறுத்தி ஏன் அந்தக் குழுவை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்று மாண்புமிகு திரு. ஜி.கே. மணி அவர்கள் இங்கே விளக்க வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஆயத்த வேலைகளை நாங்கள் செய்துவிட்டோம். அதற்கான அஸ்திவாரத்தை நாங்கள் போட்டுவிட்டோம். அதன் பிறகு நாங்கள் வெளியேறிவிட்டோம். இங்கே மாநில அரசில் இருக்கிறோம். இங்கிருந்து நாங்கள் மத்திய அரசுக்குக் கடிதங்கள் எழுதிக்கொண்டேயிருக்கிறோம். ஆனால் நீங்கள் மத்திய அரசுக்கு ஆதரவாகவே அங்கேயே இருக்கிறீர்கள். நீங்கள் அங்கேயே வலியுறுத்தி இதைச் செய்ய வைக்கலாமே? ஏன் செய்ய வைக்கவில்லை? (மேசையைத் தட்டும் ஒலி)அங்கே நாடாளுமன்றத்தில், டெல்லியிலே நீங்கள் ஆற்ற வேண்டிய கடமையை விட்டுவிட்டு, இங்கே மாநில அரசில், சட்டமன்றத்தில், இங்கே தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று ஏன் கோரிக்கை வைக்கிறீர்கள் என்பது புரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே தீர்மானம் நிறைவேற்றுவது குறித்து எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடர் நடக்கும்போது நிச்சயமாக இத்தகைய தீர்மானம் கொண்டுவரப்படும். இரண்டு அம்சங்களைக் கொண்ட தீர்மானம் கொண்டு வரப்படும் என்ற உத்தரவாதத்தை அளிக்கிறேன். ஒன்று, தமிழைச் செம்மொழியாக Classical Language — ஆக அறிவிக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வலியுறுத்தி ஒரு தீர்மானம். அதோடு இந்தியாவில் 18 தேசிய மொழிகளையும் தமிழ் உட்பட மத்திய அரசின் ஆட்சி



மொழிகளாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி நிச்சயமாக இங்கே தீர்மானம் கொண்டு வருவோம். எங்கள் கடமையை நாங்கள் எப்போதும் செய்துகொண்டேதான் இருக்கிறோம். உங்கள் கடமையைச் செய்ய நீங்கள் மறந்துவிடக்கூடாது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் திரு. ஜி.கே. மணி அவர்கள் இங்கே பேசுகின்றபோது, வரி மேல் வரி போட்டுக்கொண்டேயிருக்கிறீர்கள், மீனவர்களும் பாதிக்கப்படுகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். கடந்த ஆட்சியிலே எல்லாம் மீனவர்களின் வலைக்கு வரி விதிக்கப்பட்டிருந்தது. இபோதுதான் மீனவர் வலைக்கிருந்த வரியை நாங்கள் இரத்து செய்துவிட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி)ஆகவே 'மீனவ நண்பன்'— ஆகத்தான் இந்த அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் திரு. ஜி.கே. மணி அவர்கள் நன்றாக விவரம் அறிந்தவர். அவர் ஏதும் புரியாதவர் அல்ல; புதிய சட்டமன்ற உறுப்பினர் அல்ல. ஆகவே சில விஷயங்கள் நன்றாகத் தெரிந்திருந்தும், சிலவற்றை ஏதோ பதிவு செய்ய வேண்டுமென்பதற்காகச் சில கருத்துகளை இங்கே தெரிவிக்கிறாரா என்பது தெரியவில்லை. ஏற்கெனவே இந்த அரசு பொறுப்பேற்றபோதே கடுமையான நிதி நெருக்கடியில் இருக்கின்றோம் என்பதைத் திரும்பத் திரும்பச் சொல்லியிருக்கின்றோம். வெள்ளை அறிக்கையையும் நாங்கள் வெளியிட்டிருக்கின்றோம். அப்படி இருக்கின்றபோது, புதிய வரிகளே போடக் கூடாது என்கிறீர்கள். போட்ட வரிகளை எல்லாம் இரத்து செய்ய வேண்டுமென்கிறீர்கள். அப்படியானால் இந்த அரசு நிர்வாகத்தை எப்படி நடத்துவது? சம்பளங்களை எப்படிக் கொடுப்பது? வளர்ச்சித் திட்டங்களை எப்படிச் செயல்படுத்துவது? இதற்கு ஏதாவது யோசனை வைத்திருந்தால் அதை திரு. ஜி.கே. மணி அவர்கள் தெரிவிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது புதிய வரிகளையும் போடாமல், போட்ட வரிகளையும் இரத்து செய்துவிட்டு, எப்படி ஆட்சி நிர்வாகத்தை நடத்துவது என்பது குறித்து திரு. ஜி.கே. மணி அவர்கள் ஆலோசனை வழங்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் இங்கே விளக்கிச் சொன்னார்கள். தமிழ் ஆட்சி மொழியாவதைப்பற்றி மத்தியிலே நாங்கள் மத்திய அரசுக்கு ஆதரவாக இருந்துகொண்டிருக்கிறோம்; நீங்கள்தான் அந்தப் பணிகளைச்

செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். உள்ளபடியே நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். அந்தக் கடமையுணர்வோடுதான் நாங்கள் டெல்லியிலே நடந்த மாநாட்டிலே தமிழ் மொழி மாத்திரமல்ல, இந்தியாவிலே இருக்கக்கூடிய 18 மொழிகளிலும் அழைப்பிதழ்கள் அடித்தோம்.

பிற்பகல் 4-45

ஒருவருக்கு அழைப்பிதழ் என்று சொன்னால், 18 மொழிகளிலே 18 அழைப்பிதழ்கள் இருக்கும். அந்த வகையிலே கொடுத்து, அந்த மாநாட்டை நடத்தினோம். அந்த மாநாட்டிலேகூட-இந்தியத் துணைக் கண்டத்திலேயே மிகப் பெரிய வழக்கறிஞராக இருக்கக்கூடிய ராம்ஜெத்மலானி அப்போது அமைச்சராக இருந்தார்—அவர்கூட அந்த மாநாட்டிலே கலந்துகொண்டு பேசுகின்ற நேரத்திலே, என்னுடைய தாய்மொழி சிந்தி மொழி, மிகக் குறைவான மக்கள்தொகை பேசக் கூடிய மொழி. இதிலேகூட நீங்கள் அழைப்பிதழை அச்சிட்டுக் கொடுத்திருக்கிறீர்களே, தமிழர்களைப் போல பரந்த உள்ளம் கொண்டவர்கள், இந்தியாவிலே யாரும் இல்லை என்று சொல்லி அந்த மாநாட்டிலே பெருமையோடு பேசினார்கள். எல்லா தலைவர்களும் பேசியது, வட நாட்டிலே இருக்கக்கூடிய எங்களுக்கு உணர்வு இல்லாத நேரத்திலே, தமிழர்களுக்கு உணர்வு வந்திருக்கிறது, எங்கள் மொழியையும் ஆட்சி மொழியாக்கச் சொல்லி கேட்கிறீர்கள் என்று அவர்கள் பாராட்டிப் பேசியது மாத்திரமல்ல, அடுத்த நாள் மாநாடு முடிந்து காலையிலே பார்க்கிறோம். பத்திரிகையிலே செய்தி, என்னவென்று சொன்னால், பிரதமர் அவர்கள் 18 மொழிகளும் ஆட்சி மொழி ஆக்கப்படும் என்று உறுதியளித்ததோடு, புதியதாக குழு அமைக்கப்படும் என்று சொன்னார்கள். இது பத்திரிகையிலே வந்த செய்தி, இந்தக் குழுவை அமைக்கக் கூடிய பொறுப்பு, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் இராமதாஸ் அவர்களையே சாரும் என்றும் அந்தச் செய்தியைச் சொல்லிவிட்டு, அடுத்த நாள் அவர்களைச் சந்திக்கின்ற நேரத்திலே இந்தியாவிலே யார் யாரையெல்லாம் உள்ளடக்கி, உறுப்பினர்களாகக் கொண்டு அந்தக் குழு அமைக்க வேண்டும், அந்தக் குழுவை நீங்களே அமையுங்கள் என்று சொல்லி எங்கள் டாக்டர் ஐயாவிடத்திலே பிரதமர் அவர்கள் சொன்னார்கள். அதற்குப் பிறகு குழுவினுடைய உறுப்பினர்கள் பட்டியலை எல்லாம் தயாரித்துக் கொடுத்தோம். சில சங்கடங்கள், அரசியல் கூட்டணியிலே மாற்றங்கள். அப்படி வந்த



காரணத்தினாலேதான் அது விடுபட்டுப்போய் இருக்கிறது. தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி அந்தப் பணியை நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம். எங்களுடைய கட்சி ஒன்றும் பெரிய கட்சியல்ல. ஏதோ எங்களால் முடிந்த அளவிற்கு செய்துகொண்டிருக்கிறோம். நீங்கள் முதலமைச்சராக இருக்கிறீர்கள். இந்த மாநிலத்தை ஆட்சி செய்துகொண்டிருக்கக் கூடிய காரணத்தினாலே, எங்களுடைய முயற்சியோடு இந்த அரசாங்கத்தினுடைய முயற்சி பெருமுயற்சியாக இருக்கும் என்ற காரணத்தினாலேதான் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லி அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். நிதி ஆதாரத்தைப் பற்றிச் சொன்னார்கள். அந்தந்த...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு தெளிவான கேள்வியினை நம்முடைய மணியிடம் கேட்டார்கள். நம்முடைய மணி அவர்கள் இப்பொழுது ஏற்கெனவே ஒரு மாநாடு போட்டது பற்றியும், பிரதமருக்கு எடுத்துச் சொன்னது பற்றியும் எல்லாம் சொன்னார்கள். சிறிய கட்சி நாங்கள் என்ன பண்ண முடியும் என்று சொன்னார்கள். சிறிய கட்சியாக இருந்தாலும், பெரிய கட்சியாக இருந்தாலும், நீங்கள் N.D.A-விலே அங்கம் வகித்துக்கொண்டு இருக்கிறீர்கள். நீங்கள் கேட்ட அந்தக் குழுவைப் போடாததனாலே, தமிழ் மொழியை செம்மொழியாக அறிவிக்காததனால் குழுவைப் போடாததனால், நாங்கள் அந்த N.D.A.-விலே இருக்க மாட்டோம் என்று வெளியேறுவதற்கு சிறிய கட்சி என்ன, பெரிய கட்சி என்ன? ஆகவே அதைச் செய்யவில்லை என்றால், நாங்கள் வெளியேறுவோம் என்று அறிவித்துவிட்டு வரலாமே? அதைச் செய்வாரா என்பதுதான் என்னுடைய கேள்வி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நண்பர் ஞானசேகரன் அவர்களுக்கு அன்போடு சொல்லிக்கொள்கிறேன். இவர்கள் எல்லாம் தொடர்ந்து இந்த இந்தியத் திருநாட்டை — காங்கிரஸ் கட்சி — நேற்றைய வரையிலே மத்தியிலே பங்கேற்று, ஆட்சி செய்துகொண்டு இருந்த கட்சி. இதுவரையிலே நண்பர் ஞானசேகரன் அவர்களுக்கும், இந்தக் கட்சிக்கும் அதைப்பற்றி சிந்தனையே கிடையாது, வரவில்லை. ஆனால் குறுகிய காலத்திலே டெல்லிக்குச் சென்ற நாங்கள் மாநாட்டை நடத்தி பிரதமரிடத்திலே எடுத்துச் சொல்லி குழு போடுகிற அளவிற்கு இந்தக் கட்சி

[திரு. ஜி.கே. மணி] [2002 மே 9

செய்திருக்கிறது என்று சொன்னால், இது சாதனையா, இல்லையா? (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை, ஞானசேகரன், உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அந்த வகையிலே சின்ன கட்சி, பெரிய கட்சி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, இரண்டு மணித் துளிக்குள் முடித்து விடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** உறுப்பினர் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, உட்காருங்கள். ஞானசேகரன், உட்காருங்கள். மணி, இரண்டு மணித் துளிக்குள் முடித்துக்கொள்ளுங்கள். இன்னும் 4 பேர் பேச வேண்டும். (குறுக்கீடு) ஏராளமான சட்டமுன்வடிவுகள் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டியிருக்கிறது (குறுக்கீடு) ஞானசேகரன், உட்காருங்கள், அவர் பேசி முடித்த பிறகு கேளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போலவே திருக்குறள். திருக்குறளைப் போல உலக மக்களுக்குப் பயன்படக்கூடியது வேறு எந்த நூலும் கிடையாது. ஆகவே திருக்குறளை உலகப் பொதுமறை என்று சொல்கிறோம். இன்னும் எல்லோருக்கும், தமிழனுக்கும், தமிழ் மொழிக்கு, தமிழ் மண்ணுக்கு அல்ல, இந்தியாவிலே வாழக்கூடிய எல்லோருக்கும் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்று சொல்லக்கூடிய வகையிலே 1330 குறள்களை மனிதன் மனித நேயத்தோடு எல்லா வகையிலும் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய பண்புகளெல்லாம் அதில் எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கிறது. அது,

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்று சொல்வது, தமிழ்நாட்டிலே இருக்கிறவனுக்கு மாத்திரம் அல்ல, இந்தியாவிலே அல்ல, உலகமெங்கும் வாழக்கூடியவன் எல்லாம் புகழோடு தோன்ற வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. விவசாயத்தைப் பற்றி, கல்வியைப்பற்றி அல்லது வேறு எந்தப் பொருள்களைப்பற்றிச்



2002 மே 9] [திரு. ஜி. கே. மணி]

சொன்னாலும், பரந்த நோக்கத்தோடு சொல்லப்பட்டிருக்கக் கூடிய அந்தத் திருக்குறள் இதுவரையிலே தேசிய மொழி ஆக்கப்படாமல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேசிய மொழி அல்ல, தேசிய நூல் ஆக்கப்பட வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** தேசிய நூல். ஆகவே அந்த வகையிலே திருக்குறள் தேசிய நூலாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாளாக விடப்பட்டிருக்கிறது. ஆகவே திருக்குறளை இந்த மாமன்றத்திலே இருக்கக் கூடிய எல்லோரும் பயன்படுத்துகிறோம். ஆளுங்கட்சி வரிசையிலே, எதிர்க் கட்சி வரிசையிலே எல்லோரும் பேசுகின்றபோது உதாரணத்திற்கு; ஆதாரத்திற்காக சேர்த்துக் கொள்ளக்கூடிய திருக்குறளை தேசிய நூலாக ஆக்க வேண்டும் என்ற அந்தக் கோரிக்கையை முன் வைக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே தீர்மானத்தை நிறைவேற்றி, அதையும் மத்திய அரசுக்கு வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். தீர்மானத்தை நிறைவேற்றுவதிலே எங்களுக்கு எந்தச் சங்கடமும் இல்லை. நிறைவேற்றுவோம் என்று சொல்லிவிட்டார்கள். இதில் செய்ய வேண்டியது மத்திய அரசுதான். அதை நீங்கள் எந்த வகையிலே முயற்சி எடுத்து செய்ய வைக்கப் போகிறீர்கள் என்பதுதான் முதலமைச்சருடைய கேள்வி. ஆகவே அதற்குப் பதில் சொல்லிவிட்டு அதோடு பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இதை அரசியலுக்காகச் சொல்லவில்லை. எல்லோரும் சேர்ந்து செய்யக்கூடிய ஒரு கூட்டு முயற்சி. தமிழுக்குச் செய்யக்கூடிய, திருக்குறளுக்கு செய்யக்கூடிய மாபெரும் சேவை என்ற காரணத்தினாலே இதை நான் சொல்லிக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) சீக்கிரம் முடித்துவிடுகிறேன். பேச கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

[2002 மே 9

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** தலைவர் அவர்களே, அதற்காகத்தான் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனே, திருவள்ளுவருக்கு பெருமை சேர்ப்பதற்காகத்தான் இப்போது திருவள்ளுவர் பெயரிலே ஒரு புதிய பல்கலைக்கழகத்தை உருவாக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அது சம்பந்தமான சட்டமுன்வடிவுகூட இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே வர இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** அடுத்து மின் பற்றாக்குறையைப்பற்றி நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஏறக்குறைய 600 மெகாவாட்டுக்கு மேலே மின் பற்றாக்குறை இருப்பதாக அறிகிறோம். என்னுடைய தொகுதியிலே ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி இருக்கிறது. அங்கே குறைந்த செலவிலே, நிறைய மின்சாரம் பெறுவதற்குண்டான வாய்ப்பு இருக்கிறது. அதிலே கர்நாடகா, தமிழ்நாடு பிரச்சினை இருப்பதாகச் சொன்னார்கள். மறைந்த முன்னாள் அமைச்சர் மாண்புமிகு ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்களிடத்திலே நான் பல முறை பேசினேன். அவரும்கூட அதற்கான முன்மொழிவுகளையெல்லாம் அனுப்பினார்கள். கர்நாடக அமைச்சர் அவர்களிடத்திலேகூட நான் பேசினேன். அவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இரு மாநிலங்களுடைய ஒத்துழைப்பு தேவை என்றாலும்கூட, நம்முடைய தமிழ்நாடு அரசு இதிலே முயற்சி செய்து, அந்த ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியிலே புனல் மின் திட்டத்தைக் கொண்டுவருவதற்கு அவசியம் இந்த ஆண்டிலே உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியிலே இரண்டு நாட்களுக்கு முன்பு பெண்ணாகரம் பகுதியிலே இருக்கக்கூடிய ஏர்கோல்பட்டி என்ற கிராமம். அந்தக் கிராமத்திலே குடிநீர் குழாய் உடைக்கப்பட்டு, கழிவு நீரெல்லாம் கலந்து—இது இரவு நேரத்திலே நடந்தது—அதிகாலையிலே பெண்கள் தண்ணீர் எடுத்து, இரண்டு பெண்கள் இறந்திருக்கிறார்கள். 16 பெண்கள் உட்பட 60 பேர் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார்கள். ஆகவே அப்படி இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிவாரண நிதி வழங்க வேண்டும். அதை உடனடியாக ஆய்வு செய்து, குடிநீர்ப் பிரச்சினையிலே ஏற்படக்கூடிய பாதிப்பை உடனடியாகப் போக்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று இங்கே நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)



2002 மே 9] [திரு. ஜி.கே. மணி]

அடுத்து நான்கூட ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்து.. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, நேரம் ஆகிவிட்டது. இன்னும் 4 பேர் பேச வேண்டும். ஏராளமான சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன.

**திரு. ஜி.கே. மணி:** இதோ பேசி முடித்து விடுகிறேன். செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை. இந்த செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை எல்லைக்கு உட்பட்ட பகுதி கீழ்கொடுங்காலூர், வெம்பாக்கம். இந்த 2 டிவிஷன்களில் ஏறக்குறைய 150-க்கும் மேற்பட்ட கரும்பு விவசாயிகள் பயன் அடைகிறார்கள். அந்த கரும்பு விவாசாயிகளினுடைய இந்தப் பகுதியை இப்போது படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு. வாலாஜாவிலே இருக்கக்கூடிய தனியார் ஆலைக்கு மாற்றுவதாகச் சொல்லி, அதிகாரிகள் எல்லாம் அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இதனால் விவசாயிகள் போராட்ட திட்டங்களை எல்லாம் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே நம்முடைய அரசு இதிலே அதிகக் கவனம் செலுத்தி—5 கிலோமீட்டர், 7 கிலோமீட்டர், 10 கிலோமீட்டர் என்று இருக்கக் கூடியது, 80 கிலோமீட்டருக்குப் போக வேண்டிய பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே — மீண்டும் செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு உட்பட்ட பகுதியாக, அங்கேயே கரும்பைக் கொண்டு செல்வதற்கான காரியங்களைச் செய்துதர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஜெயங்கொண்டம் நிலக்கரி பிரச்சினை. இந்தத் தொழில் மிக முக்கியமானது. அந்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 23,000 ரூபாய் கொடுக்கிறார்கள். இது மிகப் பெரிய மோசடி. அதில் இருக்கக் கூடியது கருப்புத் தங்கம். ஒரு ஏக்கரிலே கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள நிலக்கரி இருக்கிறது. ஆகவே அந்த விவசாயிகளுக்கு 23,000 ரூபாய் என்பது போதாது. கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்துக்கொள்ளுங்கள். பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

[2002 மே 9

**திரு. ஜி.கே. மணி:** பேசி முடித்து விடுகிறேன். இப்போது கடுமையான வறட்சியால் என்னுடைய தொகுதியிலே குடிநீர் கஷ்டம். அமைச்சர் அவர்களிடத்தில்கூட சொன்னேன். நீங்கள் கலெக்டரிடத்தில் பேசுங்கள் என்று சொல்லிவிட்டார். ரொம்ப கடுமையான வறட்சி. என்னுடைய பெண்ணாகரம் தொகுதியிலே குடிநீருக்காக ரொம்ப தூரம் நடந்து போகிறார்கள். ஆடு, மாடுகளுக்கெல்லாம் தண்ணீர் இல்லை. தருமபுரி மாவட்டத்தில் மட்டுமல்ல. தமிழ்நாடு முழுவதும் வறட்சியாக இருக்கிற காரணத்தினாலே வறட்சி நிவாரண நிதியை மத்திய அரசிடமிருந்து நாம் கோர வேண்டும். இன்னும் ஒரு வாரம் போனால் என்ன ஆகும் என்று தெரியவில்லை. கடுமையான வறட்சி இருக்கிறது. ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, எல்லா மாவட்டங்களினுடைய வறட்சி நிலை என்ன என்பதை அறிந்து. அந்த வறட்சி நிவாரண உதவிகளைப் பெறுவதற்கு, வறட்சியைப் போக்குவதற்கு போர்க்கால அடிப்படையிலே திட்டங்களை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே கவுன்சிலிங், ஆசிரியர் மாற்றம் குறித்து இரண்டு விஷயங்களை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். கவுன்சிலிங் முறையிலே ஆசிரியர்களை மாற்றினார்கள். என்னுடைய தொகுதியிலே எல்லாம் கிராமப்பகுதிகள். ஆசிரியர்கள் எல்லாம், நகரங்களுக்கு, தருமபுரிக்கு போய்விட்டார்கள். ஓராண்டு காலத்திற்கு மேலாகியும்கூட இன்னும் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். இந்தப் பகுதியிலே உள்ள பள்ளிக்கூடங்களுக்கு ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்துக்கொள்ளுங்கள். வேறு நேரங்களில் பேசலாம்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்துக்கொள்ளுங்கள். போளூர் வரதன், 5 நிமிடங்களில் பேசி முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) நேரம் இல்லை. இன்னும் 4, 5 உறுப்பினர்கள் பேச வேண்டும். அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். சட்டமுன்வடிவுகள் ஏராளம் இருக்கின்றன.



2002 மே 9]

பிற்பகல் 4-55

**திரு. ஜி.கே. மணி:** இந்த அரியலூர் மாவட்டத்து மக்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். ரொம்ப ஏக்கத்தோடு இருக்கிறார்கள். மீண்டும் அரியலூர் மாவட்டம் தனி மாவட்டமாக இயங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு நமது அரசு ரொம்ப நிதி நெருக்கடியில் இருப்பதாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாம் எல்லோரும் பேசிக்கொண்டிருக்கிறோம். இந்த நிதி நெருக்கடியான நேரத்திலே மகாபலிபுரம் செல்லக்கூடிய வழியிலே 2000 ஏக்கரிலே ஒரு பெரிய நகரம், அலுவலகமெல்லாம் அமைக்கக்கூடிய திட்டத்திற்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் செலவாகும். இதை இந்த நேரத்திலே நம் அரசு நிதி நெருக்கடி இல்லாமல், இந்த நிதிச் சுமையெல்லாம் இல்லாமல்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்களே தவிர, எந்த நேரம் என்று சொல்லவில்லை. (சிரிப்பு) நீங்களாக ஏன்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பியதால், அரசிடம் இத்தகைய ஒரு திட்டம் உள்ளது என்பதைத் தெரிவித்தேன். நிச்சயமாக இவ்வளவு பெரிய திட்டத்தை செயல்படுத்த அரசிடம் போதிய நிதி ஆதாரங்கள் இல்லை. கடன் பெற்றுத்தான் இதைச் செய்ய வேண்டும். அதை காலப்போக்கில் செய்வோம். ஆகவே ஒரு நல்ல திட்டத்தைச் செயல்படுத்தக்கூடாது என்பது போல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசுவது அழகல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** கூடாது என்று நான் சொல்லவில்லை. இப்பொழுது நிதி நெருக்கடி. இந்த நேரத்திலே நிதி நெருக்கடி-ஆயிரக்கணக்கான கோடி செலவாகும்-அதைத்தான் சொல்ல வருகிறேன் நான். (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, முடித்துவிடுங்கள். திரு. போளூர் வரதன்.

[2002 மே 9

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறுதியாக நிதிநிலை அறிக்கையிலே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 27 ஆயிரம் கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அதிலே 12,000 கோடி ரூபாய் அரசினுடைய வருமானத்திலே காட்டப்பட்டிருக்கிறது. மீதம் இருக்கிற பணம் மையத் தொகுப்பிலே இருந்து நமது மாநிலத்திற்கு வருகின்ற பங்கு. இதர வழிகளிலே நிதிநிலையைச் சீர்செய்து இவ்வாண்டினுடைய இந்த அறிக்கையை செயல்வடிவம் கொடுப்பதற்கு அம்மா அவர்கள் எடுத்திருக்கின்ற முயற்சி பாராட்டிற்குரியது. இங்கே பேசுகின்ற உறுப்பினர்கள் எல்லாம் பணம் இல்லையே, நீங்கள் எப்படிச் செய்யப்போகிறீர்கள், இது சரி இல்லையே என்றுதான் சொல்கிறார்களே தவிர, இதை இப்படி அமைத்தால் தமிழகம் முன்னேறும் என்று சொன்னார்களா என்று சொன்னால், சொல்லவில்லை. எதிர்க் கட்சியாக இருக்கலாம், ஆளும் கட்சியாக இருக்கலாம். அண்ணன் துரைமுருகன் அவர்கள் காலையில் பேசினார். இன்றைக்கு வரமாட்டார் என்று நினைத்தேன். வந்திருக்கிறார். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், 1967-க்குப் பின்னாலே ஆட்சியிலே இருந்தது திராவிட இயக்கங்கள்தான். நாங்கள் இல்லை. 1967-க்குப் பின்னாலே மாறி மாறி நீங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபோது கொண்டுவந்த திட்டங்கள் இன்று மக்கள் மத்தியிலே நிலையாக நிலைத்திருக்கின்றன. நீங்கள் ஆட்சிக்கு வந்தபோது நிலையான திட்டங்களை இந்தத் தமிழ் மண்ணிற்குக் கொண்டுவந்தீர்களா என்று சொன்னால், இல்லை. ஜீரோ போட்டுப் பேசுவது ரொம்ப ஈசி. ஆனால் ஹீரோ ஆகணும். தி.மு.க. ஆட்சியில் இருந்த காலத்திலே மக்கள் நலத்திற்காக நாங்கள் இந்தத் திட்டங்களை இத்தனை ஆயிரம் கோடிக்குக் கொண்டுவந்தோம் என்று சொல்ல முடியுமா? சொல்லவில்லை. எம்.ஜி.ஆர். சொன்னார் சத்துணவு. அம்மா சொல்லியிருக்கிறார்கள். Free சைக்கிள். பின்னாலே வருகிறேன். நீங்கள் என்ன செய்தீர்கள்? சந்தை. காய்கறி சந்தை என்று சொன்னீர்கள். காய்கறி விலை என்ன, மழை வருமா? நீங்கள் ஆட்சிக்கு வந்தாலே மழையே வராது. அதுதான் உங்கள் ஆட்சியினுடைய சாதனைகள். (மேசையைத் தட்டும் ஒலி) காலையிலே இன்னொன்று சொன்னார். அதிகாரிகள் எல்லாம் ஒரு மாதிரி தவறான கணக்குகளைக் கொடுக்கிறார்களே, அதை எப்படி சரிசெய்யப் போகிறீர்கள் என்று



2002 மே 9] [திரு. போளூர் வரதன்]

கேட்டார். அவர்கள் ஆட்சியில் இருந்தபொழுது, நம் Health Minister இங்கு இருக்கிறார். அவருக்குத் தெரிந்திருக்கும். மற்றவர்களைவிட அவர்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும். **என்று ஒரு Additional Secretary. அந்த Department-ன் Secretary உத்தரவைப் போடுகிற மாதிரி அவரே கையெழுத்துப் போட்டு அனுப்பியிருக்கிறார். அதை அன்றைய செயலாளர் ** தலைமைச் செயலாளர், மரியாதைக்குரிய ** அவர்களின் knowledge-க்கு அதைக் கொண்டுபோகிறார். கொண்டு போனபோது நடவடிக்கை இல்லை. அவரை சும்மா just transfer பண்ணுகிறார்கள். அப்படியே இருக்கிறார். ** அவர்கள் retire ஆனவுடன், காலையிலே retire ஆகிறார், சாயந்திரம் அவர் திரும்ப பழைய சீட்டிலே உட்கார்ந்து, பழைய place-லேயே பார்த்தாரா, இல்லையா? உங்களுடைய ஆட்சியிலே! இதுதானே உங்களுடைய ஆட்சியிலே இருந்த இலட்சணம். ஆட்சிக்கு வந்தவுடன், அம்மா என்ன செய்தார்கள். அந்த அதிகாரியைத்தான் முதலிலே மாற்றினார்கள். Housing Board-லே...

பிற்பகல் 5-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரதன், அந்தப் பெயரைக் குறிப்பிட வேண்டாம்.

**திரு. போளூர் வரதன்:** மாற்றியவுடனே அந்த Department Secretary ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று சொல்லிவிட்டார். இப்போது அங்கே இருக்கிறார், Health Department-லே, அவர் என்ன பிரதமரா? அவர் செய்திருக்கின்ற சாதனை உங்களுடைய ஆட்சியிலே மிகப் பெரிய ஊழல் வேதனை. இந்த Health Department நாசமானதற்குக் காரணம், அவர்கள்தானே.

அதுமட்டுமல்ல, ** என்று ஒரு D.M.E., sorry இப்போது அந்தப் பெயரைச் சொல்வதற்குக் காரணம், அந்தத் துறையைச் சொல்லலாம், யார் என்று சொல்லமுடியாது. நீங்கள் வேண்டுமானால் பெயரை நீக்குவதாக இருந்தால் நீக்குங்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[2002 மே 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிகாரிகளுடைய பெயர் எதையும் சொல்ல வேண்டாம். குறிப்பிட்ட அதிகாரிகளின் பெயர்கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. போளூர் வரதன்:** ஒரு junior most அதிகாரியை, உங்களுடைய ஆட்சிக்காலத்திலே, 3 வருடங்கள், 4 மாதங்கள், எப்படி D.M.E.-ஆக கொண்டுவந்தீர்கள்? கொண்டுவந்தது மட்டுமல்ல, அந்த மூன்று வருடங்கள், நான்கு மாதங்களிலே, 14,000 transfers அந்த Department-லே போட்டிருக்கிறார். 14,000 transfers போட்டால், அந்தத் துறை உருப்படுமா? யாருக்காவது மருந்து கிடைத்திருக்குமா? நோய் போயிருக்குமா? இல்லையென்று சொல்கிறீர்களா? சொல்லுங்கள். அந்த மந்திரி இருக்கிறார், உண்மையில்லை என்று சொல்லட்டும். நாட்டிற்கு இது தெரிய வேண்டும். நீங்கள் செய்திருக்கின்ற சாதனை, 3 ஆண்டு காலத்தில், Health Department-லே மட்டும், 14,000 பேருக்கு transfer. எந்த நோயாளிக்கு நோய் தீர்ந்திருக்கும்? அரசாங்கத்தினுடைய பணம், மாறுதல் என்ற பெயரில்—ஒரு அதிகாரி மாறிப் போனால், அவருக்கு T.A. கொடுக்க வேண்டும். நீங்கள் போட்ட பட்ஜெட் முழுவதும், T.A.-வாகத்தான் போயிருக்கிறதே தவிர, மக்களுக்குச் சேவை செய்யவில்லை.

அதுமட்டுமல்ல. காலையிலே அவர் பேசுகின்றபோது, தீவிரவாதத்தைப்பற்றிப் பேசினார். அதற்கு முன்னாலே இன்னொன்றைச் சொல்லிவிடுகிறேன். அம்மா அவர்கள் முதலமைச்சராக ஆனவுடன், இந்த பட்ஜெட்டிலே சொன்னார்கள். Shortage-க்கு 3,000 கோடி ரூபாய் மத்திய சர்க்கார் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். கேட்டவுடன் எங்களுடைய காங்கிரஸ் முதலமைச்சர்கள், மாண்புமிகு கர்நாடகா Chief Minister கிருஷ்ணா அவர்கள் ஆதரித்தார்கள். கேரளா Chief Minister அந்தோணி அவர்கள் ஆதரித்தார்கள். சத்தீஸ்கர் மாநிலத்தினுடைய முதலமைச்சர் ஆதரித்தார். பஞ்சாப் மாநிலத்தினுடைய முதலமைச்சர் ஆதரித்தார். அசாம் மாநிலத்தினுடைய முதலமைச்சர் ஆதரித்திருக்கிறார். இப்படி 14 மாநில காங்கிரஸ் முதலமைச்சர்களிலே, பெரும்பாலானவர்கள் அது நியாயம், தமிழகத்தினுடைய முதலமைச்சர் கேட்கின்ற கோரிக்கை நியாயம், நாங்கள் ஆதரிக்கின்றோம் என்று சொன்னார்கள், ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள்.

இங்கே 40 எம்.பி.-க்கள். காங்கிரஸ் மத்தியிலே ஆண்டபோது, ஏதோ பெயருக்கு ஒரு மந்திரி, இரண்டு மந்திரி இருப்பார்கள். ரொம்ப



2002 மே 9] [திரு. போளூர் வரதன்]

இலட்சணம் மாதிரி. இந்த மாநிலத்திற்கு என்ன தேவையோ, அதைச் செய்துகொண்டு இருந்தார்கள். கடந்த 6 வருடங்களாக, டெல்லி மந்திரி என்பது, Headquarters டெல்லியே இங்கே இருப்பது மாதிரி, 10 மந்திரி, 15 மந்திரிகள் இன்றைக்கு டெல்லி மந்திரிகளாக இருக்கிறீர்கள். யாராவது நீங்கள், இந்த மாநிலத்தினுடைய வளர்ச்சியைக் கருதி, பார்லிமெண்டிலோ, பிரதமரிடமோ, நிதியமைச்சரிடமோ பேசி, 1,000 கோடி ரூபாய் திட்டத்தை இங்கே கொண்டுவந்தது உண்டா? நிதிப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை என்று பேசுகின்றீர்களே? அதைச் சரி செய்வதற்கு, இந்த முதலமைச்சர் எடுத்த முடிவை ஆதரித்தீர்களா? பாராளுமன்றத்திலே பேச வேண்டியதுதானே? அம்மா வந்து கையைப் பிடித்து இழுத்துவிட்டார்களா, நீங்கள் பேசக்கூடாது, எதிர்க் கட்சி என்று.

கர்நாடகத்திலே தண்ணீர் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள் என்றால், அங்கேயிருக்கிற மந்திரி, எம்.பி.-க்கள் எல்லாம் போய் Prime Minister-ஐப் பார்க்கிறார்கள். இங்கே நாம் அதை அரசியல் ஆக்குகிறோமே தவிர, தண்ணீர் வேண்டும் என்பதற்கு ஒரு தெளிவான திட்டத்தை, தமிழகத்திலே இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுக்கவில்லை. இந்த நிலை இப்படி இருந்துகொண்டே போனால், தமிழகம் தாழ்ந்துகொண்டிருக்குமே தவிர, நிமிர்ந்து நிற்காது. நல்லதைச் செய்யக் கூடியவர், துணிவோடு, ஆற்றலோடு இன்றைக்கு ஒரு முதலமைச்சர், தமிழ் மண்ணிலே இருக்கிறார்கள் என்று சொன்னால், அதற்கு ஆதரவு தாருங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை விட்டுவிட்டு, ஏதோ சுய நோக்கோடு, ஏதோ இவர்கள் புத்தருக்கு அடுத்தபடி, புத்தர் மாதிரி இவர்கள் எல்லாம் நாட்டிலே அஹிம்சைவாதிகள் போன்று--இவர்களுடைய செயல்களைப்பற்றி, காலையில் நம்முடைய பிரதான எதிர்க் கட்சித் துணைத் தலைவர் பேசினார். நான் கேட்கிறேன். 1979-லே, இந்திரா காந்தி அவர்களை மதுரையிலே என்ன செய்தீர்கள் என்று நினைத்துப் பாருங்கள். சரி, அங்கே தப்பித்து வந்தார்கள். சித்ரா டாக்கீஸ் முன்னாலே என்ன செய்தீர்கள்? அந்தக் காரிலே, அன்னை இந்திரா காந்தியோடு, நானும் அன்னை மரகதம் சந்திரசேகரும் வந்துகொண்டிருக்கிறோம். அன்றைய கமிஷனர் தேவாரம் அவர்கள், ஒரு ஜீப்பிலே முன்னாலே வருகிறார். அந்தக் காரையே எரிப்பதற்கு முயற்சி செய்த கட்சிதானே, நீங்கள். அன்றைக்கு தேவாரம் அவர்கள் துணிந்து முடிவெடுத்து சுடவில்லையென்று சொன்னால், அன்னை இந்திரா காந்தியினுடைய சாம்பல்தான் இந்த மண்ணிலிருந்து டெல்லிக்குச் சென்றிருக்கும். அந்த

இயக்கம் இன்றைக்கு இவற்றையெல்லாம் மறந்துவிட்டுப் பேசலாமா, அஹிம்சையை?

பிற்பகல் 5-05

1989-லே இங்கு என்ன நடந்தது? அம்மா, இங்கே இருக்கிறார்கள். துகில் உரிந்தவர்கள்தானே நீங்கள்? நாடு மறந்துவிட்டதா? சொல்கிறார்கள். இன்றைக்கு பிரபாகரனைப் பற்றிப் பேசக்கூடாது என்று. பிரபாகரனுக்கு இன்றைக்கு ஆதரவு கொடுக்கிறீர்களே, யார் அந்த பிரபாகரன்? உங்களுக்கும் அவர்களுக்கும் என்ன உறவு? எண்ணிப் பாருங்கள். ஜெயின் கமிஷனிலே என்ன சொல்லியிருக்கிறது? கருணாநிதிக்கு இதில் தொடர்பு இருக்கிறது. விசாரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நீங்களே முன் வந்து 'விசாரியுங்கள்' என்று சொல்ல வேண்டியதுதானே? ஏன் மறுக்கிறீர்கள்? உங்கள் கட்சியினுடைய துணைப் பொதுச் செயலாளர், சுப்புலட்சுமி அம்மாவிற்கும், அந்த ஒற்றைக்கண் சிவராசனுக்கும் தொடர்பு; அங்கே தங்க வைத்திருக்கிறார்கள் என்ற உண்மைகள். அந்த கமிஷனிலே சொல்லப்பட்டிருக்கிறதே. அப்படிப்பட்டவர்களைக் கூப்பிட்டு, மேடைபோட்டு, உட்கார வைத்துக்கொண்டு, கட்சியிலே பொறுப்பைக் கொடுத்துவிட்டு, தீவிரவாதத்தைப்பற்றி நீங்கள் பேசலாமா? அஹிம்சையைப்பற்றிப் பேசுகிறீர்கள். இந்த மண்ணிலே எல்.டி.டி.ஈ. வரக்கூடாது என்று இந்திய நாட்டில் இருக்கின்ற 35 முதலமைச்சர்களிலே முதல் குரல் கொடுத்த ஒரு வீரப் பெண்மணி நம்முடைய முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி) அச்சுறுத்தல்கள் இருக்கின்றன. அந்த அச்சுறுத்தல்களையும் மீறி, தமிழ் மண்ணிலே தீவிரவாதம் வரக்கூடாது என்ற ஓர் உயர்ந்த இலட்சியத்தோடு, தமிழ் மண்ணிலே தீவிரவாதம் வரக்கூடாது, இது ஒரு செழுமையான மண்ணாக இருக்க வேண்டும் என்று முயற்சிகள் எடுக்கிறார்கள். அந்த முயற்சிக்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? தமிழர்கள், இலங்கையிலே இருக்கிற தமிழர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று; நான் கேட்கிறேன். நான் தமிழன் இல்லையா? யசோதா அம்மா, தமிழர் இல்லையா? அண்ணன் பழனிசாமி, தமிழர் இல்லையா? நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர், தமிழர் இல்லையா? நாங்களும் தமிழர்கள்தானே? தொன்றுதொட்டு, ஆதிதிராவிடர் என்றால், கோயிலுக்குள் வரக்கூடாது; ரோட்டிலே போகக்கூடாது; உங்களுக்குச் சமமாக நாங்கள் துணி கட்டக்கூடாது. உரிமைப் போராட்டத்தில் ஆயிரம் ஆண்டுகளாக நாங்கள் இங்கே





மாண்டுகொண்டிருக்கிறோம். எங்களை நீங்கள் தமிழர்களாக ஏற்றுக்கொள்ளவில்லை. எங்கேயோ இருக்கிற தமிழனுக்குக் குரல் கொடுக்கிறீர்களே? முதலிலே. இந்த மண்ணிலே மடிந்து கொண்டிருக்கிறோமே, உரிமைக்குப் போராடிக் கொண்டிருக்கிறோமே, தாழ்த்தப்பட்டவர்கள், எங்களுக்கு முதலில் குரல் கொடுங்கள். அப்போதுதான் நீங்கள் தேசியவாதிகள், ஜனநாயகவாதிகள். அதை மறந்துவிட்டு, தீவிரவாத வியாபாரத்திற்குத் துணை போகின்ற நீங்கள். தமிழ் மண்ணைப் பற்றியோ, தமிழர்களைப் பற்றியோ பேசக்கூடாது. அப்படிப் பேசுவீர்களென்றால், போளூர் வரதன் தமிழனா, இல்லையா என்பதை நீங்கள் முடிவெடுக்க வேண்டும். இந்த மண்ணுக்குச் சொந்தக்காரன் கேட்கிறேன்; ஆதி தமிழன் கேட்கிறேன். என்னைத் தமிழனாக ஏற்றுக்கொள்வதற்கு உங்களுக்கு மனது இல்லை. சிலோனிலே இருக்கிற தமிழனுக்கு மட்டும் குரல் கொடுக்கிறீர்களே, ஏன்? இந்த மண்ணை அவர்கள் என்ன செய்தார்கள்? களங்கப்படுத்தினார்கள். காயப்படுத்தினார்கள். அன்பு பாசத்தோடு வந்த ராஜீவ் காந்தியை கொன்று, சாகடித்தார்கள். இந்த மண்ணை நம்பி வந்தவர்களை துரோக சிந்தனையோடு கொன்ற இயக்கங்களுக்கு யார் தமிழ் மண்ணிலே குரல் கொடுத்தாலும் எங்களுக்கு விரோதிகள். முதலிலே எங்களை தமிழனாக ஏற்றுக்கொள்ளுங்கள். தேர்தல் வரும்போது மட்டும்தான் தோழன் இல்லை. இன்றைக்கு நான் கேட்கிறேன், இந்த அவையிலே, இங்கு இருக்கின்ற தாழ்த்தப்பட்டவர்களெல்லாம் தமிழர்கள். இல்லையா? அந்த உணர்வு எங்கே உங்களுக்கு? பிரபாகரன்மீது இருக்கின்ற உணர்வு, உங்களோடு வாழ்ந்துகொண்டு, உங்களுடைய வளர்ச்சிக்காக, 24 மணி நேரமும் உங்களுக்காக உழைக்கின்றோமே, அடிமைகளாக, மாடுகள் போன்று உழைக்கின்ற அந்த தாழ்த்தப்பட்டவனுடைய உரிமைக்குக் குரல் கொடுத்ததுண்டா, நீங்கள்? இவற்றை மறந்துவிட்டு, எதையெதையோ இன்றைக்குப் பேசி, தீவிரவாதத்திற்கு நீங்கள் தமிழகத்திலே மீண்டும் வித்திடுகிறீர்கள் என்று சொன்னால், இதனுடைய முடிவு எங்கே போகும் என்பதை நீங்கள் எண்ணிப் பாருங்கள். ஏதோ அம்மாவிற்கு நான் முகஸ்துதிக்காக இதைப் பேசவில்லை. 35 பேர் இருக்கிறார்கள், முதலமைச்சர்கள். ஏன், பாண்டிச்சேரியிலேகூட எங்கள் முதலமைச்சர் இருக்கிறார். முன்னாலே இவர்கள் தீர்மானம் போட்ட பிறகு அவர்கூட பின்னால்தான் தீர்மானம் போட்டார்; இந்த நாட்டினுடைய இறையாண்மையை, இந்த நாட்டினுடைய சட்டம் — ஒழுங்கைக் காக்க வேண்டும் என்கின்ற ஒரு இலட்சியத்தோடு வாழ்கின்ற ஒரு வீரப் பெண்மணியைக் கொச்சைப்படுத்தக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிக்

[திரு. போளூர் வரதன்] [2002 மே 9

கொச்சைப்படுத்துகிறீர்கள் என்று சொன்னால், இந்த நாடு உங்களை மன்னிக்காது. ஆட்சிக்கு யார் வேண்டுமானாலும் வரலாம்; நாங்கள் வர வேண்டுமென்று எங்களுக்கு ஒன்றும் அவசியமே இல்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், காங்கிரசுக்கும் கொள்கையிலே பெரிய வித்தியாசங்கள் கிடையாது.

பிற்பகல் 5-10

சில நேரங்களில் கருத்து வேறுபாடுகள் ஏற்படும்போது கொஞ்சம் உரசல் ஏற்படும். பிறகு சரியாகிப் போய்விடும். ஆனால், நீங்கள் தொடர்ச்சியாக தீவிரவாதத்திற்கு வித்திட்டுவிட்டு, எங்கள் அம்மா சோனியா காந்தியிடம் போய் கும்பிடு போட்டால் என்ன நியாயம்? ஏற்றுக்கொள்வார்களா உங்களை? கும்பிடு வேண்டுமானால் போடலாம். (மேசையைத் தட்டும் ஒலி) நடக்காது. எந்தத் தோரணையிலே நீங்கள் எப்படிப் பாய்ந்தாலும் உங்களுடைய எண்ணங்கள், உங்களுடைய செயல்பாடுகள் எப்படி இருக்கும் என்பதைத் தமிழ் மண் மட்டுமல்ல இந்திய மண் நன்கு அறிந்திருக்கிறது.

நான் சொல்கிறேன், பற்றாக்குறை பட்ஜெட், பற்றாக்குறை பட்ஜெட் என்று சொல்லி மக்களை ஏமாற்றாதீர்கள். ஆட்சியிலே இருக்கிறீர்களே டெல்லியிலே, அங்கே போராட்டங்கள் பண்ணுங்களேன். நாங்கள் வேண்டாமென்று சொல்லவில்லையே. அம்மா 3000 கோடி ரூபாய் கேட்டால் நீங்கள் 10 ஆயிரம் கோடி ரூபாய் அங்கேயிருந்து வாங்கிக் கொடுங்கள். மிக்க நன்றி. தமிழகம் முன்னேறும். பக்கத்திலே இருக்கிற நாயுடு என்ன செய்கிறார்? அங்கே என்ன 5 மந்திரிகளையா கேட்டார்? அவர் வாங்கவில்லை நிதி? ஏன் நீங்கள் மந்திரிகளாக இருக்கிறீர்களே, நீங்கள் வாங்கி வரக்கூடாது? வாங்க முடியவில்லையே. குறை சொல்லியே, குற்றங்களைச் சொல்லியே நீங்கள் அரசியல் பண்ணலாமே தவிர, இந்த நாட்டின், தமிழ் மண்ணினுடைய வளர்ச்சிக்கு உங்களால் எதையும் செய்ய முடியாது. இந்தப் பற்றாக்குறை ஏற்பட்டதற்கு காரணமே உங்களுடைய ஆட்சிதானே. உங்களுடைய நிர்வாகத் திறமையின்மைதானே. திட்டங்கள் போட்டீர்களே, எத்தனை திட்டங்களைத் தன்னிறைவுத் திட்டங்களாக இன்றைக்கு நிறைவேற்றிச் சென்றிருக்கின்றீர்கள்? நீங்கள் போட்ட திட்டங்களை உருப்படியாகச்—(மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடத்தில் முடித்துக்கொள்கிறேன்—செய்தது உண்டா? இன்றைக்குச் சொல்கிறார். நான் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பைக் கொடுத்திருந்தேன். அது நாளைக்கு வருகிறதோ,



2002 மே 9] [திரு. போளூர் வரதன்]

இல்லையோ தெரியவில்லை. இருந்தாலும், இந்த உண்மையைச் சொல்ல வேண்டுமென்பதற்காக, பேரவைத் தலைவர் அவர்களே எனக்கு இரண்டு நிமிடங்கள் அவகாசம் வேண்டும். வருமானத்தைப் பெருக்க வேண்டும், வருமானத்தைப் பெருக்க வேண்டும் என்று சொல்கிறோம். அப்படி வருமானத்தைப் பெருக்குகின்றபொழுது சில திட்டங்கள், அரசினுடைய திட்டங்கள் தெளிவாக இருக்க வேண்டும். அரசாணை 261 போட்டிருக்கிறார்கள். அந்த அரசாணையை 1974-லே அவர்களுடைய அன்றைய ஆட்சியாளர்கள் போட்டிருக்கிறார்கள். அது 1997-லே முடிந்திருக்கிறது. திரும்பவும் அதை renewal செய்து இருக்கிறார்கள், அவர்கள் ஆட்சி இருந்தபோதே. அது என்ன என்றால் மகாபலிபுரம் ரோட்டிலே 1,435 ஏக்கர் நிலம் உப்பளத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு அதிலே இறால் பண்ணைகள் வைத்திருக்கிறார்கள். இறால் பண்ணை வைப்பதற்கு அனுமதி கொடுக்கவில்லை. உப்பளம் தயாரிக்கத்தான் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ஆட்சியிலே நிர்வாகம் எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை நான் சொல்கிறேன். போளூர் வரதனோ அல்லது ஒன்றும் இல்லாதவனோ போய்க் கேட்டு—அரை ஏக்கரில், அங்கேயிருக்கிற மீனவர்கள், பக்கத்திலே குட்டை மாதிரி செய்து அதிலே மீன் வளர்ப்பதற்கு அனுமதி கொடுக்கவில்லை. அடித்துத் துரத்திவிட்டிருக்கிறார்கள். அப்படித் துரத்துகின்றபொழுது, அந்தத் தேவாணிக்குப்பம் என்ற ஊரிலே மீனவர்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து, ஒரு பெரிய போராட்டமே அங்கு நடந்திருக்கிறது. ஒரு tension. அவர்களுடைய காலத்திலேயே செய்து கொடுத்திருக்கிறார்கள். உங்களுக்கு உண்மையிலே, அந்த ஆட்சியிலே வருமானம் வர வேண்டும் என்றால்—இறாலிலே நல்ல வருமானம். இலாபம் கிடைக்கக்கூடிய ஒரு தொழில். கடற்கரையிலே 1,435 ஏக்கரில் இறால் பண்ணை அமைக்க அனுமதி கொடுத்திருக்கிறீர்களே, ஏன் அதை அரசாங்கமே எடுத்து நடத்தியிருக்கக்கூடாது?

அதுமட்டுமல்ல. அதே நேரத்திலே செங்கல்பட்டு தாலுகாவிலே, சர்வே எண் 1077-லே, 22-6-1982-லே அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அங்கே கிட்டத்தட்ட 3,611 ஏக்கர் 69 சென்ட். அந்த ஊர் பெயர் எல்லாம் இருக்கிறது என்னிடம். படித்தால் நேரம் ஆகும். இப்படி கிட்டத்தட்ட 5 ஆயிரம் ஏக்கர் நிலங்களை கடந்த கால ஆட்சியாளர்கள் உப்பளம் என்ற பெயரிலே இறால் பண்ணை அமைப்பதற்கு அனுமதி கொடுத்தார்களே, இது எதைக் காட்டுகிறது? இந்தத் தமிழ் மண்ணிலே நிதிநிலையை உயர்த்துவதற்கா கொடுத்தீர்கள்? யார் வீட்டுப் பெட்டியை நிரப்புவதற்காகக் கொடுத்தது இது? தமிழ்நாடு கஜானாவிற்காகவா

[திரு. போளூர் வரதன்] [2002 மே 9

கொடுத்திருக்கிறீர்கள்? 5 ஆயிரம் ஏக்கர் நிலம். பீச்சிலே ஓர் ஏக்கர் நிலம் என்ன போகும் என்று நீங்களே முடிவு செய்யுங்கள். எனக்குத் தெரியாது. நாங்கள் எல்லாம் பீச்சிலே நிற்பதற்குக்கூட ஜாதியைப் பார்க்கிறார்கள். நம்முடைய சட்டத் துறை அமைச்சர் சிரிக்கிறார். அவரையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். அவர் வலையை எடுத்துக் கொண்டு போனால்தான் விடுவார்கள். இல்லையென்றால் விடமாட்டார்கள். இந்த நிலை. 5 ஆயிரம் ஏக்கர் நிலத்தை, நம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே சொல்வது, அரசுப் பண்ணைகளாக மாற்றினால் அதில் இலாபம் வருகிறது. அந்த இறால் பண்ணையை அரசு ஏற்று நடத்தினால் மீனவர்களுக்கு, ஆயிரக்கணக்கான மீனவர்களுக்கு வாழ்வு கிடைக்கும். தமிழக சர்க்காருக்கு நிதி கிடைக்கும். யாரோ ஒருவர் சுயநலப் போக்கிலே பயன்படுத்துவதைத் தவிர்த்து தமிழகத்து மக்கள் பயன்படுத்துவதற்கு நீங்கள் உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-15

தமிழகத்திலே இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில், நிதிப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை என்று சொல்லிக் கொண்டு ஆண்டுகள்தோறும் உருண்டோடிவிடக்கூடாது. நல்ல ஒரு நிதியமைச்சரை நீங்கள் பெற்றிருக்கின்றீர்கள். எம்.ஜி.ஆர். அவர்களிடம் வேலை பார்த்தவர்கள், உங்களிடமும் வேலைப் பார்க்கிறார்கள். எம்.ஜி.ஆரால் உருவாக்கப்பட்ட தாங்கள் ஒரு சிறந்த தேசியவாதி என்பதை நிரூபித்துக் கொண்டேயிருக்கிறீர்கள். அச்சம் என்பது உங்களுக்கு இல்லை. ஆனால் இந்த மண் வாழ வேண்டுமென்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறது. அந்த நம்பிக்கையின் பேரிலே கேட்கிறேன். தமிழகம் உங்கள் காலத்திலே வாழ்ந்ததாக வரலாறு இருக்க வேண்டும். காலையிலேகூட அண்ணன் சொன்னார், துரைமுருகன் சொன்னார். ஜோதி அம்மா அங்கே உட்கார்ந்து இருக்கும்போது பேப்பரைப் பார்த்துப் படித்தால் அந்த அம்மா அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கிவிட்டார்கள் என்று சொன்னார்கள். எங்களுடைய பண்பு அது. இன்றைக்கு நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? பார்த்துப் படிக்கிறது பாவம் என்றால் இங்கே வரமுடியாமல் தினம் பக்கம் பக்கமாக எழுதி ஊரைக் குழப்பி, மக்களைக் கெடுத்து, நாட்டைக் கெடுத்தது போதாது என்று இங்கே வராததற்கான காரணங்கள் குறித்து பக்கம் பக்கமாக எழுதுகிறார்கள். அதற்கு அவர் என்ன சொல்வார் என்று எனக்குத் தெரியவில்லை. எழுதுவதும், பார்ப்பதும், படிப்பதும் மக்களுக்கு மனமாற்றம் ஏற்படும்



2002 மே 9] [திரு. போளூர் வரதன்]

என்று சொன்னால், மக்களுக்கு நாம் செய்கின்ற சேவை, நாம் கொடுக்கின்ற திட்டத்தில் இருக்கின்ற அந்த உண்மையான ஈடுபாடு, மக்களுடைய வளர்ச்சியைப் பார்க்க வேண்டும். திட்டத்தினுடைய வளர்ச்சியைப் பார்க்க வேண்டும். பயனாளிகளைப் பார்க்க வேண்டும். இந்தத் திட்டத்தினால் எத்தனை இலட்சம் பேர் நன்மை பெற்றிருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். எத்தனை கோடி வந்தால் பெட்டி நிரம்பும் என்று பார்க்கக்கூடாது. நம்முடைய பீச் மாதிரி. ஆகவே நான் மாண்புமிகு அம்மா அவர்களை மெத்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திலே இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கப்படுகின்ற வீடுகள், ஒவ்வொரு பஞ்சாயத்திலேயும், பஞ்சாயத்துத் தலைவர், ரூ.4 ஆயிரம் கொடுங்கள், 5 ஆயிரம் கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) சாதாரண ஏழைகளுக்கு—முடித்துவிடுகிறேன்—சாதாரண ஏழைகளுக்குச் செல்லக்கூடிய அந்த வீடுகள் இன்றைக்கு விலை பேசப்பட்டு இருக்கின்றன. அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு எந்தத் தலைவர் அந்த மாதிரி பணம் கேட்டாலும் அவருடைய தலைவர் பதவியை நீக்குவதற்கு ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து, நேரடியாக அந்த ஏழைகளுக்குப் போய்ச் சேருவதற்கு இந்த அரசு முயல வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய தலைவி அன்னை சோனியா காந்தி அவர்கள், அவர்களுடைய தலைமையிலே இருக்கின்ற 14 முதலமைச்சர்களும் இன்றைக்கு உங்களை ஆதரிக்கின்றார்கள். மத்திய அரசோடு நீங்கள் போராட்டம் செய்து இந்த மாநிலத்திற்குக் கிடைக்க வேண்டிய நிதியை நிச்சயம் நீங்கள் பெற்று, நீங்கள் போட்டிருக்கின்ற இந்த பட்ஜெட் வெற்றிகரமான பட்ஜெட்டாக மாற வேண்டுமென்று காங்கிரஸ் சார்பிலே என்னுடைய கருத்தைச் சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமசந்திரன். (குறுக்கீடு) உங்கள் தலைவர் பேச வேண்டும்.

**திரு. கே.சி. கருணாகரன்:** ஒரு clarification இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் போளூர் வரதன் அவர்கள் இங்கே பேசியது அவருடைய சொந்தக் கருத்தா, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினுடைய கருத்தா என்பதைத் தெரிவிக்க வேண்டும். ஏனென்று சொன்னால் இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகின்ற பேச்சுக்கும், வெளியிலே காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்கள் பேசுகின்ற பேச்சுக்கும் நிறைய வித்தியாசம்

[திரு. கே.சி. கருணாகரன்] [2002 மே 9

இருக்கிறது. ஆகவே இதை எந்தக் கணக்கிலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதை விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய கொறடா. எங்களுடைய கட்சியினுடைய கொள்கையை நான் சொல்லியிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான், கம்யூனிஸ்ட் கட்சி போராட்டம் செய்கின்ற இடத்திலே தொழிலாளர்களைப் பார்த்து ஒரு பேச்சு பேசுவார்கள், முதலாளிகளைப் பார்த்து ஒரு பேச்சு பேசுவார்கள், கடைக்காரர்களைப் பார்த்து ஒரு பேச்சு பேசுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை வரதன், கருணாகரன் கேட்டதற்குப் பதில் சொல்லுங்கள், அவ்வளவுதான்.

**திரு. போளூர் வரதன்:** அவர்கள் பேச்சு எங்களுக்குத் தெரியாது. நாங்கள் பேசுவது எங்களுடைய கட்சியினுடைய தலைமை என்ன சொல்லுகிறதோ அதைத்தான் இங்கே சொல்லமுடியுமே தவிர, வெளியிலே பேசுகின்ற பேச்சுக்கெல்லாம் இந்த அவையிலே பொறுப்பேற்க வேண்டுமென்று சொன்னால், அது அவருடைய கட்சியினுடைய பாலிசியாக இருக்கலாம். காங்கிரஸினுடைய பாலிசி அதுவல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யசோதா அவர்கள் ஏதேனும் சொல்ல வேண்டுமா?

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவி அன்னை சோனியா காந்தி இன்றைய வரையிலும் நல்ல விஷயங்களுக்கு, முழுக்க முழுக்க ஆதரவு தெரிவிக்கச் சொல்லி, நம்முடைய கொள்கைக்குப் புறம்பாக ஏதேனும் காரியங்கள் அங்கே நடைபெற்றால் அதற்கு உங்களுடைய எதிர்ப்பை எந்த அளவிற்குத் தெரிவிக்க வேண்டுமோ அந்த அளவிற்கு நீங்கள் நாகரிகமான முறையிலே தெரிவிக்க வேண்டுமென்று உறுப்பினர்களுக்குப் பணித்து இருக்கிறார்களே தவிர, ஒரேயடியாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நடைமுறைகளை, செயல்பாடுகளை அநாகரிகமான முறையிலே எங்களை விமர்சனம் செய்யச் சொல்லி எங்கள் தலைமை எங்களுக்குக் கட்டளை பிறப்பிக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



2002 மே 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி அநாகரிகமாகப் பேசினால் அவர்கள் திருத்துவார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் கம்யூனிஸ்ட்கள். தொழிலாளிகளைப் பார்த்து ஒன்றைப் பேசுகிறார்கள். முதலாளிகளைப் பார்த்து ஒன்றைப் பேசுகிறார்கள் என்று சொன்னார். ஆமாம்; முதலாளியிடம் பேச வேண்டியதைத் தொழிலாளியிடம் பேச வேண்டுமா? தொழிலாளியிடம் உன்னுடைய உரிமையைப் பாதுகாத்துக் கொள்வதற்கு நீ நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்வோம். முதலாளியைப் பார்த்து நீ தொழிலாளியைச் சுரண்டாதே, அவர்களுக்குக் கொடுக்கக் கூடியதை சரியாகக் கொடு என்று கேட்போம். எப்படி, அது இரண்டும் இரண்டு பொருள்தானே, இரண்டு பாலிசிதானே. இது ஊரறிந்த விஷயம். நம்முடைய கொறடா அவர்களுக்குத் தெரியவில்லையென்று சொல்கிறார். அது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கட்டும். அதனாலே எனக்கு நேரமும் இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றை அவரிடம் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 5-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் வரதன். அவர் பேசி முடிக்கட்டும். அப்புறம் சொல்லலாம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** 1977 ஆம் ஆண்டிலேயோ அல்லது 1978 ஆம் ஆண்டிலேயோ, இந்திரா காந்தி அவர்களைச் சிறையில் வைத்தார்கள் என்ற காரணத்திற்காக, கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்கலைக்கு அருகாமையில் வெள்ளியோட்டில் ஓடுகின்ற பஸ்ஸைத் தடுத்து நிறுத்தி தீ வைத்து 13 அப்பாவிகளுடைய உயிரை காங்கிரஸ்காரர்கள் எடுக்கவில்லையா? அது என்ன கொள்கை? (குறுக்கீடு) அது என்ன என்று கேட்கிறேன். அதிலே இறந்தவர்கள் எல்லாம் தொழிலாளர்கள். (குறுக்கீடு) இறந்தவர்கள் தொழிலாளர்கள்.

நான் இந்தநேரத்திலே என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த நாட்டிலே தொழிலாளர்களும் தொழில்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில்,

பிளாஸ்டிக் பொருட்கள் சம்பந்தமான அந்தச் சட்டமுன்வடிவு பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்படுகிறது என்று அறிவித்தார்கள். நாங்களும் அந்தக் கோரிக்கையை வைத்தோம். அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டதற்கும், ஒரு முடிவை அறிவித்ததற்கும் எங்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில், அந்த உணர்வோடு இந்த நாட்டிலே இருக்கிற உழைப்பாளி மக்களுடைய பிரச்சினைகளைப் போக்கி தொழில்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் எடுக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்திலே இருக்கிற பிரதான தொழில் ஸ்தாபனங்கள் — நெய்வேலி, சென்னை பெர்டிலைசர்ஸ், இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ், இந்துஸ்தான் போட்டோ பிலிம் போன்ற தொழிற்சாலைகள் மூடப்படுகிற ஆபத்து இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட இருக்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க முடியுமோ அவை எடுக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால் இந்த அவையில் நாளையே அதற்கான ஒரு தீர்மானத்தைக்கூட போட்டு நாம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பலாம். அந்த முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இந்த நேரத்திலே நம்முடைய தொழிலாளர்களுடைய பிரச்சினைகள் என்று வருகிற நேரத்தில், ஏராளமான தொழிற்தகராறுகள் குறித்த கோப்புகள் இந்த Labour Department-ல் தேங்கி நிற்கின்றன. உதாரணமாக தேனி மாவட்டத்தில் Highways Estate-ஐ மூடியிருக்கிறார்கள். தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் வாங்கிக்கொண்டிருந்த சம்பளத்தை வெட்டுவது என்ற முடிவோடு அந்த முதலாளிகள் செய்திருக்கிறார்கள். நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், தமிழக அரசு இந்தத் தோட்டப் பகுதிகளில் நியாய விலைக் கடைகளைத் திறந்து அவர்களுக்கு மலிவு விலையில் பொருட்கள் கிடைக்கச் செய்வதற்கான ஒரு நடவடிக்கை எடுப்பதுபற்றி பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நம்முடைய போக்குவரத்துத் துறையின் தொழிலாளர்கள், மின்சாரத் துறையின் தொழிலாளர்கள், மற்ற நிறுவனங்களில் வேலை செய்கிற தொழிலாளர்களுடைய ஊதியப்





பிரச்சினைகள், அதேபோன்று போனஸ் பிரச்சினைகள் எல்லாம் இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவற்றின்மீது தமிழக அரசு பேச்சுவார்த்தை நடத்தி சில முடிவுகளை அறிவித்து அவர்களுடைய வேலைநிறுத்தப் போராட்டத்தைத் தவிர்த்தார்கள். பாராட்டுகிறோம். ஆகவே இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, அவர்கள் பிரச்சினைகளைப் பொறுத்தவரைக்கும் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி, தீர்வு காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அதேபோல், Pension, Gratuity போன்ற பிரச்சினைகளில் ஏற்கெனவே இருந்த உரிமைகளைப் பாதிக்கக்கூடிய முறையிலே நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகப் பேசப்படுகிறது. அந்த முறையில் ஏதேனும் நடவடிக்கைகள் இருந்தாலும் அவையும் மாற்றப்பட வேண்டும்.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினையைப் பொறுத்தவரையில் மத்திய அரசினுடைய பொருளாதாரக் கொள்கை காரணமாகத்தான் இந்தத் தேயிலை விலை வீழ்ச்சியும் பாதிப்பும் ஏற்பட்டிருக்கிறது என்பது அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில் தெள்ளத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மாநில அரசுகூட Agricultural Income Tax 65 சதவிகிதத்தை வசூலித்துக் கொண்டிருக்கிறது. Central Income Tax-னுடைய அளவுக்கு அதைக் கொண்டு செல்ல வேண்டுமென்ற கோரிக்கை அவர்களால் வைக்கப்பட்டிருக்கிறது. அதையும் அரசு பரிசீலிக்க வேண்டும்.

பிற்பகல் 5-25

இன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே ஒரு கேள்வியைக் கேட்டார்கள். அதாவது, 'நீங்கள் வரியும் போடக்கூடாது; அதே நேரத்தில் இருக்கிற வரிகளையெல்லாம் குறைக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள்; அப்படி என்றால், எப்படி ஆட்சி நடத்துவது?' என்று. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, மேற்கு வங்காள நிதியமைச்சர் இதுசம்பந்தமாக அங்கே நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறார். Budget Speech-லே உள்ள அந்த portion-ஐ நான் படிக்கிறேன். அதுதான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நிலை. ``In odrer to maintain our international competitive

position, it will be important in terms of the alternative economic policy to reduce our dependence on external loans and rely more on internal resource mobilisation, with a special emphasis on unearthing of black money on the basis of Centre-State co-operation." அந்த முறையிலே உள்ள நடவடிக்கையை இந்த அரசு ஏற்றுக்கொள்ளலாம். அதற்கு எந்தத் தடையும் இல்லை.

That is our alternative policy. ஆகவே அந்த முறையிலே மேற்கு வங்காளத்திலே, அதுபோன்று திரிபுரா மாநிலத்திலே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற, ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற அரசுகளினுடைய நிலை என்ற அந்தப் பொறுப்புணர்ச்சியோடுதான் நாங்களும் சில விஷயங்களைச் சொல்கிறோம். இந்த நாட்டிலே இருக்கிற மக்களுடைய பிரச்சினைகள் என்று பார்க்கிற நேரத்திலே, நான் ஒன்றை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புவது, நம்முடைய மாநில அரசு உணவு மானியத்தைப் பொறுத்த அளவிலே— ஏற்கெனவே நான் இது சம்பந்தமாகப் பேசுகிற நேரத்திலே ஒன்றைச் சுட்டிக்காட்டினேன்.— இன்று வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்களுக்குக் குறைந்த விலையிலே அரிசி கொடுப்பது என்ற திட்டத்தை அரசு கடைப்பிடிக்கிறது. நான் அதைப் பாராட்டுகிறேன். அதேநேரத்திலே, அதிலே இன்னும் தெளிவில்லாத நிலைமை இருந்துகொண்டிருக்கிறது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. இன்று கூப்பன் சிஸ்டத்தை வைத்திருக்கிறோம். கூப்பன் சிஸ்டத்திலே, அந்த வீட்டினுடைய— கார்டில் உள்ள தலைவன்தான் போய் வாங்க வேண்டுமென்று சொல்வது, பிரச்சினைகளை, கஷ்டத்தை ஏற்படுத்தும். அந்தக் கார்டிலே இருக்கிற எவரேனும் ஒருவர் போய் வாங்குவதற்கான அந்த நிலையை உருவாக்குவதுபற்றி அரசு சிந்திக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. நான் அமைச்சர் அவர்களிடம் ஒருநாள் இதுகுறித்துப் பேசினேன். அவர் சில பிரச்சினைகளைச் சொன்னார். இதிலே நீங்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டுமென்று சொன்னார். ஒத்துழைப்பைப். பொறுத்த அளவிலே நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், அதிலே மக்களுக்குப் பிரச்சினைகள், பாதிப்பு இருக்கிறது என்பதையும் அரசு கருத்திற்கொண்டு, மக்களுக்குப் பாதிப்பு இல்லாத முறையிலே அதை அமல்படுத்த வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. அதை முறைப்படுத்துவதைப் பொறுத்த அளவிலே, நாங்கள் ஒன்றும் அதற்கு எதிரி அல்ல. இன்று அந்தமாதிரி ஏழையெளிய மக்களுக்குக் கொடுக்கப்படுகிற உணவுப் பொருள்கள்; அதை misuse செய்யக்கூடாது என்பதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை.





அதேபோன்று, நான் ஒன்றை இங்கே சுட்டிக்காட்ட விரும்புவது. எங்களுடைய கருத்து, 5 ஆயிரம் ரூபாய் இன்று மாத வருமானம் இருக்கக்கூடியவர்கள்கூட, வாழ்க்கை நடத்துவதற்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த அமைப்பை—அந்த வருமானம் உள்ளவர்களுக்கான வரையறையை, அதாவது limit-ஐ 5 ஆயிரம் ரூபாய் வரை என்று வைக்க முடியுமா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும் என்பது எங்களுடைய வேண்டுகோள். அதேபோன்று. இன்று... (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு மலிவு விலையில், நியாய விலைக் கடைகளில் அரிசி வழங்கப்படுகிறது என்று சொல்லியிருக்கிறோமே தவிர, அதற்கு வருமான வரம்பு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. ஆகவே இந்த 5 ஆயிரம் ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை எழாது. எந்த வருமான வரம்பும் நிர்ணயிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. நான் ஒன்றை எடுத்துக்காட்ட விரும்புவது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பட்டுச் சேலைக்கும், அதேபோன்று விசைத் தறிக்கு எல்லாம் சில சலுகைகளை அறிவித்தார்கள். ஆனால் இன்று கை நெசவுத் தொழிலாளர்கள் கடுமையான பாதிப்புக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள். இலவச வேட்டி, சேலைகளை அவர்கள் உற்பத்தி செய்து, வாங்கப்படாத நிலை இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. அதேநேரத்திலே அவர்களிடமிருந்து ஏற்கெனவே வாங்கியதற்குப் பணம் கொடுக்கப்படவில்லை என்ற நிலையும் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே இதற்கும் ஒரு விமோசனத்தை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) 2 அல்லது 3 நிமிடங்கள் கொடுங்கள்.

பிற்பகல் 5-30

இன்னொரு விஷயத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புவது, நம்முடைய தொழில் துறையைப் பொறுத்தவரையிலே, ஏற்கெனவே 'TIIC' என்ற ஸ்தாபனம், அதாவது Tamil Nadu Industrial Investment Corporation என்ற ஒரு ஸ்தாபனம் உருவாக்கப்பட்டது. அது நம்முடைய சிறு

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2002 மே 9

தொழில்களை நடத்தக்கூடியவர்களுக்கு உதவி செய்வதற்கு உருவாக்கப்பட்டது. ஆனால் சென்ற ஆட்சியிலே, மத்தியிலே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற சில ஆட்களுடைய ஆலோசனையின்படி 'SIPCOT'-ஐயும், இந்த 'TIIC'-ஐயும் அவர்கள் சேர்த்துவிட்டார்கள். State Finance Corporation-னுடைய ஆலோசனை என்று சொல்லிச் சேர்த்தார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால், SIPCOT-லே கொஞ்சம் பணம் இருக்கிறது. 'TIIC'-லே அந்த அளவுக்குப் பணம் இல்லை. இந்த இரண்டையும் ஒன்றாகச் சேர்த்தால் அதை வேறுமாதிரி பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற அந்த எண்ணத்தோடு அவர்கள் எடுத்து, இப்போது high level அல்லது big industries level-இல் அந்த ஸ்தாபனத்தை உருவாக்கிவிட்டதனாலே 'TIIC'-லே எந்த அளவுக்குப் பிரயோஜனம் சிறு தொழில் நடத்தக்கூடியவர்களுக்கு கிடைத்துக்கொண்டிருந்ததோ, அது கிடைக்கப்படாத ஒரு நிலை அல்லது கிடைக்க முடியாத ஒரு நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே Big Industries என்ற நிலையிலிருந்து அந்த ஸ்தாபனத்திற்கு விலக்கு கொடுக்கப்பட்டு, சிறு தொழிலை நடத்தக்கூடியவர்களுக்கு எந்த அளவுக்குப் பயன் அந்த ஸ்தாபனத்தினாலே அல்லது அந்த 'TIIC'-கினாலே முன்னாலே கிடைக்கப் பெற்றிருந்ததோ அது கிடைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இன்னும் ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புவது, Wasteland Development Scheme. அதிலே நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அன்று ஒன்றை இந்த அவையிலே அறிவித்தார்கள். அதாவது இன்று Land Reforms Act, Section 37-A-யின்படி விதிவிலக்கு கொடுப்பதற்கான மனுக்களைப்பற்றி அரசு பரிசீலித்து தகுந்த விதிவிலக்கு கொடுக்கப்பட வேண்டியவர்களுக்கு கொடுக்கப்படுகிறது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய பிரதிநிதிகள், மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து இந்த நில உச்சவரம்பு சட்டத்திற்கு விதிவிலக்கு கொடுக்கிற அந்த நடவடிக்கை கூடாது என்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு அதுபற்றி இங்கே அறிவிக்கப்பட்டது. ஆனால் என்னுடைய பயம் என்னவென்றால் இப்போது ஒரு G.O. போடப்பட்டிருக்கிறது. அதாவது G.O. No. 68, 10-4-2002, இந்த G.O. இந்த உச்சவரம்பினை மீறுவதற்கான வாய்ப்புகளைக் கொடுப்பதற்கு



2002 மே 9] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

இடம் கொடுக்கிறது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. என்ன சொல்லப்படுகிறது என்றால், இந்தச் சட்டப்படி விதிவிலக்கிற்கு வாய்ப்பு ஏற்படுத்துகிற நேரத்தில் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புவது, ஏற்கெனவே தொழில் நடத்தக்கூடியவர்களுக்கு, நிறுவனங்களுக்கு விற்பனை வரியை, அதேபோன்று பல வரிகளிலிருந்து சலுகைகளை அல்லது விதிவிலக்குகளைக் கொடுத்து, தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக இப்படிப்பட்ட சில சலுகைகளை அவர்களுக்குச் செய்தார்கள். அதனுடைய விளைவு என்ன? 15 ஆயிரம் கோடி ரூபாய் அரசுக்கு அவர்கள் கட்ட வேண்டும். ஆனால் அதில் 80 சதவிகிதம், 90 சதவிகிதம் காசுகூட இன்னும் கட்டப்படவில்லை. அப்படி அந்தமாதிரி உள்ள exemptions-ஐ இந்த நாட்டிலே இருக்கிற தொழில் நடத்தக்கூடியவர்கள் பயன்படுத்தி ஏப்பம் விடக்கூடிய ஒரு நிலை இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நிலையை ஏற்படுத்துவதற்கு — உண்மையாக இந்த 37-A என்ற திருத்தம் கொண்டுவருவதற்குக் காரணம் என்ன? ஒரு தொழில் ஸ்தாபனம், 'Factory' போன்றவற்றையெல்லாம் நடத்தி அது செயல்பட்டுக்கொண்டிருக்கிற நேரத்திலே 20 ஏக்கருக்கும் மேலே, 2 ஏக்கரோ அல்லது 5 ஏக்கரோ அவர்களுக்கு அதிகமாகக் கைவசம் வைக்க வேண்டிய நிலை வந்தால், அதற்கு இடம் கொடுக்கக்கூடிய முறையிலேதான் இந்த 37-A என்பது போடப்பட்டிருக்கிறது. ஆகவே இன்று அதற்காக ஒரு Fast Track Committee உருவாக்கப்பட்டிருக்கிறது என்றாலும் இந்த நாட்டிலே இருக்கிற நிலைமையிலே, எல்லா அதிகாரிகளும் ஒரே மாதிரி அல்ல. ஊழலுக்கு உடந்தையாக இருந்த அதிகாரிகளும் இருக்கிறார்கள். ஊழல் நடத்திக்கொண்டிருக்கிற அதிகாரிகளும் இருக்கிறார்கள். ஆகவே வசதி படைத்தவர்கள் இவர்களையெல்லாம் பயன்படுத்தி இந்தத் திட்டத்திற்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய நிலை ஏற்படக் கூடாது என்று நான் இந்த நேரத்திலே எச்சரித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே அந்த அளவுக்கு இந்த G.O.-வில் இத்தனை குறைபாடுகள் இருக்கின்றன என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 5-35

இன்னொன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புவது, நம்முடைய கல்வித் துறை சம்பந்தமாக (மணியடிக்கப்பெற்றது) 2 மணித்துளிகளில் முடித்துவிடுகிறேன். தற்போது 1:20 என்ற விகிதத்தை மாற்றி 1:40 என்ற விகிதத்திலே இன்று ஆசிரியர்கள் பணி மாற்றப்படுகின்ற நிலைமை

ஏற்படுகிறது. அது வருகிற நேரத்திலே ஆரம்பப் பள்ளிகளிலே வகுப்புக்கு ஓர் ஆசிரியர் என்று இருந்தால்தான் தமிழ், கணிதம், அறிவியல், சமூக அறிவியல், ஆங்கிலம் போன்ற பாடங்களை எல்லாம் கற்றுக் கொடுக்கக் கூடிய ஒரு நிலை உருவாகும். ஆகவே, ஆரம்பப் பள்ளிகளில் பாடத் திட்டம் மாற்றப்பட்டும், பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டும் தரமான கல்வி அளிப்பதிலே வகுப்புக்கு ஓர் ஆசிரியர் இல்லாத ஒரு நிலையை அது உருவாக்குவதற்கு காரணமாகும் என்று நான் கருதுகிறேன். அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புவது, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பட்ஜெட்டின்மீது உள்ள விவாதத்திற்கு பதில் சொல்கிற நேரத்திலே மத்திய அரசு, பல திட்டங்களை மாநில அரசை by pass பண்ணி இன்று நடைமுறைப்படுத்திக்கொண்டு இருக்கிறது என்று இங்கே சுட்டிக்காட்டினார். இது மிகவும் ஆபத்தான ஒரு விஷயம் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எனக்குத் தெரிந்த அளவிலே, இந்த மாதக் கடைசியிலே Finance Ministers' Conference கூட்டப்பட இருப்பதாகத் தெரிகிறது. அந்த Conference-லே இதை வலியுறுத்த வேண்டும் என்று நான் சுட்டிக்காட்டுகிறேன். ஒன்றை நான் எடுத்துக்காட்டு என்ற முறையிலே சொல்ல விரும்புவது கன்னியாகுமரியிலே ஒரு திட்டம் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டது. கிராமப்புறங்களிலே, சுகாதார நிலையைப் பாதுகாத்துக்கொள்வதற்கான ஒரு திட்டம். அதை அமல்படுத்துவதற்கு 120 பேரை எடுத்தார்கள். அந்த 120 பேரை எப்படி எடுத்தார்கள்? ஒரு நாள் தினத்தந்தி பேப்பரிலே advertisement கொடுத்தார்கள். ஒரே ஒரு நாள்தான். அதாவது ஒரு மத்திய அமைச்சருடைய ஏற்பாட்டால் நடத்தப்பட்ட விஷயம். நேரு யுவகேந்திரா — அந்த ஸ்தாபனம் வழியாக கொஞ்சம் ஆட்களிடமிருந்து மனுக்களை வாங்கி 120 ஆர்.எஸ்.எஸ்.-காரர்களை நியமனம் பண்ணினார்கள். நான் என்ன சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால், இன்றைக்கு குஜராத்தில் நடந்துகொண்டு இருக்கிற நிகழ்ச்சிகளை நாம் பார்க்கிறோம். 1999 கால கட்டத்திலே குஜராத்திலே அரசியல் machinery-களில், administrative machinery-களில் ஆர்.எஸ்.எஸ்.-காரர்களை நுழைத்துக்கொண்டு இருக்கிறது என்ற விவாதம் எல்லாம் நாடாளுமன்றத்திலேயும், சட்டமன்றத்திலேயும் வந்திருக்கிறது. அப்படி நுழைக்கப்பட்டதன் விளைவாகத்தான் இன்று குஜராத்திலே இப்படிப்பட்ட ஒரு பெரிய கலவரம் ஏற்படுவதற்குக் காரணமாக



இருந்தது என்பது எங்களுடைய கருத்து. அன்றைக்கு அவர்கள் குறி வைத்து காவல் துறையிலே சேர்க்கப்பட்டார்கள். அந்தப் போலீஸ்காரர்கள், சிறுபான்மையினரை, குறி வைத்துப் பார்த்து, அடித்து, தாக்கி அவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பது, பத்திரிகையிலே வந்து இருக்கிற விவரம். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு நிலை தமிழகத்திலேயும் ஏற்படாமல் இருக்க, பாதுகாத்துக்கொள்ள வேண்டிய, தடுக்கப்பட வேண்டிய கடமை நமக்கு இருக்கின்றது. (மணியடிக்கப்பெற்றது). ஆகவே என்னுடைய கருத்து என்னவென்றால், Employment Exchange வைக்கப்பட்டிருக்கிறது. நாம் ஒன்றும் உண்டாக்கியது அல்ல. மத்திய அரசால் உருவாக்கப்பட்டிருக்கிற அந்த Employment Exchange-களில் இருந்து ஆட்களை recruit பண்ணட்டும். அதைப்பற்றி எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. Employment Exchange-களிலே அந்த recruitment-லே பல ஊழல்கள் எல்லாம் நடக்கின்றன. அதைப்பற்றி நான் சொல்ல வரவில்லை. ஆனால் குறைந்தபட்சம் ஒரு Government Agency வழியாகவாவது, எடுக்கப்படுகிற ஒரு நிலை வருகிற நேரத்திலே, இன்று மத்தியிலே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற அமைச்சர்களினுடைய விருப்பு வெறுப்புகளுக்குத் தகுந்த அளவிலே ஆர்.எஸ்.எஸ்.-காரர்களை மட்டும் தேர்ந்தெடுத்து அரசு machinery-களிலே நுழைக்கப்படுகிற அந்த ஆபத்தினைத் தடை செய்வதற்கான குரலை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அந்த Finance Ministers' Conference-லே ஒலிக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு வேண்டிக்கொள்ள விரும்புகிறேன். கடைசியாக இரண்டு விஷயங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 5-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** One Minute. அதாவது தீண்டாமை என்கிற கொடுமை இன்றும் நம் நாட்டில் இருந்துகொண்டிருக்கிறது. இன்றைக்கு பத்திரிகையிலே மதுரையிலே ஓர் ஊராட்சித் தலைவி, மேல்சாதிக்காரர்களுடைய நிர்பந்தம் காரணமாக அந்த ஊராட்சியிலே செயலாற்ற முடியவில்லை என்ற காரணத்தினால், அவர் தலைமறைவாக இருக்கிறார் என்று பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. இன்னும் பல இடங்களிலே அப்படிப்பட்ட கொடுமை இருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2002 மே 9

அதேபோன்று ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். மே தினத்தில் ஊர்வலம் நடத்துவதற்கு கோயம்புத்தூர் போன்ற மிகப் பெரிய தொழிலாளிகள் கேந்திரத்திலேகூட காவல் துறை அனுமதி மறுத்திருக்கிறது. இப்படிப்பட்ட ஜனநாயக உரிமைகளை மறுக்கிற போக்கைக் காவல் துறை இன்னும் நடத்திக்கொண்டிருக்கிறது. அதையும் அரசு பரிசீலிக்க வேண்டும். தொழிலாளி வர்க்கத்தினுடைய, உழைப்பாளி மக்களுடைய அடிப்படையான உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக முதலில் என்னுடைய கருத்துகளைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் பல்வேறு திட்டங்களுக்காக நிதிகளை ஒதுக்கீடு செய்துகொண்டிருக்கிறோம். நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது என்பது நிறைவேற்றப்பட இருக்கிற திட்டப் பணிகள் 2002-2003 ஆம் ஆண்டுகளுக்குள் ஓரளவுக்கு நிறைவேற்றப்பட வேண்டும். அப்படி நிறைவேற்றப்படுகிறபோது, அந்தத் திட்டப் பணிகளுடைய re-estimate- துணை மானியக் கோரிக்கையை அதிகப்படுத்தாமல் குறைப்பதற்கு ஒரு நல்ல வாய்ப்பினை உருவாக்க முடியும். அந்தத் திட்டப் பணிகளை ஆண்டுதோறும் நிறைவேற்றுவதன் காரணமாக அதனுடைய cost ஆண்டுதோறும் செலவிற்கேற்ப உயர்ந்து re-estimate போடுவதன் மூலமாக பல நூறு கோடி ரூபாய்க்கு ஒரு செலவை, துணை பட்ஜெட்டில் போட வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு ஏற்படுகிறது. அரசாங்கம் அந்த ஆண்டுகளிலே நிறைவேற்றக்கூடிய திட்டங்களை நிறைவேற்றுவதிலே முனைப்போடு இருந்து நம்முடைய அதிகாரிகள் செயல்படுவதற்கு, அரசு அந்தத் திட்டங்களை வழிவகுக்க வேண்டுமென்று நான் மனதாரக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2002 மே 9] [திரு. ஜி. பழனிசாமி]

அதேபோன்று தலைமைச் செயலகம் முதற்கொண்டு சிற்றூராட்சி வரையிலும் சிக்கனச் சீரமைப்பு என்கிற அந்த அடிப்படையை ஒழுங்குபடுத்த வேண்டும். எனக்குத் தெரிந்த வரையில், பல்வேறு உயர் பதவியிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் — எல்லோரையும் குற்றம் சொல்ல முடியாது. அவருடைய மனதிற்கு ஏற்ற வகையிலேகூட ஜன்னலுக்கு தன்னுடைய சட்டைகளை அமைக்கின்ற பணிகளைச் செய்து, மாற்றச் செய்கிறார். தன் மனதிற்கு ஏற்ற வகையிலே அந்த ஜன்னலுக்கு இருக்கிற சட்டை சரியாக இருக்க வேண்டும். அதற்காக ஒரு தேவையற்ற முறையிலேகூட நம்முடைய அரசாங்கம் செலவைச் செய்கிறது. அவர்கள் இருக்கக்கூடிய இடத்தைப் பார்த்தால் A.C. room. கீழே நல்ல கிரானைட் கல் போடப்பட்டிருக்கிறது அல்லது பாலிஷ் ஆன கல் எல்லாம் போடப்பட்டிருக்கிறது. அதற்குப் பல இலட்சம் ரூபாய் செலவில் ஓர் அதிகாரி மாற்றிச் செய்தால், அதற்கு Mat போடுவதற்கு பல இலட்சம் ரூபாய் செலவு செய்கிறோம். அதிலே இருந்து வரிசையாக எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால் கிராமப்புறங்களுக்கு, மக்களைச் சென்றடையக்கூடிய நிதியில், இறுதியாக நாம் கை வைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்தச் சீரமைப்பிலே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, அதிகாரிகள் பல பேர் அவசரமாக சில பணிகளுக்காக, அரசாங்கப் பணிகளுக்காக டெல்லி போக வேண்டும் என்று சொன்னால், நான் அவர்களை இரயிலில் போங்கள் என்று சொல்லவில்லை. விமானத்தில் போக வேண்டுமா? போக வேண்டும். ஆனால் அதே நேரத்தில் தேவையற்ற முறையிலே அந்தச் செலவினங்களை, அரசு அதிகாரிகளுடைய செலவுகளைக் குறைப்பதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இந்தச் சட்டமுன்வடிவிலே சொல்வதற்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5-45

நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே ஒரு கோரிக்கையை பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தினுடைய உயிர்நாடிப் பிரச்சினை காவிரி நதி நீர்ப் பிரச்சினை. சமீபத்திலேகூட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்த மாமன்றத்திலே நடைபெற்ற விவாதத்தின்போது, ஏதோ இரு கட்சிகளுக்கான பிரச்சினை என்கின்ற அடிப்படையிலேகூட நாங்கள் வெளிநடப்பெல்லாம் செய்தோம். அது எங்கள் உணர்வு.

வேறு ஒன்றும் கோபம் அல்ல. காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் பல அரை நூற்றாண்டுகள் கடந்த பின்னாலும்கூட, தமிழ்நாட்டினுடைய ஒட்டுமொத்தமான பிரச்சினையில் அதை ஒரு கூட்டுப் பிரச்சினையாக இந்த அரசாங்கம் எடுக்கிறபோது, இந்தப் பிரச்சினைக்கு யார் குந்தகம் விளைவிக்கிறார்கள், யார் விரோதமாக இருக்கிறார்கள் என்பதை நாட்டு மக்கள் அறிந்துகொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்தப் பிரச்சினையிலே தமிழகத்திலே கூட்டு முயற்சிகளை நீங்கள் உருவாக்கித் தர வேண்டும். எவ்விதச் சூழ்நிலையிலும் தமிழகத்திலே காவிரி நீர்ப் பிரச்சினையில் அரசியல் சம்பந்தப்படாத வகையில், அந்தப் பிரச்சினையை நீங்கள் அணுக வேண்டுமென்று எங்களுடைய கட்சியின் சார்பாக நான் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், இன்றைக்கு மேட்டூர் அணையிலே 40 அடியாக தண்ணீரின் அளவு குறைந்து இருக்கிறது. கர்நாடகத்திலே இருக்கக்கூடிய கர்நாடக முதலமைச்சர் திரு. கிருஷ்ணா அவர்கள், நம்முடைய காவிரியிலே —மேட்டூரிலே ஏற்கெனவே இருக்கிற தண்ணீரின் அளவைப் பார்த்து — 209 டி.எம்.சி. தண்ணீரை நாங்கள் கொடுத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். தமிழகத்திலே இருக்கக்கூடிய, மலைப் பகுதியிலே பெய்யக்கூடிய மழை நீரையும் கணக்கிட்டு தன்னுடைய கணக்கைச் சொல்கிறார். ஆனால் மேட்டூரின் அளவு என்பது, கர்நாடகத்தின் அளவு கிடையாது. கர்நாடக எல்லையிலிருந்து தமிழகத்திற்கு வரக்கூடிய தண்ணீரின் அளவைத்தான் அவர் சொல்ல வேண்டும். ஆனால் உண்மைக்கு மாறாக கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் இன்றையதினத்திலே வாசித்துக்கொண்டிருக்கிறார். முடிந்த அளவுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் உச்ச நீதிமன்றம் போனாலும் சரி, இல்லை, Monitoring Committee-யை அணுகினால் சரியாக இருக்கும் என்று பரிசீலித்தாலும் சரி, இல்லை, பிரதமர் அவர்கள் தலையிட்டு, ஆணையத்தை மீண்டும் கூட்டி, இந்தப் பிரச்சினைக்கு எப்படியாவது இடையிலே ஒரு தீர்வு காண வேண்டுமென்று அந்த வகையிலே இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சரும் முழு முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காவிரிப் புடுகையில் இருக்கிற விவசாயிகளுக்கு ஓர் அறிவிப்பை நீங்கள் தர வேண்டும். வரக்கூடிய ஆண்டுகளில் குறுவை விவசாயம் செய்ய வேண்டுமா, வேண்டாமா என்று சொல்ல வேண்டும்.





இல்லையென்று சொன்னால், குளம், குட்டை, ஆறு, ஏரி என்று இருக்கக்கூடிய தண்ணீரை வைத்து, விதையை விதைத்து விட்டு கர்நாடகத்திலிருந்து தண்ணீர் வரவில்லை, ஆக உடனடியாக தண்ணீரைத் திறந்துவிடுங்கள் என்று ஒரு போராட்டம், ஓர் இயக்கம் என்று நிர்ப்பந்தம் வருகிறபோது இருக்கிற நீரையும் திறந்துவிட்டு, அதற்குப் பின்னாலே முற்றும் அற்றுப் போவதைத் தடுப்பதற்கு இந்த அரசாங்கம் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இதுசம்பந்தமாக ஓர் அறிவிப்பை தெளிவாக வெளியிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், இது பிரதானமான பிரச்சினை என்ற காரணத்தால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இந்த அரசும் இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று பல்வேறு தொழிற்சாலைகள் தமிழகத்திலே மூடப்பட்டுக் கொண்டிருப்பதைப்பற்றி இன்றைக்கு எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னார்கள். தமிழகத்தை தொழில் வளத்திலே முதல் மாநிலமாக உருவாக்க வேண்டுமென்று சொல்லி, தொடர்ந்து முன்பு இருந்த அரசும் சொன்னது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொன்னார்கள். ஆனால் சொல்வதற்கு மாறாக, தொடர்ச்சியாக ஆலைகளை மூடுகிற எண்ணிக்கையைத்தான் நாம் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. புதிய ஆலைகளைத் தொடங்குவதற்கோ, பல தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கோ வாய்ப்புகள் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அநேகமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற நம்பிக்கை, 15 அம்சத் திட்டத்தை நீங்கள் அறிவித்திருப்பதை நான் குறை சொல்லவில்லை, வரவேற்கிறேன். அநேகமாக நீராதாரம் தமிழகத்தில் இல்லாமல் அந்தப் பணிகளை தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக உடனடியாக நிறைவேற்ற முடியுமா என்பதை அரசு யோசிப்பதோடு, இந்தத் தொழில் தகராறுகளில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ அவற்றைத் தொடர்ச்சியாக எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இது ஒரு பெரிய பிரச்சினையாக இன்று நாட்டிலே இருக்கிறது.

பல்வேறு தொழில்கள் முடங்கிக் கிடக்கின்றன. பல்வேறு தொழில்கள் நெருக்கடிக்கு ஆட்பட்டுக் கிடக்கின்றன. கைத்தறி நெசவுத் தொழில்

என்பது படுபயங்கரமாக கீழே வந்துவிட்டது. இதற்கெல்லாம் அடிப்படையான காரணம் என்பது இறக்குமதிக் கொள்கை. மத்திய அரசினுடைய தாராள, பொருளாதாரக் கொள்கை இன்றைக்கு மிகப் பெரிய பாதிப்பை உருவாக்கி இருக்கிறது. கிராமப்புறங்களிலேயும் அது பாதித்திருக்கிறது. மத்திய அரசினுடைய இந்தக் கொள்கையின் விளைவாக நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அநேகமாக, பாரதிய ஜனதா கட்சியை மத்தியிலே ஆதரித்து, அவர்களுடைய பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிற கட்சிகள், ஆதரித்த கட்சிகளெல்லாம் இந்தியாவிலே தோற்றிருக்கிற வரலாற்றை உங்களுக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலமைச்சருக்குத் தெரியாதது அல்ல. இந்தியாவில் பாரதிய ஜனதாவை ஆதரித்த கட்சிகள் எல்லாம் தோற்ற வரலாற்றைத்தான் கண்டிருக்கிறோம். இதற்குக் காரணம், மத்தியிலே இருக்கக்கூடிய மத்திய அரசினுடைய பொருளாதாரக் கொள்கை என்பதுதான். ஒரு மோசமான கொள்கை. இந்திய நாட்டினுடைய பொருளாதாரத்தை சும்மா அட்டை அப்படியே சுரண்டி எடுக்கிற மாதிரி, சுரண்டிக் கொண்டு போயிருக்கிறார்கள். கேட்பாரற்ற நிலை. கட்டுப்பாடு இல்லாமல் கதவு திறந்துவிட்டதன் விளைவாக 1400 பொருட்கள் கிராமங்கள் வரையிலே இன்று மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது. இதிலேயிருந்து நம்முடைய தேசத்தையும் நாட்டையும் எப்படிப் பாதுகாக்கப் போகிறோம் என்ற மிகப் பெரிய பயங்கரம் இருக்கிறது. அபாயம் இருக்கிறது. ஆகவே அந்தச் சூழ்நிலையில், அந்தப் புயலில் நம்முடைய தமிழகம் சிக்கிவிடவே கூடாது. அந்த வகையிலே நம்முடைய அரசு, நம்முடைய முதலமைச்சர் உரிய நடவடிக்கை எடுப்பார் என்பதிலே எங்களுக்கு மனமாச்சரியம் கிடையாது.

பிற்பகல் 5-50

அதேபோன்று, இன்றைக்கு நம்முடைய தொழிலாளர்களுடைய— போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய போராட்டம். அநேகமாக ஒரு சட்டம்கூட வருகிறது. நீங்கள் சட்டம் கொண்டுவாருங்கள், அதிலே எங்களுக்குப் பிரச்சினை கிடையாது. நீங்கள் ஆட்சியில் இருக்கிறபோது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறபோதும்கூட, எதிர்க் கட்சியாக இருக்கிறபோதும்கூட, போக்குவரத்துத் தொழிலாளர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று நீங்களும் கோரிக்கை வைத்தீர்கள். இன்றைக்கு அந்தத் தொழிலாளர்கள் போராடுகிறபோது, அவர்களுடைய





உரிமையைப் பறிப்பதோடு மட்டுமின்றி, அவர்கள் எல்லாம் வேலையிழந்து 1,073 பேர்கள் இன்றைக்குத் தெருவிலே நின்றுகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கான வாய்ப்புகளைக் கொண்டுவர வேண்டும். தொழிலாளர் போராட்டம் என்பது இன்று நேற்றல்ல. 1846ஆம் ஆண்டு கார்ல் மார்க்ஸால் உருவாக்கப்பட்டு 20 மணி நேரம் வேலையிலே முடங்கிக் கிடந்த மக்களுக்கு அந்த மாமேதை விடுதலை வாங்கிக் கொடுத்தார். 1886ஆம் ஆண்டு புரட்சி ஏற்பட்டது. அதுதான் புரட்சி. அதற்குப் பின்னால்தான் தமிழ்நாட்டிலேகூட மா. சிங்காரவேலன, பாண்டிச்சேரியிலே வ. சுப்பையா போன்றவர்கள் எல்லாம் முதல் மே தினத்தைக் கொண்டாடிய வரலாறு உண்டு. இதை இயக்கி வைக்கக்கூடிய தொழிலாளர் போராட்டம் நடந்த வரலாறு எல்லாம் உண்டு. எவ்வளவு பெரிய வீரமான போராட்டம் நடந்திருக்கிறது. தொழிலாளர் போராட்டம். வெள்ளைக்காரன் கொடியை இறக்கிவிட்டு தேசியக் கொடியை நமது கோட்டைக்கு முன்னாலே இருக்கிற கொடியை ஏற்றிய வரலாறு எல்லாம் உண்டு. அப்படிப்பட்ட வரலாறு நிறைந்திருக்கின்ற தொழிலாளர்களுடைய போராட்டத்தை எளிதாக நாம் நினைத்துவிட வேண்டாம். இது ஒரு தொழிலாளர் அரசு, விவசாய அரசு என்று நீங்கள் பார்க்க வேண்டும். ஒரு ஆட்சி என்பது ஆளும் கட்சி, எந்த ஒரு கட்சியாக இருந்தாலும் சரி, அது ஒரு கண்ணாடி மாளிகை; அந்தக் கண்ணாடி மாளிகையில் உள்ளே இருந்து எடுத்து கனமான பொருளை வீசிவிடக் கூடாது. வெளியிலே இருக்கிற பொருளையும் அந்தக் கண்ணாடி மேலே எடுத்து வீசிவிடக் கூடாது. அப்படியென்றால், அந்தக் கண்ணாடி மாளிகைக்கு எந்தவொரு சேதாரமும் வராமல், எந்த ஒரு ஆட்சி, ஒரு நிர்வாகம் இருக்கிறதோ, அதுதான் நாட்டிலே ஒரு பெரிய சிறந்த ஆட்சி. அந்த வகையில் தொழிலாளர்களையும், விவசாயிகளையும், சாதாரண பாமர மக்களையும் பாதுகாக்கக்கூடிய அளவிற்கு உங்கள் செயல்பாடும் சிந்தனையும் அமைய வேண்டும். அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பல்வேறு கோரிக்கைகளை வைக்கிறபோதெல்லாம் அவற்றைப் பரிசீலிப்பதற்கு, நிறைவேற்றுவதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

நில உச்ச வரம்புச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்கள்; சென்ற ஆண்டே நிதிநிலை அறிக்கையிலே சொன்னார்கள். நாம் எல்லாம் சொன்னோம். இதில் ஒரு நியாயம் இருக்கிறது, சரியானது என்று திரும்பப் பெற்றுக் கொண்டார்கள். இங்கே நம்முடைய மரியாதைக்குரிய நிதியமைச்சர் அவர்கள், பல்வேறு நாடுகளிலிருந்து பல நிதி நிறுவனங்களால் தமிழகத்திலே

[திரு. ஜி. பழனிசாமி] [2002 மே 9

தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு நில உச்ச வரம்புச் சட்டத்தைத் தளர்த்துவோம் என்று சொல்வது எப்படிச் சரியாக இருக்கும்? தமிழ்நாட்டிலே ஃபோர்டு கார் இருக்கிறது, ஹூண்டாய் கார் இருக்கிறது. தமிழ்நாட்டிலே எத்தனை பேர் வேலை பார்க்கிறார்கள் என்கிறீர்கள்? செக்யூரிட்டியாக 300 பேர் வேலை பார்க்கிறார்கள். ஏற்கெனவே இதே மாமன்றத்திலே 12 ஆயிரம் பேருக்கு அந்தத் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பு இருக்கிறது என்று சொல்லப்பட்டு, இப்போது என்னவென்றால் வாட்ச்மேன் மட்டும்தான் வேலை பார்த்துக்கொண்டிருக்கிறார். வேறு யாரும் வேலையைப் பார்க்கவில்லை. என்ன சலுகை கொடுக்கிறோம் அந்தத் தொழிற்சாலைகளுக்கு? இடம் கொடுத்திருக்கிறோம்; வரிச் சலுகை கொடுத்திருக்கிறோம்; மின்சாரக் கட்டணத்திலே சலுகை கொடுத்திருக்கிறோம். தண்ணீர் பற்றாக்குறை இருக்கும்போது தேவையான தண்ணீர் கொடுத்திருக்கிறோம். புதிய கால்வாயை வெட்டிக் கொண்டுவந்து கொடுத்திருக்கிறோம். என்ன வந்திருக்கிறது? நம்முடைய தமிழக அரசுக்கு என்ன நிதியாதாரம் வந்திருக்கிறது? நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இதேபோன்று அந்நிய நாட்டிலேயிருந்து சலுகை பெறுகின்ற மாநிலம் தமிழ்நாடுதான் என்று வருகிறபோது, நமது அரசாங்கம் தமிழ்நாட்டு மக்களுடைய நலனை எந்த வகையிலும் பாதிக்காத வகையில் அதுபோன்ற ஒப்பந்தங்களை மேற்கொள்ள வேண்டும். அதனாலே தொழிற்சாலையே வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அந்தத் தொழிற்சாலையை அனுமதிக்காதீர்கள் என்று நான் சொல்லவே தயாராக இல்லை. ஒரு நாடு வளர்ச்சியடைய வேண்டுமென்று சொன்னால் தொழிற்சாலைகள் வேண்டும். பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும். அப்படியிருந்தால்தான் நம் நாடு முன்னேற முடியும். அந்த வகையிலே நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கருத்துகளிலிருந்து அந்தச் சட்டங்களை நீங்கள் நீக்கக்கூடாது என்பது எங்கள் பணிவான வேண்டுகோள். (மணியடிக்கப்பெற்றது) நான் முடித்துவிடுகிறேன். வேறொன்றும் இல்லை.

கைத்தறித் தொழிலாளர்கள் இந்த 10 பி என்று அநேகமாக 110 பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு ஏற்கெனவே 250 ரூபாய் இடைக்கால நிவாரணமாக வழங்கப்பட்டது. அது 5-வது மாதத்தோடு முடிவடைகிறது. மேலும் ஆறு மாதத்திற்கு நீங்கள் நீட்டித்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



2002 மே 9] [திரு. ஜி. பழனிசாமி]

பிற்பகல் 5-55

அடுத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே கேட்டுக்கொள்வது, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 82 இலட்ச ரூபாய் என்பதை ஒரு கோடி ரூபாயாக உயர்த்திக்கொடுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை எல்லோரும் விரும்புகிறார்கள். அநேகமாக நாம் பல்வேறு வாக்குறுதிகளைத் தந்திருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, தினந்தோறும் ஒரு கோரிக்கையை வைக்கிறபோது எல்லாம் நிதிப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை என்று சொன்னவுடனே இதயம் படக், படக் என அடித்துக்கொண்டே இருக்கிறது. ஊரிலே போய் என்ன சொல்வது என்றே தெரியவில்லை. வோட்டு கேட்கிறபோது எல்லாம் சாலையைப் போட்டுத் தருகிறோம் என்று சொல்கிறோம். குடிதண்ணீர் கேட்டால் டேங்க் கட்டித் தருகிறோம் என்றோம். இங்கே பார்த்தால் மருத்துவமனை கட்டித் தருகிறோம் என்று சொன்னோம். அங்கே பார்த்தால் கால்நடை மருத்துவமனை கட்டித் தருகிறோம் என்று சொன்னோம். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்வதைப் போல நிதியில்லையப்பா என்று போய் சொன்னோம் என்றால், சட்டமன்ற உறுப்பினராகிய எங்களுக்கு ஊரிலே என்ன வரவேற்பு இருக்கும் என்று தெரியவில்லை. ஆகையினால் இந்த ஒரு கோடி ரூபாயை வைத்துக்கொண்டு குறைந்த அளவிலாவது அங்கே ஒரு வேலை, இங்கே ஒரு வேலை இதெல்லாம் செய்து இருக்கிறோம், அரசாங்கம் செய்திருக்கிறது என்று சொல்வோம். பல திட்டங்கள் வரவில்லை என்று நான் சொல்லவில்லை. பல்வேறு வகையிலே பல்வேறு திட்டங்கள், பல்வேறு துறையிலே அரசு செய்திருந்தபோதிலும்கூட சட்டமன்ற உறுப்பினர் என்ன செய்தார் என்றுதான் எதிர்பார்க்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 2 கோடி. அநேகமாக திட்டமே செய்யாமல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அங்கங்கே போர்டு வைத்துவிட்டுப் போய்விடுகிறார்கள். ஒன்றுமே செய்யாமல், பணமே செலவிடாமல் போர்டு வைத்துவிடுகிறார்கள். பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் வைத்துவிட்டுப் போய்விடுகிறார்கள். ஆக, மக்களோடு தொடர்புகொண்டிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் பணிகளைச் செய்வதிலே எங்களுக்கு அந்தச் சிரமம் இருக்கிறது. எனவே 1 கோடி ரூபாயைக் கொடுக்க வேண்டும்.

அதுமாதிரி அரசாங்கம் பல்வேறு துறைகளில் இருக்கக்கூடிய திட்டங்களை எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுத்து

[திரு. ஜி. பழனிசாமி] [2002 மே 9

அதையும் நீங்கள் நிறைவேற்றுங்கள் என்று சொன்னால் நாங்கள் எப்படி அதை நிறைவேற்றுவது? அதையும் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும். வேறு எந்தக் கோரிக்கையும் வைக்கவில்லை. அந்த வகையிலே சட்டமன்ற உறுப்பினர் நிதிக்கு 1 கோடி ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுக்க வேண்டும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல பிளாஸ்டிக் தொழிற்சாலை பற்றி நேற்றைக்குச் சொன்னோம். உடனடியாக அதை நீக்குகிறேன் என்று சொல்லி அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். அதுபோல அரிசிக்கு நீங்கள் வரியை உயர்த்தக் கூடாது என்று அதுவும் சொன்னோம். அந்த 2% வரியை அநேகமாக அமைச்சர் அவர்கள் நீக்கி இருக்கிறார்கள். அதற்காக நான் முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரிச் சீரமைப்பு என்றுதான் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** அரசு அதை நீக்க வேண்டும். அந்த 2% வரியையும் அரசு நீக்கிட வேண்டும் என்று இந்த அறிவிப்பிலேயே தெளிவான அறிவிப்பை நம்முடைய நிதியமைச்சரிடமிருந்து நான் எதிர்பார்க்கிறேன். அந்த வகையிலே அதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேச அனுமதி தந்திருக்கிற தலைவருக்கும், உங்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன், சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவிலே உரையாற்றுகின்ற அரிய வாய்ப்பினைத் தந்த உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் நிதித் துறையினுடைய கொள்கைக் குறிப்பிலே 10-வது ஐந்தாண்டுத் திட்டம் 2002-லிருந்து 2007 வரைக்கும் வரவிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்தியத் திட்டக் குழு துணைத் தலைவரைச் சந்தித்து, அதற்குப் பின்னாலேதான் இந்த ஆண்டினுடைய திட்டம் இறுதி செய்யப்பட வேண்டும் என்று



2002 மே 9] [திரு. ப. அரசன்]

நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அவர்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, அவர்களுடைய திறமையைப் பயன்படுத்தி, இந்த ஆண்டு திட்டத்திற்கு நிறைய நிதியினைக் கொண்டுவர வேண்டும். பொருளாதாரத்தின் அரிச்சுவடி என்ன என்று சொன்னால், தேவைகள் 3 வகைப்படும் என்று பொருளாதாரத்தினுடைய அடிப்படையிலே சொல்வார்கள். முதலில் necessary என்று சொல்கிற அத்தியாவசியத் தேவைகள். இரண்டாவது comfort என்று சொல்கிற வசதிகள். இந்த இரண்டையும் திருப்திபடுத்தியதற்குப் பின்னாலே மூன்றாவது luxury என்று பொருளாதார அரிச்சுவடியிலே எனக்குப் படித்த ஞாபகம் இருக்கிறது. ஆனால் நம்முடைய பொருளாதாரத்திலே என்ன நடக்கிறது என்று சொன்னால் necessary என்று சொல்கிற அத்தியாவசியத் தேவையை நம்முடைய தமிழகத்திலே இருக்கிற அடித்தட்டு மக்களுக்கு நிறைவு செய்யாத இந்தச் சூழ்நிலையில், நாம் ஏதோ நீளம் தாண்டுதலிலே தாண்டுவதைப் போல அடுத்தக் கட்டத்திற்கும், அதற்கடுத்த கட்டத்திற்கும் சென்றுகொண்டிருக்கிறோம். அடித்தட்டு மக்களுடைய பொருளாதார வளத்தை உயர்த்தி, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தியதற்குப் பின்னாலேதான் தமிழகத்திலே இருக்கிற மற்ற மக்களுடைய தேவைகளை, அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கு திட்டமிட வேண்டுமென நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 6-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய சார்பாக ஒரு பணிவன்பான வேண்டுகோள். சட்டமன்ற நிகழ்ச்சிகளை நம்முடைய அரசு Television நிலையத்திலே சொல்லியாவது அல்லது வேறு Television Company-களிலே சொல்லியாவது, பாராளுமன்ற நிகழ்ச்சிகளை எப்படி முழுமையாக ஒளிபரப்புகிறார்களோ அதைப் போல, சட்டமன்ற நிகழ்ச்சிகளையும் முழுமையாக ஒளிபரப்ப வேண்டுமென நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய அரசினுடைய நிதிநிலைமை மிகவும் மோசமான ஒரு சூழ்நிலையிலே இருக்கிறது. அதற்கு யார் காரணம் என்கிற ஆராய்ச்சியெல்லாம் எனக்கு இருக்கிற நேரத்திலே எடுத்துச் சொல்ல

[திரு. ப. அரசன்] [2002 மே 9

முடியாது. நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலை நாடுகளிலே வரி கட்டுவோர் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. இங்கிலாந்திலே ஏறத்தாழ 49 சதவீதம் மக்கள் வரி கட்டுவதாகச் சொல்கிறார்கள். அதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்று சொன்னால், அங்கே நம்முடைய நாட்டைப்போல பல்முனை வரிகள் இல்லை, நுழைவு வரி போன்ற வரிகள் எல்லாம் அங்கே இல்லை. வரிச் சீரமைப்பைச் செய்து, வரி சுலபமாகச் செலுத்துகிற வகையிலே அங்கே திட்டங்களைத் தீட்டி வரி கட்டுவோருடைய எண்ணிக்கையை அதிகப்படுத்தி வைத்திருக்கிறார்கள். டெல்லியிலே சால்வை விற்கிற ஒரு வியாபாரி 10 சால்வைக்கு ஆயிரம் ரூபாய் சம்பாதிப்பது என்பதைவிட, 20 சால்வை விற்று ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கிற ஒரு காரியத்தை அங்கே பார்க்கலாம். அதைப் போல, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் வரி கட்டுபவர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்துகிற வகையில் வரி வகைகளைக் குறைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வரியைக் குறைத்தால் எப்படி ஆட்சி செய்ய முடியும் என்று அவர்கள் சொல்வார்கள். நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சிறப்பான நிர்வாகத்தின் அடிப்படையிலே நம்முடைய பொருளாதாரத்தைச் சீர்படுத்துவதற்கான வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன.

இன்றைக்கு ஒவ்வொரு துறையிலேயும் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் நஷ்டத்தை நாம் பெற்றிருக்கிறோம். இந்த நஷ்டம் யாராலே வந்தது என்கிற ஆராய்ச்சி செய்வதைவிட, எப்படி வந்தது என்கிற ஆராய்ச்சி செய்து, அதை நிவர்த்தி செய்து இலாபம் அடைகிற வகையிலே நஷ்டத்தைக் குறைக்கிற வகையிலேயாவது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் திட்டமிட வேண்டும்.

மின் துறையிலே நாம் கோடிக்கணக்கான ரூபாயை இழந்துகொண்டிருக்கிறோம். போக்குவரத்துத் துறையிலே நாம் கோடிக்கணக்கான ரூபாயை இழந்துகொண்டிருக்கிறோம். அவை பற்றியெல்லாம் சிந்திக்காமல், அந்த நஷ்டத்தை ஈடுகட்டுவதற்காக வரிகளை அதிகமாகப் போடுவது என்பது பொருளாதாரத்திலே ஒரு எதிர்மறையான விளைவை ஏற்படுத்திவிடும் என்பதை நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அந்த நிர்வாகத்தைச் சீரமைக்கிறபோது தொழிலாளர்களுடைய பிரச்சினையும் அதிலே சேர்ந்து வருகிறது. நம்முடைய வீட்டிலே



2002 மே 9] [திரு. ப. அரசன்]

வேலை செய்கிற வேலைக்காரரை எப்படி தட்டிக்கொடுத்து வேலை வாங்க வேண்டுமோ, அதைப்போல தொழிலாளர்களைத் தட்டிக் கொடுத்து, நம்முடைய நாட்டிலே இருக்கின்ற பொருளாதார சிரமங்களை, நம்முடைய மக்களுக்கு இருக்கின்ற சிரமங்களை அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, அவர்களிடத்திலே ஒழுங்காக வேலை வாங்கி, பல்வேறு துறை தொழிலாளர்களையும் அனுசரித்து, அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து, அவர்கள் சிரமப்படாத அளவிற்கு ஒரு கொள்கையை உருவாக்கி, பொதுத் துறைகளிலே இலாபம் அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 6-05

விவசாயிகள் பிரச்சினைகளைப் பொறுத்தவரைக்கும் கிராமத்திலே சொல்வார்கள், காக்கையாக நான் கரைகிறேன், உன்னுடைய காதிலே விழமாட்டேன் என்கிறதே என்று. அதைப்போல் இந்த மாமன்றத்திலே இருக்கிற அத்தனை உறுப்பினர்களும் விவசாயிகளுடைய பிரச்சினைகளை உங்களிடத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இன்றைக்கு விவசாயிகள் தங்களுடைய விவசாயத்தைத் தொடங்குகிற காலத்திலேயிருந்து அதனுடைய பலனை அனுபவிக்கிற வரைக்கும் அந்த விவசாயிகளுடைய கஷ்டங்கள் மிக அதிகமாக இருக்கின்றன. விதை நெல்லிற்கு நீங்கள் மானியம் அளிக்கவில்லை. ஒன்று, இரண்டு நெல்களுக்குத்தான் நீங்கள் மானியம் அளிக்கிறீர்கள். ஏற்கெனவே விவசாயத் துறையிலே நல்ல தரமான விதைகள் கொடுத்துக் கொண்டிருந்தீர்கள். இப்போது பல இடங்களிலே தரமான விதைகள் வருவது இல்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள்கூட விவசாயத் துறை மானியக் கோரிக்கையிலே பேசுகிறபோது அதைச் சொன்னார்கள். அதற்குப் பின்னாலே, உரம் என்று வருகிறபோது, உரத்தின் விலை ஏறியிருக்கிறது. இடுபொருட்கள் விலை எல்லாம் ஏறியிருக்கிற நேரத்திலே விவசாயி தன்னுடைய பயிரைக் காப்பாற்றுவதற்காக, தான் செய்கிற விவசாயம் நன்றாக வரவேண்டும் என்பதற்காக நிறைய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியில் முடித்து விடுங்கள்.

**திரு. ப. அரசன்:** ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையில் பாதியிலே முடித்துவிட்டேன்.

[2002 மே 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் இல்லை. அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. ப. அரசன்:** கம்ப ராமாயணம், மகாபாரதம், பகவத்கீதைக்கு எல்லாம் time கொடுக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருக்குறள் மாதிரி முடித்துவிடுங்கள்.

**திரு. ப. அரசன்:** நான் நிதிச் சட்டமுன்வடிவுகளைப் பற்றித்தான் பேசுகிறேன். ஆகவே நான் அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது நிதிநிலை நெருக்கடி என்ற ஒரு காரணத்தைச் சொல்லி, திட்டங்களுடைய ஒதுக்கீட்டைக் குறைப்பது எப்படி சரியாகுமென்ற வினாவை எழுப்பினார்கள். மற்றும் சில உறுப்பினர்கள் பேசுகிறபோது வரி விதிப்பு கூடாது என்று சொன்னார்கள். விதித்த வரியினையும் நீக்கிவிட வேண்டுமென்று மேலும் சில உறுப்பினர்கள் சொன்னார்கள். எங்கள் பகுதிக்கு இந்தத் திட்டங்கள் வேண்டும். அந்தத் திட்டங்கள் வேண்டுமென்ற கோரிக்கைகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பினார்கள். இதற்கெல்லாம் பொருள் மிக்க திருக்குறளைப் போல நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் தெளிவான பதிலை மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் பேசுகிறபோது எடுத்துச் சொன்னார்கள். வரியும் போட வேண்டாமென்று சொல்கிறீர்கள். திட்டங்களும் வேண்டுமென்று சொல்கிறீர்கள். வரியும் போடாமல் திட்டங்களைப் போட வேண்டும், நிதி அதிகம் ஒதுக்க வேண்டும் என்றால் எத்தகைய அணுகுமுறையை, நிதி ஆதாரத்தைப் பெருக்க திட்டங்களைப் போட, மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள, ஆலோசனைகளை நீங்கள் நல்குங்கள், அதை நாங்கள் வரவேற்கிறோம் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் திரு. மணி அவர்களிடம் சொன்னார்கள். இதைவிட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாக்களுக்கு எல்லாம் சிறந்த ஒரு பதிலை என்னால் அளிக்க முடியாது என்றே நான் கருதுகிறேன். உங்களுக்குத் தெளிவாகத் தெரியும். எத்தகைய ஒரு இக்கட்டான சூழலில் தமிழகம் தற்போது இருக்கிறது என்பதனைத் தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் மிக ஆழமாக உணர வேண்டுமென்று அன்போடு நான் உங்களைக்



2002 மே 9] [திரு. சி. பொன்னையன்]

கேட்டுக்கொள்கிறேன். ஏதோ கடந்த கால ஆட்சிமீது குறை சொல்ல வேண்டும் என்பதற்காக நான் பலமுறை நெடுநேரம் இந்தப் பிரச்சினைகளைப்பற்றிப் பேசுவதாக மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிவிடக் கூடாது. இதை நாம் அலட்சியப்படுத்துவோமேயானால் தமிழகம் பொருளாதார ரீதியாக மீளமுடியாத ஓர் இக்கட்டான சூழலுக்குத் தள்ளப்பட்டுவிடக்கூடிய ஓர் அபாயம் உண்மையிலேயே ஆழமாக இருக்கிறது என்பதை அவைக்கு நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 6-10

மைய அரசினுடைய அணுகுமுறை மாநிலங்களினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு, திட்ட வளர்ச்சிக்கு, மேம்பாட்டுப் பணிகளுக்கு உகந்த அணுகுமுறையாக ஆண்டு பலவாக இல்லாத காரணத்தால், தமிழகம் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற, கிட்டத்தட்ட அனைத்து மாநிலங்களிலுமே, இருக்கின்ற நிதி அதிகாரங்களை வைத்துக்கொண்டு, நிதியாதாரத்தைப் பெருக்க வழியின்றி தத்தளிக்கின்ற நிலை இந்தியத் துணைக் கண்டத்தில் மிக அதிகமாக இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர வேண்டும் என்பதற்காக நான் இதைச் சொல்ல விரும்புகின்றேன்.

எங்களுக்கு, தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், இந்த ஆட்சியைப் பொறுத்தவரைக்கும், கடந்தகால ஆட்சியில் அவர்கள் மேற்கொண்ட அணுகுமுறையின் கோளாறு காரணமாக, plan expenditure, non-plan expenditure என்ற பாகுபாட்டில் ஒரு வளர்கின்ற பொருளாதாரத்தில் in a developing economy, plan expenditure-க்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, திட்டப் பணிகளுக்கு, மேம்பாட்டுப் பணிகளுக்குத் தேவையான ஒதுக்கீட்டிற்கு முக்கியத்துவத்தைக் கொடுத்து, non-plan expenditure என்று சொல்லக்கூடிய, திட்டம் சாரா செலவுகளைச் சற்றுக் குறைத்து, நடைமுறைப்படுத்துகிற பொருளாதார அணுகுமுறைதான், வளர்ந்து வருகிற பொருளாதாரம் என்ற நிலையில் இருக்கின்ற நமது நாட்டுக்கு உகந்தது என்பதை பொருளாதார வல்லுநர்கள் பலர் எடுத்தியம்பியும்கூட, அரசியல் ரீதியான, தேர்தலையொட்டி மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதார அணுகுமுறையாக, சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து நமது அணுகுமுறை இருந்துவிட்ட காரணத்தால், The intrinsic value of our money has gone to the lowest ebb today" எனப் பொருளாதார

[திரு. சி. பொன்னையன்] [2002 மே 9

நிபுணர்கள் எல்லாம் கணித்து எச்சரிக்கக்கூடிய ஒரு நிலை நமது நாட்டிலே இன்று உருவாகியிருக்கிறது. இதற்காகத்தான் நாங்கள் சொன்னோம்.

மைய அரசு ஊதியத்தை உயர்த்துகிறது; சம்பளத்தை உயர்த்துகிறது என்றால், உடனே எல்லா மாநில அரசுகளும், அரசுப் பணியாளர்களுக்கு ஊதியத்தை உயர்த்துவது இல்லை; அந்த அளவுக்கு உயர்த்துவது இல்லை. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், பிற மாநிலங்களில் கடைப்பிடிக்கப்படுகின்ற அணுகுமுறையை, நாமும் கடைப்பிடித்திருப்போமேயானால், கிட்டத்தட்ட இந்த 690 கோடி ரூபாய் வரிவிதிப்பு என்ற நிலையே இந்த பட்ஜெட்டில் இல்லாமல், நல்ல ஆக்கப்பணிக்கான திட்டங்களைக்கூட, மக்களின் நலன் கருதி இந்த அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்க முடியும். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், ஆட்சிப் பொறுப்புக்கு நாங்கள் வந்தபோது மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய, பிரதான எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் பேசுகிறபோதுகூட, அதைச் சொன்னார்கள். மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்களும் மற்றும் பல உறுப்பினர்களும் பேசுகின்றபோது சொன்னார்கள். 1998 ஆம் ஆண்டு ஆரம்பத்தில், அதாவது 1-4-1998 அன்று, அன்றைய அரசிடம் 964 கோடி ரூபாய் cash on hand என்ற நிலையிலே ரொக்க இருப்பு இருந்தது. ஆனால் 2001-ல் எங்களது அரசு பொறுப்பேற்றபோது, அந்த 964 கோடி ரூபாயும், முற்றிலுமாக செலவழிக்கப்பட்டு அல்லது கரைக்கப்பட்டு, ரிசர்வ் வங்கியிடம் மேலும் 242 கோடி ரூபாய் அளவிற்குக் கடனை வாங்கி, அதைக் கட்டாமல் தவணை தவறிய கடனாக விட்டுச் செல்லக்கூடிய ஓர் அணுகுமுறையை மேற்கொண்டார்கள். இப்படி வாங்கிய பணம், எதற்குப் பெரிதும் செலவழிக்கப்பட்டது என்றால், for non-plan expenditure என்ற முறையிலே செலவழிக்கப்பட்ட காரணத்தால், வாங்கிய கடனைக் கட்டுவதற்கு வருமானம் இருக்க வேண்டும். ஒரு கடனை நாம் வாங்குகிறோம் என்றால், வாங்கிய கடனைக் கட்டுவதற்கு வருமானத்தை உருவாக்கக்கூடிய அணுகுமுறையை முதலில் மேற்கொண்டு, பிறகு கடனை எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கலாம். அப்படிப்பட்ட ஓர் அணுகுமுறையை மேற்கொள்ளாத காரணத்தால் — இப்படிப்பட்ட ஒரு பிரச்சினை ஏற்பட்டது. நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது நிதி இல்லை, நிதி இல்லை என்று சொல்லிவிட்டு, நெடுநேரம் பேசிவிட்டு ஒரு சலுகையும் மக்களுக்கு அறிவிக்கவில்லையே என்ற ஆதங்கத்தை நமது அன்பிற்குரிய திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.



2002 மே 9] [திரு. சி. பொன்னையன்]

உண்மை நிலையை நான் சொல்கிறேன். 2000-2001-ல் தி.மு.க. அரசு இருந்தபோது 294 நாட்களுக்குக் கையிலே காசு, சல்லி காசுகூட அரசிடம் இல்லாமல் ரிசர்வ் வங்கியிடம் ways and means advance என்று கடன் வாங்கித்தான் 294 நாட்கள் அவர்கள் ஆட்சியை நடத்தினார்கள். அந்தச் சுமை எங்கள்மீது வந்தது. நாங்களும் அதைத் தொடர வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டுவிட்டது.

பிற்பகல் 6-15

அதுமட்டுமல்ல. அவர்கள் சென்ற ஆண்டு 2000-2001-வது ஆண்டில் — நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். 74 தினங்கள் over draft வாங்கி over draft வாங்கிவிட்டால் 12 நாட்களுக்குள் அந்தப் பணத்தைக் கட்டவில்லை என்றால், ரிசர்வ் வங்கி உத்தரவு போட்டுவிடும். எல்லா Treasuries-களுக்கும் தாக்கீது அனுப்பிவிடும். எந்த bill-ஐக் கொடுத்தாலும், சம்பளம் வாங்குவதற்கு முதற்கொண்டு அந்த bill-ஐப் பொறுத்தவரைக்கும் அது clear ஆகாது என்ற முறையிலே ரிசர்வ் வங்கி ஆணையிட்டுவிடும். Government திவாலா என்ற நிலைக்குச் சென்றுவிடும். எங்களுடைய நிதித் துறையிலே இருக்கின்ற அதிகாரிகளுக்கு blood presssure increase ஆகிவிட்ட நிலையிலே, 10 ஆம் தேதி வந்துவிட்டாலே O.D. கட்ட வேண்டும், 200 கோடி, 300 கோடியைக் கட்டவில்லையென்றால் அடுத்து நாம் சம்பளத்தை வாங்குவதற்குக்கூட Treasury-யிலிருந்து பணத்தைப் பெற ரிசர்வ் வங்கி அனுமதி கொடுக்காது என்ற கவலையோடு பல மாதங்களாக இத்தகைய ஒரு நெருக்கடியான நிலையிலே நாங்கள் இருந்துவருகிறோம் என்பதை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் தொல்லையோடு அல்லாமல், கிட்டத்தட்ட 700 கோடி ரூபாய் ஒப்பந்தங்கள், கான்ட்ராக்டர்கள் பல பணிகளைச் செய்து அவர்கள் கைக் காசைப் போட்டுக் கூட பணிகளை முடித்துவிட்டும், அந்தப் பணத்தைக்கூட அவர்களுக்குக் கொடுக்க முடியாத நிலை 2000-2001 ஆம் ஆண்டிலே ஏற்பட்டு, அந்த நிலை இன்றுவரை தொடர்ந்துகொண்டு வருகிறது. 700 கோடி ரூபாய்—நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நேரம் outstanding bills to be paid to the contractors, உண்மை நிலையிலேயே 700 கோடி ரூபாய்க்கு மேல் பணம் இருந்தது. ஓராண்டு காலம், ஒன்றரை ஆண்டு காலமாக கொடுக்கப்படாத பணம், அந்தக் கான்ட்ராக்டர்கள் எல்லாம் பணிகளை முடிக்க வேண்டும் என்ற முறையிலே அவர்கள் கைப் பணத்தைப் போட்டுப் பணியை முடித்துவிட்ட பிறகுகூட அவர்களுக்குப் பணத்தைத் தராத

[திரு. சி. பொன்னையன்] [2002 மே 9

ஒரு நிலை இருந்தது. இது எத்துணை அளவுக்கு மிகச் சிக்கலான ஒரு பிரச்சினை, வேதனையான பிரச்சினை, நிதிநிலை தட்டுப்பாடு தமிழக அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை அவை உணர வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

அதுமட்டுமல்ல, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். எந்த அளவுக்கு சென்ற ஆட்சியிலே அவர்களுக்கும் அந்தப் பிரச்சினை இருந்திருக்கிறது என்பதற்கு உதாரணம்; பிரச்சினைகளை தாக்குப் பிடிக்க முடியாமல், அரசு ஊழியர்களுக்கு சம்பளம்கூட கொடுக்க முடியாமல் Neyveli Lignite Corporation அடுத்த வருடம், அடுத்த வருடம் என்று அவர்கள் நமக்குத் தர வேண்டிய ராயல்டி 250 கோடி ரூபாயை முன்கூட்டியே வாங்கி non-plan expenditure-க்கு செலவழிக்கக்கூடிய நிலைமைக்கு, இந்த திவாலா நிலை 2000-2001-லேயே வந்துவிட்டது. இந்தப் பண நெருக்கடி, நிதி நெருக்கடி, நிதித் தட்டுப்பாடு the debt trap என்பது எல்லாம், அதற்குள்ள அச்சாணி எல்லாம் நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பாகவே வந்துவிட்டது. மக்களுக்கு நீங்கள் சொல்லவில்லை. மக்களுக்கு புரட்சித் தலைவி அவர்கள் வெளிப்படுத்தினார்கள். இந்த நிலையிலே தமிழ்நாட்டினுடைய நிதிநிலை இருக்கிறது, இப்படிப்பட்ட ஒரு நிதிநிலை நெருக்கடியை நீங்கள் உருவாக்கிச் சென்றுவிட்டீர்கள். ஆனால் மக்களுக்குச் சொல்லாமல் சென்றுவிட்டீர்கள் என்று நாங்கள் மக்களுக்கு அதை வெளிப்படுத்தினோம். காரணம், நாம் நாட்டை எப்படியும் செம்மையோடு நடத்தியாக வேண்டும். உண்மையை மக்களுக்குத் தெரிவித்தாக வேண்டும், உண்மையை அவைக்குத் தெரிவித்தாக வேண்டும். அவை உறுப்பினர்கள் — you have to give us constructive suggestions as to how to get over from this financial crisis—என்ற முறையில்தான், இந்த இக்கட்டான நிலையிலிருந்து எப்படி அரசு மீள வேண்டும் என்பதற்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை நீங்கள் தர வேண்டும். தமிழகத்தை மேம்பாட்டுத் திட்டத்தில், மேம்பாட்டுப் பணிகளில், நன்னிலைக்குக் கொண்டுவருவதற்கு நாம் நல்ல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஆனால் பிரச்சினை இப்படி இருக்கிறதே, மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும், அவைக்குத் தெரிவிக்க வேண்டும். ஆக்கபூர்வமான திட்டங்களை வகுத்திட வேண்டும் என்றுதான் நமது மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள் ஒரு முடிவுக்கு வந்து, நாம் மூடி மூடி மறைத்துப் பலன் இல்லை, தமிழகம் பண நெருக்கடியில் மூழ்கிவிட்ட நிலை ஏற்பட்டு, தமிழக மக்களுக்கு ஆபத்து ஏற்பட்டுவிடக்கூடாது,



2002 மே 9] [திரு. சி. பொன்னையன்]

அவைக்குத் தெரிவிக்க வேண்டும், அவை மூலமாக இந்த நாட்டுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். அவை உறுப்பினர்களின் ஆலோசனைகளைக் கேட்டு எல்லோரும் ஒருங்கிணைந்து ஆக்கப்பூர்வமான திட்டங்களைத் தீட்ட அதற்கான அணுகுமுறைகளை, ஆலோசனைகளை நீங்கள் நல்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த வெள்ளை அறிக்கையை, வெளிப்படையான உண்மைகளை, மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும், அவைக்குத் தெரிவிக்க வேண்டும் என்ற முறையிலே அதை அவைக்கு அறிவித்தார்கள்.

பிற்பகல் 6-20

அதுமட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினர்கள் நேற்று பேசும்போதுகூடச் சொன்னார்கள். எங்களுக்கு ஏற்பட்ட இன்னொரு சுமை Public Distribution System. ஏழைகளுக்கு மலிவு விலையிலே உணவுப் பொருட்களை நாம் வழங்கியாக வேண்டும். More than 35% of our people are living below poverty line. அவர்களுக்கு அது இல்லை என்று சொல்லிவிட முடியாது. ஆனால் சென்ற 2000-2001 ஆம் ஆண்டிலே நடைமுறையில் கடைப்பிடிக்கப்பட்ட ஒரு தவறான அணுகுமுறை, 4 இலட்சம், 5 இலட்சம் டன் நெல் ஸ்டாக் இருந்தால் நமக்குப் போதும். Because there is Green Revolution, Food Corporation of India-வில் எவ்வளவு வேண்டுமானாலும் நெல் இருக்கிறது; நெல் கெட்டுவிட்டது, வாங்கிக் கொள்ளுங்கள், வாங்கிக் கொள்ளுங்கள் என்று மாநிலங்களை நோக்கி அவர்கள் கேட்கக்கூடிய அளவிற்கு கடந்த 5, 6 ஆண்டுகளாக எங்கு பார்த்தாலும் நெல் குவிந்து கிடக்கிறது, அரிசி குவிந்து கிடக்கிறது. இந்த நிலையிலே தஞ்சையிலே இருக்கின்ற உழவர்களுக்கு உதவ வேண்டுமென்ற ஒரு காரணத்தைச் சொல்லி, வழக்கமாக வாங்குகிற 8 இலட்சம், 9 இலட்சம், 10 இலட்சம் டன்னுக்குப் பதிலாக 16-லிருந்து 19 இலட்சம் டன் என்று கடைசியிலே சொன்னார்கள். 19 இலட்சம் டன் நெல்லைக் கொள்முதல் செய்ததில் 1,445 கோடி ரூபாய் முடக்கம்; இப்படிப்பட்ட இக்கட்டான நிலை; 274 நாட்களுக்கு, 294 நாட்களுக்கு கடன் வாங்குகின்ற நிலை, ஆண்டிலே. 74 நாட்களுக்கு O.D. வாங்கக்கூடிய நிலை 2000-2001 ஆம் ஆண்டிலே. இந்தச் சூழலிலே 1,445 கோடி ரூபாயைச் செலவழித்து 19 இலட்சம் டன் நெல்லைக் கொள்முதல் செய்து பணத்தைக் கடன் வாங்கி, அதற்குவேறு வட்டி கட்ட வேண்டும் என்ற நிலையை உருவாக்கிச் சென்றுவிட்டார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் அந்த 1,445 கோடி ரூபாயைத் திருப்பிக் கட்டாவிட்டால், அடுத்த கடன்

நெல் கொள்முதலுக்குத் தரமாட்டோம் என்று ரிசர்வ் வங்கி சொல்லிவிட்டது. இதுதான் உண்மை. நெல்லைக் கொள்முதல் செய்யவில்லை, கொள்முதல் செய்யவில்லை என்று நீங்கள் சொல்கிறீர்கள். 1,445 கோடி ரூபாய்க்கு நெல்லைக் கொள்முதல் செய்துவிட்டார்கள்; கடனை வாங்கி, மீண்டும் நெல்லைக் கொள்முதல் செய்வதற்குப் பணம் வேண்டுமல்லவா?

நாங்கள் ஆட்சிக்கு வருகின்ற நேரம் கஜானாவில் பணமே இல்லை. ஏகப்பட்ட கடன். அன்றைக்கன்றைக்கு மாதம் 10 ஆம் தேதி முதல் 13 ஆம் தேதிக்குள் பணத்தைக் கட்ட வேண்டிய நிலை. எங்கு செல்வது மீண்டும் 1,445 கோடி ரூபாய்க்கு? இப்படிப்பட்ட ஒரு சூழல். இப்படி 19 இலட்சம் டன் நெல் வாங்கினார்களே, அதுவும்கூட வியாபாரிகளிடம் அந்த நெல்லை, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் வாங்கிய காரணத்தால் உழவர்களுக்குப் பலன் சென்று சேரவில்லை; ஓரளவுக்குத்தான் சென்றது. பெரும் பலன் வியாபாரிகளுக்குச் சென்றுவிட்டது. அதற்கு 40 ரூபாய் incentive கொடுக்கிற காரணம். ஈரப் பசையோடு போட்டுவிட்டால் அதிலே வேறு இலாபம். வியாபாரிகள் எல்லா தந்திரங்களும் தெரிந்தவர்கள் என்ற காரணத்தால் ஏழை விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டிருந்த இந்தச் சலுகையை அவர்கள் பெறக்கூடிய ஒரு சூழலை உருவாக்கிவிட்டார்கள். இதனால் அரசுக்கு ஏகப்பட்ட நஷ்டம். இந்தப் பணச் சுமையும் எங்கள் தலைமீது விழுந்தது. நான் அவர்கள் செய்த தவறு என்ன என்பதை அவை அறிய வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்; இந்தக் காரணத்தினால் பெரும் பணச் சுமை அரசுக்கு ஏற்பட்டுவிட்டது.

அதுமட்டுமல்ல, அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அதிகமாக எங்கள் ஆட்சியிலே தந்தோம்; நீங்கள் சலுகைகளைப் பறிக்கிறீர்களே என்று சொன்னார்கள். எந்தவொரு சலுகையையும்—அரசு ஊழியர்களுக்காக, ஊழியர்களுக்காக, தொழிலாளிகளுக்காக, பாட்டாளிகளுக்காக இருக்கின்ற புரட்சித் தலைவி அரசு, பறிக்காது என்ற உறுதியினை நான் அவைக்குச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் வைதியலிங்கம் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள் என்று கருதுகிறேன். ஆனால் உண்மை நிலை என்ன? 5-வது சம்பளக் கமிஷன் ஒரு பரிந்துரையைச் செய்கிறபோது, பல மாநிலங்கள் அப்படியே அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த மாநிலத்தினுடைய வருமான நிலைக்கேற்ப, வருமான ஆதாரத்திற்கேற்ப எவ்வளவு வருமானம் வருகிறதோ, they calculated what is the total





revenue receipts available to the State Governments and accordingly they have decided their budget plan. அந்த வருமானம் எவ்வளவு வருகிறதோ, 20,000 கோடி ரூபாய் வந்தால் அதற்குள்ளே திட்டத்தைத் தீட்டினார்கள். ஆனால் நமது மாநிலத்தைப் பொறுத்தவரைக்கும் வருவாய்க்கு அதிகப்படியான திட்டத்தைத் தீட்டி அதிகப்படியான நிதியை இந்த Non-Plan expenditure-க்கு ஒதுக்கினாலும் பரவாயில்லை, எதிர்காலம் என்னவானாலும் பரவாயில்லை என்ற நோக்கத்திலே செய்ததைப் போல, அப்படியொரு ஆணையை இட்டு 40 சதவீதம் அந்த ஊழியர்களுக்கு, அரசு ஊழியர்களுக்குத் தந்துவிட்டு, மீதி 60 சதவீதம் பணத்தை, கிட்டத்தட்ட 1,823 கோடி ரூபாயை அந்த ஊழியர்களுக்குத் தராமல், இந்த ஆண்டு நாங்கள் தர வேண்டும், அடுத்த ஆண்டும் நாங்கள் தர வேண்டும் என்று அவர்களிடம் சொல்லி, அந்தப் பளுவையும் எங்கள் தலைமீது ஏற்றிவிட்டார்கள். அப்படிச் சொல்லிவிட்டு, அந்த ஊதிய உயர்வு, சம்பளம் வருகின்றபோது 1 ஆம் தேதி அரசு ஊழியர்களுக்கு, நீங்கள் ஒத்துக்கொண்ட சம்பளம், நீங்கள் அறிவித்த சம்பளம், நீங்கள் அறிவித்துத் தராமல் பாக்கியாக, சம்பளத்தைக்கூட ஈராண்டுகள் கழித்து, அந்த உயர்த்திய சம்பளத்தை that too, with retrospective effect from 1996 அந்த ஊதிய உயர்வுகளையெல்லாம் நாங்கள் தருவோம் என்று எங்கள் தலையிலே தற்போது சுமத்திவிட்டு, சென்றுவிட்டீர்கள். அந்தப் பணத்தையும் கட்ட வேண்டிய ஒரு நெருக்கடி எங்கள் தலையிலே தற்போது வந்திருக்கிறது.

பிற்பகல் 6-25

இந்த நிலையிலே நாங்கள் மட்டுமல்ல, நீங்கள் எங்கள் நிலையில் இருந்தாலும், எந்த அளவுக்கு நீங்கள் வேதனைப்பட வேண்டும், வேதனைப்பட்டிருப்பீர்கள் என்பதனை மாண்புமிகு உறுப்பினர்கள், தி.மு.க. உறுப்பினர்களும் அன்போடு உணர்ந்து பார்க்க வேண்டும் என்பதற்காக, இந்த நிலவரத்தை, உண்மை நிலையினை நான் உங்களுக்கு எடுத்துச் சொல்கிறேன்.

அப்புறம், உள்ளாட்சி நிறுவனங்களுக்கெல்லாம் போதிய பணத்தை, இந்த அரசு தரவில்லையே என்ற ஒரு வேதனையை மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். உள்ளாட்சி நிறுவனங்களுக்கும்கூட கிட்டத்தட்ட 250 கோடி ரூபாய் தர வேண்டிய பணத்தை, ஒதுக்க வேண்டிய பணத்தை State Finance Commission-உடைய பரிந்துரைப்படி

[திரு. சி. பொன்னையன்] [2002 மே 9

grant மூலமாக அவர்களுக்குத் தர வேண்டிய, 2000-2001 ஆம் ஆண்டிற்கு தி.மு.க. ஆட்சிக் காலத்திலே தர வேண்டிய பணம் 250 கோடி ரூபாயை, அதையும் அவர்கள் தராமல் சென்றுவிட்டார்கள். அந்தப் பணத்தையும் சேர்த்து, தர வேண்டிய சுமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலையிலே கடந்த கால ஆட்சி சுமத்திவிட்டது. இப்படி கிட்டத்தட்ட 4,720 கோடி ரூபாய் பணம், ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் முடியாது என்று சொல்லமுடியாத அளவிற்கு, உடனடியாகத் தீர்க்க வேண்டும் என்ற நிலையிலே இப்படிப்பட்ட ஒரு சுமை ஏற்பட்டுவிட்டது. மாநில அரசு எப்படி இதைச் சமாளிக்க முடியும்? அரசுக்கு வருமானம் Commercial Taxes. அரசுக்கு வருமானம் Excise Revenue. அரசுக்கு வருமானம் மைய அரசு தருகின்ற, ஒதுக்குகின்ற அந்த நிதி. ஆனால் மைய அரசைப் பொறுத்தவரைக்கும், Commercial Taxes-ஐப் பொறுத்த வரைக்கும் since there has been an industrial and economic recession throughout the country for the past one or two years, the collection has decreased a little. நாங்கள் எதிர்பார்த்ததைவிட குறைந்துவிட்டது. 2000-2001 ஆம் ஆண்டைவிட அரசுக்குக் கிடைத்த அந்த வருமானத்தைப் பொறுத்தவரைக்கும் Commercial Taxes-லே எங்களுக்கு அதிக வருமானம் கிடைத்தது. ஆனாலும்கூட நாங்கள் போட்ட target-படி எதிர்பார்த்த அளவிற்கு அந்த வருமானம் அரசுக்குக் கிடைக்காத ஒரு நிலை ஏற்பட்டது.

அதுமட்டுமல்ல. மைய அரசு, மாநில அரசுகளினுடைய தேவைகளை உணர்ந்து செயல்படாத ஒரு நிலை இருந்துவருகிறது. மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர்கள்கூட மைய ஆட்சியிலே இடம் பெற்றிருக்கிற காரணத்தால், மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பது அண்ணாவினுடைய கொள்கை. நான் இப்படிச் சொல்கிறபோது நீங்கள் வருத்தப்படக் கூடாது. எப்படி மாண்புமிகு சந்திரபாபு நாயுடு அவர்கள் மாநிலத்திற்கு அதிக நிதியைப் பெறுவதற்கு அந்தக் கூட்டை வைத்திருக்கிறாரோ, அதுபோல, ஆட்சியில் நாங்கள் இருந்தால் என்ன, நீங்கள் இருந்தால் என்ன, நாடு நம் நாடு. நம் தமிழ்நாடு நன்னிலைக்கு வருவதற்கு உங்களுக்குள் உள்ள அந்தத் தோழமையைப் பயன்படுத்தி, மாநிலத்திற்குள்ள அதிகாரத்தை மைய அரசு பறிக்கிறதே, அந்த நிலையிலிருந்து அவர்கள் மாறுபட வேண்டும் என்ற கொள்கையை நீங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



2002 மே 9] [திரு. சி. பொன்னையன்]

என்ன செய்கிறார்கள், 10 ஆம் நிதிக் குழுவோடு ஒப்பிடுகிறபோது, 11 ஆம் நிதிக் குழு 6.637 கோடியிலிருந்து மாநிலத்திற்கு ஒதுக்க வேண்டிய, நமக்கு ஒதுக்க வேண்டிய பணத்தை 5.385 கோடியாகக் குறைத்துவிட்டார்கள். இதை எப்பொழுது செய்தார்கள்? 2000-2001-லே செய்துவிட்டார்கள். இதற்கு அப்போதே நீங்கள் போராடியிருக்க வேண்டும். இது ஒரு சாதாரணப் பிரச்சினை இல்லை. தமிழகத்தினுடைய மேம்பாட்டுத் திட்டங்கள், தமிழகத்தினுடைய வளர்ச்சித் திட்டங்களுக்கு சாவு மணி அடிக்கக் கூடிய ஓர் அணுகுமுறையை மைய அரசு மேற்கொண்டபோது, 2000-2001-ல் ஆட்சிப் பீடத்திலே நீங்கள் இருந்தபோது மௌனமாக இருந்த மர்மம் என்னவென்று மக்கள் கேட்கக் கூடிய ஒரு நிலையை நீங்கள் உருவாக்கிவிட்டீர்கள். இதை நீங்கள் உணர வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். 1 கோடி, 2 கோடி அல்ல. ஆண்டுக்கு 590 கோடி ரூபாயை தமிழகத்திற்குக் குறைத்துவிட்டார்கள். ஒட்டுமொத்தமாக இந்த 5 ஆண்டு காலத்திற்கும் 2,946 கோடி ரூபாயைக் குறைத்துவிட்டார்கள். போராடியிருக்க வேண்டும். எது எதற்கோ நாம், கடந்த காலத்திலே அண்ணா காலத்திலிருந்து போராடினோம். இப்படிப்பட்ட ஒரு மாபெரும் பொருளாதார விபத்தை தமிழக அரசின்மீது, தமிழ்நாட்டு மக்கள்மீது மைய அரசு திணித்தபோது, அந்த மைய அரசிலே அங்கம் வகிக்கின்ற நீங்கள் மௌனமாக இருந்தது உண்மையிலேயே தமிழக மக்களுக்கு நீங்கள் ஆற்ற வேண்டிய பணியை, ஆற்றுகிற கடமையிலிருந்து தவறிவிட்டீர்கள் என்ற குற்றச்சாட்டுக்கு, மக்களுடைய ஆதங்கத்திற்கு நீங்கள் உள்ளாகியிருக்கிறீர்கள் என்பதனை நான் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 6-30

மற்றும் ஒன்று. மைய அரசு எப்படிப்பட்ட ஒரு தவறான அணுகுமுறையைத் தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் எடுக்கிறது என்பதை நீங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். Tamil Nadu is categorised as a developed State along with Maharashtra and Gujarat. உயர்ந்த, முன்னிலைக்கு வந்துவிட்ட மாநிலங்கள் என்றால், அதற்கென்று சில வரையறைகளை வைத்து இருக்கிறார்கள். மக்கள்தொகையைப் பொறுத்தவரைக்கும், குறைந்த மக்கள்தொகை population control என்ற முறையிலே, செம்மையாகச் செயல்படுத்துகிற மாநிலத்திற்கு குறைந்த நிதி ஒதுக்கீடு. தமிழகம் நன்னிலைக்கு வர வேண்டுமென்ற முறையிலே எல்லா திட்டங்களும் செம்மையாக

[திரு. சி. பொன்னையன்] [2002 மே 9

நடைபெற வேண்டும் என்ற முறையிலே family planning scheme is being implemented very perfectly in our State. ஆனால் அதற்கு ஊக்கத்தைத் தர வேண்டிய மைய அரசு, ஊக்குவிப்புத் தருவதற்குப் பதிலாக, நமக்கு தண்டனையாக 20 விழுக்காடு நமக்கு ஒதுக்கி வந்த அந்தப் பணத்தை 10 விழுக்காடாகக் குறைத்துவிட்டார்கள். எத்தகைய ஒரு தவறான அணுகுமுறையை மைய அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதனை தி.மு.க. உறுப்பினர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். உங்கள் தலைவருக்குத் தெரியும். நீங்கள் இதை விளக்கி அவரிடம் சொல்ல வேண்டும். தமிழகத்திற்கு எப்படிப்பட்ட துரோகத்தை, நீங்கள் ஆட்சிபுரிகிற மைய அரசு ஆற்றியிருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அதேபோல இன்னும் ஒன்று area. எந்த ஒரு மாநிலத்திற்கு அதிகமான பரப்பளவு இருக்கிறதோ அந்த மாநிலத்திற்கு மைய அரசு ஒதுக்குகின்ற நிதி அதிகம். நிலப் பரப்பு குறைவாக இருக்கிற மாநிலத்திற்கு மைய அரசு ஒதுக்குகின்ற நிதி குறைவு என்ற ஒரு வரைமுறையைக் கொண்டுவந்தார்கள். அதனாலும் தமிழகத்திற்கு ஒரு பெரும் பாதிப்பு ஏற்பட்டுவிட்டது.

இன்னும் ஒன்று. There is no incentive at all for any State that is resorting to development activities by way of infrastructure facilities. அடிப்படை வசதிகள், தண்ணீர் வசதி, சாலை வசதி, மின்சார வசதி, தொழில்மயமாக பொருளாதாரத் துறையிலே ஒரு மாநிலம் முன்னேறுவதற்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்கிற மாநிலங்களுக்கு என்ன செய்ய வேண்டும் மத்திய அரசு? தட்டிக் கொடுத்து, அதிக நிதி தருகிறேன், நீங்கள் செயல்படுங்கள் என்று சொல்ல வேண்டும். அதை விட்டுவிட்டு, பின்தங்கிய மாநிலங்களாக இருக்கின்ற உத்தரப்பிரதேசத்திற்கும், பீகாருக்கும், மத்தியப் பிரதேசத்திற்கும், இராஜஸ்தானிற்கும் அதிக நிதியினை ஒதுக்கிவிட்டு, அடிப்படை வசதிகளை அதிகமாகச் செய்திருக்கிற தமிழகத்திற்கும், மராட்டிய மாநிலத்திற்கும், குஜராத்திற்கும் அந்த நிதியினை அடிப்படையில் வளர்ந்துவிட்ட மாநிலம், எனவே உங்களுக்கு நிதி குறைக்கப்பட்டுவிட்டது; இந்தக் குறைக்கப்பட்ட நிதியை இன்னும் வளரா நிலையில் இருக்கின்ற உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு தருகிறோம் என்று தந்துவிட்டார்கள். அப்படிப்பட்ட முடிவை அவர்கள் எடுக்கின்றபோதும், மைய ஆட்சியிலே நீங்கள் இருந்திருக்கின்றீர்கள். நீங்கள் இருந்துகொண்டும் இருக்கிறீர்கள். இதிலே நீங்கள் மௌனியாக



2002 மே 9] [திரு. சி. பொன்னையன்]

இருக்கிறீர்கள். தமிழகத்திற்கு நீங்கள் தெரிந்தோ தெரியாமலோ, என்ன காரணத்தினால் இத்தகைய துரோகத்தை நீங்கள் பங்கேற்கிற மைய அரசு இழைக்கின்றபோது, நீங்கள் மௌனியாக இருக்கிறீர்கள் என்ற மக்களின் வினாவிற்கு நீங்கள் பதில் சொல்லியாக வேண்டும். இதை நீங்கள் உணர வேண்டும் என்பதற்காக இதனை நான் சொல்கிறேன்.

பிற்பகல் 6-35

இத்தகைய தவறான அணுகுமுறைகளை, தமிழகத்தைப் பாதிக்கும் அணுகுமுறைகளை மைய அரசு எடுத்தபோது, அந்தக் குழுவிலும்கூட, உங்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த அமைச்சர் the Minister for Industries and Commerce is a Member of the Committee which has evolved all these policies, detrimental to the State of Tamil Nadu. அப்போது டெல்லியிலே இருந்தது உங்களுடைய அமைச்சர். இங்கே இருந்தது உங்களுடைய தலைவர், முதலமைச்சராக மட்டுமல்ல. நிதியமைச்சராகவும் இருந்தார். அவருக்கும் இது தெரியாதது அல்ல. தமிழக மக்களுக்கு ஓர் இருட்டடிப்பைச் செய்துவிட்டு, இப்படிப்பட்ட ஓர் ஆபத்தை டெல்லி உருவாக்கி வருகிறது என்று ஏதேனும் அறிவிப்பு விட்டாரா? போராட்டம் நடத்தினாரா? (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். போராட்டம் நடத்தினாரா? நான் சொல்வது நீங்கள் எழுதியிருக்கிறீர்கள். முன்னரே சொன்னீர்கள் என்னிடம். எழுதியிருப்பதாகச் சொன்னீர்கள். ஆனால் வெறுமனே யாருக்கு எழுதுகிறீர்கள்? இங்கேயிருந்து, உங்களது கட்சிக்கு, உங்களது கட்சி ஆளுகிற மைய அரசுக்கு, உங்களது அமைச்சர் Industries and Commerce Minister-ஆக இருக்கிறார். அங்கு நீங்கள் எழுதினீர்கள். நீங்கள் எழுதிய எழுத்தினுடைய பலன் என்ன ஆனது? வெற்றி கிடைத்ததா? வெற்றி கிட்டவில்லை என்ற நிலை ஏற்பட்டபோதே, சந்திரபாபு நாயுடு அவர்களைப் போன்ற அந்த வழிமுறையை, மாநிலத்தைக் காக்க வேண்டும், தெலுங்கு தேசத்தைக் காக்க வேண்டும், தெலுங்கு நாட்டைக் காக்க வேண்டும் என்ற உணர்வோடு அவர் செயல்பட்டாரே, தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழுக்காகவே வாழுகிறோம் என்று சொல்கிற நீங்கள், தமிழ்நாட்டின் நலன் கருதி, குறைந்தபட்சம் நீங்கள் அமைச்சரவையிலிருந்து (மேசையைத் தட்டும் ஒலி) ராஜினாமா செய்திருக்க வேண்டும் அல்லது தோழமையை முறித்துக்கொண்டு வந்திருக்க வேண்டுமென்றுகூட நான் சொல்லவில்லை. குறைந்தபட்சம் மாநிலத்தின்மீது அக்கறையோடு செயல்படுகிறவர்கள், மொழிப் பற்றோடு செயல்படுகிறவர்கள், எப்படிச் செயல்பட வேண்டுமென்பதற்கு எடுத்துக்காட்டாக உங்களது பங்காளியாக இருக்கிற

[திரு. சி. பொன்னையன்] [2002 மே 9

சந்திரபாபு நாயுடு இருக்கிறாரே, அவர் பாதையையாவது நீங்கள் கடைப்பிடித்திருக்க வேண்டாமா? இதைத்தான் நாங்கள் சொன்னோம், உங்களுக்குக் கோபம் வந்தது. நீங்கள் ஆட்சிப் பீடத்தில் இருந்தபோது தமிழகத்திற்கு துரோகத்தை இழைத்துவிட்டீர்கள் என்று சொல்கிறபோது உங்களுக்கு வருத்தம் வந்தது. (குறுக்கீடு) கொஞ்சம் wait பண்ணுங்கள். Hon. Speaker may request Mr. Ponmudi to wait for a while. (Interruption) இல்லை, இல்லை. I will come to it. My thought flow will get affected. Excuse me. I will give you time after I conclude my speech. Excuse me. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சூழலை நான் ஏற்கெனவே எடுத்துச் சொன்னேன்.

அதுமட்டுமல்ல, அந்த 590 கோடி ரூபாய் 11th Finance Commission-ல் நமக்குள்ள இந்த வரையறைகளின் காரணமாக நமக்குக் குறைந்துவிட்ட பணம் 590 கோடி ரூபாய் என்று சொன்னேன். அப்படி 590 கோடி ரூபாய் குறைந்துவிட்டது என்று சொன்னாலும் பரவாயில்லை. எப்படியோ சமாளிக்கிறோம் என்று எண்ணிக்கொள்ளுங்கள். திடீரென்று சில மாதங்களுக்கு முன்னால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொன்முடி அவர்களையும் கவனிக்கச் சொல்கிறேன். மைய அரசு என்ன முடிவு எடுத்தது என்றால் ஆண்டுக்கு தர வேண்டிய பணத்திலே 590 கோடி ரூபாயைக் குறைத்துவிட்டு, இப்படிப்பட்ட காரணங்களையெல்லாம் சொல்லி, தமிழகம் வளர்ந்த மாநிலம் என்ற காரணத்தைச் சொல்லிவிட்டு, அப்படிக் குறைத்துவிட்டது. அந்த மைய அரசிலே அங்கம் வகிக்கும் நீங்கள் மௌனமாக இருந்துவிட்டீர்கள். திடீரென சில மாதங்களுக்கு முன்னால் மேற்கொண்டு 512 கோடி ரூபாய் அந்தப் பணத்திலும் குறைத்துவிட்டார்கள். வரக்கூடியவை, ஒட்டுமொத்தமாக 1,102 கோடி ரூபாய் அளவிற்கு கடந்த ஆண்டுக்கு நமது வளர்ச்சித் திட்டங்களுக்கு வர வேண்டிய பணத்தை மைய அரசு தராமல் விட்டுவிட்ட காரணத்தால் நமக்கு வளர்ச்சித் திட்டங்களுக்குப் பணம் இல்லை. வரி போடக்கூடிய ஓர் இக்கட்டான நிலை வந்துவிட்டது. அந்த 590 கோடி ரூபாய், ஆரம்பத்திலே அதைக் குறைக்காமல் இருந்தால்கூட இந்த ஆட்சி வரியைப் போட்டிருக்காது. இந்த 1,102 கோடி ரூபாய் நமக்கு வர வேண்டிய பணம், நமக்கு தர வேண்டிய பணம், தர வேண்டிய பணத்தைத் தராமல் தடுத்துவிட்ட காரணத்தால் நமக்கு ஏற்பட்ட ஆபத்து சாதாரண ஆபத்து அல்ல. 1,102 கோடி ரூபாயைக் குறைத்துவிட்டபோது, வரியைப் போட்டிருக்க வேண்டும். ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஏழைகளினுடைய நலனில்



2002 மே 9] [திரு. சி. பொன்னையன்]

அக்கறை உள்ள ஒரு முதல்வராக இருக்கிற காரணத்தால், பாமர மக்களை, பாட்டாளி மக்களை வரி உயர்வு பாதித்துவிடக்கூடாது, வேறு விதங்களில் சமாளிக்கக்கூடிய வழிமுறைகளைக் கண்டாய்வோம் என்று பலமுறை அதிகாரிகளையும் வல்லுநர்களையும் கூப்பிட்டு எப்படி பிரச்சினைகளையெல்லாம் தீர்க்க வேண்டுமென்று சொல்லி, ஒரு குறைந்தபட்ச வரியை நாம் போடுவோம். தவிர்க்க முடியாத அளவிற்கு போட்டு எங்கெங்கு தவிர்க்க முடியுமோ அதைத் தவிர்த்துவிடுவோம் என்று சொன்னார்கள். அப்படித்தான் இந்தக் குறைந்தபட்ச வரியும் போடப்பட்டது. நான் ஏற்கெனவே விளக்கமாக இந்த அவைக்குச் சொல்லியிருக்கிறேன். இவற்றைப்பற்றி சொல்லியிருக்கிறேன்.

பிற்பகல் 6-40

அது மட்டுமல்ல. இன்னும் ஒன்றைச் செய்தார்கள். நாம் வெளியிலே கடனை வாங்கி பிரச்சினைகளைத் தீர்க்கலாம் அல்லது வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளலாம் என்ற ஓர் அணுகுமுறையை நீங்கள் ஆண்ட காலத்திலே உங்களுக்கு அந்த அதிகாரத்தை மத்திய அரசு தந்திருந்தது. ஆனால் நாங்கள் ஆட்சியிலே இருக்கிறோம். எப்படி எப்படி கழுத்தை நெருக்கிப் பிடிக்கிறார்கள்? 590 கோடி ரூபாயைத் தர மறுத்துவிட்டார்கள். இன்னொரு 512 கோடி ரூபாயைத் தராமல் விட்டுவிட்டார்கள். சுமார் 1,102 கோடி ரூபாயை இந்த ஆண்டுக்கு எங்களுக்கு வர வேண்டிய பணத்தைத் தராமல் விட்டுவிட்டு, வெளியிலே சென்று கடன் வாங்கலாம் என்று நாங்கள் எண்ணுகிறபோது, வெளியிலே கடன் வாங்குவது என்றாலும், மத்திய அரசினுடைய அனுமதி வாங்கித்தான் கடன் வாங்க வேண்டும் என்ற ஆணையை அண்மையிலே எங்களுக்கு இட்டுவிட்டார்கள். நிதி நிறுவனங்களிலிருந்து கடனை வாங்குவதற்கு ரிசர்வ் வங்கியிடம் சென்றால், மற்ற நிதி நிறுவனங்களிடம் சென்றால் அவர்கள் சொல்வது மாநில அரசினுடைய, நிதி வாங்குவதற்கு Guarantee கொடுக்கக்கூடிய தகுதியே மாநில அரசுக்குக் குறைந்துவிட்டது. வாங்கிய கடனைக் கட்டாத நிலை, வாங்கிய கடனுக்கு வட்டியைக் கட்டாத நிலை. இந்த நிலையிலே ஒவ்வொரு Project ஆகப் பார்த்து, அந்த Project-ஐப் பொறுத்தவரைக்கும், எந்த ஒரு திட்டமாக இருந்தாலும், ஒரு Water Scheme கொண்டு வருகிறோம் என்றால், அந்தத் திட்டத்திற்கு மைய அரசு, ரிசர்வ் வங்கி, நிதி நிறுவனம், அதை ஆய வேண்டும். அந்தத் திட்டத்திற்கு, அந்த ஒதுக்கீட்டிற்கு bankability இருக்கிறதா? viability இருக்கிறதா? 5,000 கோடி ரூபாய், 2,000 கோடி ரூபாய் அல்லது 1,000 கோடி ரூபாய்,

[திரு. சி. பொன்னையன்] [2002 மே 9

200 கோடி ரூபாய் என்ற திட்டமாக இருந்தால், அந்தத் திட்டத்தைப் போட்ட பிறகு, அந்தத் திட்டத்திலிருந்து கிடைக்கும் வருவாயிலிருந்தே அந்தக் கடன் கட்டப்படுமா? Water Scheme என்றால், சென்னைக்கு தண்ணீர் கொண்டுவருகிறோம், வேறு ஒரு மாநகராட்சிக்கு தண்ணீர் கொண்டுவருகிறோம் என்றால், அந்தத் திட்டத்திற்குப் பணத்தை வாங்க, எப்போது மைய அரசு நமக்கு அனுமதி தருகிறது என்றால், அந்தத் தண்ணீரைப் பயன்படுத்துகிற மக்களிடமிருந்தே பணத்தை வாங்கி, அந்தக் கடனை நீங்கள் கட்டக் கூடிய தகுதி, அந்த உள்ளாட்சி நிறுவனத்திற்கு இருக்கிறதா? மக்கள் ஒத்துக்கொண்டார்களா? அப்படி என்றால்தான், இந்தக் கடனை வாங்க மாநில அரசு கொடுக்கிற guarantee-க்கு நாங்கள் அனுமதி தருவோம் என்று ஓர் இக்கட்டான உத்தரவை. மாநிலங்களை எல்லாம் பொம்மைகளைப் போல நடத்துகிற ஓர் உத்தரவை, மாநிலத்தினுடைய Financial Power என்று சொல்லக்கூடிய, அந்தப் பண அதிகார வரம்பினை அறவே பறித்துவிட்ட ஒரு நிலையை இந்த ஆண்டு மைய அரசு உருவாக்கிவிட்டது. இந்தக் கமிட்டியிலும், உங்களுடைய கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு Industries Minister இருந்தார். ஏன் இதை எதிர்த்துக் குரல் கொடுக்கவில்லை என்று நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். ஒருவேளை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக வந்துவிடக்கூடாது என்பதிலே கங்கணமாக ஓர் உறுதியோடு பலவித திட்டங்களைத் தீட்டிச் செயல்பட்டதோ, அந்தத் திராவிட முன்னேற்றக் கழகம், புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி நல்லதை மக்களுக்குச் செய்யக் கூடாது; அதற்கான இக்கட்டான நிலைகளை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு நீங்கள் அந்த அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு, அதிகாரமுள்ள இடத்தில், டெல்லியில் உட்கார்ந்திருந்தபோதிலும், நீங்கள் அதைச் செயல்படுத்தாமல் மௌனியாக இருந்து விட்டீர்களோ என்ற அச்சம் இருக்கிறது. அத்தகைய ஒரு தீங்கை நீங்கள் புரட்சித் தலைவி அவர்களுக்கு இழைப்பதாக நினைக்காதீர்கள்; தமிழக மக்களுக்கு அத்தகைய துரோகத்தை (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் இறுதியிலே இழைத்துவிடுகிறீர்கள் என்பதனை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

இன்னும் ஒரு தவறான அணுகுமுறையை மைய அரசு மேற்கொண்டிருக்கிறது. இவ்வளவையும் நான் சொல்வதற்குக் காரணம், அரசியல் ரீதியாக எங்கள் புரட்சித் தலைவியை, அவர்களுடைய திட்டத்தைக் கொச்சைப்படுத்த வேண்டும். நல்ல திட்டத்தைத் தமிழக



2002 மே 9] [திரு. சி. பொன்னையன்]

மக்களுக்கு கொண்டுவரக்கூடாது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சபதம் ஏற்றிருக்கிறாரே; தமிழகத்தை இந்தியத் துணைக் கண்டத்திலேயே, அனைத்துத் துறைகளிலும் முன்னிலை மாநிலமாகக் கொண்டுவருவேன் என்று சூளுரைத்திருக்கிறார்களே! அந்தச் சூளுரையைப் பொய்யாக்க வேண்டுமென்று நினைக்கிறீர்களா? எப்படி முன்னிலை மாநிலமாகக் கொண்டுவர முடியும் என்ற வினாவை மாண்புமிகு மணி அவர்கள் எழுப்பினார். நீங்களும் அந்த மைய அரசிலே அங்கம் வகிக்கும் நிலையை எதிர்பார்த்து இருக்கிறீர்கள். என்ன எண்ணி செயல்பட்டிருக்க வேண்டும்? புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தை முன்னிலை மாநிலமாகக் கொண்டுவருவேன் என்று சூளுரைத்துவிட்டார். முன்னிலை மாநிலமாகக் கொண்டுவர வேண்டுமென்றால் திட்டங்கள் மேற்கொள்ள வேண்டும். திட்டங்களுக்கு நிதி வேண்டும். மாநில அரசுத் திட்டங்களுக்கு நிதியைத் திரட்டுவதற்கு, ஒன்று, வரியைப் போட வேண்டும். வரியைப் போட்டால், போராட்டத்தைச் செய்யலாம். போராடிப் போராடி நாட்டிலே பிரச்சினைகளை உருவாக்கி, வரியைப் போட்டு, வருமானத்தைப் பெருக்கி, திட்டப் பணிகளை நிறைவேற்றும் முயற்சிகட்கு தடையினைக் கொண்டுவந்து விடலாம் என்று நினைக்கிறீர்களா? அதற்கு அடுத்த நிலையாக நாங்கள் மைய அரசை அணுக வேண்டும். மைய அரசு நிதியினைத் தர வேண்டும். மைய அரசில் நீங்கள் அங்கம் வகிக்கின்ற காரணத்தால், நாங்கள் கேட்கின்ற நிதியைத் தராமல் வளர்ந்துவிட்ட மாநிலம் என்று சொல்லி, தமிழகத்தைப் புறக்கணித்துவிட்டால், புரட்சித் தலைவியினுடைய திட்டத்தை தோல்வியடையச் செய்துவிடலாம் என்று எண்ணுகிறீர்களா? தமிழகத்தை முன்னிலை மாநிலமாக ஆக்கிய பெருமை புரட்சித் தலைவிக்குச் சென்று விடக்கூடாது என்ற காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, நீங்கள் மௌனியாக இருந்துவிட்டீர்களோ என்ற ஓர் அச்சத்தை (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்கள் எழுப்புகிறார்களே என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

பிற்பகல் 6-45

Another important point I want to highlight for the appreciation of our Hon. Members of the D.M.K. இன்னும் ஒன்று. இன்னொரு புதிய அணுகுமுறையை அவர்கள் மேற்கொள்கிறார்கள். Discretionary Allocation of Fund. மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும். மாநிலத்திற்கு அதிக அதிகாரம் இல்லையென்றால், மாநிலமே பிரிந்து செல்ல வேண்டுமென்று கோரிக்கைகள் எல்லாம் இந்திய துணைக் கண்டத்திலே

[திரு. சி. பொன்னையன்] [2002 மே 9

எழுந்த காலம் உண்டு. ஆனால் மாநிலத்திற்கு உள்ள அதிக அதிகாரத்தை, மாநில சுயாட்சி வேண்டுமென்று நாம் கேட்கின்ற அதிகாரத்தை, எப்படியெல்லாம் நீங்கள் அங்கம் வகிக்கின்ற மைய அரசு பறித்துச்செல்கிறது, நீங்கள் அதற்கு எப்படியெல்லாம் உடந்தையாக இருக்கிறீர்கள் என்பதற்கு ஓர் உதாரணம். மாநில அரசுக்கு உட்பட்ட திட்டங்கள், ஒதுக்க வேண்டிய நிதியை நாம் கேட்கின்றோம். 29.5% of the tax revenue collected by Government of India is being shared between the States. மைய அரசு 100 ரூபாய் வசூல் செய்கிறபோது, 29.5 ரூபாயை இந்திய துணைக் கண்டத்தினுடைய எல்லா மாநிலங்களுக்கும் ஒதுக்கித் தருகிறது. அந்த 29.5 சதவிகிதத்திலே, தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், 5.385 சதவிகிதம் வருகிறது. ஒட்டுமொத்த மைய அரசுக்கு வருகிற வருமானத்திலே 1.59 சதவிகிதத்தைத்தான் மாநில அரசுக்கு, தமிழகத்திற்கு, மைய அரசு ஒதுக்கித் தருகிறது. அந்த அளவிற்கு நமக்கு பண அதிகாரத்தை மைய அரசு பறித்து வருகிறது. நீங்கள் அதை எண்ணிப் பார்க்க வேண்டும். தற்போது அப்படிச் செய்துவிட்டு, மற்றொரு முறையை மேற்கொள்கிறார்கள். Discretionary Allocation of Funds அவர்களுக்கு வேண்டிய முதலமைச்சர்கள் அல்லது வேண்டிய மாநிலம் என்று, எந்த மாநிலத்தைக் கருதுகிறார்களோ, அந்த மாநிலத்திற்கு Centrally Sponsored Schemes என்ற முறையிலே, அதிகப்படியான நிதியினை ஒதுக்கி வருகிறார்கள். உத்தரப்பிரதேசத்திற்கும், பீகாருக்கும் இப்படி அதிகப்படியான நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள்.

மைய அரசினுடைய தோழமைக் கட்சியாக இருக்கிற திரு. சந்திரபாபு நாயுடு அவர்களுடைய மாநிலத்திற்கும் Discretionary Allocation of Funds என்ற முறையிலே அதிகப்படியான பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். நீங்களும் மைய ஆட்சியிலே அங்கம் வகிக்கிறீர்கள். Bihar, U.P. and all the States in the name of under-developed States இந்தச் சலுகையைப் பெறுகிறார்கள். ஓரளவிற்கு முன்னேறிய மாநிலம் என்ற நிலையிலே இருக்கின்ற ஆந்திர மாநிலத்திற்குக்கூட அவர்கள் அதிக நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். இதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இங்குதான் நான் சொன்னேன்; திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள், தங்களுடைய மாநிலத்தின்மீது அக்கறையுள்ள காரணத்தால், பதவி சுகம் வேண்டாம், மாநிலத்திற்கு பண ஒதுக்கீடு வேண்டுமென்று மாநில மக்கள் நலனில் அக்கறையுள்ளவர்களாக, அவர் அந்தப் பணத்தை அதிகப்படியான discretionary quota வாங்கிவிட்டார்களே! நீங்கள் மைய ஆட்சியிலே அங்கம் வகிக்கிறீர்கள். தமிழகத்தினுடைய வளர்ச்சித்



2002 மே 9] [திரு. சி. பொன்னையன்]

திட்டத்திற்கு அதிகப்படியான பணத்தை ஒதுக்க வேண்டுமென்று நீங்கள் வாங்கித் தந்தால், அந்தப் பணம் எங்களுக்கு வருவது அல்ல. அண்ணா தி.மு.க.விற்கு வருவது அல்ல. நீங்கள் நேசிக்கின்ற தமிழகத்திற்கு, தமிழக மக்களின் மேம்பாட்டிற்கு வரக்கூடிய பணத்தை வாங்கித் தராமல் விட்டதற்குக் காரணம், அந்தப் பெருமை புரட்சித் தலைவிக்குச் சென்று சேர்ந்துவிடக்கூடாது என்பதற்காக தடைக்கல்லாக நீங்கள் இருக்கிறீர்களோ என்ற அச்சம் தமிழகத்திலே இன்று உருவாகியிருக்கிறது.

உதாரணமாக, விவசாயத் துறைக்கு — Agriculture - Mini Kit Programme of Rice, Mini Kit Demonstration Programme of Cereals, Integrated Farming in Coconut holding for Productivity Improvement, Command Area Development Programme, Establishment of Market Complexes; Horticulture-லே Integrated Development of Tropical, Arid and Temperate Zone Fruits, Integrated Development of Commercial Floriculture, Animal Husbandry-யிலே இதைப்போலவே Systematic Control on Livestock Diseases, Fisheries-லே, இப்படி பல தலைப்புகள், ஆதிதிராவிடர் நலத் துறைக்கு construction of buildings for boys and girls for Hostels; அதேபோல Health Department-லே Leprosy Control Units, District Mental Health Programme, Establishment of Nursing Schools, Re-vamping of Family Welfare Centres, Prevention and Control of Diseases, Health Sub-Centres இப்படி மாநில அரசினுடைய திட்டத்திற்கு State Planning Commission-உடையத் திட்டத்திற்குட்பட்ட பகுதிகளுக்கெல்லாம், இந்தத் திட்டங்களுக்குட்பட்ட பகுதிகளுக்கெல்லாம் மைய அரசு Centrally Sponsored Schemes என Agriculture-லே பல Categories கொண்டு வந்துவிட்டார்கள். Horticulture, Animal Husbandry, Fisheries அதேபோல, Health Department ஒவ்வொன்றிலும் பல திட்டங்கள் இதுபோல இன்னும் பல categories-ஐ அவர்கள் பிரித்து எடுத்து, Centrally Sponsored Scheme என்று வைத்துக்கொண்டு அதற்கு Discretionary Allocation of Funds என்று வைத்து, வேண்டிய மாநிலங்களுக்கு அதிகமாக ஒதுக்கிவிடுகிறார்கள். தமிழகத்திற்குத் தீங்கினை இழைக்கிறார்கள். இதை நீங்கள் தட்டிக் கேட்காமல் இருக்கிறீர்கள். இப்படிப்பட்ட ஓர் ஆபத்து மாநில அரசினுடைய பண அதிகாரத்திலே மைய அரசு தலையிட்டுச் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதனை அவை உணர வேண்டும் என்பதற்காக நான் இதைச் சொல்கிறேன்.

பிற்பகல் 6-50

இப்படிப்பட்ட நிலை தொடருகிறபோது, மௌனமாக இருந்து, இந்த பாதிப்பை விட்டுவிட்டால் இந்த மூன்று ஆண்டு காலத்தில் தமிழக அரசுக்குக் கிடைக்க வேண்டிய பணம் கிடைக்காமல் போய், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய செல்வாக்கு குறைந்துவிடும் என்ற எண்ணத்தோடு மௌனிகளாக மைய அரசிலே நீங்கள் பதவியிலே இருந்துகொண்டு, மக்களுக்காகப் போராடாமல் இதற்காகப் பாடுபடாமல் வெற்றிக் கனியை தமிழக மக்களுக்கு எடுத்துத் தராமல் இருப்பீர்களேயானால், தமிழக வரலாற்றிலே தமிழ்நாட்டு மக்களினுடைய சாபத்திற்கு, அவர்களுடைய ஆதங்கத்திற்கு தி.மு.க. உள்ளாகும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், நீங்களும் அண்ணாவின் தம்பிகள் என்று சொல்லிக்கொள்கிறீர்கள். அண்ணாவினுடைய கொள்கை, மாநில அரசுக்கு உரிய பண அதிகாரத்தை மைய அரசு பறிக்கக் கூடாது என்பது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இத்தகைய அவல நிலையிலிருந்து தமிழகத்தை மீட்க வேண்டுமென்ற நோக்கோடு 3 ஆயிரம் கோடி ரூபாய் குறைந்தபட்சம் மாநில அரசுக்கு, தமிழகத்திற்கு கட்டாயம் தர வேண்டும். ஒரு one time payment என்று நீங்கள் தந்து விட்டு எங்களுக்கு இந்தப் பண நெருக்கடியிலிருந்து விமோசனத்தைத் தருவீர்கள் என்றால் வளர்ச்சித் திட்டங்களை நாங்கள் நல்ல முறையில் மேற்கொள்ள முடியும் என்று புரட்சித் தலைவி அவர்கள் எழுதினார்கள். அதை அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் எழுதினார்கள். எல்லோரும் பாராட்டுகிறார்கள். இந்த 27 ஆம் தேதி என கருதுகிறேன், பெரும்பான்மையான மாநில முதலமைச்சர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எடுத்து இருக்கின்ற அணுகுமுறையை மாநில அரசினுடைய பண அதிகாரம் அதிகமாக இருக்க வேண்டும். மைய அரசு மாநிலங்களுக்கு பணம் அதிகமாக ஒதுக்கியாக வேண்டும், திட்டங்கள் செம்மையாக நடைபெற மாநிலம் பொருளாதார ரீதியிலான வளர்ச்சியடைய per capita income, Gross Domestic Products அதிகமாக, அதிகப் பணத்தை ஒதுக்க வேண்டுமென்று தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் கோரியிருக்கின்ற கோரிக்கை நியாயத்தின் அடிப்படையிலான கோரிக்கை, அனைத்து மாநிலங்களுக்கும் தேவையான கோரிக்கை என்பதனை ஏற்று, இன்று பல முதலமைச்சர்கள்





புரட்சித் தலைவியினுடைய கோரிக்கையை ஈடேற்ற முயன்றிருக்கிறார்கள். 27 ஆம் தேதி டெல்லியிலே புரட்சித் தலைவி அவர்களுடைய கோரிக்கையைப்பற்றி ஆராய்வதற்கு மட்டுமே ஒரு கூட்டத்தை நிதியமைச்சர் கூட்ட வேண்டுமென்று மைய பிரதம அமைச்சர் தற்போது முடிவெடுத்திருக்கிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது. அந்த அளவிற்கு தமிழகத்தினுடைய பொருளாதார நிலையைச் சரிப்படுத்துவதற்கு மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற அண்ணாவின் கொள்கையை ஈடேற்றுவதற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எடுத்திட்ட நடவடிக்கையை அண்ணாவினுடைய ஆத்மாவே பாராட்டக்கூடிய அளவிற்கு, அனைத்து மாநில முதலமைச்சர்களும் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிலையிலே அண்ணாவின் தம்பிகள் என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற நீங்கள் இடம் பெற்றிருக்கின்ற மைய அரசிலே, நீங்கள் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, புரட்சித் தலைவியினுடைய ஓர் அளப்பரிய சிறந்த திட்டத்திற்கு முட்டுக்கட்டை போட்டு விடாதீர்கள் என்பதை மட்டும் அவையின் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, ஒன்றைச் சொன்னார். மாண்புமிகு அமைச்சர்கள் எல்லாம் குறிப்புகளைக் கையிலே வைத்திருப்பதில்லை அல்லது குறிப்புகள் அவர்களுக்குக் கிடைப்பதில்லை, கேட்கின்றபோது உடனுக்குடன் பதில் சொல்வதில்லை என்று சொன்னார். நான் பணிவோடு பேரவைத் தலைவர் மூலமாக அவைக்குத் தெரிவித்துக்கொள்வது எல்லாம், குறிப்புகளை வைத்துக்கொண்டு பேசுகின்றபோதே தவறான தகவல் வந்துவிடுகின்ற காரணத்தால், அவையிலே தவறான தகவல்களைச் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது. குறிப்புகளே இல்லாமல் பேசுகின்ற ஒரு நிலை ஏற்பட்டால், மக்களுக்கு அவையின் மூலமாக உண்மைத் தகவல்களைச் சொல்லக்கூடிய ஒரு வாய்ப்பை நாம் இழந்துவிடுவோம். எனவே, பொது மேடையிலே பேசுகின்றபோது just to prove our oratorical efficacy, நாம் extempore speech என்ன வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் பொறுப்பான ஓர் அவையிலே இருக்கின்ற நாம், அவை மூலமாக நாட்டிற்கு நல்ல திட்டங்களை ஈடேற்ற வேண்டிய கடப்பாட்டிலே இருக்கின்ற நாம், அவைக்குச் சரியான தகவல்களைத் தந்தாக வேண்டும். சரியான தகவல்களைத் தருகின்றபோதுகூட காவிரி

பிரச்சினைபற்றி உங்களுக்குத் தெரியும். சரியான தகவல்களைத் தருகின்றபோதுகூட Assembly-யினுடைய speech என்ன என்பதனைப் படிக்கின்றபோதுகூட, அது இல்லையென்று சொல்லக்கூடிய குரல் ஒலிக்கின்ற தமிழகத்தில், ஒன்றுமே ஆதாரம் இல்லாமல் பேசுகின்ற ஒரு நிலைமை வருமென்றால் மக்களுக்குச் சரியான தகவல் சென்றடைந்துவிடாது. எனவே மாண்புமிகு அமைச்சர்களும் மற்றவர்களும் குறிப்புகளைத் தயார் செய்து, அந்தக் குறிப்புகளைப் பார்த்து அப்படியே வரி வரியாக அதை மனப்பாடம் செய்து சொல்ல வேண்டும் என்று அல்ல. குறிப்புகளைப் பார்த்து அவைக்குத் தகவல்களைச் சொல்கிறபோதுதான் அவைக்கு நல்ல விளக்கம் கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின் அவர்கள் பேசுகின்றபோது, கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் இருக்கவில்லையே என்று ஓர் ஆதங்கத்தை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அது தவறான தகவல் என்பதற்காகச் சொல்கிறேன். நான் வரவு—செலவுத் திட்டத்தின் மீதான என்னுடைய இறுதி உரையிலேயே சொன்னேன். 'மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அதைக் கவனிக்கவில்லை என்று நான் கருதுகிறேன். உதாரணமாக, வீட்டு வசதித் துறையைப்பற்றிச் சொன்னார்கள். பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களுக்காக, குறிப்பாக ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோர் நலனுக்காகச் செயல்படுத்தப்பட்டுவரும் இந்திரா வீட்டு வசதித் திட்டம், மீனவர்களுக்கு இலவச வீட்டு வசதித் திட்டம் ஆகியவற்றிற்கு நிதியொதுக்கம் குறைக்கப்பட்டது என்று சொன்னார்கள். ஆனால் அதிலே உண்மை என்னவென்றால், மீனவர் வீட்டு வசதித் திட்டத்தைப் பொறுத்தவரையில், மத்திய அரசு வழங்கும் பங்கான 7 கோடி ரூபாய் மட்டுமே வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டது. மாநில அரசினுடைய பங்கான மீதம் ரூபாய் 7 கோடி தமிழ்நாடு ஊரக வீட்டு வசதிக் கழகத்தின் மூலமாக i.e. outside the Budget proposal என்ற காரணத்தால் அந்த நிதிநிலையினுடைய விவரத்திலே அது குறிப்பிடப்படவில்லை. Because procedurally it won't be shown in the record.

பிற்பகல் 6-55

இதைப்போலவேதான், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின் அவர்கள் பேசினார்கள். அதைப்பற்றி





நான் அவையிலே மிக விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் ஒரு சட்டமன்றத் தொகுதியிலே இருக்கிற கிட்டத்தட்ட 40 பஞ்சாயத்துக்கள் என்றால், 40 பஞ்சாயத்துக்களிலே, ஒரு பஞ்சாயத்துக்கு ஓர் ஆண்டுக்கு, முற்காலத்திலே கொடுக்கப்பட்டு வந்த அந்தத் திட்டம் எல்லா பஞ்சாயத்துக்களுக்கும் வருவது என்றால் 40 ஆண்டு காலம் ஆகும் என்ற காரணத்தினால்தான் பரவலாக அந்தத் திட்டம் அந்த சட்டமன்றத் தொகுதியினுடைய அனைத்துப் பகுதிகளுக்கும் செல்லக்கூடிய அளவிற்கு, குறைந்தது ஒரு கோடி ரூபாய் என்ற முறையிலே அந்தத் திட்டத்தைச் செம்மையாக நடைமுறைப்படுத்த தற்போது நாங்கள் எல்லாவித நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகிழக்கூடிய அளவிற்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஒரு பஞ்சாயத்தில் இல்லாமல், ஒரு தொகுதியிலே இருக்கின்ற அனைத்துப் பஞ்சாயத்து மக்களும் பாராட்டக்கூடிய அளவிற்கு நடைமுறைப்படுத்தப்படும் என்று சொல்கிறேன்.

அதைப்போலவே, மீனவர்களுக்கு டீசல் மானியம் வழங்குவதைப் பொறுத்தவரைக்கும் அவர் சொன்னார்; அதைப் பொறுத்தவரைக்கும் மத்திய அரசு செயல்படுத்தி வருகின்ற திட்டம். மத்திய அரசு தற்போது அதை நிறுத்திவிட்டது. டெல்லியிலே நீங்கள் அங்கம் வகிக்கிறீர்கள். அங்கு நீங்கள் அதற்குப் போராடியிருக்க வேண்டும். நீங்கள் அங்கு போராடவில்லை. எங்கள்மீது குறை சொல்கிறீர்கள். மைய அரசு செய்கிற தவறுகளை எல்லாம் எங்கள்மீது போட்டு அங்கு நீங்கள் மௌனியாக இருந்துவிட்டு, இங்கு குறை சொல்கிறீர்கள் அவையிலே ஏதேனும் சொல்லலாம். ஆனால் நாட்டு மக்களுக்கு உண்மை என்ன என்று புரியும். எனவே அதுவும் தவறான தகவல். கிராமத் தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் ஏற்கெனவே சொன்னதைப்போல 20 கோடி ரூபாய் ஹட்கோ நிறுவனத்திடமிருந்து outside the Budget என்ற முறையிலே, அந்தத் திட்டத்திற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது.

சென்னைக் குடிநீர்த் திட்டத்தைப்பற்றி திரு. ஸ்டாலின் அவர்கள் சொன்னார். அந்தத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் 75 கோடி ரூபாய் அரசு ஏற்கெனவே செலவு செய்திருக்கிறது. சென்னை நகரைப் பொறுத்தவரைக்கும் a drought condition-unprecedented drought

condition வந்தபோது ஒரு தொகுப்பாக அந்தப் பணம் ஒதுக்கப்பட்டது. அப்படிப்பட்ட வறட்சிப் பிரச்சினை எந்த நேரத்தில் வந்தாலும் உடனடியாக அதற்கு நிதி ஒதுக்கப்படும் என்று அவைக்கு நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன்.

இதுபோல, அவர்கள் கோரிய பல்வேறு— பூஜ்ஜியம், பூஜ்ஜியம் என்று திரு. ஸ்டாலின் அவர்கள் சொன்னார். அவையிலே பேசினார். தவறான தகவல் என்பதனை என் உரையிலே சொன்னேன். ஆதிதிராவிடர் நலத் துறைக்கும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே outside the Budget என்ற முறையிலே கிட்டத்தட்ட 45 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது பட்ஜெட்டிற்கு அப்பாற்பட்டு ஹட்கோ நிறுவனம் மூலமாக வருகிறது என்பதையெல்லாம் சொன்னேன். எந்த ஒரு திட்டத்திற்கும் நிதி ஒதுக்கப்படாமல் இல்லை. எந்த ஒரு திட்டத்திற்கும் அவர் கோரியதைப்போல பூஜ்ஜியம் என்று இல்லை. ஏதோ மக்களைச் சென்று ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கோடு, மாண்புமிகு திரு. ஸ்டாலின் அவர்கள், தவறான தகவலை மக்களுக்குச் சொல்லக்கூடாது என்பதை அவைக்குத் தெரிவிப்பதற்காக இதனை நான் சொல்கிறேன்.

அதைப்போலவே, Commercial Taxes-ஐப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். நிலுவையிலே இருக்கின்ற அந்த வரி பாக்கியை வசூல் செய்து விட்டாலே, இந்த taxation என்ற ஒரு problem வந்திருக்காது என்று சொன்னார்கள். அவைக்கு நான் ஓர் உண்மையினைக் கூற விரும்புகிறேன். Minister for Commercial Taxes has explained these things in vivid in the Assembly already.

1995-96 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தபோது, அவர்களுடைய நிர்வாகத் திறமையின் காரணமாக ஒவ்வொரு துறையும் எப்படிச் செயல்படுகிறது என்பதனை அன்றாடம் நேரடியாக அதிகாரிகளைக் கூப்பிட்டுப் பேசி, ஆய்ந்து, அந்தக் குறைகளையெல்லாம் களைய வேண்டுமென்று, கடுமையான நடவடிக்கைகளை அவர்கள் எடுத்து வந்த காரணத்தால், 1995-96-லே விற்பனை வரி வருவாயைப் பொறுத்தவரைக்கும் பல ஆண்டு காலமாக நிலுவையில் இருந்த தொகை வெறுமனே 2,178 கோடி ரூபாய். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு, Minister for Commercial Taxes ஆக இருந்தவர் உங்களுடைய இயக்கத்தினுடைய





தலைவர், திரு. கருணாநிதி அவர்கள்தான். அவர் பொறுப்புக்கு வந்த பிறகு, அவர் Minister for Commercial Taxes ஆக வந்தபிறகு, 1996-97 ஆம் ஆண்டிலே அது ரூ.2,421 கோடியாக உயர்ந்து, 1997-98 ஆம் ஆண்டிலே 3,323 கோடி ரூபாயாக உயர்ந்து, 1998-99-லே 5,104 கோடி ரூபாயாக உயர்ந்து, 1999-2000 ஆண்டிலே 7244 கோடி ரூபாய் நிலுவை என்ற முறையில் வரி செலுத்த வேண்டிய வியாபாரிகள், வசதி படைத்தவர்கள் அரசுக்குத் தர வேண்டிய பணத்தைத் தராமல், பலவித அணுகுமுறைகளை மேற்கொண்டு, நீதிமன்றம் என்ற அணுகுமுறை, அரசினுடைய Appellate Forum-அதனிடம் சென்று stay வாங்கக்கூடிய அணுகுமுறை, இப்படிப்பட்ட அணுகுமுறைகளை மேற்கொண்ட காரணத்தால், வசதி படைத்த வியாபாரிகளுக்கு அந்தப் பலன் 7,244 கோடி ரூபாய் சென்று சேரக்கூடிய நிலையை உங்களுடைய ஆட்சி, உங்களுடைய தலைவர் Minister for Commercial Taxes-ஆக இருந்தபோது உருவாக்கிவிட்ட வேதனையை அவை உணர வேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் புள்ளிவிவரத்தை நான் சொல்கிறேன்.

பிற்பகல் 7-00

இப்படிப்பட்ட நிலையில் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். வரி பாக்கி யார் வைத்திருந்தாலும் எந்த நிலையிலே இந்த வரி தேங்கிய நிலையிலே இருந்தாலும் அவற்றை வசூல் செய்ய வேண்டுமென்று ஆலோசனைகள் கூறி, அறிவுரைகள் கூறி நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அம்மா அவர்கள் பணித்திருக்கிறார்கள்.

அந்த அடிப்படையில் தற்போது இந்த ஆண்டு மட்டும் 240 கோடி ரூபாய் அரசுக்கு அதிகப்படியான வசூல் வந்திருக்கிறது. அது போதாது. நிலுவையில் இருக்கிற பணம் அதிகமான பணம். எனவே சமாதானத் திட்டம் என்ற ஒரு திட்டத்தைக்கூட சிந்தித்துச் செயல்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி அன்பர்கள் சொன்னீர்கள். சமாதானத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் அரசு ஏதோ executive decision ஆக எடுக்கக்கூடிய திட்டம் இல்லை இது. அதை நடுவர்கள் மூலமாக ஓர் அமைப்பை—ஒரு கமிட்டியை உருவாக்கி அந்தக் கமிட்டி மூலம் இவற்றை ஆய்ந்து பார்க்க வேண்டும். காரணம், தி.மு.க. ஆட்சிக் காலத்தில், best of judgement என்ற முறையைக் கொண்டுவந்தீர்கள். வியாபாரிகளுக்குச் சலுகை அளிக்க வேண்டுமென்ற நோக்கோடோ, என்ன நோக்கோடோ best of judgement என்ற ஒரு முறையைக் கொண்டுவந்து, நீங்கள் அவர்களை self-assessment-ல்

கொண்டுவந்து வீட்டீர்கள். வியாபாரிகள் அவர்களே எங்களுக்கு இந்த அளவுக்குத்தான் turn-over in sales என்று சொல்லிவிட்டால் போதும். அதை நீங்கள் ஒத்துக்கொள்கிற அணுகுமுறை. அப்படி வியாபாரிகள் self-assessment என்ற முறையில் அவர்களே எனக்கு இந்த வருடத்துக்கு இவ்வளவுதான் total turn-over என்று சொல்கிறபோது, எந்த ஒரு வியாபாரியும் உண்மையைச் சொல்வார் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. காரணம், this is a commercial activity. வியாபாரிகளைப் பொறுத்தவரைக்கும் வழக்கமாக என்ன எண்ணுவார்கள்? உண்மை நிலையைக் காட்டிவிட்டால், based on the percentage of profit, income tax will be levied என்ற அச்சம் வந்துவிடும். வருமான வரியைக் கட்டக்கூடாது என்பதற்காக அந்த self-assessment-லே உண்மையான வருமானம், உண்மையான sales turn-over என்ன என்பதனை வியாபாரிகள் காட்டிவிடமாட்டார்கள். பிறகு என்ன உத்தரவிட்டார்கள்? Best of judgement என்ற ஓர் ஆணையிட்டு ஆங்காங்கு ஆயிரம் வியாபாரிகள் இருந்தால் அதில் இரண்டு வியாபாரிகளை check செய்து அவர்களை சோதனை செய்து பார்க்க வேண்டுமென்று போட்டு, அந்த best of judgement என்ற முறையிலே அவர்களுக்கு வரியை விதித்தார்கள். இது பரவலாக்கப்பட்டது. இப்படி, பல விதத்திலே தவறான அணுகுமுறையை அவர்கள் மேற்கொண்ட காரணத்தால் 7,244 கோடி ரூபாய் என்ற நிலைக்கு நிலுவை சென்றுவிட்டது. அந்த நிலையினை மாற்ற, கிட்டத்தட்ட ஓர் இலட்சம் பேர்தான் — தமிழகத்தில் இருக்கிற அத்துணை மக்களில், வியாபாரிகளில் வணிகவரி கட்டுகிற மக்கள், வெறுமனே ஓர் இலட்சம்பேர்தான் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. அரசன் அவர்கள் பேசுகிறபோது, மேனாடுகளில் 40 சதவீதம் மக்கள் வரி கட்டுகிறார்கள் என்று சொன்னார்கள். இங்கே ஓர் இலட்சம் பேர்தான் தமிழகத்திலே வரி கட்டுகிற ஒரு நிலை இருக்கிறது. அந்த tax net என்பதை எப்படி விரிவுபடுத்தி வருமானத்தைப் பெருக்க வேண்டும் என்பதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆலோசனை நடத்தி வருகிறார்கள். அந்த அடிப்படையில் சீர்திருத்த நடவடிக்கைகளை எடுத்து, கடந்தகால குறைபாடுகளையெல்லாம் நீக்கி, அரசினுடைய வருமானத்தைப் பெருக்குவதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.





பிற்பகல் 7-05

மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்களும், மற்றவர்களும் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். அதாவது, smoking—புகை பிடிப்பதைப்பற்றிப் பேசுகிறபோது, (குறுக்கீடு) எஸ்.ஆர்.பி. நீங்கள் சொல்லவில்லையா? மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். (குறுக்கீடு) ஆம். திரு. கருணாகரன், திரு. கண்ணன் போன்றவர்கள் எல்லாம் சொன்னார்கள். smoking-ஐப் பொறுத்தவரைக்கும் பீடித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களைப் பாதிக்க வேண்டுமென்ற நோக்கோடு, மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த ஒரு சட்டத்தைக் கொண்டுவர, ஒரு காலத்திலும் எண்ணவில்லை. மாண்புமிகு அம்மா அவர்களைப்பற்றி அவைக்குத் தெரியும். ஏழைகளின் நலன் காக்க, உழைக்கும் வர்க்கத்தின் நலன் காக்க, அயராது செயல்பட்டு வருகின்ற மாண்புமிகு அம்மா அவர்கள், உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணைக்குட்பட்டு, இதை நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயத்திற்கு வந்தார்கள். இதை நான் விளக்க விரும்புகிறேன். உச்ச நீதிமன்றத்தைப் பொறுத்தவரைக்கும், The ban all over India relating to smoking in public places, public transport, etc., was made by the Hon. Supreme Court of India on 2-11-2001 while passing orders in Writ Petition No.316 of 1999 filed by Mr. Murali Deora as a Public Interest Litigation against the Union of India and Others, seeking directions for ensuring strict compliance of the provisions of the Cigarettes (Regulation of production, supply and distribution) Act of 1975. The order of the Supreme Court was not on any appeal against any State Legislation. உச்ச நீதிமன்றமே—ஒரு வழக்கிலே—உச்ச நீதிமன்றமே—அளித்த தீர்ப்பில்தான், பொது இடங்களில் புகை பிடிக்கக் கூடாது என்று சொல்லி, கட்டாயம் அனைத்து மாநிலங்களும் இதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். "Smoking in public places is prohibited and directions issued to the Central and State Governments to take immediate steps to enforce prohibition" என்று உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில்தான், மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த நடவடிக்கையை எடுத்தார்கள் என்பதனை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகிறபோது, தொழிலாளர் நலச் சட்டத்தில் தொழில் அமைதிக்காகவும், தொழிலாளர் நலனுக்காகவும், இதைச் செம்மைப்படுத்த வேண்டுமென்று ஆலோசனை சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள், ஏற்கெனவே இதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். தொழிலாளர் சட்டங்களினால், தொழில் அமைதிக்கு என்ன பாதிப்பு ஏற்படுகிறது, தொழிலாளர்களுடைய நலனுக்கு என்ன பாதிப்பு ஏற்படுகிறது என்பதை அறிந்து தொழிலாளர் நலனும் பேணப்பட வேண்டும்; தொழில் அமைதியும் காக்கப்பட வேண்டும்; தொழில் அமைதி காக்கப்பட்டு, தொழிற்சாலைகள் நன்னிலையில் நடக்கிறபோது, தொழிலாளர் நலனும் பேணப்பட வேண்டும் என்பதற்காக முக்கிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே, தேயிலைபற்றிப் பேசுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன். தேயிலையைப் பொறுத்தவரைக்கும், ஏற்கெனவே அவையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள்; நானும் கூறியிருக்கிறேன். தற்போது மேட்டுப்பாளையத்திலும், குன்னூரிலும் இருக்கின்ற அந்த இரண்டு Tea Auction Centres—ஐப் பொறுத்தவரைக்கும், கோயம்புத்தூரிலே இருக்கிற Auction Centres—ஐப் பொறுத்தவரைக்கும், அவற்றிலே தேயிலை உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் அங்கத்தினர்களாக இல்லாத நிலை; Brokers அங்கத்தினர்களாக இருக்கிறார்கள்; வியாபாரிகள் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அவர்கள், ஒரு Syndicate form செய்து விடுகிறார்கள். அவர்கள் விலையை மிகவும் குறைத்து வாங்குகிறார்கள். அதனால் தேயிலை விவசாயிகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகிறார்கள் என்பதை அறிந்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தற்போது ஆணையிட்டிருக்கிறார்கள். நமது அரசினுடைய முயற்சியிலேயே பெரிய அளவிலே ஓர் ஏல மையம் உருவாக்கப்பட வேண்டும்; அந்த ஏல மையத்திலே, உழவர்கள், தேயிலை விவசாயிகள் பெரிதும் பங்கு வகிக்க வேண்டும்; அதேநேரத்திலே, கட்டுப்படுத்த அரசு அதிகாரிகளும் அதிலே இருக்க வேண்டும் என்ற நிலையைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அப்படி அதை நடைமுறைப்படுத்துகிறபோது, கௌஹாத்தியிலே இருக்கிற ஏல மையத்திலே அங்கு தேயிலை விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது;





தமிழகத்திலே இருக்கிற தேயிலை விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கவில்லை என்ற நிலை மாறி, இங்கு தேயிலை விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கக்கூடிய சூழ்நிலை, ஒரு விரைவு நடவடிக்கையாக அதைச் செயல்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவுரை கூறியிருக்கிறார்கள்.

அதைப்போலவே, எம்.எல்.ஏ.-க்களுக்கு, கம்ப்யூட்டர் வேண்டுமென்ற ஒரு கோரிக்கையைச் சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள், மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறபோதே, அதை அனுமதிக்கலாம் என்ற ஆணையை அப்போதே இட்டுவிட்டார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) அவர் கேட்டதே, எம்.எல்.ஏ. நிதியிலே இருந்துதான். (சிரிப்பு) with printers என்று சொல்லியிருக்கிறார்கள்.

பிற்பகல் 7-10

அதைப்போலவே இலவச வேட்டி-சேலைபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்க்கட்சியினுடைய தலைவர் அவர்கள் பேசுகிறபோது இலவச சேலை-வேட்டியை ஏன் நிறுத்திவிட்டீர்கள்? தரப்போகிறீர்களா, இல்லையா என்பதைப்பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் கேட்டார்கள். அதுபற்றி நான் ஒன்றை அவைக்குத் தெளிவாக்க விரும்புகிறேன். ஏற்கெனவே நெசவுத் துறையைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாக அவையிலே குறிப்பிட்டார்கள். கடந்த காலத்திலே இலவச வேட்டி-சேலைக்காக ஆர்டர் கொடுத்தபோது, டெண்டர் விட்டபோது ஒரு Syndicate form பண்ணியோ அல்லது குறிப்பிட்ட நபர்களுக்கு மட்டுமே அந்த 'tender form கிடைக்க வேண்டும் என்ற அந்த ஒரு நடைமுறையை மேற்கொண்டோ அதிகப்படியான அந்தக் கூலி, குறிப்பாக விசைத்தறி சேலைகளில் பிரிண்டிங் கூலி; அதிலே 96 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய் அதிகமாகக் கொடுத்துவிட்ட ஒரு நிலை கடந்த கால ஆட்சியிலே ஏற்பட்டது. என்ன சேலையிலே ஏற்பட்டது என்ற பிரச்சினை. Sizing கூலி என்பதைப் பொறுத்தவரைக்கும் அந்த டெண்டரிலே நடந்த கோளாறு காரணமாக, 28 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் அதிலே முறைகேடு நடந்துவிட்டது.

அதைப்போலவே இலவச, பள்ளிச் சீருடை வழங்கும் திட்டத்திலே வெள்ளைத் துணி பிளீச்சிங்கிற்கான கூலியில் 57 இலட்சத்து 64

[திரு. சி. பொன்னையன்] [2002 மே 9

ஆயிரம் ரூபாய் தவறு நடந்துவிட்டது. ஒட்டுமொத்தமாக, இப்படி இதிலே 2 கோடியே 65 இலட்சம் ரூபாய் ஒருபுறம் முறைகேடு, இதனால் அந்தத் துணியினுடைய விலை உயர்வு. அந்த நெசவு கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரைக்கும், இதைத் தாக்குப் பிடிக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டு, பணச் சுமை ஏற்பட்டு, அப்படி அவர்கள் அவல நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அதுமட்டுமல்ல. அப்படி அதிகப்படியான விலையைக் கொடுத்து வாங்கிய துணியினுடைய தரம் எப்படிப்பட்ட தரம் என்றால், அவை நன்றாக அறியும். இந்தத் துணியை யார் வாங்குவது என்று பாமர ஏழை மக்கள் — ஒருவேளை சோற்றுக்குக்கூட உணவில்லாமல் இருக்கிற அந்தப் பாட்டாளி மக்கள்கூட இந்தச் சேலை வேண்டவே வேண்டாம் என்று அவர்கள் ஒதுக்கித் தள்ளிவிட்ட காரணத்தால் அந்த சாதாரண சேலை எல்லாம் Waste துணிகளாக டெல்லியிலே சென்று விற்கப்பட்ட ஒரு வரலாற்றுச் சாதனையைப் படைத்தது (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த கால ஆட்சி என்று கூறுவதிலே நீங்கள் வருத்தப்படக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். ஒரே நிமிடம். சொல்லிவிடுகிறேன். அந்த அளவுக்கு அதனுடைய தரம் குறைந்தது. தரம் குறைந்ததற்குக் காரணம், அந்த டெண்டரிலே— தற்போது மாண்புமிகு நெசவுத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சருடைய ஆணைப்படி அந்தச் சேலையினுடைய, வேட்டியினுடைய தரம் அவ்வளவு கெட்டதற்குக் காரணம் என்ன என்பதைக் கண்டறிந்து அந்த முறைகேடுகளைக் களைய ஆணையிட்ட காரணத்தால், 2 கோடியே 65 இலட்சம் ரூபாய் அளவிற்கு புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே அந்தக் குறைபாடுகளைக் களைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மற்றும் உங்கள் ஆட்சிக் காலத்திலே பொங்கல் 2000 என்றவொரு திட்டத்தின்கீழ் 12 கோடியே 8 இலட்சம் ரூபாய்க்கு அப்போது இலவச சேலை-வேட்டிக்காகக் கொடுக்க வேண்டிய பணத்தை உங்கள் ஆட்சிக் காலத்தில் நீங்கள் கொடுக்காமல் போய்விட்டீர்கள், கூட்டுறவுச் சங்கங்களுக்கு. அப்படி இலவசமாக சேலை-வேட்டி வழங்குவதிலே, நெய்த அந்த ஏழை நெசவாளர் பெருங்குடி மக்களுக்கு 12 கோடியே 8 இலட்சம் ரூபாயை நீங்கள் 2000-ஆவது ஆண்டிலே தர வேண்டிய பணத்தை, பொங்கலுக்காக வாங்கியதையே தராமல் சென்றுவிட்டீர்கள். அந்தப் பணத்தை அந்த ஏழை நெசவாளிகளுக்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்தான் தற்போது தந்திருக்கிறார்கள். அதைப்போலவே பொங்கல் 2001-க்கு கிட்டத்தட்ட 20 கோடியே



2002 மே 9] [திரு. சி. பொன்னையன்]

95 இலட்சம் ரூபாய் பாக்கியை அந்த ஏழை நெசவு குடிமக்களுக்கு நீங்கள் தராமல் போய்விட்டீர்கள். அந்தப் பணத்தையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்தான் தற்போது தந்திருக்கிறார்கள். அது இல்லாமல் இன்னும் அந்த நெசவு குடிமக்களுக்கு ஒரு பெரும் சுமை ஏற்பட்டது. கோ-ஆப்டெக்ஸ் கடன் வாங்கியது. கோ-ஆப்டெக்ஸ் கடன் T.N.S.C. Bank மூலமாக வாங்கியது; அதற்கு அரசு உத்தரவிட்டது. அதற்குள்ள வட்டிப் பணம் 3½ கோடி ரூபாயைத் தருவதாக அரசு ஏற்றுக்கொண்டது, நெசவாளர்களுக்காக. அந்த 3½ கோடி ரூபாய் வட்டியைக்கூட சென்ற ஆட்சி தரவில்லை. அந்த அளவுக்கு ஏழை நெசவாளிகளுக்குப் பாதிப்பை உருவாக்கியது. ஒட்டுமொத்தமாக 46 கோடியே 27 இலட்சம் ரூபாய் பணத்தை அந்த ஏழை நெசவாளர்களுடைய பணத்தை நீங்கள் தராமல் சென்று, இரண்டு ஆண்டுகாலமாக அவர்கள் பசி, பட்டினியில் இருக்கக்கூடிய ஒரு நிலையை நீங்கள் உருவாக்கிச் சென்றுவிட்டீர்கள் என்ற வேதனையான செய்தியை நான் அவைக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 7-15

இந்த நிலை காரணமாக இப்படிப்பட்ட முறைகேடுகள் குளறுபடிகள். யாருக்கு இந்த இலவச வேட்டி சேலையை நெய்வதற்குத் தர வேண்டும் என்பதற்கு ஒரு வரையறையற்ற தன்மை; அந்தப் பலன் நெசவாளர்களுக்குச் சென்று சேராமல், அந்த டெண்டர் எடுத்த முதலாளிகளுக்கும் இடைத் தரகர்களுக்கும் செல்லக்கூடிய ஒரு சூழல். அந்த இலவச வேட்டி சேலையை மக்கள்தான் பயன்படுத்துகிறார்களா, பாமர மக்கள், ஏழை எளிய மக்கள், வறுமைக்கோட்டின் எல்லைக்குக் கீழே இருக்கிற மக்கள் பயன்படுத்துகிறார்களா என்றால் இல்லை. கட்டமுடியாத அளவுக்கு, கண்ணாடியைப் போல், சல்லடையைப் போல் இருக்கின்ற அந்தத் துணியை வேண்டாம் என்று ஏழை மக்கள் வீசி எறியக்கூடிய அளவுக்கு அப்படிப்பட்ட தவறுகளை, முறைகேடுகளைச் செய்துவிட்ட காரணத்தால், அந்த ஏழை மக்களே இப்படிப்பட்ட இலவச வேட்டி-சேலை எங்களுக்கு வேண்டவே வேண்டாம், சல்லடை போல் இருக்கிறது, கந்தல் துணி போல் இருக்கிறதே என்று கூறக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டதால்தான் டெல்லியிலே அவை விற்கப்பட்டன. கந்தல் துணிக்காக, table cloth ஆக, waste cloth ஆக, உபயோகப்படுத்தப்பட்டன என்ற ஒரு நிலையை எல்லாம் ஆய்ந்து, இந்தக் குறைகளைப் போக்கி, தக்க தருணத்தில், அந்த ஏழை மக்களுக்கு, சாதாரண பாமர மக்களுக்கு, வறுமைக்கோட்டின் எல்லைக்குக் கீழே உள்ள மக்களுக்கு, அவர்களும்

பலன் பெறக்கூடிய அளவுக்கும், அதே நேரத்தில் அந்த இலவச வேட்டி—சேலைகள் நெய்கின்ற ஏழை மக்களான, கைத்தறித் துறையிலே ஈடுபட்டிருக்கின்ற அந்தப் பாமர நெசவாளி மக்களுக்கும் பலன் கிடைக்கக்கூடிய அளவுக்கு ஒரு திட்டத்தை, இந்த ஆய்வுக்குப் பிறகு நடத்துவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள் என்பதனை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏழைகள் திருமண நிதி உதவித் திட்டத்தைப்பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அது உங்கள் ஆட்சிக் காலத்திலே எப்படி நடந்தது என்பது உங்களுக்கே தெரியும். அது ஏழைகளுக்குச் சென்று சேரவில்லை. இந்தத் திருமண நிதி உதவித் திட்டத்தினுடைய பலனை உங்கள் கட்சிக்காரர்கள்தான் பெற்றார்கள் என்று நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால் இதற்காகவே தம்பதிகள் உருவாக்கப்பட்டார்கள். தம்பதிகள் உருவாக்கப்பட்டு இந்தப் பலன் தவறானவர்களுக்குச் சென்றது கண்டறியப்பட்டதன் காரணத்தால் இந்தத் திட்டத்தில் நடந்த முறைகேடுகள் எல்லாம் ஆய்விலே இருக்கின்றன. அந்த முறைகேடுகளினால் அரசுக்கே நிதி நெருக்கடி. நிதி நெருக்கடி என்கிற நிலையிலே ஏழை மக்களின் திருமணத்திற்கு உதவி செய்திட வேண்டும் என்று ஒரு திட்டத்தைத் தீட்டி, அந்தத் திட்டம் ஏழை மக்களுக்குச் சென்று சேராமல், போலிகளுக்கு திருமண தம்பதிகள் என்ற பெயரிலே கடந்த காலத்திலே பலன் சென்று விட்டது கண்டறியப்பட்டிருக்கிற காரணத்தால், அதுபோன்ற குறைபாடுகள் நடக்காத ஒரு நிலையை உருவாக்கி, நிதிநிலையைச் சீரமைத்து, இந்தத் திட்டத்தை ஏழை மக்களுக்கு எப்படி பலன் அளிக்கக்கூடிய வகையில் செயல்படுத்தலாம் என்பதனை அரசு ஆய்ந்து வருகிறது என்பதனை அவைக்கு நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசுகிறபோது, விவசாயிகளுக்கு இந்த ஆட்சி என்ன சலுகை செய்திருக்கிறது என்று கேட்டார்கள். விவசாயத் துறை அமைச்சர் அவர்களும், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் அவர்களது மானியக் கோரிக்கையின்போது எந்தகைய சலுகைகளை அளித்து இருக்கிறார்கள் என்பது உறுப்பினர்களுக்குத் தெரியும். 311 கோடி ரூபாய் சலுகைகளை அளித்து இருப்பதை, இத்தகைய நிதி நெருக்கடி நிலையிலும் கூட உழவர் பெருமக்களின் நலன் கருதி, மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். பொருளாதாரம், மாண்புமிகு





திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் சொன்னதைப்போல, ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சி ஒரு மாநிலத்தில் செம்மையுற வேண்டுமென்றால் மாநிலத்தினுடைய பெரும்பான்மை மக்களான 70 சதவிகிதத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழுகிற கிராமப்புற பொருளாதாரத் திட்டத்திற்கு ஊக்கம் தர வேண்டும், முக்கியத்துவம் தர வேண்டும். காரணம் 70 சதவிகித மக்கள் அங்கே வாழ்கிறார்கள். அந்த மக்களும் கிட்டத்தட்ட 35% மக்கள் below poverty line என்கிற நிலையிலே இருக்கிற மக்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறபோது தான் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சி ஏற்படும்.

விவசாயப் பொருளாதாரம் செம்மையுற வேண்டுமென்றால், விவசாயம் ஒட்டிய Agro-based industries வர வேண்டும். அதையொட்டித்தான் Industry, Service Sectors வளரும். அப்போது தான் Gross Domestic Income—Product Income-ஐப் பொறுத்தவரைக்கும் வளரும் என்ற நோக்கோடு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பலவித ஆலோசனைகளை மேற்கொண்டு இதற்காகத்தான் ஏற்கெனவே சொன்னேன் — மரியாதைக்குரிய உலக விஞ்ஞானி, திரு. எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களை திட்டக் குழுவினுடைய துணைத் தலைவராக அமைத்து, மாண்புமிகு முதல்வர் அவர்களே, திட்டக் குழுவினுடைய தலைவராக இருந்து, கிராமப்புற பொருளாதாரத்தை தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து பல்வேறு Crop rotation, அதேபோல Productivity increase and Production increase, Adequate nutrition and balanced nutrition to the crops —தண்ணீர்— Scientific Management of Water என்ற முறையிலே இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கு கூட மிஞ்சாது என்ற கடந்தகாலப் பழமொழி, கடந்த காலப் பழமொழியாக இருந்து, கிராமத்திலே ஒவ்வொரு உழவனும் வருமானத்தைப் பெற வேண்டும், அவனை நம்பியிருக்கிற விவசாயக் கூலிகள் வளம் பெற வேண்டும். என்ற திட்டத்தைத் தீட்டுங்கள் என்று ஆணையிட்டு இருக்கிறார்கள். அந்த ஆணை தற்போது நடைமுறைக்கு வந்திருக்கிறது. நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 7-20

மாண்புமிகு உறுப்பினர்கள் தமிழ்மொழியைப்பற்றி இங்கே கூறினீர்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், மாண்புமிகு அம்மா அவர்களும் அதற்கு விளக்கம் தந்துவிட்டார்கள்.

குடிநீர்ப் பிரச்சினை, வறட்சியைப்பற்றிச் சொன்னீர்கள். பல மாவட்டங்களில் பருவ மழை தவறிய காரணத்தால், வறட்சி ஏற்பட்ட காரணத்தால், குடிநீர் பிரச்சினை ஏற்பட்டு பாதிப்புக்கு உள்ளாகிறது என்பதனை அறிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனும், தக்க அதிகாரிகளுடனும் தொடர்புகொண்டு, ஒரு போர்க்கால நடவடிக்கையாக அந்தப் பகுதிகளில் எல்லாம் நிலத்தடி நீரை ஆழ் குழாய்க் கிணறுகள் மூலமாக அந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்த்து, மக்களுக்கு நல்ல வசதியைச் செய்து தர வேண்டுமென்று ஆணையிட்டதோடு, நிதியினையும் ஒதுக்கிவிட்டார்கள். ஏழு மாவட்டங்கள் வறட்சிப் பகுதிகளாக இருக்கின்றன. எல்லா மாவட்டப் பகுதிகளுக்கும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மூலமாக இந்தப் பணியினை முடுக்கிவிட்டு அதை நடைமுறைப்படுத்த வேண்டும், துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், தண்ணீர்ப் பிரச்சினை தீர வேண்டும் என்று ஏற்கெனவே ஆணையிட்டு விட்டார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியினை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் வரதன் அவர்கள் பேசுகிறபோது இரண்டு விஷயங்களைச் சொன்னார்கள். ஒன்று, அரசுக்குச் சொந்தமான உப்பள நிலம், உப்பளத்திற்காக விடப்பட்ட நிலத்தில் இறால் பண்ணை மேற்கொள்ளப்பட்டு, இரண்டு இடங்களில் அரசுக்கு வருகின்ற வருவாய் போகிறது; இதை நேற்று பேசுகிறபோதுகூடச் சொன்னார் என்று கருதுகிறேன். சென்ற ஆட்சிக் காலத்திலே Supreme Court ஒரு தீர்ப்பை அளித்து, ஆங்கு இறால் பண்ணை போடக்கூடாது என்று இருந்தபோதிலும்கூட, அதையும் மீறி, அரசு நிலத்திலே தனியார் ஒருவர் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்த அனுமதியைத் தந்துவிட்டார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள், யார், எங்கு, எந்தத் தவறைச் செய்திருந்தாலும், குற்றவாளிகளைத் தப்புவதற்கு விடமாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆணையிட்டிருக்கிறார்கள். தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை நான் அவைக்குச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகிறபோது தொழில் தகராறுகள் குறித்து pendency நிறைய இருக்கிறது என்று சொன்னார்கள். தொழில் தகராறுகள் எல்லாம், எந்த மட்டத்திலே அவை நிலுவையிலே இருந்தாலும், அவற்றைத் துரிதப்படுத்த வேண்டும்;



தொழிலாளர் பெருங்குடி மக்களின் நலன் கருதி, ஆக்கப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அம்மா அவர்கள் ஆணையிட்டு, மாவட்ட அளவிலே இதற்கு குழுக்களைக்கூட அமைத்து, மூடிய ஆலைகளைத் திறப்பதற்கும், இதைப்போல, தொழிலாளர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். ஆகவே நான் ஏற்கெனவே, நேற்றே சொன்னதைப்போல, துறைகளைப் பொறுத்தவரைக்கும், எந்தத் துறையாக இருந்தாலும், அம்மா அவர்கள் ஓர் ஆணையிட்டு விட்டால், அந்த ஆணை ஒரு வாரத்தில் ஈடேற்றப்படுகிறதா என்று பார்க்கிறார்கள். 15 தினங்களுக்குள் ஈடேற்றப்படுகிறதா என்று பார்க்கிறார்கள். அன்றாடம் கோட்டைக்கு வந்து, பல மணி நேரம் கோட்டையில் இருப்பதை மாண்புமிகு அவை உறுப்பினர்கள் அறிவீர்கள். அதிகாரிகளை அழைக்கிறார்கள். அம்மாவைப் பொறுத்தவரைக்கும் அம்மாவினுடைய ஞாபக சக்தி அபாரமான ஞாபக சக்தி என்பதனை அவை அறியும் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் 6 மாதத்திற்கு முன்னால் இடப்பட்ட ஆணையாக இருந்தாலும் சரி, எந்த ஆணையாக இருந்தாலும், என்னவாயிற்று நான் இட்ட ஆணை, ஏன் இன்னும் ஈடேற்றப் பெறவில்லை, உடனடியாக எனக்குப் பதில் வேண்டும் என்று சொன்னார்கள். அடுத்த தினம், அடுத்த தினத்திற்குள் பதில்கள் வரவில்லை என்றால் தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

அனைத்துத் துறைகள், அனைத்து அமைச்சர்களுடைய துறைகளைப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கே என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றன என்பதனை ஆழமாக ஆய்ந்து, ஒவ்வொரு பிரச்சினையையும் உணர்ந்து வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதில் அவர்கள் பல மணி நேரம் உழைக்கிறார்கள். நல்ல நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். Result oriented action என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் அணுகுமுறையாக இருக்கிறது. அவர்களுடைய அணுகுமுறையாக இருக்கிறது என்பதனை நான் அவைக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகிறபோது, தோட்டப் பகுதியிலே இருக்கின்ற தொழிலாளர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் தோட்டப் பகுதியிலே உள்ள தொழிலாளர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, உடனடியாகத்

தீர்ப்பதற்கு, பேச்சுவார்த்தை நடத்தி முடிக்க வேண்டுமென்ற ஆணையை ஏற்கெனவே இட்டுவிட்டார்கள் என்ற மகிழ்வான செய்தியினை நான் சொல்ல விரும்புகிறேன்.

மேற்கு வங்க மாநிலத்திலே Internal resource mobilisation by unearthing black money என்ற முறையிலே அணுகுமுறையை மேற்கொண்டிருக்கிறார்கள் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அதை தமிழக அரசும் கடைப்பிடிக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். Unearthing of black money falls under the jurisdiction of Government of India. மைய அரசுதான் இதில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதில் மைய அரசு எந்த அளவுக்குத் தீவிரமாக நடவடிக்கை எடுக்கிறதோ அதைப் பொறுத்துத்தான் இதிலே வெற்றியினைப் பெறமுடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

பிற்பகல் 7-25

கூப்பன் சிஸ்டத்தைப் பொறுத்தவரைக்கும், Public Distribution System-பற்றி நீங்கள் சொன்னீர்கள். கூப்பன் சிஸ்டத்தைப் பொறுத்தவரைக்கும் அந்த அட்டையிலே யாருடைய போட்டோ இருக்கிறதோ, அவர் எடுத்துக்கொண்டு போனால்தான், அந்த அட்டை யாருக்குச் சொந்தம் என்பதனைக் கண்டறிய முடியும். யார் வேண்டுமானாலும் எடுத்துக்கொண்டு செல்லலாம் என்ற நிலை வந்தால், அந்த உறுப்பினர்கள் என்று சொன்னால், அந்தக் குடும்ப உறுப்பினர் ஒருவர் பெயரைச் சொல்லி, யார் வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு செல்லலாம். கிட்டத்தட்ட 20 இலட்சத்திற்கும் மேல் போலி கார்டுகள் இருப்பதாக அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. அவற்றைக் கண்டுபிடித்தாக வேண்டும், அவற்றைக் கண்டுபிடித்தால் அந்தப் பலன், சாதாரண பாமர மக்களுக்குச் சென்றடையும் என்ற முறையில்தான் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதனை நான் அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

TIIC என்ற நிறுவனத்தைப் பொறுத்தவரைக்கும், அது சிப்காட்டோடு இணைக்கப்பட்ட காரணத்தால் சிறு தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்குப் பலன் கிடைக்காத ஒரு நிலை உருவாகியிருக்கின்றது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் எடுத்துச் சொன்னார். மாண்புமிகு அம்மா



அவர்கள் அதை ஆய்ந்து அதுகுறித்து சிறு தொழிற்சாலைகள் எந்தவிதத்திலும் பாதிக்காதவண்ணம் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ, அந்தந்த நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்பதனை நான் உறுதியாகச் சொல்கிறேன்.

அதைப்போலவே, தரிசு நில மேம்பாட்டைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். திரு. பழனிசாமி அவர்கள் பேசுகிறபோதும் சொன்னார்கள். தரிசு நில மேம்பாட்டைப் பொறுத்தவரைக்கும், அவையிலே தெளிவாகச் சொல்லப்பட்டுவிட்டது. எந்தெந்த நிலத்தில் நீர் வசதி இல்லையோ, எந்தெந்த நிலம் fallow நிலமாக இருக்கிறதோ, அங்கு நீராதாரத்தைப் பெருக்க வேண்டுமென்றால், சில இடங்களில் 500 அடி போர் போட வேண்டியிருக்கும். 700 அடி போர் போட வேண்டியிருக்கும். 2 ஏக்கர், 3 ஏக்கர் நிலம் வைத்திருக்கின்ற ஏழைகள் அல்லது அரசு நிலத்தைப் பெற விரும்புகின்ற ஏழைகளுக்கு அவ்வளவு முதலீடு போடுவதற்கு அவர்களுக்கு வழி இருக்காது. எனவே வீணாகக் கிடக்கின்ற நிலம், ஆண்டு பலவாக யாருக்கும் உபயோகம் இல்லாமல் இருக்கும் நிலம், அந்த நிலத்தை முதலீடு செய்து, பண்படுத்தி, அதன் மூலமாக அந்தப் பகுதியிலே வருமானத்தைப் பெருக்கக்கூடிய ஒரு முடிவுக்கு யாரேனும் வருவாரேயானால், அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களை வேலைக்குப் பயன்படுத்த வேண்டும் என்று அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கிற சிறு உழவர்கள் போன்றவர்களெல்லாம் அவர்கள் நிலத்தையும் இந்தக் கூட்டுத் தொழிலோடு இணைத்துக்கொள்வார்களானால், இலாபத்தினுடைய பங்கு அவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற முறையிலே கிராமத்திலே இருக்கிற, நலிந்த நிலையிலே இருக்கின்ற சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள், வேலையின்றி தத்தளிக்கின்ற ஏழைகளுக்குப் பலன் கிடைக்க வேண்டும், வருமானம் அவர்களுக்குப் பெருக வேண்டுமென்ற நோக்கோடுதான், இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். எந்தக் காலத்திலும் இந்தத் திட்டம் கிராமத்திலே இருக்கிற ஏழைகளுக்கோ அல்லது சிறு, குறு நில விவசாயிகளுக்கோ, பலனற்ற திட்டம் என்று வருமேயானால், அம்மா அவர்கள் உடனே இதை நிறுத்திவிடுவார்கள். ஏழைகளுக்காக, கிராமப்புற பொருளாதார முன்னேற்றத்திற்காகத்தான் இந்த உன்னதத் திட்டத்தை அம்மா அவர்கள் நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறார்கள்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அரசன் அவர்கள் பேசுகிறபோது Electricity Board and State Transport Undertakings

[திரு. சி. பொன்னையன்] [2002 மே 9

ஆகியவற்றினுடைய நட்டத்தைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரினார்கள். நட்டத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்தோம், எடுத்து வருகிறோம், ஆனால் நட்டத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கிறபோது, uneconomical routes என்றிருக்கின்ற சாலைகளையெல்லாம், வழித்தடங்களை அரசுப் பேருந்துகள் ஓடுகிறபோதே அங்கு பெரும் நட்டங்கள் என்றிருக்கிற பேருந்துகளையெல்லாம் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கு, குறைந்த எண்ணிக்கையில் பயணம் செய்யக்கூடிய மக்களுக்கு தனியார் பேருந்துகள் இயக்க முன்வருகிறபோது அவர்களுக்கு விட்டால், மக்களுக்கும் நல்லது, போக்குவரத்துக் கழகத்தினுடைய நட்ட நிலையும் குறையும் என்ற நன்னோக்கோடுதான் இந்தத் திட்டத்தைக் கொண்டுவருகிறபோது இதை எதிர்க்கின்ற ஒரு நிலை இருக்கின்றதே என்பதனை நான் வேதனையோடு சொல்ல விரும்புகிறேன். பல மாநிலங்களில்—West Bengal மாநிலத்தை எடுத்துக்கொண்டால்கூட, தனியார் துறையில்தான் பேருந்துகளே ஓடுகின்றன. கேரள மாநிலத்திலும் கிட்டத்தட்ட அந்த நிலைதான். இப்படி இருக்கிறபோது, பேருந்து வழித்தடங்களை எல்லாம், பேருந்துத் துறையைப் பொறுத்தவரைக்கும், நட்டத்தில் இயங்குகிற வழித்தடங்கள், மக்களுக்கு பேருந்துக் கழகங்களால் புதிய புதிய வழித்தடங்களை விட முடியாது என்ற நிலையிலே அவர்கள் இருக்கிறார்களே அந்தப் பகுதிகள், இப்படிப்பட்ட பகுதிகளுக்கு தனியார்ப் பேருந்துகளை விடுகிறபோது, அது தவறில்லை. காரணம், தனியாருக்குப் பேருந்துகளை விடுகிறபோது அவர்கள் இலாபத்தில் ஓட்டுகிறார்கள். அரசு tax போட்டு tax மூலமாக அரசுக்கு வருமானம் வந்துவிடுகிறது. இப்பொழுது 1,025 கோடி ரூபாய் நட்டம் என்ற நிலைக்கு மாறாக, ஒவ்வொரு பஸ் ஆப்பரேட்டர் மீதும் tax போடுகிறபோது, அரசுக்கு நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் வருமானம் வரும். அந்த வருமானத்தை வைத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் ஹேமச்சந்திரன், கண்ணன் போன்றவர்கள் சொல்லுகிற ஏழைகளினுடைய நலத் திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்துவதற்கு அந்த வருமானம் உதவியாக இருக்காதா என்பதனை மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த அடிப்படையில் அரசு நல்ல பல திட்டங்களை நடைமுறைப்படுத்தும் என்பதனை எடுத்துச் சொல்லி...(குறுக்கீடு)

பிற்பகல் 7-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், போதும். (குறுக்கீடு) போதும், போதும்.



2002 மே 9]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** Corporation buses are paying tax, by borrowing loan from the Government. That is the unfortunate, pathetic financial plight today. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்கிறபோது இந்த Allocation of funds குறித்து மாநிலங்களுக்கிடையிலே நிதிகளை ஒதுக்குகிறபோது அவற்றை ஒதுக்குவதற்கான விதிமுறைகள் வகுக்கப்பட்டன. அந்த விதிமுறைகளை அன்று இருந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அமைச்சரவையிலே அதுபற்றி விவாதம் செய்யப்பட்டு, அன்று சட்ட அமைச்சராக இருந்த ஆலடி அருணா அவர்களும், நிதிச் செயலாளராக இருந்த ராஜாராமன் அவர்களும் நேரடியாகவே டெல்லிக்குச் சென்று அதைப்பற்றி நிதிக் குழுவிடம் கொடுத்திருக்கிறார்கள். எனக்குத் தெரிந்தவரையில் இவைகளைத் தீர்மானிப்பது Finance Commission அல்லது Planning Commission. இரண்டும் சேர்ந்துதான் இந்த விதிமுறைகளைத் தீர்மானிக்கின்றன.—நீங்கள் ஏதோ ஒரு குழு இருப்பதாகச் சொல்லி, அந்தக் குழுவிலே மத்திய அமைச்சர் மாறன் அவர்களும் இருந்ததாகக் குறிப்பிட்டீர்கள். அப்படி இருக்குமானால்—எனக்குத் தெரியாது, தெரிந்தவரையிலும்—தெரிந்து கொள்வதற்காகக் கேட்கிறேன். அப்படிப்பட்ட குழு நியமிக்கப்பட்டிருந்தால் எந்தக் குழு? Finance Commission-க்கு Planning Commission-க்கு இரண்டு கமிஷன்களுக்கும்தான் இந்த மாநிலங்களுக்கிடையிலான நிதியைப் பகிர்ந்து கொடுப்பதற்கும் மத்திய, மாநில அரசுகளுக்கிடையிலான நிதியைப் பகிர்ந்து கொடுப்பதற்கும் அதிகாரம் இருப்பதாக, தீர்மானம் இருப்பதாக நான் கருதுகிறேன். (குறுக்கீடு) இல்லை, நான் முடித்துவிடுகிறேன். நீங்கள் கடைசியிலே சொல்லுங்கள். ஒன்றும் இல்லை. அதுமட்டுமல்ல. போக்குவரத்துக் கழகங்களைப்பற்றி அவர் சொன்னது மாதிரி ஞானசேகரன் அவர்களும் சொன்னார்கள். கார்ப்பொரேஷனிலே இருக்கிற அந்தப் போக்குவரத்துக் கழகங்களும் வரியைக் கட்டுகின்றன. அதை நீங்களே ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். அதுமட்டுமல்லாமல் தனியார் பேருந்துகளை இயக்குகிற காரணத்தினால்—எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியும். எங்கள் விழுப்புரத்திலே இருந்து பக்கத்திலே இருக்கிற கிடார் கிராமத்திற்குப் போவோம். First Show விட்டுப் போகும்போது போவார்கள். Corporation Bus loss-ல் இருந்தாலும்கூட நான்கு டிக்கட்டை ஏற்றிக்கொண்டு போவார்கள்.

[டாக்டர் க. பொன்முடி] [2002 மே 9

(மணியடிக்கப்பெற்றது) நான் சொல்கிறேன். ஓர் உதாரணம். வேறு ஒன்றும் இல்லை. நான்கு பேருடைய நலனைக் கருதி....(குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். நான் முடித்துவிடுகிறேன். என்னங்க நீங்கள் ஒன்றரை மணிநேரம் பேசினீர்கள். இரண்டு நிமிடம் கொடுங்களேன். என்ன சார்? (குறுக்கீடு) இரண்டு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Clarification ஆகக் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு உறுப்பினர்கள் காலை மாலை பேசிய எல்லாவற்றுக்கும் பதில் சொல்ல மூன்று மணி நேரம் தேவை. நான் ஒன்றரை மணி நேரத்தில் முடித்துக்கொண்டேன்.

**டாக்டர் க. பொன்முடி:** இல்லை, இல்லை, வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன கேளுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோல, கிராமப்புறத்திலேயிருந்து வரும்போது தனியார் பேருந்து என்றால் வரமாட்டார்கள். போக்குவரத்துக் கழகம் என்றால் நான்கு பேரையும் ஏற்றிக்கொண்டு வருவார்கள். அந்த மாதிரி நன்மைகள் எல்லாம் இருக்கின்றன. உங்களுடைய கொள்கை ரீதியான விளக்கங்கள் எப்படியிருந்தாலும்கூட, நிதிக் குழுவைப் பொறுத்தவரையிலே அவர்கள் செய்தது அதுதான். அன்று டாக்டர் சந்திரபாபு நாயுடுவுடன் சேர்ந்து நாங்களும் எதிர்த்தோம்.

மற்றொன்று. எங்களைப் பார்த்து நீங்கள் ஆட்சியிலே இருக்கிறீர்களே, செய்யவில்லை, செய்யவில்லை என்று கேட்கிறீர்களே, தயவுசெய்து தப்பாக நினைத்துக்கொள்ளாதீர்கள், நீங்கள். நாங்களாவது தோழமைக் கட்சியோடு இருக்கிறோம். அந்தத் தோழமை தர்மத்திற்காகக் கட்டுப்பட்டுக்கூட இருக்கலாம். நீங்கள் எதிர்த் தரப்பிலே இருக்கிறவர்கள் தானே? இந்த POTA சட்டத்திற்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்றால் அந்த நிதியைக் கொடுத்தால்தான் ஆதரவு கொடுப்போம் என்று நீங்கள் தெரிவித்திருக்கலாம் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சம்பந்தம் இல்லாமல் எல்லாம் பேசாதீர்கள். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு உறுப்பினர் லட்சுமணன். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



2002 மே 9]

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் மிகவும் தவறான ஒரு கருத்தை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார். POTA சட்டத்தை ஆதரிக்கும் முன்பு அதற்கு இவ்வளவு நிதி கொடுத்தால்தான் ஆதரிப்போம் என்று கேட்டிருக்கலாமே என்றார். நாட்டில் தீவிரவாதத்தை, பயங்கரவாதத்தை எதிர்க்க வேண்டும் என்பது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அசைக்கமுடியாத கொள்கை. (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் கொள்கையைப் பணத்துக்காக நாங்கள் பேரம் பேசத் தயாராக என்றைக்குமே இருந்ததில்லை. என்றைக்கும் இருக்கமாட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி) அது தி.மு.கழகத்தின் நடைமுறை. தி.மு.கழகத்துக்கு வாடிக்கை. ஆகவே உங்களைப்போல் நாங்களும் எங்கள் கொள்கைகளை விற்றுவிடுவோம் என்று எந்தக் காலத்திலும் எண்ணாதீர்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லட்சுமணன். . (குறுக்கீடு) இல்லை. சொல்லி முடித்தாயிற்று. லட்சுமணன் (குறுக்கீடு) இல்லை உட்காருங்கள். சொல்லி முடித்தாயிற்று. உட்காருங்கள். லட்சுமணன் (குறுக்கீடு) லட்சுமணன் கேளுங்கள் (குறுக்கீடு) நீங்கள் கேட்டதற்கு பதில் சொல்லியாகிவிட்டது. உட்காருங்கள், பொன்முடி.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் எங்கும் சார் பதிவாளர் அலுவலகங்களிலே அங்கீகரிக்கப்படாத மனைகள் சம்பந்தப்பட்ட ஏராளமான ஆவணங்கள் இன்றைக்கு பதிவு செய்யப்படாமல் இருக்கின்றன. அதேபோல, அரசுக்கு வரவேண்டிய வருமானம் குறைந்துகொண்டே போகிறது. அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு C.M.D.A-விலே கூட (குறுக்கீடு) regularise பண்ணுவதற்கு நான்கு முறைகள் அறிவித்தும்கூட நாம் எதிர்பார்த்த அளவுக்குப் பணம் வரவில்லை. எனவே இந்த இரண்டுக்குமாகச் சேர்த்து ஒரு குழுவை அமைத்து அரசு இதைப் பரிசீலித்து தீர்வுகாண வேண்டுமெனக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, இன்றைக்கு கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திலே கடன் பெறுபவரின் எண்ணிக்கை குறைந்துகொண்டே போகிறது. அதற்குக் காரணம் வட்டி விகிதம்தான். H.D.F.C.-யில் வட்டி 11.5 சதவீதம். Nationalised.Bank-லே வட்டி 10.75 சதவீதம். ஆனால் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திலே வட்டி 14 சதவீதம். அதனாலே கூட்டுறவு வீடு

[திரு. வி.கே. லட்சுமணன்] [2002 மே 9

கட்டும் சங்கத்திலே இந்த வட்டி விகிதத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 7-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு) இல்லை, ஹேமச்சந்திரன் சொல்லி விடட்டும். அவர் சொல்லி முடித்தவுடனே நீங்கள் பதில் சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், இந்த uneconomic routes-ஐ தனியாருக்கு விடுவதை எதிர்க்கிறார்கள் என்ற முறையிலே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். Uneconomic routes என்பது statistics-படி 10 சதவிகிதமோ 15 சதவிகிதமோதான் இருக்கிறது. ஒரு சேவை sector என்ற முறையிலே அது unavoidable. இந்த பத்து, பதினைந்து சதவிகித Route-களுக்காக ஒட்டுமொத்தமாக இதைத் தனியாருக்குக் கொடுக்கக்கூடிய ஒரு பாதைக்கு எடுத்துச் செல்வதைத்தான் நாங்கள் எதிர்க்கிறோமே தவிர வேறல்ல. இந்த மாநிலத்திலும் தனியார் பஸ்கள் ஏராளமாக ஓட்டப்படுகின்றன. மேற்கு வங்கத்திலேயும் ஓட்டப்படுகின்றன. மேற்கு வங்கத்திலே அரசால் ஓட்டப்படுகிற பஸ்களை, வழித்தடங்களை அவர்கள் தனியாருக்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், clarification-ஐக் கேளுங்கள், என்ன கேட்க வேண்டுமோ அதைக் கேளுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஆகவே நான் என்ன கேட்டுக்கொள்ள விரும்புகிறேன் என்றால், இன்று நிதியமைச்சராக இருக்கக்கூடியவர் நீண்ட நாள் போக்குவரத்துத் துறையினுடைய அமைச்சராக இருந்தவர். அந்தக் காலத்திலே போக்குவரத்து இலாபகரமாக நடத்தப்பட்டது என்பது அவருடைய அனுபவத்திலேயிருந்தே தெரியும். ஆகவே இன்னும் அதை இலாபகரமாக நடத்திக்கொள்ள முடியும். ஆதாரங்களோடு நாங்கள் அதை நிரூபிப்பதற்குத் தயாராக இருக்கிறோம். அன்றைக்குப் போக்குவரத்து மானியத்திலேகூட சில கருத்துகளைச் சொன்னோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஆகவே அந்த முறையிலே இதைப் பார்க்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.



2002 மே 9]

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் வரிச்சுமை வேண்டாம் என்று சொல்கிறீர்களே, வருவாய்க்கு ஆதாரங்களை ஆலோசனையாகச் சொல்ல வேண்டாமா என்று கேட்டார்கள். எங்கள் கட்சியின் சார்பிலே நான் கொடுத்த வரைவு நிதிநிலை அறிக்கையிலே, draft budget-லே பல கருத்துகளைச் சொல்லியிருக்கிறோம், ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறோம். அந்த அடிப்படையிலே இந்த மணல் திருட்டைக் கட்டுப்படுத்துவதன் மூலமாக ஆயிரக்கணக்கான கோடி வரும் என்று சொன்னோம். அதிலே நிதியமைச்சர் அவர்கள்கூட அதிகாரிகளைக் கலந்து 100 கோடி என்று சொன்னார்கள். இன்னும் கூடுதலாக வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதுமாத்திரமல்லாமல் இப்போது அரசுத் துறைக்குச் சொந்தமான தனியாருக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, இன்னொரு முறை பேசும்போது பேசுங்கள். இன்னும் ஒரு சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்த முடியாது. உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இந்த கிரானைட் கற்கள். தனியார்கள் நிலத்திலேயும் அரசுக்குச் சொந்தமான நிலத்திலேயும் நிறைய இருக்கிறது. அதை நீங்கள் தனியாருக்கு லைசன்ஸ் கொடுத்தீர்கள் என்று சொன்னால் அதனால் நிறைய வருமானம் வரும். அதுமாதிரி ராயல்டியை இன்னும் கொஞ்சம் கூட்டலாம். 1,20,000 ரூபாய்க்குப் போவது மிகவும் குறைவாக இருக்கிறது. அதை இன்னும் கூட்டலாம். அதுபோல, இன்னும் வரி பாக்கி 10 ஆயிரம் கோடி என்று சொல்கிறார்கள். நீங்கள் 7,244 கோடி என்று சொல்லியிருக்கிறீர்கள். இப்படி நிறைய வரிச் சுமை இல்லாமலே வருவாய் ஆதாரங்களைப் பெருக்குவதற்கு நிறைய வழிகள் இருக்கிற காரணத்தினாலேதான் அதை வேண்டாம் என்று சொல்கிறோம். அதேபோல, (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒரே ஒரு நிமிஷம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். அதிக நேரமாகிவிட்டது.

**திரு. சி. ஞானசேகரன்:** வேலூர் மாவட்டத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். பதில் சொல்லுங்கள் (குறுக்கீடு) இல்லை, இல்லை வேண்டாம். அதை இன்னொரு தடவை கேளுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, ஒரு clarification.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள் பேசுகிறபோது Planning Commission and Finance Commission-ஐப் பொறுத்தவரைக்கும் அவர்கள் எடுக்கிற வரையறை, முடிவு, மாண்புமிகு மைய அமைச்சர் திரு. மாறன் அவர்களுக்குத் தொடர்பில்லை என்று சொன்னார். அது தவறு. காரணம் நான் இதை மைய நிதியமைச்சர் திரு. சின்ஹா அவர்களிடம் பேசியிருக்கிறேன். அங்கு மத்திய அரசைப் பொறுத்தவரைக்கும், there is a Political Affairs Committee. அவர்கள் முடிவெடுக்கிறார்கள். அதாவது, what is the policy decision to be followed, Central Planning Commission-ஆக இருக்கட்டும் அல்லது Finance Commission ஆக இருக்கட்டும், எதுவாக இருந்தாலும் ஒரு நாட்டினுடைய வளர்ச்சித் திட்டங்கள், கொள்கை முடிவுகள் எப்படி இருக்க வேண்டும் என்பதை politically the decision is taken by the Government in Centre. அப்படி அந்த political decision எடுப்பதற்கு இந்த மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தருவதா, அதிக நிதியை ஒதுக்கித் தருவதா, financial power to the State whether to be increased, அதை அரசியல் சட்டத்தைத் திருத்தித் தருவதா அல்லது என்னென்ன விதிமுறைகளைச் செய்வது என்பது எல்லாம் கொள்கை முடிவு. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று பன்னெடு ஆண்டுகளாகக் கேட்டு வருகிறோம். மைய அரசு அதை மறுத்து வருகிறது. அந்த ஒரு political decision, அதை எடுப்பதற்கு Political Affairs Committee இருக்கிறது. அவர்கள் இந்தத் தாக்கீதுகளைப் பெறுகிறார்கள். அந்த Planning Commission-னுடைய உறுப்பினர்களை அல்லது Finance Commission-உறுப்பினர்களை எல்லாம் மைய அரசுக்குத் தெரியாமல் ஏதோ அமெரிக்காவிலிருப்பவர்கள், சைனாவில் இருக்கிறவர்கள் நியமிப்பது அல்ல. டெல்லியிலே இருக்கிற அரசு நியமிக்கிறது. Political Affairs Committee is responsible for taking major policy decisions. அந்த முறையிலே அவர்கள் அந்த நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும்.

பிற்பகல் 7-40

திரு. சின்ஹா அவர்களே என்னிடம் சொன்னார் இதைப்பற்றி. Mr. Maran is a Member, Hon. Maran is a Member of the Political Affairs Committee of the Government of India. திரு. சின்ஹா அவர்கள்



சொல்லியிருக்கிறார். அவர்கள் Political Affairs Committee-யில் கலந்து இதுகுறித்து, அந்த 29.5 சதவீதம் என்பதனை 60 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கேட்டு இருக்கிறது. அம்மா அவர்களும் மைய அரசை, உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். Political Affairs Committee-யில் கேட்டு, ஆலோசித்து நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். தற்போது, 27 ஆம் தேதி நடத்த இருக்கிற கூட்டத்தில்கூட மாண்புமிகு அம்மா அவர்கள் கேட்டிருக்கிற 3 ஆயிரம் கோடி one time package-ஆகத் தருவதற்கு நாங்கள் அமைச்சரவையைச் சார்ந்த எங்களுடைய கமிட்டியைக் கலந்து நான் முடிவு செய்கிறேன், 27 ஆம் தேதி கூட்டத்திலே சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் லட்சுமணன் அவர்கள் பேசுகிறபோது Treasuries amalgamation-ஐப் பற்றிச் சொன்னார்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** 150 ஜி.ஓ. பற்றி Sub-Registrar-க்கு தெரியவில்லை. Real Estate வைத்திருப்பவர்களுக்குத் தெரியவில்லை. High Court தீர்ப்பு என்ன என்பதும் தெரியவில்லை. ஒட்டுமொத்தமாக அரசுக்கு வருகிற வருமானம் குறைந்துவிட்டது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, கட்டடத் தொழில் ஒழுங்காக சிறந்து நடக்க வேண்டும். Real Estate ஒழுங்காக இருக்க வேண்டும் என்ற முறையிலே ஏற்கெனவே நடைமுறையில் இருக்கின்ற அந்தக் குறைபாடுகளையெல்லாம் களைவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அதை ஆயும்படி சொல்லியிருக்கிறார்கள். எங்கெங்கு இந்த unauthorised plots, unapproved plots என்ற முறையிலே இருக்கின்றதோ, அந்தப் பிரச்சினைகளையெல்லாம் ஆயும்படி சொல்லியிருக்கிறார்கள். அது ஆயப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் அதுகுறித்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதுபோலவே, திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகிறபோது அவர்கள் போக்குவரத்துக் கழகங்களை நாட்டுடமையாக்குவதுபற்றிக் கூறினார்கள். போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரைக்கும் நான் ஏற்கெனவே அவையிலே சொல்லியிருக்கிறேன். பெரிய பெரிய தொழிற்சாலைகள்கூட மேற்கு வங்கத்திலே தனியார் துறைக்கு விடக்கூடிய ஒரு நிலையை எடுக்கிறபோது, தொழிலாளிகளுக்குப் பாதிப்பு இல்லாமல் போக்குவரத்துக் கழகங்கள் மூலமாக தனியாருக்கு

[திரு. சி. பொன்னையன்] [2002 மே 9

விடுகிறபோது அதனால் அரசுக்கு கோடிக்கணக்கான ரூபாய் லாபம் வரும். அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு நீங்கள் கூறுகிற மக்கள் நலத் திட்டங்களைத் தீட்டலாம் என்பதற்காகத்தான் அதுபோன்ற அணுகுமுறை மேற்கொள்ளப்படுகிறது. அதே நேரத்தில் தொழிலாளியினுடைய நலன் முற்றிலும் பேணப்படும் என்ற வாக்குறுதியை அவைக்கு நான் அரசின் சார்பிலே தருகிறேன் என்பதைக் கூறி இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2002 மே 9] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 8. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஊ) அலுவல் வரிசையில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இந்த அவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதாக இருந்த இனம் 8, உள் இனம் (2) முதல் (12) வரையிலான 11 சட்டமுன்வடிவுகள் நாளை 10-5-2002, வெள்ளிக்கிழமை எடுத்துக்கொள்ளப்பெறும். இவை தவிர, நாளைய நிகழ்ச்சிநிரலின்படி எடுத்துக்கொள்ளப்பெறும் சட்டமுன்வடிவுகளும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (இ) விதி 32-ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை 10-5-2002 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் ஒத்திவைக்கப்படுவது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை (10-5-2002) தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை 10-5-2002 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (10-5-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 7-44 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.





## 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

165. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு லாட்டரி (ஒழுங்குமுறை) விதிகள் வகுப்பது குறித்து நிதித் துறையின் 19-4-2002 ஆம் நாளிட்ட 139 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு லாட்டரி (ஒழுங்குமுறை) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 17/1998) 12(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

166. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு கணினி மூலம் நேரடி லாட்டரி (ஒழுங்குமுறை) விதிகள் வகுப்பது குறித்து நிதித் துறையின் 19-4-2002 ஆம் நாளிட்ட 140 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு லாட்டரி (ஒழுங்குமுறை) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 17/1998) 12(3)பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

167. உள் துறையின் 19-2-2001 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II/2HO/243(எப்)/2001 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்வது குறித்து 30-11-2001 ஆம் நாளிட்ட 1183 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

168. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சிலவகை வண்டிகளைப் பொறுத்தமட்டில், வரிவீதத்தை விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு உயர்த்துவது குறித்து 30-11-2001 ஆம் நாளிட்ட 1184 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

169. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர் பகுதிக்குள் பொருள்களைக் கொண்டுவருவதன் மீதான வரி விதிகள் வகுப்பது குறித்தும், மற்றும் வணிக வரிகள் வட்டார உதவி ஆணையாளர்களுக்கு, அவரவர் சம்பந்தப்பட்ட உள்ளூர் வரம்புகளைப் பொறுத்தவரையில்,

[2002 மே 9

2001ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர் பகுதிகளுக்குள் பொருள்களைக் கொண்டுவருவதன் மீதான வரிச் சட்டத்தின் 8ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அலுவல்களை ஆற்றுவதற்காக அவர்களுக்கு மேல்முறையீட்டு அதிகாரியாக அதிகாரமளிப்பது குறித்தும், வணிக வரிகள் துறையின் 30-11-2001 ஆம் நாளிட்ட 112 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர் பகுதிக்குள் பொருள்களைக் கொண்டுவருவதன் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) 14 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

170. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள் துறையின் 26-2-2002 ஆம் நாளிட்ட 61 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

171. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் பத்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

172. 2000-2001 ஆம் ஆண்டிற்கான திருநெல்வேலி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

173. 2000-2001 ஆம் ஆண்டிற்கான திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

174. 2000-2001 ஆம் ஆண்டிற்கான மதுரை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)



2002 மே 9]

175. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தூத்துக்குடி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

176. 2000-2001 ஆம் ஆண்டிற்கான ஈரோடு மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

177. 2000-2001 ஆம் ஆண்டிற்கான நாமக்கல் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

178. 2000-2001 ஆம் ஆண்டிற்கான திருவள்ளூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

179. 2000-2001 ஆம் ஆண்டிற்கான இராமநாதபுரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

437. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்து ஒன்றாவது அறிக்கை. (2001-2002)

438. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்து இரண்டாவது அறிக்கை. (2001-2002)

439. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்து மூன்றாவது அறிக்கை. (2001-2002)

440. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்து நான்காவது அறிக்கை. (2001-2002)

441. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்து ஐந்தாவது அறிக்கை. (2001-2002)

442. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்து ஆறாவது அறிக்கை. (2001-2002)

443. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்து ஏழாவது அறிக்கை. (2001-2002)

444. தகவல், தொழில்நுட்பவியல் துறை குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள். (2002-2003) (தமிழ், ஆங்கிலம்)

445. தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் சிறு புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

D
V21 34 '02
02.291

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
225168.
சென்னை-600 008
நூலகம்

அரசு மைய அச்சகம், சென்னை — 600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

53/154